குமரியும் காசியும்

மு. அருணசலம்

குமரியும் காசியும்

மு. அருணாசலம்

தமிழ் நூலகம்
திருச்சிற்றம்பலம் - குத்தாலம்

உள்ளுறை

பக்கம்

முகவுரை	...	5
வெள்ளகால் முதலியார்	...	9
செல்லையா	...	35
ஐயரவர்கள்	...	50
பண்டித மாளவியா	...	64
திரு. வி. கலியாணசுந்தர முதலியார்—		
க. பழமையும் புதுமையும்	...	72
உ. குழந்தையுள்ளம்	....	84
தேசிகவிநாயகம் பிள்ளை—		
க. நாஞ்சில் நாட்டுக் கவிஞர்	...	91
உ. கவிஞருடன் ஒருநாள்	...	104
வினோபா பாவே—		
க. வினோபாவும் தமிழும்	...	125
உ. வினோபாவும் துப்புரவும்	...	133
ந. பூதானமும் ஆதாரக் கல்வியும்	...	145
மஹரிஷி அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள்	...	154
அகராதி அளித்த அறிஞர்	...	164
ஞானியார் சுவாமிகள்	...	182

முகவுரை

பகுத்தறிவு விளக்கம் பெற்ற மக்கள் யாரும் தங்கள் இளம் பருவத்தில் தங்கள் வாழ்க்கையில் கலந்து தங்களை நெறிப்படுத்தச் சிலரேனும் காரணமாயிருந்தார்கள் என்று தங்கள் பிற்கால வாழ்க்கையில் உணரக்கூடும். இந்நூலில் தொகுக்கப்பெற்ற கட்டுரைகள், இங்ஙனம் எனது வாழ்க்கையில் பங்கு கொண்ட பெரியார் சிலர் பற்றி முன்னமே நான் எழுதி வெளியிட்ட கட்டுரைகளாகும்.

இதனுள், குமரிமுதல் காசி வரை நான் கண்டு பழகிய பெரியாரைப் பற்றி எழுதிய கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன. தென்குமரி யருகே தேரூரில் வாழ்ந்த தேசிக விநாயகம் பிள்ளையவர்களையும், தென்காசி யருகே வெள்ள காலில் வாழ்ந்த வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களையும் நான் யாத்திரை செய்து தரிசித்தேன். காசியில் மகாத்மா மாளவியாவையும், மகரிஷி அனந்தகிருஷ்ண சாஸ்திரி களையும் காண்கிற பேறும் நான் பெற்றிருந்தேன். இவர் களையும் பிற பெரியார்களையும் பற்றி நான் எழுதிய குறிப் புக்கள் இங்குத் தொகுக்கப் பெற்றமையால் இத்தொகுப் புக்குக் குமரியும் காசியும் என்ற பெயர் சூட்டலானேன்.

இக்கட்டுரைகளைப் படிக்குமுன், இதன் பின்னே கூறும் செய்திகளை நினைவில் வைத்திருக்கவேண்டும்.

இங்குக் கூறப்பட்டுள்ள பதின்மருள், செல்லையா ஒருவரே என்னைவிட வயதில் இளைஞராயிருந்தார். ஏனையோர் என்னைவிட மிக்க முதுமை யடைந்தவர்கள்.

வெள்ளகால் முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், விநோபா பற்றிய கட்டுரைகளும், தேசிக விநாயகம் பிள்ளை பற்றிய கட்டுரை ஒன்றும், அவரவர் உயிரோடிருந்த காலத்திலேயே எழுதி வெளியிடப்பட்டவை

மற்றவை சம்பந்தப்பட்டவர் காலத்துக்குப் பின் எழுதியவை, வெளிவந்தவை. இப்பதின்மருள், மாளவியாவும், வினேபாவும் வடநாட்டினர். ஏனையோர் தமிழ்நாட்டுப் பெருமக்கள். வினேபா நம்மோடு இன்று உள்ளது நமது பாக்கியம்.

வெள்ளகால் முதலியாரவர்கள் பற்றிய கட்டுரை வெளிவந்தபோது அவர்கள் கட்டுரையைப் படித்துப் பாராட்டி எனக்கு எழுதியதோடன்றி, உதட்டில் குத்தியதற்காக மன்னிப்பும் கேட்டிருந்தார்கள். ஆகவே அதில் கூறப் பெற்றுள்ள இலக்கியக் கருத்துக்களை அவர்கள் கூறியதாக ஒப்புக்கொண்டார்களென்பதைப் பண்டிதராயினோர் அறிதல் வேண்டும்.

ஐயரவர்களைப் பற்றிப் பேசும்போது ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. அவர்கள் தம் பதிப்புக்களுக்கு எழுதிய முகவுரையின் தொடக்கத்தில் ஒரு தேவாரம் அல்லது திருவாசகம் கூறி அதன் பிறகு எழுதுவார்கள். இப்பாசுரங்களை மட்டும் ஒருவர் பயின்றாலும்கூடச் சிறந்த பக்குவியாகிவிடக்கூடும்.

பண்டித மாளவியாவைப் பற்றி நாம் நினைக்கும்போது, காசி சர்வகலாசாலையில் இன்றுள்ள சீர்கேடான மாணக்கர் நிலையை மறந்துவிடவேண்டும். இச்சீர்கேடு, இன்றைய அரசியல் சீர்கேட்டின் பிரதிபலிப்பு. இதனால் மகாத்மா மாளவியாவின் புகழ் குன்றாது.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் என்ற அழகான பெயரைச் சுருக்கி திரு. வி. க. என்று கூறும் அநாகரிகம் எனக்குப் பிடிப்பதில்லை. இதை அவருடைய அறுபதாண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் நான் பேசினேன். அவரும் ஒப்புக்கொண்டிருந்தார்.

'குழந்தை யுள்ளம்' என்ற கட்டுரையை அவர் படித்த போது, அதில் எடுத்துக்காட்டியிருந்த பாடலைப் பார்த்து,

"என் பாடல்களில் இதயஸ்தானம் என்று நான் கருதி யிருந்த பாடலையே நீங்களும் தேர்ந்தெடுத்து எழுதியிருக் கிறீர்கள்" என்று பாராட்டிக் கூறினார்கள்.

தேசிக விநாயகம் பிள்ளையவர்களைப் பற்றி இன்று எல்லோரும் பேசுவது நாகரிகமாகிவிட்டது. ஆனால் அவருடைய கவிதைத் தொகுதி வெளிவந்த காலத்தில் அவரைத் தெரிந்து கௌரவித்தவர்கள் மிகவும் அரியர். அவருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் கிடைப்பதே மிக்க சிரமமாயிருந்தது. அவர் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்பவர் அல்லர். இத் தொகுப்பில் கண்டுள்ள "நாஞ்சில் நாட்டுக் கவிஞர்" என்ற கட்டுரை வெளிவந்த பிறகுதான் தமிழ் மக்கள் அவரைப் பற்றி அறிந்தார்கள் என்று நான் இப்போது பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும்.

டி. கே. சி. யவர்களைப் பற்றிய கட்டுரையொன்றுகூட இத்தொகுப்பில் இல்லை. என்னை அறிந்தவர்களுக்கு இது வியப்பாயிருக்கும். எனது வாழ்க்கையை உருவாக்கிய பெரியார் டி. கே. சி. யவர்கள்; வாழ்க்கை முழுமையுமே கலந்து தம் வசப்படுத்தி யிருந்தார்கள். இப்பெரியாரைப் பற்றி எழுத அச்ச முண்டாகிறது. எவ்வளவு, எப்படி எழுதினாலும் மனம் நிறைவு பெறாது என்ற அச்சத்தினால் எழுதவே முயலவில்லை. அவ்விதமே, காசியில் ராமகிருஷ்ண மடத்திலிருந்த துறவியாகிய சுவாமி அவிநாசானந்தரவர்கள் கொஞ்சகாலம் பழகியிருந்தாலும், பூரணமாய் என் வாழ்க் கையைச் செம்மைப் படுத்திய பெரியார். அவரைப் பற்றியும் இங்கு எழுதவில்லை. காலம் வாய்ப்பின் பின்னரொரு சமயம் எழுதக்கூடும்.

இங்குத் தொகுத்துள்ள கட்டுரைகள் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பெற்றவை. சர்வோதயம், சக்தி, குமரி மலர் பத்திரிகைகளிலும், தமிழ்ப் பண்ணைத் தொகுப்பிலும் வெளிவந்தவை. எனவே, கட்டுரை கள் ஒரே மாதிரி எழுதப்பெற்றிரா. சில பேட்டி உருவத்தி லும், சில விமரிசன முறையிலும் அமைந்திருக்கக் காணலாம்.

காரணம், சந்தர்ப்பமும் பெரியவர்களோடு நான் கொண்டிருந்த பல்வேறு வகைப்பட்ட தொடர்புமே.

குறிப்பிட்டுள்ள பெரியார் அனைவரும் நம் நாட்டின் இலக்கியம், அரசியல், சமயம், பொது வாழ்வு ஆகியவற்றில் பங்கு கொண்டு, அந்த அந்த வாழ்க்கையை மேம்படுத்தியவர்கள். வெள்ளகால் முதலியார், ஐயரவர்கள், தேசிகவிநாயகம் பிள்ளை, சாஸ்திரிகள், ஞானியார் சுவாமிகள் போன்ற பெரியார் மிக நீண்ட காலம் வாழ்ந்து உலகுக்குப் பயன்பட்டார்கள். மக்களுடைய ஆயுள் நம் நாட்டில் மிகவும் குறைந்து போய்விட்டதென்று எல்லோரும் கூறும் இந்தக் காலத்தில், இப்பெரியார்களுடன் சில நிமிஷநேரம் இப்புத்தகத்தின் ஏடுகளிடையே பழகினால், ஆயுளை நீடித்துக்கொள்வதற்கான ரகசியம் ஏதேனும் புலனாகாதா? இவர்களை அறிந்தவர்களுக்கு இங்கு கூறப்பெற்றவை பெரு விருந்தாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பொழுது மீண்டும் சிந்தித்துப் புதிதாய் எழுதவோ, எழுதியவற்றை முழுமையும் பரிசீலனை செய்து திருத்தியமைக்கவோ, எனக்குச் சிறிதும் அவகாசமில்லை ஆயினும், இவர்களால் யான் பெற்ற பயனும் இன்பமும் அமைதியும் பிறரும் காண வேண்டும் என்ற ஆசையே இந்த அளவிலேனும் இக்கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும்படி என்னைத் தூண்டிற்று.

இன்று புத்தகம் முடிந்து அச்சுக்குக் கொடுத்து இந்த முன்னுரை எழுதும்போது, உள்ளத்தில் பல ஆண்டுகள் நான் இளைஞனாகிவிட்டேன் என்று கூறினால் அது மிகையன்று. காரணம், பழைய அனுபவம் நினைவுக்கு வந்து, சிறிது நேரமேனும் மீண்டும் நான் அந்தக் காலத்தில் வாழத் தொடங்கியமையும், அதிலிருந்து உள்ளத்தே பிறந்த ஊக்கமும் இன்பமும் அமைதியுமே.

திருச்சிற்றம்பலம்
சர்வோதய தினம்
12-2-1959

மு. அருணாசலம்

குமரியும் காசியும்

வெள்ளகால் முதலியார்

1937 ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் டாக்டர் சாமிநாதையரவர்கள் தலைமையில் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரவர்களுடைய எண்பதாண்டு நிறைவு விழாவைத் தமிழ்நாடு முழுவதுமே கொண்டாடிற்று. மிருக வைத்திய இலாகாவில் பெரிய பதவி வகித்து ஓய்வு பெற்ற முதலியார், தமிழில் பெரும் புலவராயிருந்தார்கள். அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், நெல்லைச் சிலேடை வெண்பா, சுவர்க்க நீக்கம், தனிப் பாடல்கள் முதலாக அவர்கள் செய்துள்ள நூல்கள் பல. அவர்கள் பேச்சு - கட்டுரைகள் மூலமாய்த் தமிழ் நாட்டில் கம்பராமாயணப் பித்துக்கொண்டோர் தொகை எண்ண முடியாது. அவர்கள் விளக்கமெழுதித் தொகுத்த கம்பராமாயண சாரம், தமிழுலகு நன்கு சுவைத்தது. விழா நடந்த காலம் முதல் அவர்களைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

* * * *

1943 ஆம் வருஷம் ஜூன் மாதம் டி. கே. சி. யவர்களோடு குற்றாலத்தில் சௌக்கியமாக சாரலையும் அருவியையும் அனுபவித்துக் கொண்டிருந்தேன். பல சமயம், வெள்ளகால் தாத்தாவைப் போய்ப் பார்த்துவிட்டு வர

வேண்டுமென்று புறப்பட்டேன். ஆனால் ஒவ்வொரு சமயமும் டி. கே. சி. யவர்கள் என்னென்ன காரணங்களையோ சொல்லி, நான் போகாதபடி தடுத்துவிட்டார்கள். வெள்ளகாலுக்குப் போனால், அங்கே வெள்ளகால் தாத்தாவாகிய வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களுடைய பண்பிலே ஈடுபட்டு, அவர்களை விட்டுப் பிரியவே மனமில்லாமல் வெள்ளகாலில் தங்கிவிடுவேனோ என்பதுதான் டி. கே. சி. யவர்களுக்கு இருந்த பயம்!

ஆயினும் எப்படியோ ஒரு வகையாக, இரண்டு நண்பர்களும் நானும், வெள்ளகால் போவதென்று முடிவுசெய்து, டி. கே. சி. அனுமதியும் பெற்றுப் புறப்பட்டு விட்டோம். புறப்படும்போது, டி. கே. சி. ஓர் எச்சரிக்கை செய்தார்கள்:

"வெள்ளகாலுக்குப் போனால், முதலியாரவர்களோடு பேசும்போது ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். கையில் கம்போ, குடையோ அவர்கள் வைத்திருந்தால், கிட்டப் போகாதீர்கள். நாற்காலியைத் தூரத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டு, தூரத்திலிருந்தே பேசிவிட்டு வாருங்கள். பேச்சிலுள்ள உற்சாகத்திலும் வேகத்திலும், உங்கள் கண்ணும் பல்லும் போவது அவர்களுக்குத் தெரியாது! ஞாபகமிருக்கட்டும்" என்று சொல்லி எச்சரித்து அனுப்பினார்கள்.

தென்காசிக்கு அடுத்த ரயில்வே நிலையம் பாவூர் சத்திரம். தென்காசியில் ரயிலேறி இங்குவந்து இறங்கினோம். வெள்ளகால் இங்கிருந்து மூன்று மைல். மாட்டுவண்டி ஒன்றைச் சத்தத்துக்குப் பேசிக் கொண்டு வெள்ளகால் போய்ச் சேர்ந்தோம்.

சுமார் இரண்டு மணிக்கு முதலியாரவர்கள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்திருப்போம். மாடிமேல் ஏதோ படித்துக்கொண்டிருந்தார்கள். மேலே சென்றோம். பார்த்து வணங்கினோம். நாற்காலிகளை எடுத்துப் போட்டார்கள். அப்போது அவர்களுடைய தள்ளாமையைப் பார்த்தோம். கைகள் நடுக்கின. ஆயினும், தாமே நாற்காலியை இழுத்

துப் போட்டார்களே யன்றி நாங்கள் எடுத்துப் போட்டுக் கொள்ள விடவில்லை.

" எங்கிருந்து வருகிறீர்கள் ?"

குற்றாலத்தில் டி. கே. சி. வீட்டிலிருந்து வருகிறோ மென்று சொல்லி எங்களை அறிமுகம் செய்துகொண்டோம். (என்னுடன் வந்த நண்பர்கள் இருவரும் செட்டிநாட்டு அன்பர்கள். நாங்கள் மூவருமே செட்டியார்கள் என்று முதலியாரவர்கள் எண்ணிக்கொண்டார்கள். பின்னர் பேசி வந்தபோது இது புலப்பட்டது. நான் செட்டியாரல்லன் என்று அவர்களுக்கு விளக்கிச் சொல்லவில்லை.)

டி. கே. சி. வீடு என்றவுடனேயே, கொஞ்சநேரம் டி. கே. சி. யைப்பற்றி விசாரித்தார்கள். " அருகில் வந்து உட்காருங்கள். எனக்குக் காது கொஞ்சம் கேளாது. சற்று உரத்துப் பேசுங்கள் " என்று சொல்லிவிட்டுப் பேச லானார்கள் :

" டி. கே. சி. ராமாயணம் சொல்லக் கேட்டிருக்கிறீர் களா ?"

" கேட்டிருக்கிறோம்."

" ராமாயணப் பதிப்பைப் பார்த்திருக்கிறீர்களா ?"

" பார்த்திருக்கிறோம்."

" டி. கே. சி. ஒரு 'ஜீனியஸ்'. (அதாவது, அசாதாரண மான புலமையும் நுண்ணுணர்வும் பெற்றவர் என்பது பொருள்). அபூர்வமான ஜீனியஸ். அதனால், எந்தப் பாட்டை எடுத்தாலும் அதில் சாரம் இருக்கிறதா இல்லையா என்று இயல்பாகவே அவருக்குத் தெரிகிறது. அந்தச் சாரத்தைத் தாம் அனுபவிப்பதோடு கூட, எல்லோரையும் அனுபவிக் கச் செய்யவும் முடிகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

ஆனால் நாங்கள் மறுமொழி கூறுவதற்கு அவர்கள் காத்திருக்கவில்லை. தொடர்ந்து பேசலானார்கள் :

" டி. கே. சி. யினுடைய பெருமை என்ன தெரியுமா?"

" தெரியும்."

"சொல்லுங்கள், பார்க்கலாம்."

"கம்ப ராமாயணம் முதலிய இலக்கியங்களை எடுத்துச் சொல்லி நம்மை அனுபவிக்கச் செய்வது அல்லவா?" என்றேன்.

"அதுதானில்லை. நீங்கள் கல்வியறிவு பெற்றவர்கள்; கவிதையை அறிந்தவர்கள். நீங்கள் அனுபவிக்கும்படி சொல்வது டி. கே. சி. க்குப் பெருமையன்று. கவிதையே அறியாதவர்கள்கூடக் கேட்டுக் கவிதையை அனுபவித்து உணரும்படி எடுத்து உணர்த்தும் ஆற்றல் இருப்பதே அவருக்குப் பெருமை. படித்தவர்களுக்கு நான்கூட ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லிவிடுவேன்: இந்தச் சாமர்த்தியம் எனக்குண்டு. ஆனால் பாமர மக்களுக்குக் கவிதைச் சுவையை ஊட்ட வல்லவர் அவரொருவர்தான். இந்த விஷயத்தில் என் காலத்தில் நான் அறிந்தவர்கள் யாரும் டி. கே. சி. க்குச் சமீபத்தில் வரமுடியாது. ஆங்கிலத்தில் நானும் எவ்வளவோ படித்திருக்கிறேன். இங்கிலாந்திலோ அமெரிக்காவிலோ கூட இப்படிச் சொல்லும் திறமை பெற்றவர் இல்லை என்பது நிச்சயம்" என்றார்கள்.

"ஆனால் டி. கே. சி. யை எத்தனையோ பேர் குறை கூறுகிறார்களே?"

"உலகம் அப்படித்தான். இவர்கள் ஈக்களைப் போன்றவர்கள். அழகான பெண்ணொருத்தி இருக்கிறாள். அவளுடைய அழகைப் பார்த்துக் கண்களால் பருகிக்கொண்டிருக்கலாம். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாது. ஆனால் ஈ என்ன செய்கிறது? அவள் சுண்டுவிரல் நுனியிலுள்ள சிறு புண்ணைத் தேடிப் போய் மொய்க்கிறது. அதைப் போலத்தான் இவர்களும். டி. கே. சி. எந்தப் பாட்டை விட்டார், எந்தப் பாட்டைத் திருத்தினார் என்று தேடுகிறார்களே யொழிய, எந்தப் பாட்டுக்கு என்ன விளக்கம் கொடுத்தார், கவிச் சுவை எங்கே கண்டார் என்பதை

இவர்கள் கவனித்ததில்லை. ஈக்களைப் பற்றி உங்களுக்கு என்ன கவலை?" என்று உடனே பளிச்சென்று கூறினார்கள்.

மேலும் சொன்னார்கள் : "பண்டிதர் என்றால் புலமை மிக்கவர் என்பது பொருள். பண்டிதர்களுக்கே வடமொழியில் 'தோஷக்ஞர்' என்ற பெயருமுண்டு; அதாவது குற்றத்தை உணர்பவர்கள் என்பது கருத்து. இது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பண்டிதர்களுக்கு நன்றாய்ப் பொருந்தும். ஏனென்றால், இவர்கள் ஒரு நூலிலோ ஒருவரிடமோ உள்ள தோஷத்தை மட்டுமே பார்க்கிறார்களேயொழிய, குணத்தைப் பார்ப்பதில்லை. உண்மையில் நூலாராய்ச்சி செய்பவன், குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் வேண்டுமென்பதே நம் தமிழ் மரபு" என்றார்கள். "மறுவோடு கூடிய சந்திரன்தான் நமக்குக் கிடைக்கிறான். மறுவில்லாத சந்திரன் வேண்டுமென்று கேட்டால், கிடைக்கிறானா? இதற்காக நாம் மறுவைப் பழிக்கிறோமா? அவனுடைய தண்ணிலவை அனுபவிக்கிறோம். அதுபோலவே இலக்கியத்திலும், வேறெதிலுமே, குணத்தைப் பாராட்டத் தெரிய வேண்டும். குற்றத்தைப் பாராட்டலாகாது."

* * * *

முதலியாரவர்கள் 1876 ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷன் பரீட்சை தேறினார்கள். மேலே எப். ஏ. படிக்கும்படி தகப்பனார் வற்புறுத்தினார். ஆனால் இவர்களுக்கோ ஆங்கிலப் படிப்பில் அவ்வளவு மோகமில்லை. தகுந்த செல்வ நிலையுள்ள குடும்பமாதலினாலே, உத்தியோகம் செய்து சம்பாதித்து ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. தவிர, இவர்களுக்குத் தோட்டவேலையிலும் மாடு வளர்ப்பதிலும் ஈடுபாடு அதிகம்.

இவர்களோடு உடன்படித்தவரான டி. என். சிவஞானம் பிள்ளை (பின்னால் சர் பட்டம் பெற்றவர்) எப். ஏ. வகுப்பில் சேர்ந்திருந்தார்.

“மாடு வளர்த்து விற்ருலே மாதம் நூறு ரூபாய் வரும். என் பூந்தோட்டத்தில் மாதம் பத்து ரூபாய் வரும்படி வரும். படித்து உத்தியோகம் பார்க்க வேண்டிய அவசியம் என்ன வந்தது எனக்கு?” என்று ஒரு சமயம் இவர்கள் அக்காலத்தில் பிள்ளையோடு தர்க்கம் செய்ததுண்டு. ஆயினும் சிவஞானம் பிள்ளை பிடிவாதம் செய்வார். ஒரு சமயம் பின்வருமாறு எழுதினர்: “நீ நினைப்பது சரி. ஆனாலும், எந்தக் கல்லூரியிலாவது சேர்ந்து ஐந்தாண்டுகள் படி. பிறகு ஆகவேண்டிய மற்ற விஷயங்களை நீயே முடிவு செய்துகொள்.”

இதைக் கண்டபோது, முதலியாரவர்கள், மேலே படிக்கலாமென்று முடிவு செய்தார்கள். அப்போது சென்னைக்கு ரயில் கிடையாது. திரிசிராப்பள்ளி வரையில் தபால் வண்டியில்தான் போகவேண்டியிருக்கும். திரிசிராப்பள்ளியிலிருந்து சென்னைக்கு ரயில் உண்டு. தபால் வண்டியிலும் ரயில் வண்டியிலுமாகப் பிரயாணம் செய்து முதலியாரவர்கள் சென்னைக்கு வந்தார்கள். சென்னைக்கு வந்து கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்தார்கள். அங்கே அப்போது புகழ்பெற்ற ஆசிரியரான டாக்டர் மில்லர் தலைவராயிருந்தார். அவர் மில்டனையும் ஷேக்ஸ்பியரையும் அருமையாகச் சொல்லித்தந்தார். இங்கே மில்டனை அனுபவித்துக் கற்றதன் பயனாகத்தான் பிற்காலத்தில் மில்டனுடைய காவியமாகிய சுவர்க்க நீக்கத்தை இவர்கள் மொழிபெயர்த்தார்கள் போலும்.

* * * *

“சென்னையில் படித்தபோது ஏதாவது விளையாட்டுக்களில் சேர்ந்து நீங்கள் விளையாடினதுண்டா?” என்று கேட்டேன். “இல்லை, இது எனது துர்ப்பாக்கியந்தான். உடலுக்குப் பயிற்சி தாராமல் கல்வி பயிலுவது நல்ல பயன் தராது. அழகான ஒரு பெண்ணை நன்ருக அலங்கரித்து

நகைகளை எல்லாம் பூட்டிச் சாப்பாடே போடாமல் வைத்து விட்டால், அவள் அழகு என்னவாகும்? அப்படித்தான் இதுவும் " என்று சொன்னார்கள்.

இவர்களுக்குக் கல்லூரியில் ஆங்கிலப் பாடம் வரும்; கணக்குத்தான் பூச்சியம். ஆனால் பரீட்சையிலோ, ஆங்கிலப் பாடந்தான் இவர்களுக்குத் தவறிப் போயிற்று. ஏன் இப்படி என்று கேட்டோம்.

" ஆங்கிலப் பாடத்தில் குருட்டுப் பாடம் பண்ண வேண்டியிருந்தது. அது என்னால் முடியவில்லை. தமிழ்ப் பாடத்தில், சொல்லிச் சொல்லி எப்படியோ நாப்பழக்கத் தால் பாட்டுக்கள் என் மனத்தில் நின்றுவிடும். ஆனால் ஆங்கிலத்தில் இப்படி நிற்பதில்லை. இதனால்தான் பரீட்சை யில் ஒரு முறையல்ல, இரண்டு முறை, தவறிவிட்டேன். பரீட்சையில், ஒரு சிறிய துளையைக்காட்டி இதற்குள் நுழை என்கிறார்கள். மூளைக்கு வேலையில்லாமல் நெட்டுருப் போட்டவன்தான் அப்படிச் செய்ய முடியும். கொஞ்சம் விஷயம் தெரிந்து படித்தவன் பெரியவனாகிவிடுகிறான். அதே தொளை அவனுக்குப் போதுகிறதில்லை " என்றார்கள்.

* * * *

பிறகு அவர்கள் சைதாப்பேட்டையிலிருந்த விவசாயக் கல்லூரியில் சேர்ந்தார்கள். இயற்கையாகவே அவர் களுக்குப் பயிர்த்தொழிலில் ஆர்வம் மிகுதி. ஆகவே விவசாயக் கல்லூரிப் படிப்பு மிகவும் பிடித்திருந்தது. இங்கே உடற் பயிற்சிக்காகப் படகோட்டும் விளையாட்டில் கலந்துகொள்வதுண்டு. கல்லூரி ஆசிரியரொருவரிடத்தில் இவர்களுக்கு ஈடுபாடு அதிகம். 'உலகத்தில் யாராவது புதிதாகச் செல்வத்தைச் சிருஷ்டித்திருக்கிறார்களா? இல்லை. நாம்தான் உலகத்துக்கு உண்டியும் உடையும் உதவுகிறோம்' என்று அவர் அடிக்கடி கூறுவார். இத்தொடர்புகளால் மேழிச் செல்வமே மேலான செல்வம் என்ற கருத்து இவர் களுடைய உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தது.

மூன்று ஆண்டுகள் விவசாயக் கல்லூரியில் பயின்ற பின்னர் பம்பாய்க்குச் சென்றார்கள். ஓராண்டு அங்கே மிருக வைத்தியக் கல்வி பயின்றார்கள். விவசாயத்திலும் மிருக வைத்தியத்திலும் 'டிப்ளமா' பெற்றார்கள்.

* * * *

படிப்பெல்லாம் இப்படி வேறு துறைகளில் இருந்த போதிலும், இளமைப் பருவத்திலிருந்தே தமிழ்ப் பைத்தியம் அதிகமாயிருந்தது. காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார், அழகான பாடல்கள் அனேகம் பாடிய அழகிய சொக்கநாதப் பிள்ளை, மனோன்மணீயம் எழுதிய திருவனந்தபுரம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியோருடைய நட்பு, இவர்களுக்குத் தமிழ்ப் பைத்தியமுற்றக் காரணமா யிருந்தது. ரெட்டியார் முதலியவர்களோடு கூடி எப்போ தும் தமிழ்க் கவிகளை ஆராய்வதும் பொருள் காணுவதுமே இவர்களுக்குப் பொழுதுபோக்கு. யமகம் திரிபு சிலேடை போன்ற முடிச்சுக்களைச் சோதிப்பதிலும் அவிழ்ப்பதிலும் இவர்களுக்கு ஆர்வம் அதிகம். இந்தப் பழக்கத்தினால் இவர் களுக்கும் இளமையிலேயே இத்தகைய பாடல் பாடும் ஆற்றல் வந்தது. நெல்லைச் சிலேடை வெண்பா என்ற நூல் அப்போது பாடினார்கள்; அதாவது கல்லூரிக்குப் போகு முன்னமே.

"நெல்லைச் சிலேடை வெண்பா பாடிய காலத்தில் எனது தமிழறிவு மிகவும் சொற்பம். அப்போது எனக்கு உண்மையில் தமிழே தெரியாது என்றாலும் குற்றமில்லை. ஏனென்றால் அதுவரையில் நான் கம்பராமாயணம் படித்த தில்லை" என்றார்கள்.

"உங்களுடைய நூல்களில் எந்த நூலுக்குப் பாராட்டு தல் எளிதில் கிடைத்தது?" என்று கேட்டேன்.

"நான் விரைவில் பாடிய நூல் கோம்பி விருத்தம். ஒரு பச்சோந்தியைக் குறித்த சிறு நூல். இதை ஒரு வாரத்தில்

பாடி முடித்தேன். இது வெளியானவுடனே, எல்லோரும் இதைப் பெரிதும் பாராட்டினூர்கள். ஆனல் மில்டனுடைய காவியத்தின் மொழிபெயர்ப்பாகிய சுவர்க்க நீக்கத்துக்கு இவ்வளவு பாராட்டுதல் கிடைக்கவில்லை. இது எவ்வளவோ முயன்று செய்த நூல். ஆறேழு வருஷம் உழைத்துப் பாடிய நூல். ஆனல் இதைத் தகுந்தபடி தமிழுலகம் ஏற்றது என்று எனக்குத் தோன்றவில்லை. உலகமே அப்படித்தானே ? சாரமுள்ளதை விரும்புவது குறைவாகத் தானே இருக்கிறது !'' என்றூர்கள்.

தமிழ் இலக்கியங்களைப்பற்றிப் பேச்சு வந்தது. "எந்த நூல்களை மிக்க உயர்வாகக் கருதுகிறீர்கள் ?'' என்று கேட்டோம்.

உடனே சற்றும் தயக்கமில்லாமல், "திருவள்ளுவரையும் கம்பரையுமே நான் உயர்வாகச் சொல்வேன். கலிங்கத்துக் பரணியையும் கூடவே சேர்த்துக்கொள்ளலாம்'' என்றூர்கள்.

"சங்க நூல்கள் எப்படி ?''

"இவையெல்லாம் சாமானியம். உங்களுக்குத் தெரியாதா? என்னை ஏன் கேட்கிறீர்கள் ?'' என்றூர்கள்.

"பஞ்ச காவியங்கள் என்றெல்லாம் சொல்கிறூர்களே! சிலப்பதிகாரம் நன்றூயிருக்கிறதே ! எவ்வளவோ அருமையான உரைகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றனவே. இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன ?'' என்று கேட்டோம்.

"இதிலே சொல்வதற்கு என்ன இருக்கிறது ? சிலப்பதிகாரத்தை நான் அதிகமாக அனுபவிப்பது இல்லை. அதிலுள்ள வரிப்பாடல்கள் அபூர்வமானவை ; உயர்ந்த கவித்திறம் வாய்ந்தவை. இவற்றை நான் பாடிப் பாடி அனுபவிப்பது வழக்கம். இவை சம்பந்தமாக எனக்கிருந்த சந்தேகத்தை நண்பர் டி. கே. சி. போக்கி விட்டார்'' என்றூர்கள்.

"என்ன சந்தேகம்?"

"என்னுடைய கருத்துக்களை வெளியே சொல்ல அச்சமாயிருக்கிறது. பொதுவாக நான் பிறருக்குப் பயப் படுகிறவன் அல்லன் என்றாலும், இந்த விஷயங்களை யெல் லாம் சொல்லி, பண்டிதர்களுடைய வசவை வாங்கிக் கொள்வானேன்? யாராவது என்மீது கல்லைவிட்டெறிந் தாலும் எறிவார்கள். இந்த வயதிலே எனக்கேன் இந்த உபத்திரவம்?"

"உங்களுடைய அபிப்பிராயம் தமிழருக்குத் தெரிய வேண்டாமா? பிறருடைய கண்டனத்துக்கு அஞ்சி நீங்கள் ஒளிக்கலாமா?" என்றேம்.

"இதில் ஒளிவென்ன இருக்கிறது? சிலப்பதிகார வரிப் பாடல்கள் மட்டும் மிக்க அழகாக இருக்கின்றன. இவற்றைச் சிலப்பதிகார ஆசிரியர் பாடியிருப்பாரோ என்ற சந்தேகம் எனக்கு இருந்துவந்தது. ஒரு சமயம் டி. கே. சி. யைக் கேட்டேன். 'இல்லை. இவை பழம் பாடல்களாகத் தெரிகின்றன. ஆசிரியர் இவற்றை மேற் கோளாகத்தான் எடுத்து ஆண்டிருக்கவேண்டும்' என்றார் அவர். இது என்னுடைய அனுபவத்தைத் தெளிவாக்கி விட்டது" என்றார்கள்.

முதலியாரவர்களுடைய கருத்தை உலகம் ஒப்புக் கொள்ளலாம்; அல்லது ஒப்புக்கொள்ளாமற் போகலாம். எனினும், இவ்விஷயத்தை அவர் எவ்வளவு கூர்ந்து கவனித் திருக்கிறார் என்பதைத்தான் இது புலப்படுத்துகிறது.

வயது அவர்களுக்கு எண்பத்தாறு ஆனபோதிலும் கூட, பேசுவதில் அவர்களுக்குள்ள உற்சாகத்துக்கு எல்லை யில்லை. சிறுபிள்ளைகளுக்கும் இளம்பிள்ளையாகவே அவர்கள் அந்நேரம் தோன்றினார்கள். பொதுவாக யாருமே வயதா னால் இளைஞர்களோடு பேசும்போது, "சிறுபிள்ளையாகிய உனக்கு ஒன்றும் தெரியாது, எனக்கு எல்லாந் தெரியும், நான் சொல்வதை நீ கேட்டுக்கொண்டு போகக்கடவாய்"

என்ற தொனியோடுதான் பேசுவார்கள். ஆனால் முதலியாரவர்கள் அப்படியல்ல. அவர்களோடு பேசும்போது, வயதிலே நமக்குள் எவ்வளவோ வித்தியாசம் என்ற உணர்ச்சி ஏற்படுவதேயில்லை. அவர்கள் பழகுகிற மாதிரியானது, நம்மையும் சர்வ சாதாரணமாகவே பழகச் செய்துவிடும்.

பேசுவது என்றால், பொது மேடையிலாகட்டும், தனிப்பட்ட முறையில் நாற்காலியில் உட்கார்ந்து பேசுவதாகட்டும், உணர்ச்சி வசப்பட்டுக் கையைக் காலை ஆட்டிப் பேசுவது அழகாயிராது என்பது நாம் கற்கும் பாடம். இந்தப் பாடத்தை அவர்கள் படித்ததில்லை. பேசும்போது, அவர்கள் வாய்மட்டும் பேசுவதில்லை. கைகள் பேசும், கால்கள் பேசும், கண்கள் பேசும், உடலே பேசிவிடுகிறது. கையிலே கழி வைத்திருந்தால் அந்தக் கழியும் பேசிவிடுகிறது.

பேச்சில் எப்போதும் பொருள் பொதிந்த நகைச்சுவை மிகுதியாக இருக்கும். நண்பரைக் கேலி செய்து அவர் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டுக் கோபமாய்ப் பேசுவது போலக் காட்டி, இந்தப்புறம் இடதுகையால் நம்முடைய தொடையில் ஒரு தட்டுத்தட்டி அல்லது ஒரு கிள்ளுக் கிள்ளி, கண் சிமிட்டுவார்கள். நண்பரோ, எண்ணெயில் போட்ட பணியாரம்போல் கோபத்தால் துள்ளிக்கொண்டிருப்பார்; நாங்கள் இந்தப் புறம் சிரித்துக்கொண்டிருப்போம்.

நாங்கள் அவர்களோடு பேசிய சில மணி நேரத்துக்குள் சுமார் நூறு பாட்டாவது பாடியிருப்பார்கள் — கம்பராமாயணம், தனிப் பாடல்கள், அவர்களுடைய சொந்தப் பாடல், அழகிய சொக்கநாதப் பிள்ளை பாடல் — இவைகளே அதிகம். பாடல் சொல்வதென்றால், ஒவ்வொரு பாட்டையும் திருப்பித் திருப்பிப் பலமுறை சொல்வார்கள். அதிலுள்ள ஒவ்வொரு வரியையும் — ஒவ்வொரு சொல்லை

யும் — ஒவ்வொரு அசைவையுமே நன்றாய்ப் பூரணமாக அனுபவித்துச் சொல்வார்கள். சொல்வதென்றால், செத்தாற்போல் வசனமாகச் சொல்வதல்ல. முடிந்தவரையில் பாட்டைப் பாட்டாக இசையோடு பாடுவதுதான். தள்ளாத வயது. கையிலே ஒரு பேனாவைப் பிடிக்க முடியாது ; ஓர் எழுத்து எழுத முடியாது ; கை விரல்களே அவ்வளவு நடுக்குகின்றன. குரலிலுள்ள நடுக்கமோ சொல்லவேண்டியதில்லை. இந்த நிலையில் அவர்கள் பாடுவதை—மடக்கி மடக்கிப் பாட்டைப் பாடுவதைப் பார்த்த போது, எங்கள் உள்ளம் உருகிவிட்டது. தமிழே உயிர் என்றெல்லாம் பிறர் சொல்வார்கள். அதைப் பிரத்தியட்சமாய்க் கண்முன் நாங்கள் அன்று கண்டோம். பாட்டினால் பெறுகிற இன்பம் பண்பட்ட உள்ளத்துக்குத்தான் கிடைக்கும். அது எவ்வளவோ நுட்பமானது என்பது உண்மைதான். ஆயினும், கவிதை தரும் இன்பம் எப்படிப்பட்டது என்பதை அன்று நாங்கள் ஸ்தூலமாகவே கண்ணால் காண முடிந்தது என்றால் மிகையன்று.

பேசுபவர்களிலே, ஒரு வகையுண்டு. தங்கள் செவியின்பத்துக்காகவே பேசுவோர் பலர். அப்படிப்பட்டவர்களோடு பேசும்போது, நாம் சுகமாக ஒரு தூக்கம் தூங்கிவிட்டு எழுந்திருக்கலாம். அவர்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை ; அவர்கள் பேசுவது முக்கியமேயொழிய நாம் கேட்பது அவர்களுக்கு முக்கியமல்ல. இந்தக் காரியம் முதலியாரவர்களிடம் பலிக்காது. நாம் கூர்மையாகக் கவனித்து வந்தால் சரி ; இல்லையானால் உடனே மடக்கி விடுவார்கள்.

ஒரு பாட்டைச் சொல்லிக்கொண்டே வந்தார்கள். அப்போது உடனிருந்த நண்பரொருவர் தலையாட்டிக்கொண்டேயிருந்தார். அவருடைய கவனம், கையிலிருந்த ஒரு புத்தகத்தின்மீது சென்று கொண்டிருந்தது. முதலியாரவர்களும் இதைக் கவனித்துவிட்டார்கள். அவர்கள் சொல்லிவந்த

ஒரு பாட்டிலே, ரசமான ஓர் இடம் வந்ததும், நாங்கள் ‘ பேஷ் ’ என்றோம். நண்பரும் தலையாட்டினார். முதலியா ரவர்கள், எங்களைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிவிட்டு, அந்த நண்பரைப் பார்த்து, “ விளங்கிற்று ?” என்றார்கள். நண்பர் சாதாரணமாகச் சொல்வதுபோல, “ ஆமாம் ” என்றார். “ என்ன விளங்கிற்று, சொல்லுங்கள் பார்க்கலாம் ” என்றார்கள் முதலியார். நண்பர் என்ன செய்வார், பாவம் ?

“ நான் மிக முயன்று ஒரு விஷயத்தை எடுத்து விளக்கிச் சொல்லும்போது நீங்கள் கவனிக்காவிட்டால், நான் சொல்லி என்ன பயன் ? அன்போடு நீங்கள் கேட்க வந்திருக்கிறீர்கள் என்றுதானே சொல்கிறேன் ? திருப்பிச் சொல்ல முடியுமா ? சொல்லத்தான் வருமா ? அது எவ்வளவு கஷ்டம் ?” என்றார்கள். அவர்கள் முகத்திலே கோபக்குறி இருந்தது.

நண்பர் முகம் சுண்டி விட்டது. பார்த்த முதலியார், கலகல வென்று சிரித்துக்கொண்டே, “ மறுபடியும் சொல்கிறேன் கேளுங்கள் ” என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

இது எப்போதும் அவர்கள் செய்கிற ஒரு தந்திரம். கோபம் வந்து விட்டதுபோல் தோன்றும். படபட வென்று பேசுவார்கள். கண்டு நமக்குச் சிறிது தயக்கமும் சோர்வும் ஏற்பட்டதோ இல்லையோ, அடுத்த விநாடியே கலகல வென்ற சிரிப்பை அவர்களிடம் பார்க்கலாம்.

“ என்ன சொன்னேன் ” என்று முதலியாரவர்கள் கேட்டபோது, நண்பர், சொல்ல முடியாமல் திகைத்தாரல்லவா ? அப்போது நான் சிரித்து விட்டேன். நண்பருக்கு என்மேல் கோபம், என்னை எப்படியாவது கொஞ்சம் ‘ இறக்க ’ வேண்டுமென்று எண்ணினார். எண்ணி, முதலியாரவர்களைக் கேட்டார் : “ நீங்கள் இந்த மாகாணம் முழுதும் சுற்றியிருக்கிறீர்களே ! உங்களுக்குப் பிடித்த ஜில்லா எது ?” என்று கேட்டார்.

கேட்டத்தில் நண்பருடைய நோக்கம் வேறு. முதலியாரவர்கள் திருநெல்வேலியைத்தான் சொல்வார்கள். நான் திருநெல்வேலிக்கார னல்லாதபடியால், அது எனக்குத் திருப்தி யளிக்காது என்று அவர் கருதினர்.

ஆனல் முதலியாரவர்கள், பளிச்சென்று, " கேட்பானேன்! தஞ்சாவூர் ஜில்லாதான் " என்றார்கள். (பேசிக்கொண்டிருந்த நாங்கள் அனைவருமே செட்டியார், நானும் செட்டி நாட்டான்தான் என்றே முதலியாரவர்களுக்கு அன்றும் நினைப்பு, இன்றும் நினைப்பு.)

ஏமாற்ற மடைந்த நண்பர், " அதென்ன உங்கள் திருநெல்வேலியை விட்டு விட்டுத் தஞ்சாவூரைச் சொல்கிறீர்கள்? அப்படி என்ன இருக்கிறது தஞ்சாவூரில்?" என்று கேட்டார்.

" இப்படி நீங்கள் கேட்பதானல், எனக்குப் பிடித்த ஊர் வெள்ளகால்தான் என்று நான் எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிடுவேன். என் ஊரை விடப் பிடித்தது எனக்கு வேறொன்று இருக்க முடியுமா? ஆனல், ஜில்லா என்று வந்தால், தஞ்சாவூர் ஜில்லாதான். மக்களுடைய பண்பாடு, நாகரிகம், விருந்தோம்பல், இசைக்கலை, கோயில்கள், நந்தவனங்கள், மக்களுடைய உருவப் பொலிவு, அறிவு இத்தனையாலும் சிறப்புடையது, தமிழ் நாட்டில் தஞ்சைதான், சந்தேகமில்லை " என்றார்கள்.

பெண்களைப் பற்றிக் குறைவாகப் பேசுவதை, இலக்கியத்திலாகட்டும் வேறெதிலாகட்டும், அவர்களால் பொறுக்க முடியாது. ஒரு பெண்ணுக் கேற்பட்ட இழிவைப் போக்க வேண்டுமென்ற கருத்தோடுதான் அவர்கள் **அகலிகை வெண்பா** பாடினர்கள். இது சம்பந்தமாகப் பேசி வந்தபோது, பெண்கல்வியைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்போது அவர்கள் சொன்னர்கள்: " இந்தக் காலத்திலெல்லாம், பெண் கல்வி வேண்டுமா வேண்டாமா என்பது வாதத்துக்கு இடமில்லாததாய்ப் போய்விட்டது.

ஆனால் என் காலத்தில் இது பெரிய சிக்கலான கேள்வியா யிருந்தது. பார்க்கப் போனால், இதில் சிக்கலொன்றுமில்லை. நம்முடைய நாகரிகமெல்லாம், குடும்பம் சரிவர நடந்து வருவதை எண்ணி ஏற்பட்டது. சிக்கனமாகவும் நன்மை தரக்கூடிய முறையிலும் இன்பந்தரக்கூடிய முறையிலும் இல்வாழ்க்கை இருக்க வேண்டும். இது காரணமாகவே, பெண் வீட்டு வேலைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பட்டது. மற்றப்படி வேறு வேலைகளுக்கு அவள் லாயக்கில்லை என்பது அர்த்தமன்று. ஆண் பெண் என்ற வித்தியாசமே கிடையாது. கல்வி இருவருக்கும் ஒன்றுதான்.''

'' அப்படியானால் யாரும் எந்த வேலையும் செய்ய முடியுமா ?''

'' சந்தேகமில்லாமல். ஆனால் இயற்கையில் யார் யார் எந்த வேலைக்குப் பொருத்தமோ அந்த வேலையை அவரவர் செய்வதே நன்மை தரும். ஒரு பெண்ணுக்கு, குறித்த ஒரு துறையில் நாட்டம் மிகுதியாக இருக்குமானால், அவள் அதை மேற்கொள்வதே சிறந்தது. அதைவிட்டு, அடுப்பூதிக் கொண்டே இரு என்று அவளுக்குச் சொல்வது தவறு. எந்தத் தொழிலில் யார் கெட்டிக்காரரோ அவர் அதைச் செய்வதற்கேற்ற கல்வியும் சந்தர்ப்பங்களும் சமூகம் அமைத்துத் தரவேண்டும். ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்வீர்களா ?'' என்றார்கள்.

'' என்ன ?''

'' அன்னிபெசண்டை வைசிராயாகப் போட்டால், வேலைத் திறமையில் இப்போதிருக்கிற வைசிராய்க்குப் பிந்துவாளா ?'' என்று கேட்டார்கள்.

இதில் சந்தேகத்துக்கு இடம் எங்கே யிருக்கிறது ? ஆனால் நமக்கு மூன்று தலைமுறை முந்தியவரான இந்தத் தாத்தாவிடம் இப்படிப்பட்ட தீவிரமான அபிப்பிராயங்கள் இருந்ததைக்காண எனக்கெல்லாம் ஒரே வியப்பாயிருந்தது.

"சாதிக் கொடுமை என்று சொல்கிறார்களே! உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்றெல்லாம் நம்மிடையே எவ்வளவோ வேற்றுமை இருக்கிறதே. இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன? சாதி ஒழியவேண்டியதுதானே?" என்று கேட்டேன்.

"இது பைத்தியக்காரப் பேச்சு. மனிதன் இருக்கிற வரையில் ஏதோ ஒரு வகையில் சாதி வேற்றுமை இருந்து கொண்டுதான் இருக்கும். அறிவுடையவனும் அறிவில்லாதவனும் ஒரே சாதியாகுமா? ஆனால் பிறப்பினாலே உயர்வென்றும் தாழ்வென்றும் பேசுகிற சாதி வேற்றுமை போகத்தான் வேண்டும். கடவுள் படைப்பிலே எல்லோரும் ஒன்றுதான். பிறப்பினாலே எல்லோரும் ஒன்றுதான். அவனவன் தனக்கு உயர்வையோ தாழ்வையோ தேடிக் கொள்கிறான். சாதியினாலுண்டாகிற அகம்பாவ உணர்ச்சி போகவேண்டும். இதற்கெல்லாம் சட்டம் வேண்டுமென்பதில்லை. அறிவு வளர வளர இந்த உயர்வு தாழ்வு மறையும். ஆனால் ஏழை பணக்காரன் என்ற சாதி வேற்றுமையும் இது காரணமாக உண்டான சுரண்டலும் உடனே மறைய வேண்டும். இந்தச் சுரண்டல் வடக்கே இமயத்திலிருந்து தெற்கே திருவனந்தபுரம் வரையில் அதிகமாயிருக்கிறது" என்றார்கள்.

"இருந்தாலும் இந்தச் சாதிவேற்றுமை என்ற தீய வழக்கம் நமது தமிழ் நாட்டில்தானே அதிகமா யிருக்கிறது?" என்றார் ஒரு நண்பர்.

வந்து விட்டது முதலியாரவர்களுக்குக் கோபம். சொல்ல முடியாத கோபம். அப்போது பேச்சுக்கூட அதிகம் வெளிவரவில்லை. துடிப்பும் ஆவேசமும்தான். சிறிதேனும் தயக்கமில்லாமல், ஒரேஒரு கேள்வி கேட்டார்கள்: "ஏனையா, உங்கள் மனுதர்மசாஸ்திரத்தைத் திருநெல்வேலியில் வைத்தா எழுதினான்? என்னமோ தமிழ் நாட்டில் தான் அதிகமென்கிறீர்களே!" என்றார்கள்.

இவ்வாறு பேசியபோது, மிக்க வேகமாகத் தம் கைகளை முன்புறத்தில் ஆட்டினார்கள். எதிரில் நான் உட்கார்ந்திருந்தேன். இடது கை ஆடிய வேகத்தில் என் முகத்தில் பட்டு, நான் போட்டிருந்த கண்ணாடி அப்படியே பறந்துவிட்டது. கொஞ்ச தூரத்தில் போய் விழுந்தது.

டி. கே. சி. யவர்கள் புறப்படும்போது கொடுத்த எச்சரிக்கையை மனத்தில் எண்ணிக்கொண்டேன். வெறும் கையே இந்தப் பாடுபடுத்துகிறதே, கையில் ஒரு கழியோ குடையோ இருந்தால், பேச்சு வாக்கிலே நம் மண்டை உடைபட்டாலும் படக்கூடும் என்று நினைத்தேன்.

எழுந்துபோய்க் கண்ணாடியை எடுத்துத் துடைத்துப் போட்டுக்கொண்டேன். " உடையவில்லையே !" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்கள். நாற்காலியைக் கொஞ்ச தூரத்தில் தள்ளிப் போட்டுக்கொண்டேன். அவர்களுடைய வேகமும் ஆத்திரமும் மறைந்துவிட்டன. சிரித்த படியே, முதுகில் இரண்டு தட்டுத் தட்டிவிட்டு, தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியை இன்னும் கொஞ்சம் அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டார்கள் !

" இந்தச் சாதி வேற்றுமையைக் குறித்து இந்த முறையிலே நீங்கள் எப்போது சிந்திக்க நேர்ந்தது ?" என்று கேட்டேன்.

" எல்லாம் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில்தான். பள்ளிக்கூட வாழ்க்கை இந்த வழியில் மிகவும் பயனுடையதாயிருந்திருக்கிறது."

" எப்படி ?"

" கிறித்தவக் கல்லூரியில் படித்தபோது, நான் கற்றவை அளவில்லாதன. உயர்ந்த நோக்கங்களையும் சிறந்த குறிக்கோளையும் படிப்பு எங்களுக்குப் போதித்தது. சாதி என ஒன்று இல்லை, பிறப்பினால் மேல் கீழ் என்பது இல்லை, மனிதன் யாராயிருந்தாலும் ஒன்றுதான், ஏழைக்கும் பணக்காரனுக்கும், நான் உயர்ந்தவன் என்பவ

னுக்கும் தாழ்வாயுள்ளவனுக்கும், இரத்தம் ஒன்றுதான் என்றெல்லாம் அருமையான பாடங்களை நாங்கள் படித்தோம். படித்ததிலொன்றும் குறைவில்லை. ஆனால், மத்தியானம் இடை நேரத்திலே 'டிபன்' சாப்பிடப் போவோமல்லவா? அப்போது, டிபன் அறைக்குள் போனவுடன், எங்கள் டிபன் பொட்டலத்தை அவிழ்த்து வைத்துக் கொண்டு, ஒவ்வொருவனும் சுவரைப் பார்த்து நெருங்கி உட்கார்ந்து விடுவோம். அவரவர் சாப்பிடுவதைக்கூட மற்றச் சாதிக்காரன் பார்க்கக்கூடாது என்பதில் அவ்வளவு உறுதி. சாதி வேற்றுமை இல்லை யென்று நாங்கள் கற்ற பாடத்தைச் செய்கையில் இப்படித்தான் கடைப்பிடித்தோம்" என்று சொல்லி விட்டுத் தொடையில் ஒரு தட்டுத் தட்டினார்கள்.

கற்பது ஒன்று, நடப்பது அதற்கு நேர்மாறு! தாத்தா காலத்திலும் இப்படித்தான் என்றறிவதில் ஓர் ஆறுதல் பிறக்கிறதல்லவா?

"இந்தப் பழக்கம் உங்களுக்குப் பள்ளிக்கூடத்தில் மாறவே யில்லையா?" என்று கேட்டேன்.

"மாறிற்று. ஆனால் அது வேறிடத்தில். விவசாயக் கல்லூரியில் நான் படித்தபோது, தினந்தோறும் கலப்பையைப் பிடித்து ஒருமணி நேரம் உழுதாகவேண்டும். வேத மோதுகிற சாஸ்திரிகள் வீட்டுப் பையனாயிருந்தாலும் சரி, பத்துக் கிராமங்களையுடைய பண்ணைக்காரர் மகனாயிருந்தாலும் சரி, மாணவன் குடியானவனுக்குச் சமமாய்க் கொஞ்ச நேரம் உழுதாக வேண்டும். இந்த விதிக்கு விலக்கில்லை. ஒரு மணி நேரம் உழுததில், உடம்புக்கு வேண்டிய பயிற்சியும் கிடைத்தது. சாதி வேற்றுமை இல்லை என்ற உணர்ச்சியும் வயலில் கலப்பைமுகத்தில்தான் முதன் முதலாக வந்தது. ஏனென்றால், சரியாக உழத் தெரியாத போது, ஒரு குடியானவனிடமல்லவா அங்கே கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது? ஆகவே, படித்த பாடமெல்

லாம் விவசாயக் கல்லூரியில்தான் செயல் முறைக்கு வந்தது. இது சுமார் 1880ஆம் ஆண்டில். அப்போது சைதாப்பேட்டையி லிருந்த சென்னை விவசாயக் கல்லூரி ஒன்றுதான் இந்தியா முழுவதிலுமிருந்த ஒரே விவசாயக் கல்லூரி" என்றார்கள்.

இப்படிப் பேசிக்கொண்டு வந்தபோது, நண்பர் கையிலிருந்த ஒரு புத்தகத்தின்மீது அவர்கள் கவனம் சென்றது. அது கார்ல் மார்க்ஸைப் பற்றிய புத்தகம். இதைப் பார்த்தவுடனே, அவர்கள் மறுபடியும் ஒரு பாய்ச்சல் பாய ஆரம்பித்துவிட்டார்கள்.

"இதெல்லாம் சுத்தச் சோம்பேறிகள் வேலை. மார்க்ஸென்றும் லெனினென்றும் ஸ்டாலினென்றும் பிதற்றிக் கொண்டு திரிவது. இதைப் படித்தவர்கள் என்ன பண்ணி விட்டார்கள்?"

"என்னதான் பண்ணவேண்டும்? சொல்லுங்களேன்! நாட்டிலே ஒவ்வொருவனுக்கும் சாப்பாடு வேண்டும், உடுக்க உடை வேண்டும், இருக்க இடம் வேண்டும். இதையெல்லாம் செய்யவேண்டுமா வேண்டாமா? என்ன சொல்லுறீர்கள்?" என்று கேட்டேன்.

"பேஷாகச் செய்ய வேண்டியதுதான். அதற்கு ஆட்சேபமே யில்லை. ஆனால் சாப்பாடும் உடையும் இடமும் இருந்தால் மட்டும் போதுமா? நாட்டின் செல்வம் பெருக வேண்டாமா? பொதுவுடைமை என்றும் சமதர்மமென்றும் வெறுங் கூச்சல் போடுவதனால் செல்வம் வந்துவிடுமா? அமெரிக்காவிலே போர்டைப் பாருங்கள்! அவனல்லவா மனிதன்! சாதாரண மனிதனாகத்தான் வாழ்க்கை தொடங்கினான். தன்னுடைய முயற்சியால் நாட்டுக்கே எவ்வளவு செல்வத்தைத் தேடி வைத்தான்! அவனும் மற்றவனும் சமம் என்று சொல்ல முடியுமா? மின்சார ஆராய்ச்சியாளன் எடிசனைப் பாருங்கள். செயற்கரிய காரியங்கள் எவ்வளவு செய்துவிட்டான்! அவனும் அவனுடைய ஆராய்ச்சிச்

சாலையில் மேஜை துடைக்கும் சேவகனும் ஒன்றுதான் என்றால் என்ன அர்த்தம்? இப்படிச் சொல்வது நாட்டுக்குக் கேடுதானே? சமதர்மம் என்றால் இப்படியா பொருள்? அறிவிலே பெரியவன் பெரியவன்தான்; சிறியவன் சிறியவன்தான். இருவரும் ஒரு மாதிரி என்று ஒரு நாளும் ஆகாது" என்று ஒரே ஆவேசமாய்ச் சொல்லிக் குதித்தார்கள். இடையிலே ஒரு சமயம் அவர்கள் கையை ஆட்டியபோது, நடுவிரல் நகம் என் உதட்டில் குத்திப் பொத்துவிட்டது. கண்ணாடியிருந்து முன்னமே கண்ணைக் காப்பாற்றியது. ஆனால், உதட்டை எது காப்பாற்ற முடியும்? (உதட்டுப் புண் ஆற ஒரு வாரம் பிடித்தது.)

வயது எண்பத்தாறு ஆகியும் அவர்கள் கண்ணாடி போடவில்லை. எதைப் படிப்பதாயிருந்தாலும், எவ்வளவு சிறிய எழுத்தாயிருந்த போதிலும், கண்ணாடி யில்லாமலே படித்தார்கள்.

"நாற்பது வயதிலே எனக்கு வெள்ளெழுத்து வந்தது. கொஞ்ச காலத்தில் தானாகப் போய்விட்டது. கண்ணாடியே நான் போட்டது கிடையாது" என்றார்கள்.

எங்களுக்கெல்லாம் ஒரே வியப்பும் வெட்கமுமாயிருந்தது. அவர்களைப் பார்க்கப்போயிருந்த நாங்கள்—முப்பத்தைந்து வயதுகூட ஆகாதவர்களான நாங்கள் மூவரும்—கண்ணாடி போட்டிருந்தோம்!

சிதம்பரம் குஞ்சிதபாதம் பிள்ளை என்றால் சிதம்பரத்தில் எல்லோருக்கும் தெரியும்; சினிமா பார்க்கிறவர்கள் எல்லோருக்குமே இப்போது தெரியும். ஆசாமி அவ்வளவு கனம். சாதாரணமாய்ப் பத்துப் பேரைத் திரட்டி உருட்டி ஒன்றாக்கினால் அரைக் குஞ்சிதபாதம் பிள்ளை என்று சொல்லலாம். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு அவரிடம் எப்போதும் விளையாட்டுத்தான். இரண்டு பையன்கள் நின்றால், "ஏய், எங்கே அரிசி வாங்குகிறார் என்று கேளடா!"

என்று அவர் காதுப்பட ஒருவன் மற்றவனுக்குச் சொல்வதை இன்றும் பார்க்கலாம்.

பள்ளிக்கூடத்தில் பழகின இந்தப் பழக்கம் இன்றும் என்னைவிட்டுப் போகவில்லை. முதலியாரவர்களைக் கேட்டேன் : "வயது உங்களுக்கு எண்பத்தாறு ஆகிறதே? இவ்வளவு நீண்ட காலம் நீங்கள் வாழ முடிந்ததெப்படி ?"

"அதுவா ? அது ஒரு பரம ரகசியம். அருகே வாருங்கள். மெதுவாக ரகசியமாய்ச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டுச் சொன்னார்கள் : "சாப்பாட்டில்தான் இந்த ரகசியம் இருக்கிறது. பாலும் தயிரும் நான் எப்போதும் அளவில்லாமல் சாப்பிடுவேன். இந்தப் பழக்கந்தான் என்னுடைய தேகாரோக்கியத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் காரணமென்று நினைக்கிறேன்" என்றார்கள்.

முதலியாரவர்கள் மிருக வைத்திய இலாகாவில் நெடுங்காலம் பதவி வகித்ததற்குப் பொருத்தமாக இந்தப் பழக்கம் அமைந்திருக்கிறதல்லவா ?

முதலியாரவர்கள் பேசுவதைச் சொல்லும்போது அவர்களுடைய நாற்காலியைக் குறிப்பிடாமலிருக்க முடியாது. அது சாதாரணமான கித்தான் சாய்வு நாற்காலிதான். கைப்பிடியில் யாளி முகம் வைத்து அழகாய்ச் செய்யப் பெற்றிருந்தது. அவர்கள் பேசும்போது ஆடுகிற ஆட்டத்தையும் துள்ளுகிற துள்ளையும் குதிக்கிற குதிப்பையும் அது எப்படித்தான் பொறுத்துக்கொண்டிருக்கிறதோ என்று நான் வியந்துகொண்டிருந்தேன். எந்த நிமிஷம் அது முறிந்து அவர்கள் கீழே விழுவார்களோ என்றும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்களுக்குக் கனமான சரீரமில்லாதபடியால், நாற்காலிக்கு ஆபத்து ஒன்றும் நேரவில்லை.

கேட்டேன் : "மாதம் இந்தமாதிரி உங்களுக்கு எத்தனை நாற்காலி செல்லும் ?"

என்னுடைய கேலியை அவர்கள் புரிந்துகொண்டார்கள். "இது உறுதியானதுதான், தாங்கும், கவலைப்படாதீர்கள்" என்றார்கள்.

நாற்காலியைக் குறித்துச் சொல்லும்போது, கட்டில் செய்வதில் இவர்களுக்குள்ள ஆர்வத்தைப்பற்றி டி. கே. சி. யவர்கள் எழுதிய கட்டுரை ஞாபகம் வராமலிருக்க முடியாது. அந்த ஆர்வத்தையும் அன்று மாலை நாங்கள் நன்றாய் அனுபவிக்க முடிந்தது.

பொழுது போயிற்று. "கொஞ்ச தூரம் வெளியே போய்விட்டு வருகிறோம்" என்று சொல்லிக் கிளம்பினோம். "கூட யாரையாவது அனுப்பட்டுமா?" என்றார்கள். "வேண்டாம், நாங்களே போய்வருகிறோம்" என்றோம். "நானே வந்துவிடுவேன். எனக்கு ஒன்றும் சிரமமில்லை. ஆனால், வெளியே போகக்கூடாதென்று டாக்டர் சொல்லியிருக்கிறார். போனால், வீட்டிலுள்ளோர் அனைவரும் கோபிப்பார்கள். இதற்குத்தான் பயப்படுகிறேன்" என்றார்கள்.

வெள்ளகால் அழகான ஒரு சிறு கிராமம். ஒருபுறம் சிற்றாறொன்று ஓடுகிறது. அதன் கரையெல்லாம், உயர்ந்து வளர்ந்த தென்னந் தோப்புக்கள். ஊரின் மற்றொருபுறம் சிறிய குளமொன்று உண்டு. அதன் பக்கத்திலும் அடர்த்தியான தென்னந் தோப்புக்கள். ஊரே தோப்புக்குள் புதையுண்டிருக்கிறது என்று சொல்லலாம். ஊருக்கு மேல் புறத்தில் தொலைவில் உயர்ந்த மலைத்தொடர் காணப்படுகிறது. அதனிடையே ஒரு கணவாய். இதன் வழியே எக்காலத்திலும் இனிமையான காற்று வந்துகொண்டேயிருக்கிறது. வெள்ளகால் என்ற பெயருக்கேற்றபடி, ஊர் ஒரே வெள்ள மயந்தான். செழிப்பான நெல் வயல்கள். கேழ்வரகும் அதிகம்.

ஊரில் ஜன நெருக்கம் குறைவுதான். முதலியார் வீடுகள் சில. குடிபடைகளின் வீடுகள் சில. பொதுவாக

ஆரோக்கிய வாசத்துக்கு ஏற்ற சிற்றூர் என்று இதைக் கூறலாம். இதில், இவர்கள் வீடு பெரியது, மிகவும் விசால மானது.

நாங்கள் திரும்பிவந்தவுடனே சாப்பாடு தயாராயிருந் தது. சாப்பிட உட்கார்ந்தோம். அருமையான சாப்பாடு, பால் தயிருக்குக் குறைவில்லை. சமையற்காரனும் அவர் களுக்கேற்றபடி அமைந்திருந்தான். இவர்களுடைய குறிப் பறிந்து, ஒன்றும் சொல்லாமலே, எல்லாக் காரியங்களும் செவ்வையாக நடந்தன.

சாப்பாடானபின், மாடிக்கு வந்தோம். எல்லோருக் கும் படுக்கை தயாரா யிருந்தது. தனித்தனிக் கட்டில், மெத்தை, துப்பட்டி, வேண்டுமானால் தனித்தனிக் கொசு வலையுமுண்டு. வந்த நாங்கள் மூன்று பேர்தானே என் பதுதான் அவர்களுக்கு வருத்தம். முப்பதுபேராயினும் முப்பது கட்டில் கொடுக்க அவர்கள் தயாராயிருந்தார்கள். அவர்கள் கட்டிலமைப்பதுபற்றி டி. கே. சி. எழுதியிருந் ததன் உண்மை நேரில் கண்டபின்தான் விளங்கிற்று.

கட்டிலைவிடப் பெரியது, அவர்களுடைய அன்பு. கட் டிலை யாரும் சௌகரியமிருந்தால் செய்துவிட முடியும். அன்பு அவ்வளவு சுலபமாக வந்துவிடாது. கையில் ஒரு டார்ச் விளக்கை வைத்துக்கொண்டு ஒவ்வொரு படுக்கை யாக அவர்கள் சரி பார்த்த காட்சியை நாங்கள் மறக்க முடியாது. எல்லாம் சரிதான் என்று பார்த்து முடித்த பின், "வெற்றிலை வந்ததா?" என்றார்கள்.

"வந்தது. ஆனால் நாங்கள் போடுகிறதில்லை."

பிறகு, "சரி, படுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, மாடியினின்றும் கீழிறங்கிப் போனார்கள்.

இரண்டு நிமிஷத்துக்கெல்லாம், மீண்டும் படியேறி மேலே வந்தார்கள். "தண்ணீர் வைத்திருக்கிறானா?"

"வைத்திருக்கிறான். எல்லாம் வந்தது. நீங்கள் தொந்தரவு பண்ணிக்கொள்ளாதீர்கள். உங்களை நாங்கள்

தொந்தரவுக்குள்ளாக்குவது முறையன்று. போய்ப் படுங்கள் " என்றேம்.

கீழே போய்விட்டு, மறுபடியும் மூன்று முறை வந்தார்கள். விளக்கிருக்கிறதா என்று கேட்டு ஒரு முறையும், குற்றலப் புராணத்தில் ஒரு பாட்டைச் சொல்கிறேன் என்று ஒரு முறையும் ஆயிற்று. கடைசி முறையில், " ஒரே ஒரு அபசாரம் செய்வேன், பொறுத்துக்கொள்ளவேண்டும் " என்றார்கள். நாங்கள் ஒன்றும் விளங்காமல் விழித்தோம். " காலையில் நான்கு மணிக்கு எழுந்து முழுகிவிட்டு, பலகாரம் காப்பி சாப்பிட்டுவிடுவது என் வழக்கம். நீங்கள் நல்ல உறக்கத்தில் இருப்பீர்கள். உங்களை எழுப்பாததற்கு மன்னிக்க வேண்டும் " என்றார்கள்.

எங்களுக்குண்டாகிய வியப்புக்கு அளவில்லை. இந்த வயதிலே அவர்கள் நான்கு மணிக்கு எழுந்து நீராடிச் சாப்பிடுவதென்றால் !

* * * *

மறுநாள் நாங்கள் ஊருக்குப் புறப்பட்டோம். சில நாட்களாவது இருப்போம் என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆகவே நாங்கள் போவதில் வருத்தம். ஆயினும், அவர்களிடம் எப்படியோ ஒருவாறக, பிரியா விடைபெற்றேம். இனி போகத்தான் போவோம், இருக்கமாட்டோம் என்று அவர்கள் அறிந்தவுடனே, ஒரு சத்தவண்டி கொண்டுவரச் செய்தார்கள். வண்டி வந்தது. அதனருகே நின்றுகொண்டு அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். " மாடியிலேயே இருங்கள், கீழே படியிறங்கி வர வேண்டாம் " என்று நாங்கள் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்பதாயில்லை.

நாங்கள் வண்டியில் ஏறப்போகும் தருணம் நண்பர்களில் ஒருவர், " சத்தம் என்ன ?" என்று வண்டிக்காரனைக் கேட்டார். அவன் ஒன்றும் சொல்லவில்லை. நண்பரும் விடுவதாயில்லை. முன்னதாகவே சத்தத்தை இவ்வளவென்று

பேசிக்கொண்டு, பின்னர் அதைக் கொடுத்தாலுங்கூட, போதாதென்று பிடிவாதம் பண்ணும் பட்டணத்துச் சத்த வண்டிக்காரர்களிடம் அவர் அதிகமும் தொந்தரவுபட்டிருந்தபடியால், சத்தத்தை முன்னதாகவே நிச்சயம் செய்துகொள்ளவேண்டும் என்று நண்பர் எண்ணியதில் தவறொன்றுமில்லை.

"வண்டிக்குச் சத்தம் எவ்வளவு தரவேண்டும்?" என்று முதலியாரவர்களைக் கேட்டார்.

"நீங்கள் ஒன்றும் தரவேண்டாம்" என்றார் முதலியார்.

"ஏன் அப்படி? இது சத்த வண்டிதானே? நாங்கள் தானே இதில் சவாரி செய்யப்போகிறோம்? நாங்கள் சத்தம் கொடுப்பது முறைதானே?" என்றார் நண்பர்.

"அப்படியல்ல. எங்களைத் தேடிவரும் விருந்தினரை வண்டி வைத்து அனுப்புவது எங்கள் வேலை. ஆகவே, சத்த வண்டியின் பொறுப்பும் எங்களுடையதுதான்" என்றார்கள் முதலியார்.

நண்பரும் விடவில்லை. "சத்தத்தை நான் கொடுக்கத் தான் வேண்டும். எவ்வளவு என்று கட்டாயம் சொல்லுங்கள்" என்று பிடிவாதம் செய்தார்.

முதலியார், உடனே பளிச்சென்று, "சரி, நீங்களே கொடுங்கள். அதனோடு கூட, மற்றொரு கட்டணமும் சேர்த்துக் கொடுங்கள். நீங்கள் நேற்று மாலை இரண்டாம் வேளை சாப்பிட்டது, இராத்திரி சாப்பிட்டது, காலையில் பலகாரம் சாப்பிட்டது, இராத்திரி தங்கியது எல்லாவற்றிற்கும் உரியகட்டணத்தையும் சேர்த்துக்கொடுங்கள்" என்றார்கள்.

என்ன செய்வார் நண்பர்? முதலியாருடைய அன்பின் முன்னே நாங்களுமே வெட்கிப் போனோம்.

வண்டியில் ஏறிக்கொண்டோம். வண்டி நகர்ந்தது. எண்பது வயதுக்கு மேலான முதலியாரும், வண்டி பின்னோடு நடந்து வந்தார். "நில்லுங்கள், நாங்கள் போகி

ரோம்'' என்று எவ்வளவு சொன்னாலும் கேட்டால்தானே? வண்டி கொஞ்சதூரம் போயிற்று. திரும்பவேண்டிய இடம். பின்னால் வந்த முதலியார், "நடக்க முடியவில்லை. மன்னிக்க வேண்டும். நான் நிற்கிறேன். போய்வாருங்கள்" என்றார். "போய்வருகிறோம்" என்று சொல்லிக் கும்பிட்டோம். வண்டி திரும்பிற்று. முதலியாரவர்களும் எங்கள் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார்.

பார்வையிலிருந்துதான். உள்ளத்தில் அவருடைய தள்ளாத உருவம் - வீரமும் ஆவேசமும் திண்மையும் செறிந்த உருவம் - அன்பும் அடக்கமும் உபசாரமுமே வடிவமாயுள்ள அந்த உருவம் - உண்மையும் நன்மையும் அழகுமே என்றும் நாடியிருந்த அந்த உருவம் - ஒரு நாளும் எங்கள் உள்ளத்தைவிட்டு மறையாது. தமிழ் என்றாலே வெறியும் கும்மாளியும் கொள்ளுகிற முதலியாரவர்களை யாருமே மறக்க லியலாது.

இன்றும் "இரண்டொருநாள் உல்லாசமாய்ப் பொழுது போக்கவேண்டுமானால் நீ எங்கே போக விரும்புவாய்" என்று யாரேனும் என்னைக் கேட்டால், "வெள்ளகால்" என்றுதான் தயங்காமல் விடை கூறுவேன்.

செல்லையா

'அருங்கலை விநோதன்' என்பது ஓர் அரிய பட்டம்; இதை, அறுநூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நன்னூலுக்குச் சிறப்புப் பாயிரம் பாடிய புலவர் புதிதாக உண்டு பண்ணி, நன்னூல் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த சிற்றரசனான சீயகங்கனுக்கு வழங்கினார். கலை சம்பந்தமாக இவ்வளவு அரியதொரு பட்டத்தை இன்று எவ்வளவு முயன்றாலும் அமைக்கமுடியாது. எல்லாவகையிலும் அந்தப் பட்டத்துக்கு உரியவரான ஓர் இளைஞர் நம்மிடையே சில காலத்துக்கு முன் வாழ்ந்தார். இன்று அவர் இல்லை; இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே, (15-3-1941ல்) தமது முப்பதாம் ஆண்டில் அவர் நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார். அந்த இளைஞரே, செல்லையா என்ற செல்லப் பெயரைப் படைத்திருந்த தீர்த்தாரப்ப முதலியார்.

டி. கே. சி. யவர்களின் புதல்வரான செல்லையா, தமிழ்ச்சுவை தேரும் ரசிக உலகத்துக்குப் புதியவரல்லவர். கட்டுரை எழுதுவதிலும், கதை புனைவதிலும், ஓரளவுக்குக் கவி பாடுவதிலும் அவருக்கிருந்த ஒப்பற்றதோர் ஆற்றலைத் தமிழர் நன்றாக அறிவார்கள். அவர் எழுதியவற்றை ஊன்றிப் படித்தவர்கள், நமது கலைப்பண்பிலே அவரது இதயம் எவ்வளவு தோய்ந்திருந்தது என்பதையும், 'அருங்கலை விநோதன்' என்ற பெயர் அவருக்கு எத்துணைப் பொருத்தமானது என்பதையும் தெளிவாக உணர்வார்கள். ஆனால், அவர் உள்ளம் சிறப்பாக இசைப்பண்பிலே எவ்வாறு இரண்டறக் கலந்திருந்தது என்பதை அவரோடு நெருங்கிப் பழகிய அன்பர்களில் வெகு சிலரே உணர்ந்திருத்தல் கூடும்.

1938ஆம் ஆண்டின் இடையிலே ஒரு சமயம், மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்களைப் போய்ப் பார்த்தேன். அப்போது, டி. கே. சி. யவர்கள் மாம்பலத்துக்கு வந்திருந்ததைப் பற்றியும், அவர் புதல்வருக்குச் சென்னையில் வேலையாகி இருப்பதைப்பற்றியும் ஐயரவர்கள் மிக்க அன்போடு விசாரித்தார்கள் டி. கே. சி. யவர்கள் என் வீட்டுக்கு அடுத்த வீட்டில் வந்திருக்கிறார்களென்று நான் தெரிவித்தேன்.

" முதலியாரவர்கள் குழந்தையைத் தெரியுமோ?" என்று கேட்டார்கள்.

குழந்தை என்றது கேட்டு, முதலிலே சற்றுத் திகைத்தேன். பிறகு, செல்லையாவைத்தான் குறிப்பிடுகிறார்களென்று எண்ணி, " ஆம். தெரியும் " என்றேன்.

" அந்தக் குழந்தை பாடிக் கேட்டிருக்கிறதோ?" என்று கேட்டார்கள்.

" இல்லை, இன்னும் கேட்டதில்லை."

" அவசியம் கேட்க வேண்டும். அந்தக் குழந்தை பாடுகிற பாட்டு ஒன்றுதான் உண்மையான சங்கீதம்; அதுவே உயிருள்ள தெய்வ சங்கீதம் " என்று உளங் குழைந்து பாராட்டிச் சொன்னார்கள்; வெகு நேரம் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

கடைசியில் அன்று அவர்களிடம் நான் விடை பெற்றுக் கொண்டு திரும்பிய சமயத்தில், மறுபடியும், " ஞாபகம் இருக்க வேண்டும். வீட்டுக்குப் போனவுடன், முதற்காரியமாக இன்று முதலியாரவர்கள் குழந்தையைப் பாடச் சொல்லிக் கேட்கவேண்டும்; கேட்டு, எனக்கு அதைப் பற்றித் தெரிவிக்கவேண்டும் " என்று கூறி விடையளித்தார்கள்.

என் வீட்டுக்கு அடுத்த வீட்டில் டி. கே. சி. யவர்கள் வந்த அன்றே, செல்லையாவை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அவரை முன்னமே நான் பார்த்திருந்த

போதிலுங்கூட, அதிகமாக அவரோடு பழகியதில்லை. இந்த நிலையிலே, இரண்டொரு நாள் கழித்து, ஒருநாள் மாலையில் செல்லையா எங்கள் வீட்டுக்கு வந்தார். அன்று காலையில் தான் நான் ஐயரவர்களைப் பார்த்ததும், செல்லையாவின் பாட்டை அவர்கள் மனமாரப் புகழ்ந்ததும். ஆகவே, அவரைக் கண்டபோது, ஐயரவர்கள் சொல்லிய சொற்கள் என் மனத்தில் மேலோங்கி நின்றன.

" நீங்கள் நன்ருகப் பாடுவீர்களாமே! ஐயரவர்கள் உங்கள் பாட்டைப் பெரிதும் பாராட்டிக் கூறினர்கள் " என்றேன்.

செல்லையாவோடு அப்போது எனக்கு அதிகப் பழக்கமில்லாதபடியால், அவரைப் பாடும்படி கேட்கலாமோ கேட்கக் கூடாதோ என்று தயங்கி, உபசாரமாகத்தான் நான் இவ்வாறு சொன்னேன். அன்றியும், பட்டதாரிக்குப் பாட்டுக்கும் நெடுந்தூரம்; செல்வருக்கும் பாட்டுக்கும் சம்பந்தமில்லை. அவரோ, பட்டதாரி, செல்வர்.

அவர் முகத்திலே அப்போது ஒரு சிறு புன்னகை தோன்றிற்று. " எனக்கு அப்படி என்ன, பிரமாதமாகப் பாடத் தெரியும்!" என்று மட்டும் சொன்னர். அவர் பாடுவார் என்று நானே, உடனிருந்தவர்களோ, சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அடுத்த கணத்தில், 'வாசலிது வாசலிது' என்று, வெண்கலநாதம் போன்ற தமது கம்பீரமான குரலில் பாடத் தொடங்கினர். பாடிய பாட்டு திருச்செந்தூர் முருகன் ஆலயச் சிறப்பைக் கூறுவது; குறவஞ்சிப் பாட்டிலே, குறத்தி தலைவனுடைய வாசல் வளம் கூறும் முறையிலே அமைந்தது.

வாசலிது வாசலிது !
வளர்ந்தோங்கும் வாசலிது !

என்ற பல்லவியை நாதநாமக்கிரியை ராகத்திலே செல்லையா பாடினர். பாடியபோது, அவருடைய இடது கை, முன்

நெற்றியில் வந்து விழுந்திருந்த மயிர்ச் சுருளை மெல்லக் கோதி ஒதுக்கிக் கொண்டிருந்தது. வலது கையானது, கீர்த்தனத்தின் பாவத்திலே தோய்ந்து திளைக்கிற அவரது உள்ளத்துக்கு அனுசரணையாக, அந்த உணர்ச்சியை எடுத்துக் காட்டி அபிநயம் பிடிப்பது போலவும், அந்த உணர்ச்சியை அப்படியே அள்ளி வழங்குவதுபோலவும் எங்கள் கண்ணுக்கு அந்நேரம் தோற்றிற்று. மாலை நேரத்திலே முல்லை யரும்பானது மெல்லத் தன் இதழ்களை விரித்து நம்மை நோக்கி முறுவலிப்பதுபோல, பாடச் சொன்ன போது அவர் முகத்தில் அரும்பிய இள முறுவலானது, மெல்ல மெல்ல விரிந்து, பல்லவி முடியவும், முழு நகையாயிற்று.

தொடர்ந்து அனுபல்லவியும் பாடினார் :

காசி கன்யா குமரிமுதல்
காசினி எல்லாம் புகழும்
வாசலிது வாசலிது
வடிவேலன் வாசலிது !

என்று பாடி நிறுத்தினார். அவரது அழகிய முகத்திலே பூத்த முறுவலும், விசாலமான அவர் கண்களிலே விளங்கிய ஒளியும், பாட்டின் பொருளிலே உள்ளத்தை ஒன்ற விட்டு அப்போது அவர் அமர்ந்திருந்த நிலையும், கலைத்திறம் முழுதும் கைவந்த ஓவியனுக்கு அரியதொரு விருந்தாய் அமைந்திருந்தன. ஆனல், அன்று எந்த ஓவியனும் அந்நிலையைக் காணக் கிடைக்கவில்லை ; ஓவியத்திலே தீட்டவும் பெறவில்லை.

கேட்டுக்கொண்டிருந்த நாங்கள் அப்போது இந்த உலகத்திலேயே இல்லை. எங்கெல்லாமோ சஞ்சாரம் செய்து கொண்டிருந்தோம். அருமைச் செல்லையா, தாம் பாடிய பாட்டினுள் தமது உள்ளத்தையே செலுத்தி, அதன் வழியாக எங்கள் உள்ளத்தையும் தொழிற்படுத்திக்கொண்

டிருந்தார். அவருடைய முகத்திலே பிரதிபலித்த ஆனந்தமும், பாட்டின் பொருட்போக்குக்கு ஏற்ப மாறி மாறித் தோன்றிய பாவங்களும், கேட்டு வந்த நாங்கள் ஒரே உணர்ச்சி வெள்ளத்தில் அமிழ்வதற்குத் துணை புரிந்தன.

இப்படி அரை மணி நேரம் செல்லையா அந்தப் பாட்டைப் பாடினார். பல மணி நேரம் வேறு பாடல்களையும் பாடினார். நாங்களும் கேட்டோம்; அவர் பாட நாங்கள் கேட்டு வந்தோம் என்ற நினைப்பு அறவே இல்லாமல் கேட்டோம்.

பாடின அவர் எந்த நிலையில் இருந்தார்?

சோலைகளிலே இருந்து குயில் கூவுகிறது. அன்போடும் உணர்ச்சியோடும் கேட்போருக்கு அது எவ்வளவோ இன்பந் தருகிறது. கவிஞர்கள், குயிலின் இசையை அருமையாக அனுபவித்து, இலக்கியத்திலே அழகிய முறையில் பாராட்டியு மிருக்கிறார்கள். இது உண்மை தான். ஆனால், தான் பாடுவதை மக்கள் கேட்கவேண்டும், கேட்டு இன்புறவேண்டும் என்றெண்ணியா குயில் பாடுகிறது? 'தயவு செய்து எனக்காகக் கொஞ்சம் பாடு' என்று கவிஞன் கேட்ட பிறகுதானா அது பாடுகிறது? அல்லது கேட்கும்போதுதானா பாடுகிறது? இல்லை; ஏதோ மாலைப் பொழுது வரவேண்டும், மந்த மாருதம் வீசவேண்டும்; அவ்வளவுதான்; குயில் மெய்ம்மறந்து தெய்வ கீதம் இசைக்கிறது.

இந்தக் குயிலின் இயல்பு செல்லையாவிடமும் இருந்தது. ஒத்த உள்ளப்பாங்குடைய அன்பர்கள் இருந்துவிட்டால், அவர் பாடாமல் இருக்கமுடியாது. சோலையிலே இளந் தென்றல் வந்து உலவும்போது, குயில் பாடாமல் இருக்க முடியாது; அதே போலத்தான் செல்லையாவும். பாடுவதிலே அவருக்கு ஆனந்தம்; அந்த ஆனந்தத்துக்காகவே அவர் பாடுகிறார். தம்மைச் சுற்றிச் சிலர் இருக்கிறார்கள், அவர்

களும் கேட்டு மகிழ்ச்சியடைகிறார்கள் என்ற உணர்ச்சிகூட அவருக்குப் பெரும்பாலும் இருந்ததில்லை.

இந்த முறையிலே அன்று அவர் பாடினார். நாங்கள் பாடச் சொல்லவுமில்லை ; எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி அவர் பாடவுமில்லை. தாமே பாடினார், தமக்காகப் பாடினார்.

இவ்வாறு தாம் பரவசமடைந்தது மட்டுமல்ல; கேட்டவர்களையுங்கூட, உணர்ச்சியைக் கடந்த நிலையிலே கொண்டு போய் விட்டுவிட்டார். இறைவன் தமதுள்ளத்திலே ஞான வொளியாகி விளங்கி நின்ற தன்மையை மாணிக்கவாசக சுவாமிகள் 'நினைப்பற நினைந்தேன்' என்று கூறுகிறார் ; அதாவது, அவனைத் தாம் நினைத்தார் என்ற நினைப்புக்கூட அறவே எழாதபடி நினைத்ததாகக் கூறுகிறார். அதேபோல, செல்லையாவின் பாடலை நாங்கள் கேட்டபோது, நாங்கள் கேட்டோம் என்ற நினைப்புக்கூடச் சிறிதுமின்றி, பரவசமாகி, இசைவசமாய் நின்றுவிட்டோம். இசை அருமையாயிருந்தது என்ற நினைப்பு, கேட்டபோது எங்களுக்கு எழவேயில்லை. அருளினால் வந்த இசைதானே இத்தகைய பரவச நிலையை விளைக்க வல்லது ?

செல்லையா எந்த ஆசிரியரிடமும் இசையை முறையாகப் பயின்றதில்லை ; இக்காலத்து முறையிலே ஆசிரியரிடம் இசை பயின்றிருந்தாரானால், அந்த ஒப்பற்ற இசைப் பண்பு அவரிடம் அமைந்திருக்குமோ என்பதும் சந்தேகந்தான். அவருடைய இசை யறிவு முழுவதும் கேள்வி ஞானத்தால் வந்தது. கற்றலிற் கேட்டலே நன்றல்லவா ?

நுட்பமான கலையுணர்ச்சி அவருக்கு இளமையிலேயே ஏற்படுவதற்கு, தந்தையாரிடம் விளங்கிய சிறந்த ரசிகத் தன்மை காரணமா யிருந்தது. கலைப் பண்புடையதெதையும் உணர்ச்சியோடு பார்த்து அனுபவிக்கும் தன்மையும் இவரிடம் அமைந்திருந்தது.

இவருடைய ரசிகத் தன்மையை விளக்கிக் காட்டக் கூடிய ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடலாம். இவர்

சென்னை அரசாங்கக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்த சமயம். ஓர் ஆண்டு விழாவுக்காக, கல்லூரி நாடகச் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள், நந்தனர் நாடகம் போடுவதென்று முடிவு செய்தார்கள். செல்லையாவும் அச்சங்கத்தில் ஓர் அங்கத்தினர். இவர் நன்ருய்ப் பாடுவாரென்று எல்லோரும் அறிந்திருந்தமையால், நந்தனுராக நடிக்கவேண்டுமென்று இவரைக் கேட்டுக்கொண்டார்கள். இவரும் சம்மதித்தார். கல்லூரியிலே ஒத்திகை நடந்து வந்தது. செல்லையாவும், வீட்டிலே நந்தனர் சரித்திரக் கீர்த்தனங்கள் பலவற்றை மனப்பாடம் செய்து வந்தார். எந்நேரமும் இவர் பாடிக்கொண்டே யிருப்பவராதலால், இவர் நந்தனர் கீர்த்தனம் கற்றுப் பழகிவந்ததை வீட்டில் எவரும் புதுமையாக எண்ணி அவ்வளவாகக் கவனிக்கவில்லை.

ஒத்திகை நடக்குந்தோறும், நாடகச் சங்கத்தின் உபதலைவரான ஆங்கிலப் பேராசிரியர் சுவாமிநாதன் உடனிருப்பார். செல்லையாவின் பேச்சும், நடிப்பும், பூர்ண பாவத்தோடு பொலிந்த இவர் இசையும், அவருடைய மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. கல்லூரி மாணவனொருவன் இப்படி அருமையான திறமை வாய்ந்திருக்கிருனே என்பது பற்றி அவருக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. செல்லையாவை மனமாரப் பாராட்டி உற்சாகப்படுத்தி வந்தார். செல்லையா இன்னுரென்பது அவருக்குத் தெரியாது.

ஆண்டு விழாவும் வந்தது. இரவிலே நாடகம் தொடங்க வேண்டிய நேரம். சபையிலே முன்வரிசையில், நகரப் பிரமுகருள் ஒருவராக, டி. கே. சி. யவர்கள் அமர்ந்திருந்தார். அருகிலே ஆசிரியர் சுவாமிநாதன் அமர்ந்து, கல்லூரி நாடகச் சங்கத்தையும், அன்றைய நந்தனர் நாடகத்தையும், அதில் நடிக்கும் மாணவர்களையும் பற்றி விரிவாகச் சொல்லிக்கொண்டிருந்தார். சிறந்த ரசிகரான டி. கே. சி. யவர்கள் கலைபற்றிய விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு

சொல்வதில் வல்லவரென்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆகவே, நடக்கவிருந்த நந்தனர் நாடகத்தைப்பற்றி டி. கே. சி. நல்ல அபிப்பிராயம் சொல்லவேண்டுமே என்று அவருக்குக் கவலை. தாமின்புறுவதைக் கற்ருரும் கண்டு இன்புறவேண்டும் என்று அறிஞர் எண்ணுவது இயல்பு தானே? தவிர, செல்லையாவின் அபார நடிப்புத் திறமையையும் பாவப் பொலிவுடைய இசையையும் அவர் மறக்க முடியவில்லை.

" பி. ஏ. வகுப்பு மாணவனொருவன் நந்தனராக நடிக்கிருன். மிக்க அடக்கமான இளம்பிள்ளை. எப்படி நடிக்கிருன், தெரியுமா? அடடா, அவன் பாடுவதைக் கேட்டால், வேதியர் மனம் உருகுவதும், நந்தி விலகுவதும் பெரிய காரியமா? அவன் நடிப்பதையும் பாடுவதையும் கேட்டால், நீங்கள் எவ்வளவோ மகிழ்ச்சியடைவீர்கள் " என்று சொல்லிக்கொண்டே போனர்.

" அப்படியா, ரொம்ப சந்தோஷம். யார் அந்தப் பையன்? எந்த ஊர்?" என்று டி. கே. சி. இயல்பாக விசாரித்தார்.

" பையன் பெயர் தீர்த்தாரப்பன். அவன் யாரென்று இதுவரையில் நான் விசாரிக்க வில்லை. திருநெல்வேலிப் பக்கமென்று தெரிகிறது, அவன் பேச்சைப் பார்க்கும் போது " என்ருர் சுவாமிநாதன்.

தீர்த்தாரப்பன் என்ற பெயரையும் திருநெல்வேலி என்ற ஊரையும் கேட்டவுடன், டி. கே. சி. கொஞ்சம் ஆர்வத்தோடு கவனித்தார். இதற்கிடையில் திரை தூக்கப்பட்டது.

" இந்தக் காட்சியிலே நந்தனர் வருகிருர். நான் சொன்ன பையன்தான் அவ்வேடத்திலே வருகிருன்; பாருங்கள் " என்ருர் சுவாமிநாதன்.

நந்தனரும் வந்தார். பார்த்த டி. கே. சி., " நம்முடைய செல்லையாவா!" என்ருர், தமக்குள்ளே. சுவாமிநாதனுக்கு

அது விளங்கவில்லை ; " என்ன சொன்னீர்கள் ?" என்று கேட்டார்.

" இவன் யாரோ என்று பார்த்தேன். நம்முடைய செல்லையா அல்லவா ?"

" இல்லை, இல்லை. இவன் பெரிய 'ஜீனியஸ்' ; தீர்த்தாரப்பன் என்று பெயர் " என்று திருத்தமாகக் கூறினார் ஆசிரியர்.

அமைதியாக, சிரித்தபடியே, டி. கே. சி. சொன்னார் : " ஆம் ; இவன் தீர்த்தாரப்பன்தான் ; செல்லையா என்று வீட்டில் சாதாரணமாகக் கூப்பிடுகிற பழக்கம்."

" உங்களுக்கு எப்படித் தெரியும் ?" என்றார் சுவாமிநாதன்.

சிரித்தபடியே, " செல்லையா என்னுடைய மகன் " என்று விடையளித்தார் டி. கே. சி.[1]

சுவாமிநாதனுக்குண்டான வியப்பைச் சொல்ல முடியாது. வியப்போடுகூட மிக்க மகிழ்ச்சியும் அடைந்தார். ஒப்பற்ற ரசிகரான டி. கே. சி.யின் புதல்வரிடம் அரிய கலைத்திறனும் விளங்கியதைக் காண யாருக்குமே மகிழ்ச்சியுண்டாகும். நாடகம் முடிந்தபின், அவர் செல்லையாவிடமே இவ்வரலாற்றைக் கூறிப் பெரிதும் பாராட்டினார். 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல்' அல்லவா ?

இப்படிப்பட்ட கலைத் திறமையும் ரசிகத் தன்மையும் காரணமாக, இளமையிலேயே அவருக்கு உண்மையான உள்ளப் பண்பாடு அமைந்து விட்டது. மனமானது இசையில் ஈடுபடவே, இசையின் சிறப்பியல்பு எது என்பதும் அவருக்குத் தானாகவே புலப்பட்டிருந்து. பாவ, ராக, தாளம் என்பவற்றில், பாவமே முதன்மையானது என்பதை

[1] இவ்வரலாற்றை இதிற் சம்பந்தப்பட்ட மூவரும் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

உணர்ந்தார். நயமானதொரு சாரீரமும், இசை வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் ஏற்ற சந்தர்ப்பங்களும் அமைந்தமையி னாலே, இசைப்பண்பே அவர் வாழ்க்கையில் ஓங்கி நிற்க லாயிற்று.

இசையைப் போலவே கவிதையிலும் பாவமே முதன் மையானது என்பதை அவர் உணர்ந்தவர். அவர் ஒரு பாட்டை எடுத்துப் பாடும்போது, பாட்டிலுள்ள ஒவ்வொரு சொல்லும் சீரும், அசையும் எழுத்தும், அதற்குரிய இடத்திலே நின்று அதற்குரிய அளவிலே தொழிற்பட்டு, பாவப் பொலிவோடு பொருளை விளக்குவதாயிருக்கும்.

ஒருமுறை, டி. கே. சி. யவர்கள், தம் வீட்டின் எதிரி லிருந்த மல்லிகைப் பந்தரின் கீழிருந்து அன்பர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது, 'காக்கக் கடவிய நீ' என்ற வெண்பாவின் பாவத்தைப் பூரணமாக விளக்கிக் கூறி, பாட்டைச் சொல்லிக் காட்டினார்கள். எல்லோரும் கேட்டு அருமையாக அனுபவித்தோம். சிறிது நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பியபோதுங்கூட, வழியிலே நின்று நின்று அந்தப் பாட்டையே சொல்லிக் கொண்டும், அதன் அருமையையும் எளிமையையும் வியந்து கொண்டும் வந்தோம். 'செல்லையாவும் எங்களோடு கூடவே வந்தார்.

எல்லோருமாகத் தாழ்வாரத்திலே வந்து உட்கார்ந் தோமோ இல்லையோ, செல்லையா கணீரென்று அந்தப் பாட்டைப் பாட ஆரம்பித்தார். அவர் பாட வேண்டும் என்ற பேச்சே அப்போது எழவில்லை. ஆயினும், தாமாக அவர் பாடத் தொடங்கி விட்டார் :

காக்கக் கடவிய நீ
காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம்,
அறுமுகவா ?

என்று பாடி, அதையே மீண்டும் இரண்டு முறை

திருப்பிப் பாடினார். அன்பு கனிந்த இதயமுடைய அடியவரொருவர், முருகன் வந்து தம்மைக் காத்தருள் புரிய வேண்டும் என்று நெகிழ்ந்து வேண்டுவதிலுள்ள உருக்க மவ்வளவும், அவர் பாடிய ' ஆறுமுகவா ' என்ற சொல் லொன்றிலேயே வெளிப்பட்டது.
தொடர்ந்து பாடினார் :

—பூக்கும்
கடம்பா ! முருகா !
கதிர் வேலா !—

என்றார். ' கடம்பா ' என்றவுடனே, கேட்ட எங்களனைவ ருடைய இதயமும், பாடல் பாடிய கவிஞருடைய இதயத் தோடும் செல்லையாவின் இதயத்தோடும் ஒன்றித் துடிக்க ஆரம்பித்தது. ' கதிர்வேலா ' என்று போய்முடிந்தவுடனே, அன்பருடைய ஆன்மா இறைவனை வேண்டிக் கதறுகின்ற தாகிய ஓர் அலறல் அவ்வளவும், ' வேலா.....' என்ற ஒலியிலேயே நாங்கள் உணரும்படி செய்துவிட்டார், செல்லையா. அந்த அறுமுகவன் - கடம்பனும் கதிர்வேலனு மான அந்த முருகன் - எங்கிருந்தாலும், என்ன உருவத் தோடிருந்தாலும், என்ன பெயரோடிருந்தாலும், அந்தச் சொற்ப நேரத்திலே, ஒரு பாடல் காரணமாகச் சில இதயங் கள் ஒரே உணர்ச்சிப் பெருக்கில் அமிழ்ந்து, ஒன்றாகத் துடித்ததை நிச்சயம் உணர்ந்தே யிருப்பான். உணர்ந்ததோ டல்லாமல், அவ்விடத்தில், அந்நேரத்தில், தனது கடம்ப மாலையோடு உண்மையாகவே தோன்றி, எல்லோர் நெஞ்சி லும் புகுந்துவிட்டான் என்றும் சொல்லலாம். செல்லையா பாடியதானது, அத்தகையதொரு பரவச நிலையை உண்டு பண்ணிவிட்டது.

கதிர்வேலா ! நல்ல
இடங்காண், இரங்காய்
இனி !

அதுவே நல்ல இடம். அவன் இரங்குவான் என்பதில் ஐய மில்லை.

இந்தப் பாட்டைக் காணும்போதும் படிக்கும்போதும், செல்லையா பாடிய காட்சி அப்படியே என் கண்முன் வந்து நிற்கிறது. அன்று உள்ளத்திலெழுந்த உணர்ச்சியும் பரவச நிலையும் இன்றும் ஏற்படுகின்றன; என்றுமே ஏற்படு மென்று துணிந்து கூறுவேன். இவ்வளவுக்குங் காரணம், அவர் பாடியதனால் ஏற்பட்ட அனுபவந்தான்.

இசையிலே செல்லையா உள்ளத்தை எவ்வளவு பறி கொடுத்திருந்தார் என்பதை அவர் எழுதிய கட்டுரைகளி லிருந்தும் கடிதங்களிலிருந்தும் நன்றாக அறியலாம். தமிழ் நாட்டுச் சங்கீதத்தில்தான் (அதாவது கர்நாடக சங்கீதத்தில்) அவர் பெரிதும் ஈடுபட்டிருந்தார்; இந்துஸ்தானி என்றால் அவருக்குக் கட்டோடு பிடிக்காது.

நவராத்திரிக் கொலுவையும் அதனால் வளர்ந்தோங்கிய பொம்மைக் கலையையும் ஒருசமயம் புகழ்ந்து எழுதினார். கொலுவிலே, கலைப்பண்பு விளங்கும் பொருள்களை வைக்க வேண்டுமேயன்றி, ஜப்பான் பொம்மை போன்றவற்றை வைப்பது கலையுணர்ச்சிக்குக் கேடானது என்று சொல்லி விட்டு, இதற்கு ஓர் உதாரணமும் கூறுகிறார்: "கொலு வைப்பதில் இந்த மாதிரி மோகம் இருக்கவே கூடாது. இது பண்டிகையை அர்த்தமில்லாமல் ஆக்கி விடுகிறது; சம்பிரதாயத்துக்கு நேர் விரோதம்; பொம்மைக் கலைக்கும் கேடு. இது, சுத்த கர்நாடக பாணியில் தோடி ராகம் பாடிக்கொண்டு வரும்போதே அதில் சிந்துபைரவியைக் கலப்பதுபோல் இருக்கிறது!" என்றெழுதினார்.

இப்படியெல்லாம் இசையுணர்ச்சி பெருகி, எந்நேர மும் பாடுவதிலேயே பைத்தியமாயிருந்தவர் செல்லையா. 1939, 40ஆம் ஆண்டுகளிலே அவர் நோய்வாய்ப் பட்டிருந் தார். அடிக்கடி 100, 102 டிகிரி வரையில் சுரம் அடித்துக் கொண்டிருக்கும். சுரத்தைக் கண்டதும், ஒரு தடவை

தண்ணீரிலே முழுகிவிட்டு, அதை மறந்து விடுவார். சில சமயம் சுரத்தோடேயே எங்கள் வீட்டுக்கு வருவார். சுர வேகம் காரணமாக, அப்போதெல்லாம் அவருக்குத் தொண்டை கம்மியிருக்கும்; சிறிதும் பேசவே முடியாது. அந்த நிலையிலும், அந்தக் கம்மிய குரலிலே பாடத்தொடங்கி விடுவார். "பாடவேண்டாம். பாடுவது உடம்புக்குக் கெடுதலாயிற்றே! உடம்பு சரியான பிறகு எவ்வளவோ பாடலாம்" என்று நாங்கள் எத்தனையோ முறை தடை செய்ததுமுண்டு. அவரோ, ஒன்றுக்கும் பதில் பேசமாட்டார். முகத்திலே ஒரு புன்னகை தோன்றும். அதுதான் எங்களுக்குப் பதில். பாடுவதை அவராக நிறுத்தினால்தான் உண்டு; அல்லது சுர வேகம் காரணமாகக் களைப்பேற்பட்டு, மேற்கொண்டு பாட முடியாமல் நிறுத்திக்கொண்டால்தான்.

அடிக்கடி கேட்பார்: "என் குரல் இப்படி கம்மிப் போய் விட்டதே! இனி இந்தக் குரல் பழைய நிலைக்கு வராமலே போய் விடுமோ?" என்றெல்லாம் கவலைப் படுவார். எழுதிய கடிதங்களிலெல்லாம் இதையே எழுதுவார்: "இந்தக் குரலுக்கு என்றைக்குத்தான் விமோசனம் வருமோ தெரியவில்லை......பேசுவதற்கு இது போதும். பாடுவதற்கு இந்தச் சாரீரம் போதாதே! வாழ்நாள் முழுதும் பாடாமலே இருந்துவிடவா? பாடுவதென்றால் ஏதோ கச்சேரி பண்ணுவதற்காக அல்ல. பிறர் கேட்டு என்னைப் புகழவேண்டாம். சுவானுபவத்துக்கே பாட்டு எவ்வளவு அவசியம்!" என்று ஒரு சமயம் எழுதினர்.

இப்படி அவர் கவலைப்பட்டபோதெல்லாம், உடனிருந்த நாங்கள் எவ்வளவோ தேறுதல் கூறுவோம். ஆனால் இறைவன் திருவுள்ளம் வேறு விதமிருந்தது.

தாம் முன்னமே எழுதி வைத்திருந்த சிறுபாடல்களில் இரண்டொன்றை எடுத்தனுப்பி அக்காலத்தில் 'சக்தி' இதழ்களில் வெளிவரச் செய்திருந்தார். கடைசியாக வெளி

வந்த பாடல், வடிவேலனைப் பற்றிய பாடல். இந்தப் பாடலை முன்னமே பலமுறை அவர் பாடிக்கொண்டிருந்த துண்டு. ஒருநாள், சக்தி அச்சகத்திலிருந்து பாட்டுக்குரிய அச்சுத்தாள் திருத்துவதற்காக வந்தது. அன்று அவரால் படுக்கையில் எழுந்து உட்காரவும் முடியவில்லை. அந்த நிலையிலே, ஒருவகையாக எழுந்து உட்கார்ந்து, அச்சுத் தாளைத் திருத்தினர்; பாட்டிலுள்ள சில சொற்களை மாற்றி, முக்கியமான திருத்தங்கள் செய்தார். உடலோடொட்டிய கரணங்கள் யாவும் ஒடுங்கத் தலைப்பட்ட அந்தத் தருணத் திலும், அவருடைய உள்ளமும் அறிவும், தெளிவாகவும் கூர்மையாகவும் இருந்தன. அந்த நிலையிலும், அந்த வடி வேலன் பாட்டைப் பாடிக் காட்ட முயன்றார்:

வேறென்ன வேணுமடி - சகியே!
வேலனிருக்கையிலே - வடி
வேலனிருக்கையிலே!

என்று முடிகிறது அந்தப் பாட்டு. செல்லையா எழுதிய வற்றுள்ளே, கடைசியாக அவர் பார்த்து வெளியிட்டது அந்தப் பாட்டேயாகும். இதன் அச்சுத்தாளைத் திருத்தி யனுப்பியபின், ஒரு வாரத்துக்கெல்லாம் அவர் இவ்வுலகைப் பிரிந்து வடிவேலன் திருவடி நீழலை யடைந்துவிட்டார்.

வீணை தனம்மாள் இறந்துபோனதைக் குறித்துச் செல்லையா எழுதியபோது, முடிவிலே பின்வருமாறு எழுதினர்: "வீணை இருக்கிறது; அதன்மேல் நடனம் புரிந்த விரலைக் காணோம். வீணையில் நாதம் இருக்கிறது; ஞானம் எங்கே? சகலகலாவல்லியான வாணியிடம் அடைக்கலமாகியிருக்கும்."

செல்லையா இறந்துபோய் இரண்டாண்டுகள் ஆகி விட்டன. அவர் எழுதிய கதை, கவிதை, கட்டுரை, கடிதம் முதலியவற்றுட் சில புத்தக வடிவில் வெளிவந்திருக்

கின்றன ; பல வெளிவராமலிருக்கின்றன. இனி வெளி வருதல் கூடும்.

ஆனால், செல்லையாவின் அழகிய முகத்திலே எந்நேரமும் புன்னகையைத் தவழச் செய்து, அவருடைய உயிர்க்குயிரா யிருந்த இசை – அவருடைய உயிர்ப்பு அனைத்திலும் வியா பித்திருந்த அந்த இசை எங்கே ? எந்த வடிவேலனை அவரது உள்ளம் கடைசியாகத் துணையென நாடிற்றோ, அந்த வடிவேலனிடத்திலே அடைக்கலமாகி விட்டதென்றே சொல்ல வேண்டியவர்களா யிருக்கிறோம்.

ஐயரவர்கள்

தமிழிலக்கியப் பரப்பிலே, இலக்கியத்துக்கும் இலக்கணத்துக்கும் உரை செய்த பழைய உபகாரிகள் பலர் இருந்திருக்கிறார்கள். தமிழ் வளத்தை நாம் உணர்வதற்கு இவர்களுடைய அருந்தொண்டு காரணமாயிருந்து வருவது உண்மை. இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலியவர்கள், அவ்வுபகாரிகளிற் சிலர். இவர்களனைவரும் உரையாசிரியர்களே ஆயினும், பொதுவாக உரையாசிரியர் என்று மட்டும் குறிப்பிட்டவுடனே, இப்பெயர் இளம்பூரணரையே குறிக்கும் என்பதைத் தமிழ்நூற் பயிற்சியுடையவர் யாவரும் அறிவார்கள். இளம்பூரணர் உரையின் எளிமையும் நேர்மையும் தெளிவும் தொன்மையும் காரணமாக, உரையாசிரியர் என்ற பொதுப் பெயர் அவருக்கே உரிய சிறப்புப் பெயராகி விட்டது.

இதே போன்றதோர் உண்மையை இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியிலே நாம் காண்கிறோம். எத்தனையோ பேர் தமிழ் நூல்கள் எழுதியும் உரையிட்டும் பதிப்பித்தும் தமிழ்ப் பணி செய்திருக்கிறார்கள். ஆனால், இன்று தமிழறிந்தவர்கள் அடங்கிய எந்தக் கூட்டத்திலும், ஐயரவர்கள் என்று சொன்னால், அப்பெயர் சுட்டுவது காலஞ் சென்ற டாக்டர் **உ. வே. சாமிநாதையர்** ஒருவரை மட்டுமே யாகும். சாமிநாதையர் அவர்களுக்கு எத்தனையோ பட்டங்கள் வழங்கப்பட்டன—மகாமகோபாத்தியாயர், தாட்சிணாத்திய கலாநிதி, திராவிட வித்தியா பூஷணம், டாக்டர் என்றெல்லாம் பல பட்டங்கள். ஆனால் பொதுப் பெயராகிய ஐயர் என்ற பட்டம், அவருக்கு மட்டுமேயுரிய

சிறப்புப் பெயராகி, அவருடைய பட்டங்கள் அனைத்திலும் புகழுடையதாக இன்றும் விளங்குகிறது.

(ஐயரவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ள தமிழ்ப் புத்தகங்கள் யாவும், அவர்களுடைய கல்விப் பெருக்கு, ஆராய்ச்சியின் திறம், சமயவுணர்ச்சி, அயராத உழைப்பு, 'என் கடன் தமிழ்ப் பணி செய்து கிடப்பதே' என்ற அவர்களது உள்ளப் பாங்கு, உரைக்குறிப் பெழுதுவதிலுள்ள நேர்மை, அடக்கம் ஆகிய அரிய இயல்புகளை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.) அவர்கள் பதிப்பித்த மிகப் பெரிய நூல்களாகிய சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி முதல், முப்பதே பாடல் கொண்ட மிகச் சிறிய நூலான பழனிப் பிள்ளைத் தமிழ் வரையிலுள்ள எல்லா நூல்களிலும் இந்த இயல்புகளைக் காணலாம். பல்வேறு காலத்திலே தோன்றிப் பல ஆசிரியர்கள் செய்தற்குரிய தமிழ்ப் பணியையெல்லாம் ஐயரவர்கள் தம் ஒருவர் வாழ்நாளிலே செய்து முடித்தார்கள்.

தமிழ் நூல்களைத் தேடி எடுத்துப் பதிப்பிப்பதே தம் வாழ்நாளின் குறிக்கோள் என்பதை அவர்கள், 'தமிழ் விடு தூது' என்ற சிறு நூலின் இரண்டு வரிகளோடு வேறு இரு வரிகளைப் புதிதாய்ச் சேர்த்து அமைத்துக் காட்டியிருக்கிறார்கள் :

> இருந்தமிழே உன்னால்
> இருந்தேன், இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும்
> வேண்டேன்—திருந்த
> உதிப்பித்த பன்னூல்
> ஒளிர, அடியேன்
> பதிப்பிக்க வேகடைக்கண்
> பார்

என்பது அந்தப் பாட்டு.

அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டைப் பாராட்டும் பொருட்டு, அவர்களுடைய எண்பதாண்டு நிறைவு விழா சென்னையில் பெருஞ் சிறப்போடு கொண்டாடப்பெற்றது. அந்தக் காலம் முதற்கொண்டு, அடிக்கடி அவர்களைச் சந்தித்துப் பழகும் பேறு எனக்குக் கிடைத்தது. இரண்டாந் தடவை அவர்களை நான் மட்டும் தனித்துப் பார்த்துப் பேசியபோது நிகழ்ந்தவற்றை நான் மறத்தல் இயலாது. அப்போது காலை நேரம். அருகில் வேறெவரும் இல்லை. மாடியிலே காலடிச் சத்தத்தைக் கேட்டு, 'யாரது ?' என்றார்கள். 'அருணாசலம்' என்றேன். அதிகப் பழக்கமில்லாமையினாலும், கண் பார்வை சிறிது குறைந்திருந்தமையினாலும், உடனே நினைவு வரவில்லை. மறுபடியும், 'மாம்பலத்திலிருந்து வருகிறேன், எனது ஊர் திருச்சிற்றம்பலம்' என்றேன். அவ்வளவுதான் : 'வரவேண்டும், வரவேண்டும்' என்று கூறிவிட்டு, தங்களுடைய தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் எழுந்து ஒரு நாற்காலியை எடுத்தார்கள் ; அதற்குள் அங்கிருந்த ஒரு பலகையில் உட்கார்ந்து விட்டேன். ஆனால் அவர்கள், 'இங்கே இருக்க வேண்டும்' என்று அந்த நாற்காலியைக் காட்டினார்கள். அவர்கள் விருப்பப்படி அதில் நான் உட்கார்ந்த பிறகு தான், மேலே பேசவும் விசாரிக்கவும் தொடங்கினார்கள்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய விளத்தொட்டிப் புராணத்தை அப்போதுதான் ஐயரவர்கள் அச்சிட்டு முடித்திருந்தார்கள் ; மற்றொரு புராணமாகிய ஆற்றூர்ப் புராணத்தை அச்சிட ஏற்பாடு செய்து வந்தார்கள். இவ்விரண்டு ஊர்களும் என் ஊரை யடுத்துள்ளவை. நூல்களை அச்சிடுமுன் ஐயரவர்கள் இவ்வூர்களை ஒருமுறை போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். அங்கே தாம் போனதையும், அப்போது எங்களூருக்குப் போனதையும், அங்கே என் தகப்பனார் முதலியவர்களைக் கண்டதையும், அங்குள்ள கோயில்களின் அமைப்பையும் பற்றிச்

சொல்லிக்கொண்டு வந்தார்கள். பிறகு, கேட்டார்கள்: “ தம்பி இப்போது என்ன படித்து வருகிறது ?”

இந்தக் கேள்விக்கு விடை கூறக் கூடிய நிலைமையில் நான் அப்போது இல்லை. தமிழ்நூல் எதையும் நான் படித்து வரவில்லை. ஐயரவர்கள் தமிழுக்குச் செய்த அருந் தொண்டையும் அவர்களுடைய அயராத உழைப்பையுங் கண்டு, அவர்களிடம் எனக்கு அளவற்ற பக்தியும் மரியாதையும் பிறந்திருந்தன. இருந்தாலும், அவர்கள் கருதியபடி தமிழ் படிக்கும் பழக்கம் இன்னும் ஏற்பட்டு விடவில்லை. ஆகவே, அவர்கள் இயல்பாகக் கேட்ட கேள்விக்கு விடை கூற வகையின்றி, நான் விழித்ததில் வியப்பில்லை.

மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. அக்காலத்தில் தமிழாசிரியர்கள் பலரைக் கண்டு பேசி வந்திருக்கிறேன்: தமிழ் படிக்க வேண்டும், தமிழறிவு நிரம்பப் பெறவேண்டும் என்ற ஆசை காரணமாகத் தமிழறிஞர் பலரோடு பழகியுமிருக்கிறேன். இவர்கள் அனைவரும் என்போன்ற இளைஞர்களோடு உரையாடும்போது, சினிமாவைப் பற்றிப் பேசுவர்கள் ; அரசியலைப் பற்றிப் பேசுவார்கள் ; உத்தியோகத்தில் ‘ பிரமோஷன் ’ கிடைப்பதைப் பற்றிப் பேசுவார்கள் ; உடல் நலத்தை விசாரிப்பார்கள் ; டாக்டரிடம் ‘ இஞ்செக்ஷன் ’ பண்ணிக்கொள்வதைக் குறித்துக் கேட்பார்கள் ; தலையில் கவிழ்க்கிற ஹாட்டையும் காலில் மாட்டுகிற பூட்டையும் பற்றிப் பேசுவார்கள் ; தமிழ் ஒன்றைப் பற்றி மட்டும் பேசவே மாட்டார்கள். ஒரு வேளை ‘ இவனும் தமிழ் படித்துவிட்டால், ஆபத்தல்லவா ?’ என்ற பயமோ, என்ன காரணமோ எனக்குத் தெரியவில்லை. ‘ தமிழ் படிக்கிறாயா ? இன்ன புத்தகத்தைப் படி ’ என்று சொன்னவர்களை நான் அதுகாறும் கண்டதில்லை.

ஆகவே, எதிர்பாராத வகையில் ஐயரவர்கள் வினவிய போது, நான் திணறிப்போனேன். எந்த நூலையும் நான் படித்து வரவில்லை என்று ஒப்புக்கொள்ள எனக்கு வெட்க

மாயிருந்தது. ஆயினும் ஒரு வகையிலே நிதானித்துக் கொண்டு, "தாங்கள் எந்த நூலையாவது படிக்கும்படி குறிப்பிட்டுச் சொல்லுங்கள்; அதையே முறையாகப் படித்து வருகிறேன். தமிழ் நூல்களிலே எனக்கு அதிகப் பழக்கமில்லை" என்று சாமர்த்தியமாகக் கூறினேன்.

அப்போது அவர்கள் சொன்னார்கள்: "திருவிளையாடற் புராணம் படிக்கவேண்டும். பரஞ்சோதி முனிவருடைய வாக்கு அருள்வாக்கு. முனிவர், கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியங்களின் சுவையிலே திளைத்தவர். அன்றியும் ஆழ்ந்த சிவபக்தியுடையவர். எனவே, அவர் பாடிய திருவிளையாடற் புராணம் அரிய இலக்கிய மணம் கமழும்; அதனோடு, நுட்பமான சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்குச் சுவைபட எடுத்துரைக்கும். சைவ பரம்பரையிலே உதித்த தம்பி போன்ற சிறு பிள்ளைகள், தங்கள் சமயக் கோட்பாடுகளை உணரவும், இலக்கிய உணர்ச்சி பெறவும், இந்நூல் பெரிதும் துணை செய்யும்" என்றார்கள்.

அப்படியே படிப்பதாக ஒப்புக்கொண்டேன். புத்தகத்தின் பெயரைமட்டும் எனக்குச் சொன்னால் போதாதென்று கருதி, அவர்கள் அதிலிருந்து ஒரு பாடலை எடுத்து எனக்கு விளக்கிச் சொன்னார்கள்.

கடவுள் அடியார்க்கு எளியன் அல்லவா? மதுரைச் சோமசுந்தரக் கடவுள்பால் அன்பு மிகுந்த பாணபத்திரர் என்ற ஓர் இசைப் புலவர் பொருட்டுச் சிவபெருமான் தம்முடைய திருமுடியிலே விறகுக்கட்டைச் சுமந்து பாதங்கள் நோவ வந்து, பாணபத்திரரோடு இசைவாது செய்யவந்த இசைப் புலவன் வீட்டுத் திண்ணையில் இருந்து பாடுகிறார். இறைவனுடைய பெருங் கருணையையும், எளிமையையும், 'நிந்தாஸ்துதி' என்று சொல்லுகின்ற முறையிலே சொல்லிப் பாடுகிறார்.

உள்ளன்போடு ஒருகை நீரைச் சொரிந்து அவனை நீராட்டி ஏதேனும் ஒரு பசிய இலையைக் கிள்ளிப் போடு

யவருக்கு அவன், இந்திரலோகமாயினும் வைகுந்தலோகமாயினும் பிரமலோகமாயினும் எளிதிலே கூட்டி வைக்கிறான். இப்படிப்பட்ட பெருமையுடைய இறைவன், பிச்சை யேற்கும் திருமேனியோடு உலகிலே உலவி, ஆன்மாக்களுடைய அறியாமையாகிய ஆணவத்தைப் பிச்சையாக ஏற்கிறான் என்பதை மாந்தர் உணராமல், அவன் கையிலே ஓட்டை ஏந்திப் பிச்சை ஏற்கிறான் என்று கூறி நகைக்கிறார்கள் என்பது பாட்டின் பாவம். இதைச் சொல்லி விட்டு ஐயரவர்கள் பாட்டைப் பாடினார்கள் :

குடங்கை நீரும் பச்சிலையும்
இடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய், மதுரைப் பரமேட்டி !
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் கையிற் படுதலைகொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய் என்று
ஏசு வார்க்கென் பேசுவனே !

இப்படி அவர்கள் திருவிளையாடலைப் பாடியும், பாராட்டியும் எனக்குச் சொல்லியபோது, ஓர் எண்ணம் மனத்திலே எழுந்தது. அவர்கள், ஐம்பெருங் காப்பியங்கள் என்பவற்றிலே மூன்றை மிக்க அருமையோடு வெளியிட்டு இருக்கிறார்கள். எட்டுத்தொகையுள் புறநானூறு போன்ற நான்கை வெளியிட்டிருந்தார்கள். அன்றியும், பத்துப் பாட்டு, பெருங்கதை என்றெல்லாம் எண்ணற்ற பெரு நூல்களையும் வெளியிட்டுள்ளார்கள். இவற்றுளொன்றைப் படிக்குமாறு எனக்கு அவர்கள் சொல்லி இருக்கலாம் ; ஆனால் சொல்லவில்லை. இதை எண்ணுந்தோறும், ஐயரவர்களுடைய உள்ளப் பாங்கை நினைத்து நினைத்து எனக்குள்ளேயே பாராட்டிக் கொள்வேன்.

அடுத்த முறை அவர்களை நான் பார்த்தபோது, ' கம்பராமாயணத்தைப் படிக்கும்படி ஏன் கூறவில்லை ?'

என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள்: “கம்பராமாயணம் ஓர் அரிய இதிகாசம். புதிதாகப் படிக்கத் தொடங்குபவர்கள் அதைப் படித்தால் அதன் சுவை முழுவதையும் உணர்ந்து அனுபவித்தல் இயலாது. முதலிலே படிக்கத்தக்க நூல்கள் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, தூது முதலியன. இவற்றைப் படித்து, தமிழ்ப் பயிற்சி சிறிது வந்தவர்கள், திருவிளையாடல் போன்ற இலக்கியத்தைப் படிக்கலாம். இதையும் தேவார திருவாசகங்களையும் படித்த பின்னரே, கம்பராமாயணம் படித்தற்குரியது” என்றார்கள். தமிழறிவும் வாழ்க்கை யனுபவமும் நிரம்பப் பெற்றபின் படித்தால் தான், கம்ப ராமாயணம் மிக்க பயன் தரும் என்பது அவர்கள் கருத்து.

கம்பராமாயணத்தை ஐயரவர்கள் நன்றாக ஊன்றிப் படித்தவர்கள். ஒரு தடவை கம்பராமாயணத்தின் பெருமையை விளக்கிச் சொல்லியபோது, கடைசியில், “கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ, திருப்பவளச் செவ் வாய்தான் தித்தித்திருக்குமோ” என்ற ஆண்டாள் பாசுரத்தைச் சொன்னார்கள். சொல்லிய பின், “அந்தத் திருப் பவளச் செவ்வாய்தான் கம்பராமாயணத்தின் சுவை முழுமையும் எடுத்துக்கூற வல்லது” என்று முடித்தார்கள்.

அந்த நூலினிடம் அவர்களுக்கிருந்த ஈடுபாட்டை அவர்களுடைய செயலாலேயே அறியலாம். கம்பர் பிறந்த ஊரென்று வழங்கும் தேரழுந்தூருக்கு அவர்கள் ஒருமுறை போயிருந்தார்கள். அங்குள்ள சிவன் கோயிலிலும் விஷ்ணு கோயிலிலும் வழிபாடு செய்தபின், கம்பரைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஆசை உண்டாயிற்று. கம்பரைப்பற்றி யாருக்குத்தான் தெரிய முடியும்? முதியவரொருவர் வந்து, கம்பர் வாழ்ந்த வீடு இருந்த இடத்தைக் காட்டுவதாக ஐயரவர்களை அழைத்துச் சென்றார். ஊரின் தென்மேற்கு மூலையிலுள்ள ஒரு மேட்டைக் காட்டி, “இதுதான் கம்பர் மேடு,

கம்பர் வாழ்ந்த வீடு இங்கேதான் இருந்ததென்று பெரியோர் சொல்லுவார்கள் " என்றார். ஐயரவர்கள் அப்படியே கண்ணீர் பெருக்கி, எல்லா உறுப்புக்களும் நிலத்தில் தோயக் கீழே விழுந்து வணங்கினார்கள். இச் செய்தியைத் தேரழுந்தூர் வாசிகள் இன்றும் சொல்லி வருகிறார்கள்.

சிறந்த முறையிலே கம்பராமாயணத்தை அதிலுள்ள பல்வகைச் சுவைகளும் விளங்கும்படியாக விசேடக் குறிப்புக்களோடு ஒரு பதிப்பு வெளியிட வேண்டும் என்று அவர்கள் முயன்று குறிப்பெழுதி வைத்ததுண்டு; அவ் வெண்ணம் முற்றுப்பெறவில்லை.

டி. கே. சி. யவர்கள் கம்பராமாயணப் பாட்டை எடுத்துச் சொல்லும் முறையிலே ஐயரவர்களுக்கு மிக்க ஈடுபாடுண்டு. டி. கே. சி. வந்து தம்மோடு பேசிக்கொண்டிருக்கும்போதும், பாடல் சொல்லும்போதும், தம் மாணவர்களை யழைத்துக் கவனமாய் கேட்கச் சொல்லுவார்கள். ஒரு சமயம் அவர்கள் டி. கே. சி.க்கு எழுதிய கடிதமொன்றில், " நூல்களை ஆராய்ந்து வருகையில், நல்ல கவியைப் பார்க்கும்போதெல்லாம் தங்கள் நினைவு வருகிறது " என்று குறிப்பிட்டார்கள். இது ஐயரவர்களின் ரசிகத் தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஐயரவர்கள் இளமையில் முறையாக இசை பயின்றவர்களென்பதை அவர்கள் சரித்திரத்தால் அறியலாம். அன்றியும், நூற்பரிசோதனையிலும், ஆராய்ச்சியிலும் ஈடுபடாத நேரத்தில் அவர்கள் மனமுருகத் திருவாசகத்தையும் தேவாரத்தையும் பாடிக்கொண்டு சிவத்தியானத்திலே ஆழ்ந்திருப்பார்கள். ஒரு முறை அவர்கள் நோய்வாய்ப்பட்டு, சத்திர சிகிச்சை செய்துகொண்டு, பிறகு குணமடைந்து வந்தார்கள். அந்த நிலையிலே வீட்டிலே சென்று அவர்களைக் கண்டேன். ஏதோ பேசிக்கொண்டே வந்தவர்கள் இடையிலே ஒரு பாட்டைச் சொல்லவேண்டி வந்தது. தள்ளாமையும் அயர்ச்சியும் காரணமாக நாற்காலி

யில் சாய்ந்துகொண்டிருந்தவர்கள் மிக்க சிரமத்தோடு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து, பாட்டைப் பாட ஆரம்பித்தார்கள். கையை ஆட்டிக்கொண்டு பாடலானார்கள். முதுமையினாலும் நோயினாலும் கைகள் நடுங்கின. உதடுகளும் நாவும் அசைந்து நடுங்கியது போலவே தோற்றின. குரலிலும் ஓர் ஆட்டம் இருந்தது. ஆயினும், பாடல் என்ற உடனேயே, தமது உடல் தளர்ச்சியையும் பார்க்காமல் அவர்கள் பாட ஆரம்பித்து விட்டார்கள். அன்றியும், பாட்டென்றால்அதைப் பாடவேண்டும், உயிரற்ற வசனம் போல் படிக்கக் கூடாதென்பதே அவர்களுடைய கொள்கை. அன்று அவர்கள் ஒரு பாடலைப் பாடிய தோற்றமும், முகத்திலே பொலிந்த உற்சாகமும், குரலின் நடுக்கமும் உடலின் தளர்ச்சியும் இப்போதும் என் கண் முன் நிற்கின்றன.

ஐயரவர்கள் பேச்சு எப்போதும் சுவையுடையதாயிருக்கும். வீணிலே வந்து பேசிப் பொழுது போக்க விரும்புவோருக்கு இடங்கொடுக்க மாட்டார்கள். வருபவர் மனம் புண்படாமல், தமது நேரம் வீணாய்ப்போகிறதென்பதை நயமாகக் குறிப்பிட்டு விடை கொடுத்து அனுப்பி விடுவார்கள்.

ஒரு சமயம் பிற்பகலிலே ஆசிரியரொருவர் ஐயரவர்களைக் கண்டு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார். இரண்டு மணி நேரம் பேசியும் போவதாகக் காணோம். இந்த நிலையிலே மாலை நான்கு மணிக்கு நான் போனேன். என்னைக் கண்டதும் அவர்கள் அன்புடன் வரவேற்று, அவ்வாசிரியருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்கள். இரண்டு மூன்று நிமிஷம் கழிந்த பிறகு, அவர்கள் அவரைப்பார்த்து, "தம்பி என்பால் மிரம்ப அன்புடையவர்கள். ஏதோ காரணமாக என்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்" என்றார்கள். உண்மையில் நான் எந்தக் காரியத்துக்காகவும் போகவில்லை. ஆனால், அவரைப் போகச் சொல்லாத ஒரு

குறையாகவே ஐயரவர்கள் இப்படிச் சொன்னார்கள்; இதை அவர் அவ்வளவாக உணர்ந்து கொள்ளவில்லை.

அவர் சொன்னார்: "அப்படியா, நீங்கள் மாடியில் பேசிக்கொண்டிருங்கள்; நான் வெளியே சிறிது நேரம் உட்கார்ந்திருக்கிறேன்."

"தம்பிக்குக் கொஞ்சம் அதிக நேரம் வேலையிருக்கிறது" என்றார் ஐயரவர்கள்.

"குற்றமில்லை. எவ்வளவு நேரமானாலும் நான் காத்திருக்கிறேன்."

ஐயரவர்கள் சிரித்து விட்டார்கள்; "தாங்கள் தான் எப்போதுமே காத்திருக்கிறீர்களே! இப்போது சிறப்பாக நீண்ட நேரம் காக்கவேண்டாம்." என்று, காத்தல் என்ற சொல்லுக்கு இரு பொருள் படும்படி, பக்குவமாகச் சொல்லி விட்டார்கள். அவ்வாசிரியரும் வேறு வழியில்லாமல் புறப்பட்டுப் போய்விட்டார். பிறகு ஐயரவர்கள், அவர் நெடுநேரம் தம்மோடு பயனற்ற முறையிலே உரையாடியதையும் அதனால் தம் நேரம் வீணாய்ப் போனதையும் கூறி வருந்தினார்கள்.

அடுத்த முறை அவர்களை நான் பார்த்தபோது, "நான் நெடுநேரம் காத்திருக்கிறவனல்ல" என்று சொன்னேன். முந்திய நிகழ்ச்சியை மறவாது நினைவுக்குக் கொண்டுவந்து அவர்களும் சிரித்தார்கள்.

ஐயரவர்களுடைய பேச்சிலே சிறப்பான அம்சம், அவர்கள் பேச்சின் நடை. பொதுவாக இக்காலத்தில், யார் பேசுவதானாலும், (தனிப்பட்ட முறையிலே உரையாடிக் கொண்டிருக்கும்போது) ஆங்கில மொழிச் சொற்களும் பிறவும் பேச்சிலே ஏராளமாகக் கலக்கும். தவிர, பேசும் சொற்களும் சொற்களின் வடிவும், பெரிதும் சிதைவுற்றும் திரிந்துமே காணப்படும். வேற்றுமை உருபுகள், வினைச் சொல் விகுதிகள் முதலியன பெரும்பாலும் நாவிலே உச்சரிக்கப்பெறுமலே கழிந்துவிடும். சிலர் இவற்றை அதிக

மாகச் சிதைப்பர் ; சிலர் சிதைப்பது குறைவாக இருக்க லாம். எல்லோரும் ஓரளவுக்குச் சிதைத்தே வழங்குகிறார்கள் என்பது உண்மை.

ஆனால் ஐயரவர்கள் சாதாரணமாக அன்பர்களோ டிருந்து வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கும்போது கூட, அவர்கள் பேச்சிலே இத்தகைய சிதைவுகள் ஒன்றை யும் காண முடியாது. ஒருமை பன்மை அமைப்பு, வினை முடிபு, பொருள் முடிபு முதலியன யாவும் அழகாகவும் எளிமையாகவும், பொருத்தமாகவும் அமைந்திருக்கும். எந்தச் சொல்லைச் சொல்லும்போதும், அதை நிறுத்தி ஓரெழுத்தும் கெடாதபடி உச்சரிப்பார்கள். இப்படி அவர் கள் சொல்வதும் உச்சரிப்பதும், ஏதோ வேண்டுமென்று மிக்க கஷ்டத்துடன் முயன்று செய்வதாயிராது ; இயற்கை யாகவே அவர்களுக்குச் சொற்கள் அத்துணைத் திருத்தமாய் வருவனவாக நமக்குத் தோற்றும். கேட்க இனிமையாக வும் வியப்பைத் தருவனவாகவும் இருக்கும். இளமையி லிருந்தே சரியான முறையில் பேசிப் பழகி வந்த ஓர் அருமை காரணமாக, அவர்கள் பேச்சின் நடை இயல்பாகவே அழ குடையதாகி விட்டது. அவர்களுக்கு ஆங்கிலம் தெரியா தாகையினாலே, ஆங்கிலச் சொற்கள் அவர்கள் பேச்சில் கலந்து வாரா. ஆகவே, எத்துணை நுட்பமான கருத்தையும் எளிய தமிழில் தெளிவாக விளக்கிக் கூறும் அவர்களுடைய பேச்சுத் திறமை யாருக்கும் வியப்பளிப்பது இயல்பு.

இளைஞர்களோடு பேசும்போது, அவர்கள் 'நீ' என்று என்று கூறுவதே இல்லை. அவர்கள் வயதையும் நம் வயதை யும் பார்க்கையில், அவர்களுடைய பேரப்பிள்ளையின் வயது கூட நமக்கு இராது என்று சொல்லலாம். ஆயினும் 'நீ' என்று சொல்வதில்லை. ஆனால் அதற்காக ஒரு போலி மரியாதையோடு ' நீங்கள் ' என்று சொல்லவும் மாட்டார் கள். முன்னிலைச் சொல்லே வராதபடி பேசுவார்கள். நெடு

நேரம் பேசிக்கொண்டிருந்த போதிலும், பேச்சில் சுவை குன்ருத படியும், நீ என்ருே நீங்கள் என்ருே முன்னிலைப் படுத்திக் கூருமலும் மிக்க திறமையோடு பேசி வருவார்கள்.

கல்லூரி ஆசிரியராயிருந்து பலவகையான மாணவர் களோடு பழகி, அவர்கள் செய்யும் குறும்புகளுக்கெல்லாம் ஈடுகொடுக்கவேண்டி யிருந்தமையால், தம்மை வந்து பார்ப் போரிடம் திறமையாகப் பழகும் தன்மையும் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஒரு தடவை ஆங்கிலப் பட்டமெல்லாம் பெற்ற ஒருவர், பலவகையான தமிழ்ப் பாடல்களை எழுதி அச்சிட்டு, அதற்கு முன்னுரை எழுதும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டுவந்தார்; ஒரு நாள் நேரிலும் வந்து கேட்டார். அவர் அப்போது கையிலே தந்த புத்தகத்தை ஐயரவர்கள் புரட்டியபோது, அதில் அவருடைய பெயர் 'வெங்கிட்ட ராமன்' என்றெழுதி யிருந்தது. அப்போது அவர்கள் சொன்னூர்கள்: "ஐயா, தமிழ் நாட்டில் இந்த மாதிரி யாரும் பெயர் வைக்கமாட்டார்கள். தங்களுடைய பெயரையே சரியாக எழுதத் தாங்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. அதைத் தெரிந்து கொண்டு வாருங் கள்; முன்னுரை எழுதுவதைப் பிறகு கவனிக்கலாம்" என்று சொல்லி விட்டார்கள். வந்தவருக்கும் தம்முடைய பெயரில் என்ன பிழை என்பது விளங்கவில்லை. ஐயரவர் களுடைய மாணக்கர்களைக் கேட்டு 'வேங்கடராமன்' என்பதே திருந்திய பெயரென்றும், அதையே திரித்து 'வெங்கிட்டராமன்' எனத் தாம் பிழையாக எழுதியிருந்தா ரென்றும் அறிந்து கொண்டு, வெட்கி அப்படியே திரும் பிப் போய்விட்டார்.

இப்படியாக, ஐயரவர்கள் நூல் பதிப்பிடுவதில் மட்டும் அன்றி, பேச்சிலும் வல்லவராக விளங்கினார்கள். சில அன்பர்கள் ஒரு சமயம், "தாங்கள் நீண்ட காலம் உயிர்

வாழ முடிந்த தெப்படி ?" என்று கேட்டார்கள். அவர்கள் சிரித்துக்கொண்டே, தமக்கு உதவியாயிருந்த காயகல்பம் இன்னதென்று சொல்லிவிட்டார்கள். "என் ஆயுள் முழுதும் தமிழ் என்ற ஓரே மருந்துதான் என் உயிர்ப்பும் உணர்வும் உயிருமாயிருந்து வந்தது. அதன் துணைகொண்டு தான் நான் இவ்வளவு காலம் வாழ்ந்தேன்" என்றார்கள். ஆனால் இன்று எத்தனை பேர் இந்த மருந்தைக் கைக்கொள்ளத் தயாரா யிருக்கிறார்கள் ?

ஐயரவர்கள் எண்பத்தேழு ஆண்டுகள் உயிர் வாழ்ந்து தமது எண்பத்தெட்டாம் ஆண்டில் (28-4-42) திருக்கழுக்குன்றத்தில் காலஞ்சென்றார்கள். அவர்கள் காலஞ்சென்று இன்று ஓராண்டு நிறைகிறது. இன்று தமிழ் நாட்டில் அவர்களால் பயன் பெறாதோர் இலர் என்பது உண்மை. அன்பர்களும் மாணவர்களும் பொதுவாகத் தமிழர் அனைவரும், அவர்களுடைய தமிழ்ப் பணியால் பயன் பெற்றிருக்கிறார்கள். இதுமட்டுமல்ல; அவர்களைக் குறை கூறுவோருடைய படிப்பையும் ஆராய்ச்சியையும் பார்த்தால், இவர்களும் ஐயரவர்களால் பெரும் பயன் பெற்றார்கள் என்றே தெரியவரும்.

தமிழ் படித்தவர்களைக் கண்டால் ஐயரவர்களுக்குப் பயம். மிகவும் முயன்று அவர்கள் சேகரித்து வைத்திருந்த தமிழ் நூல்களைத் தமிழ் அறிஞர் சிலர் 'அடித்துக்'கொண்டு போக முயன்ற கதைகள் சில அவர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். அக் காரணத்தால், தமிழ் அறிஞர் என்றாலே அவர்கள் அஞ்சுவதுண்டு. அக்காலத்தில் என்னைத் தமிழறிஞன் என்று யாரும் சொன்னதில்லை. ஆதலால், என்னிடத்தில் அவர்கள் எவ்விதச் சந்தேகமும் கொள்ளாமல், தாராளமாக மனம் விட்டுப் பேசிவந்தார்கள். அவர்களிடத்திலே பிறர் கூறி வந்த குறை ஒன்றையும் காணாமல், நிறைவை மட்டுமே காணக் கிடைத்தது என்னுடைய பாக்கியம்.

'நன்றி பாராட்டுநர் நடுநாயகமாய்' என்று அவர்கள் தம் ஆசிரியரைப் போற்றியிருக்கிறார்கள். இந்தப் போற்றுதலுக்கு அவர்களே லக்ஷ்யமாய் இருந்தார்கள் என்பது நானறிந்த உண்மை. ஒரு சமயம் கலியாண சோழபுரம் என்ற பெயர் வந்தபோது, அவர்கள் அப்படியே என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு, இளமையில் தம்மை ஆதரித்த அவ்வூர் வள்ளல்கள் சிலர் பெயரைக் குறிப்பிட்டுக் கண்ணீர் பெருக்கி நின்ற காட்சி இன்றும் என் கண் முன் நிற்கிறது.

திருவிளையாடல் படிக்கும்படி ஐயரவர்கள் எனக்கு அறிவுறுத்தினார்கள். அப்போது எனக்குத் தமிழிலே உணர்ச்சி அதிக மிருந்தபோதிலும், படிப்பு அதிகமில்லாத காலம். அவர்கள் சொல்லியபடியே திருவிளையாடலை ஓர் உயர்ந்த இலக்கியமாக எண்ணிப் படித்தேன். ஒருமுறை படித்தேன். இரண்டுமுறை படித்தேன்; மொத்தம் ஐந்துமுறை படித்தேன் என்று ஞாபகம். படித்ததனாலே எவ்வளவோ பயன்பெற்றேன். தமிழறிவையும் தமிழிலே பெரியதோர் ஊக்கத்தையும் எனக்கு அளித்தது அந்த நூலே யாகும். அந்த நூலும், அதைக் குறிப்பிட்டுச் சொன்ன ஐயரவர்கள் பழக்கமும், என்னுடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிட்டன என்பது இன்று நான் உணர்கிற உண்மை. வாழ்க்கையிலே தமிழ் என்ற ஒரே குறிக்கோளைக்கொண்டு அதைச் சிறிதும் மறவாமலும் புறக்கணியாமலும் உழைத்து வந்த அவர்களுடைய உழைப்பு மற்றொருவருக்கு எளிதிலே கைவராது. ஆனால் அந்தக் குறிக்கோளைக் கொண்டு யாருமே ஒழுகலாம்.

தமிழ்த் தாழ்த்தாவாகிய சாமிநாதையர் தோற்றுவித்த தமிழ் யுகம் வாழ்வதாக.

பண்டித மாளவியா

பண்டித மதன்மோகன் மாளவியா, நவம்பர் மாதம் 12ஆம் தேதி காசியில் காலமானார்.

ஹிந்துவாய்ப் பிறந்தவர் ஒவ்வொருவரும் கன்னியா குமரிமுதல் இமயம்வரை, எங்கிருந்தாலும், தம் வாழ்நாளில் காசியை ஒரு முறையேனும் சென்று வழிபட வேண்டு மென்று விரும்புவார். இவ்விருப்பத்துக்குக் காரணம், காசி விசுவநாதர் கோயிலும் காசியில் நீராடுவதற்கென் றமைந்த கங்கைக்கரையிலுள்ள தீர்த்தக் கட்டங்களும்.

இந்த இரண்டோடு, எல்லோருடைய யாத்திரைக்கும் இடமாக, காசியில் மற்றொன்று உண்டு. அதுவே, காசி ஹிந்து விசுவ வித்தியாலயம் (சர்வகலாசாலை). இந்த விசுவ வித்தியாலயத்தை ஏற்படுத்தி இத்தகைய பெரும் புகழுக்கு அதை உரியதாக்கியவர் பண்டித மாளவியா.

பண்டித மாளவியா, மாளவ நாட்டிலிருந்து அலகபாத் துக்கு (பிரயாகை) வந்து குடியேறிய வைதிகப் பிராமண குலத்தில் உதித்தவர். மாளவ நாட்டினர் என்பதைக் குறிக்க அவர் பரம்பரையினரை வடநாட்டில் மாள்வி என் பார்கள்; இச்சொல்லையே நாம் இன்று மாளவியா என் கிறோம். 1861ஆம் வருஷம் கிறிஸ்துமஸ் தினத்தன்று (டிசம்பர் 25ஆம் தேதி) பிறந்த இவர் எண்பத்தைந்து ஆண்டுகள் நம்மிடையே வாழ்ந்தார். காங்கிரஸ் மகா சபைக்கு இவர் மூன்று முறை தலைவராயிருந்தாரென்றால், இவருடைய பெரும் தகுதிக்கு வேறொன்றையும் எடுத்துக் காட்டாகச் சொல்லவேண்டியதில்லை. ஆயினும், இத்தகைய பெருந் தகுதிகள் அனைத்தையும்விட, அவருக்கு மிக்க சிறப்பளிப்பது, காசி ஹிந்து விசுவ வித்தியாலயம் ஏற் படுத்தி வளர்த்த அரிய சேவையாகும்.

நம் நாட்டின் இன்றைய சுதந்திரப் போராட்டமானது எண்ணற்ற வீரர்களையும், தியாகிகளையும் மகான்களையும் தோற்றுவித்திருக்கிறது. இவர்கள் செய்த அருஞ்செயல்கள் நம்மவர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டிருக்கின்றன. எனினும், சுதந்திர இந்தியாவில் இந்த ஞாபகம் அதிகமிருக்குமென்று சொல்லமுடியாது. இந்தியா சுதந்திரமடைந்து தனியரசாக ஓங்கி வளர்ந்து வரும் நாளில்* இந்தப் போராட்டத்தை ஓரளவுக்கு மறந்துவிடுதலுங் கூடும். அப்போது இப்போராட்டத்தில் ஈடுபட்டு அருந்தொண்டாற்றிய வீரர்களின் நினைவுகூடப் பூர்த்தியாய் இராது. சில வீரர்களின் நினைவே மக்கள் உள்ளத்தில் நின்று நிலவும். அந்த நினைவுங்கூட, அவர்கள் செய்த போர்களைக்குறித்தல்ல, அவர்கள் செய்த ஆக்க வேலையால்தான் ஏற்படும். மாளவியா செய்த ஆக்கவேலை ஹிந்து விசுவ வித்தியாலயத்தை உருவாக்கியது; எனவே, மக்கள் அவரை ஒரு காலத்திலும் மறக்கமுடியாது.

அவர் சுதந்திரப் போர் வீரர்களின் முன்னணியில் நின்றோருள் ஒருவர் என்பதை மக்கள் பிற்காலத்தில் மறந்து விடலாம். ஆனால், இந்த வித்தியாலயத்தின் தந்தை என்பதை ஒருநாளும் மறக்கமாட்டார்கள். பொதுவாக இந்திய நாட்டின் பண்பும், போர்வீரனையே எப்போதும் போற்றுவதன்று. ஆன்மப் பண்புகளை உயர்வாகக் கருதுவதே நமது நாகரிகம். ஆதலால் மாளவியாவை சுதந்திரத்துக்காகப் போரிட்டவர் என்ற அளவில் மறந்துவிட்டு, பெருங் கல்விச் சாலை நிறுவியவர் என்று நம்மவர் போற்றுவது, நம் நாகரிகத்துக்கு ஒத்ததாகும்.

உறங்கிக் கிடந்த ஹிந்து சமூகத்திற்குப் புத்துயிரளித்து மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கச் செய்ய, புராதன ஹிந்து தரு

*இக்கட்டுரை இந்தியா சுதந்திரம் பெறுமுன் எழுதி வெளிவந்தது.

மத்தை மக்கள் உணரவேண்டுவது அவசியமென்று மாளவியா கண்டார். பள்ளிக்கூடங்களிலும் சர்வகலா சாலைகளிலும் சமயக் கல்வி அடியோடு இல்லாமற்போனது குறித்துப் பெரிதும் அவர் கவலையுற்றார். ஆகவே தாம் ஏற்படுத்திய சர்வகலாசாலையில், சமயபோதனையை ஒரு முக்கிய அம்சமாக வைத்தார். அங்கு எல்லா வகுப்புக்களில் பயிலும் மாணவர்களுக்கும் சமய போதனை யுண்டு. கீதை எல்லோருக்கும் பாடம்; வகுப்புக்கள் நடக்கும்; பரீட்சையும் உண்டு. தவிர ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலையில் எட்டேகால் மணிக்கு கீதாப் பிரசங்கம் நடக்கும். சர்வகலாசாலையிலுள்ள அறிஞர் ஒருவரோ, அல்லது வெளியிலிருந்து வந்த அறிஞர் ஒருவரோ, கீதை கூறும் ஏதேனும் ஒரு பொருள் பற்றிப் பேசுவார். கலாசாலை மாணவர்களும் நகரப் பொது மக்களும் பிரசங்கம் கேட்கலாம். இந்த ஏற்பாடு இப்போதும் நடந்து வருகிறது.

மாளவியா இந்தச் சர்வகலாசாலையில் செய்துள்ள மற்றொரு சிறந்த ஏற்பாடு பெண் கல்வி சம்பந்தமானது. இந்தக் கலாசாலையில் பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரி இருக்கிறது. அதைச் சேர்ந்த மாணவியர் விடுதியில் இருந்துகொண்டு படித்துவரும் பெண்கள் சுமார் முன்னூறு பேர். அங்கு இருந்து படிப்போரைவிட, வெளியே இருந்து படித்துப் பரீட்சை மட்டும் எழுதும் பெண்கள் இன்னும் பலர்.

பரம வைதிகர், சனாதனி என்றெல்லாம் பெயர் வாங்கிய மாளவியா, பெண்கள் முன்னேற்றத்துக்கான வசதிகள் பல செய்திருக்கிறார். அவற்றுள் சிறப்பாக இங்குக் குறிப்பிடத் தகுந்தது படிப்பு வசதி. பெண்கள் மட்டும், காசி ஹிந்து சர்வகலாசாலைப் பாடம் சம்பந்தப்பட்ட வரையில் வீட்டிலிருந்துகொண்டே படித்து மெட்ரிகுலேஷன் (அட்மிஷன்), இண்டர்மீடியேட், பி.ஏ., எம்.ஏ., ஆகிய பரீட்சைகள் எழுதலாம்; பட்டம் பெறலாம் ; அவர்

கள் பள்ளிக்கூடத்தில் அல்லது கலாசாலையில் சேர்ந்து படிக்கும் அவசியமே இல்லை. இது இந்தச் சர்வகலாசாலையின் தனிச் சிறப்பு. இதன் பயனாய், இன்று நாடெங்கு மிருந்து பெண்கள் படித்து, காசிக்குப் பரீட்சை எழுத வருவதையும், எழுதித் தேறிப் பட்டம் பெறுவதையும் காணலாம்.

தொழில் துறையில் நம்மவர் முன்னேறவேண்டும், வெறும் பட்டங்களால் பயனில்லை என்பது மாளவியாவின் எண்ணம். இதனால் சுரங்கவேலை, உலோகத் தொழில், பீங்கான், கண்ணாடி, சவுக்காரம் போன்ற தொழில்கள், பயிர்த்தொழில், மருந்து செய்தல் முதலான பலவகைத் தொழிற் கல்லூரிகள் அங்கு நிறுவப்பெற்றுள்ளன.

அங்கு தொழில் பயின்று பட்டம் பெற்ற தொழில் விற்பன்னர்களை இன்று இந்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் காணலாம். சுரங்க வேலை முதலான சில தொழிற் பிரிவுகளில் இங்குள்ள கல்லூரிகள் இந்நாட்டில் தமக்கு இணையில்லாமல் விளங்குகின்றன. வடமொழிக்கென்று தனிக் கல்லூரியும் சமயத்துக்கென்று தனிக் கல்லூரியும் இங்குள்ளன.

இவ்வளவுக்கும் ஏராளமான மூலதனம் வேண்டியிருந்தது. ஐந்து கோடி ரூபாய் இதற்கு மூலதனம் என்பது மாளவியாவின் திட்டம். தம்முடைய ஒப்பற்ற தியாகத்தாலும், சிறந்த பண்புகளாலும் அவர் இந்நாட்டு சமஸ்தான மன்னர்களிடத்திலும்கூட பொருள் திரட்டி, இச்சர்வகலா சாலைக்கு அளித்திருக்கிறார். அவர் திரட்டிய தொகை சுமார் இரண்டு கோடி இருக்கும். பொருள் திரட்டுவதில் மாளவியாவுக்கு இருந்த திறமை காந்தியடிகளைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. பொருள் யாசிப்பது குறித்து, ‘இரவலர்களின் அரசன்’ என்று அவர் தம்மைக் கூறிக் கொள்வது வழக்கம்.

சர்வகலாசாலையினிடையில் தனியாக விசுவநாதர் ஆலயமொன்று கட்ட அவர் திட்டம் போட்டிருந்தார். இதற்கு அஸ்திவாரம் முழுமையும் போட்டாயிற்று. மேற்கொண்டு செலவு செய்யப் பணமில்லை. இந்நிலையில் அவர் தம்மைப் பார்க்க வந்தோரிடமெல்லாம் பொருள் யாசிக்க ஆரம்பித்தார். ஒரு முறை தென்னிந்தியாவிலிருந்த ஒரு பிரமுகர் காசியாத்திரை போனார். அவர் காங்கிரஸ் கட்சிக்கு எதிரானவர். காசியை விட்டுத் திரும்பும்போது, 'மாளவியா பெரியவர் என்று சொல்கிறார்களே, அவரையும் பார்த்து வரலாமே!' என்றெண்ணி, அவரைப் பார்க்கச் சென்றார். சென்றபோது மாளவியா, நோயுற்றுப் படுத்த படுக்கையாயிருந்தார். இருந்தும் இவரைத் தம்மிடம் வருமாறு அழைத்தார். பேச முடியாத நிலையிலிருந்த தம் மெலிவினிடையே இவரிடம் சில வார்த்தைகள் பேசிவிட்டு, பின்னர் தம் கோயிலைப் பற்றி ஆரம்பித்தார்.

"காசி நகரத்தில் பிரசித்திபெற்றது விசுவநாதர்கோயில். எங்கள் வித்தியாலயத்திலும் ஒரு விசுவநாதர் கோயில் கட்டவேண்டுமென்று எங்களுக்கு ஆசை. (காசிப் பக்கத்தில், சிவன்கோயிலெலதையும் விசுவநாதர் கோயில்—விசுவநாத்ஜி மந்திர் என்றே வழங்குவார்கள்). அதற்காகப் போட்டிருக்கிற அஸ்திவாரத்தையும் அடிமட்டச் சுவரையும் நீங்கள் பார்த்திருக்கலாம். கோயில் கட்டி முடிக்க அளவற்ற பொருள் தேவை. கலாசாலைச் செலவுகளுக்கே எங்கள் வருவாய் போதாமலிருக்கிறது. ஆகவே கோயில் கட்டுவதற்குப் பிறர் தரும் நன்கொடையையே எதிர்பார்க்கிறோம். எவ்வளவு சிறு தொகையையும் மிக்க நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்களாலான உதவி செய்ய வேண்டும்" என்று மிக்க நயமாய்க் கேட்டார்.

இப்படி வேண்டுபவரிடம் மனம் உருகாமல் என்ன செய்யும்? கேட்டிருந்த பிரமுகர், "என்னாலான உதவி, இருபத்தைந்து ரூபாய் தருகிறேன்" என்றார்.

இதன் மீது மாளவியா மிக்க நன்றி தெரிவித்துப் பின்னர் சொன்னார். "ஐயா, நீங்களாக மனமுவந்து இந்த உதவி செய்வது பெரிய காரியம். இருந்தாலும் யோசித்துப் பாருங்கள் ; நீங்கள் தரக்கூடியது இவ்வளவுதானா ? இந்தத் தொகையை இன்னும் அதிகப் படுத்த முடியாதா?" என்றார்.

வந்தவர், "ஐம்பது ரூபாய் தருகிறேன்" என்று சற்றும் தயங்காமல் சொன்னார். மாளவியா இதனோடு விடவில்லை. " மிக்க சந்தோஷமடைகிறேன். கோயில் கட்ட உதவுவது எவ்வளவோ புண்ணியமான காரியம். ஆயிரத்தெழுநூறு மைல் தூரத்திலிருந்து எவ்வளவோ சிரமத்தின்மேல் நீங்கள் காசியாத்திரை வந்திருக்கிறீர்கள். எவ்வளவோ பணம் செலவு செய்கிறீர்கள். இந்தச் செலவில், எங்கள் கோயிலுக்காகச் செய்கிற தருமம் உங்களுக்குப் பெரிய காரியமாயிராது. ஐம்பது ரூபாய் நீங்கள் கொடுத்ததே பெரிய காரியம். இருந்தாலும், இவ்வளவுதான் நீங்கள் கொடுக்க முடியுமா ? இன்னும் அதிகம் தரமுடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள் " என்றார்.

இந்த நயமான சொற்கள் வந்தவரை அசைத்துவிட்டன. " சரி, நூறு ரூபாய் தருகிறேன் " என்று சொல்லி, அவர் பணத்தை எடுத்துக் கொடுத்தார்.

தம்முடைய உண்மையான தியாகத்தாலும், இனிய மொழியாலும், நயமான பேச்சுத் திறமையாலும், மாளவியா எத்தனையோ பேரிடம் பொருள் திரட்டினார். இச்சம்பவம் அதற்கு ஒரு சிறு உதாரணமாகும்.

படித்தவர்களிடத்தில் மாளவியாவுக்கு அபிமானம் அதிகம். வடமொழிப் படிப்போ, சாஸ்திரப் படிப்போ கொஞ்சம் இருந்துவிட்டால், அவரிடம் எவரும் உதவி பெறுதல் எளிது. அப்படியே அவர் துறவிகளிடம் அளவில்லாத மரியாதை காட்டி வந்தார். வடநாட்டில் பொதுவாகவே ' சாது 'க்கள் பலர் இருப்பார்கள். இவர்களிடம்

பொதுமக்கள் மிக்க மரியாதை காட்டுவார்கள். காசியில் இவ்விதம் பொது மக்களால் பெரிதும் போற்றப் பெற்ற பெரியார் ஒருவர் இருந்தார். ஹரிஹர பாபா என்று அவரை வழங்குவார்கள். கங்கையின் மேல் கோடியி லுள்ள அசி கட்டத்தில் ஒரு பெரிய படகிலேயே அவர் எந் நேரமும் வசிப்பார். குளிர், வெயில், மழை—எக்காலத் திலும் அவர் அப்படகைவிட்டு வெளியே வருவதில்லை. அவருக்கு பிராயம் தொண்ணூறுக்கு மேலிருக்கலாம். நூற்றுக்கணக்கான மக்கள் நாள்தோறும் சென்று அந்தப் படகிலேறி அவரை வழிபட்டு வருவார்கள்.

காசி ஹிந்து சர்வகலாசாலை மாணவர்கள் சிலர் ஒரு சமயம் அங்கு சென்றார்கள். அப்போது ஹரிஹர பாபா, அசையாமல் படுத்திருந்தார். பையன்கள் அவரைப் பார்த்து விட்டுத் திரும்பினார்கள். அவரோ, சற்றும் கண்களை விழிக்கவும் இல்லை, இவர்களைப் பார்க்கவும் இல்லை. படகைவிட்டு கரையில் இறங்கியதும், ஒரு பையன் குறும் புத்தனமாக, ஒரு சிறு கல்லை எடுத்து, அந்தப் பெரியவர் விழித்துக் கொள்கிறாரா என்று பரீட்சிக்கும் நோக்கத் துடன் அவர்மீது போட்டான். அவரோ அசைவற்றிருந் தார். பிள்ளைகள் கூடினால் விஷமத்துக்குக் கேட்க வேண்டுமா? வந்திருந்த பையன்களெல்லோரும் ஆளுக் கொரு கல்லாகப் பெரியவர்மீது போட்டார்கள் அவர் விழித்துக் கொண்டார். தளர்ந்துபோன அவரது உடல் என்ன செய்யும், பாவம்! ஓரிடத்தில் இரத்தம் கசிய ஆரம் பித்தது. இரத்தத்தைக் கண்ட பிள்ளைகள் ஓட்டமெடுத்து விட்டார்கள்.

இச்செய்தி எப்படியோ அன்று மாலையே மாளவியா வுக்குத் தெரிந்துவிட்டது. அவர் மனம் எவ்வளவு பதைத் தது என்பதைச் சொல்லவேண்டியதில்லை. நேரே அசி கட்டத்துக்கு ஓடி வந்தார். அவர் வந்தாரென்றால் கேட்க வேண்டுமா? சர்வகலாசாலையே திரண்டு வந்துவிட்டது.

எல்லா ஆசிரியர்களும், மாணவர்களும் வந்துவிட்டார்கள். மாளவியா நேரே ஹரிஹர பாபாவிடம் சென்று சாஷ்டாங்கமாக அவர் காலில் விழுந்து தம் மாணவர் செய்த பிழையைப் பொறுக்குமாறு வேண்டினர். வந்திருந்த ஆசிரியர்களும் மாணவர்களும் அப்படியே பணிந்து வணங்கினர்கள். பார்த்த ஹரிஹர பாபா, "அப்பா, நீ ஏன் இப்படிச் செய்கிருய்? உன்மீது எந்தக் குற்றமுமில்லை, எல்லோரும் போகலாம்" என்று சொல்லி, எல்லோருக்கும் விடை கொடுத்தார். பின்னர் எல்லோரும் கலாசாலை திரும்பினர்கள். குற்றம் செய்த மாணவர்கள் மாளவியாவிடம் வந்து பணிந்து, தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள்.

இவ்விதம் நிகழ்ந்த சம்பவங்கள் பல. இந்தியாவின் ஒப்பற்ற தலைவர்களுள் ஒருவரான மாளவியாவிடம் அடக்கமும் பணிவும் குடிகொண்டிருந்தமைக்கு இச்சிறு சம்பவம் ஓர் எடுத்துக் காட்டாகும்.

மாளவியாவின் உன்னதமான புகழுக்கு அடையாளமாக, காசி ஹிந்து சமூகத்தின் சரித்திரத்தில், பண்டைய அடியவர்கள் — பக்தர்கள் வரிசையில் மாளவியாவின் பெயரும் சேர்த்தற்குரியது. கல்வித் துறையிலோ, பிற ஆக்க வேலைகளிலோ, வெறும் வாய்ச்சொல் வீரர் மலிந்த இவ்வுலகத்தில், செயற்கரிய பெருஞ் செயல் செய்த இப்பெரியார் என்றும் ஒரு லக்ஷ்ய புருஷராக விளங்குவார் என்பதில் சந்தேகமில்லை.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

க

பழமையும் புதுமையும்

பெரியவர்களேயும் கர்மவீரர்களேயும் அவரவர் வாழ்ந்த காலத்திலேயே மக்கள் தக்கபடி உணர்ந்து போற்றினுர்கள் என்று சரித்திரத்திலே கேள்விப் பட்டதில்லை. திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் வாழ்க்கையும் இந்தப் பொது நியதிக்கு விலக்கன்று. முதலியாரவர்கள் இன்று நம்மிடையே வாழ்ந்து வருகிருர். சைவ சமயம், சர்வசமய சமரசம், சமூகச் சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம், பெண்கள் முன்னேற்றம், அரசியல்துறை, தமிழ் இலக்கியம், பத்திரிகைத் தொழில் ஆகிய எத்தனேயோ துறைகளில் அவர் உழைத்திருக்கிருர். தமிழர் வாழ்விலே அவர் ஈடுபடாத துறையே இல்லை. இந்தத் துறைகளெல்லாம் அவருடைய சேவையினுலே எவ்வளவு தூரம் முன்னேறின என்று நாம் இன்று அறுதியிட்டுக் கூற முடியாது. பின்ெருரு காலத்திலே, தமிழருடைய இந்த நூற்ருண்டுச் சரித்திரத்தை எழுதுவோரே அவருடைய சேவையின் பெருமையைச் செவ்வனே உணர்ந்து சொல்ல முடியும்.

கலியாணசுந்தரனுர் அவர்கள் சோழ நாட்டுச் சைவ வேளாள மரபிலே வந்தவர். அவர் பெயர் முன்னுள்ள 'திரு' என்ற சொல், திருவாரூர் என்பதன் சுருக்கம்; இவருடைய முன்னேர் வாழ்ந்தவூர் இவ்வூராகும்; 'வி' என்பது தந்தையார் பெயரைக் குறிக்கும். வைதிக சைவ மரபிலே வந்த முதலியார். இளமையிலே சைவ நூல்களே யும் சாத்திரங்களேயும் முறையாகப் பயின்றவர். சைவ

சமயத்திலே அழுத்தமான பற்றுதலுடையவர். ஆனல், இப்பற்றுதல் மற்றச் சமயங்களை ஒதுக்குவதன்று. 'அறு வகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்......... அறிவினில் அருளால் மன்னிச் செறிவொழியாது நின்ற சிவன்' என்ற சாத்திரத்தைப் படித்த முதலியார், தம் மனத்துள் பிற மதங்கள் அனைத்தையும் தழுவிநிற்பவர்.

தமிழர் தலைவர் - சைவ சமயத்து மாபெருந் தலைவர் - ஒருவர். பொதுக் கூட்டமொன்றில் பேசியபோது, நம்மாழ்வார் சரித்திரத்தையும் பாடல்களையும் இழித்துப் பேசினர். அக் கூட்டத்திலிருந்து கேட்ட முதலியார் வைஷ்ணவர் அல்லாது போயினும், அவர் மனம் மிக்க புண்பட்டது. ஆழ்வாருடைய அருள் பாசுரங்களிலே அவர் அதிகமும் ஈடுபட்டிருந்தமையால், ஆழ்வாரை இகழ்ந் தமை அவரால் பொறுக்க முடியவில்லை. ஆழ்வார் திருவுள்ளம் சர்வ சமய சமரசம் என்பதை அவர் பாசுரங் களிலிருந்து தெளிவாக விளக்கிச் சில தினங்களில் சிறு நூலொன்றெழுதி வெளியிட்டார்.

இச் செயலிலே முதலியாருடைய பண்பாட்டின் நுட்பத்தைக் காண்கிரேம். ஆழ்வாரை ஒருவர் இகழ்ந்தமை இவருக்குப் பொறுக்கவில்லை. அதற்காக, இவரும் இகழ்ந் தவர்மீது கண்டனம் எழுத முற்படவில்லை. ஆழ்வாருடைய பெருமையை விளங்கச் செய்தலே தக்கது என்று எண்ணி ஞர். இந்த உயர்ந்த உள்ளப் பண்பாட்டின் அருமையை, கண்டனமும் மறுப்புரையும் பழிப்பும் மலிந்துள்ள இக் காலத்தில், நாம் உணர்வதும் அருமைதான்.

முதலியார் தமிழிலே சிறந்த புலமை பெற்றுக் கல்லூரி யொன்றில் தமிழாசிரியராக அமர்ந்திருந்தார். அக்காலத்தில் தான் தமிழ் நாட்டில் மக்களிடையே விடுதலை இயக்கம் பல வேறு வகையிலே தோன்றி வளர்ந்துகொண்டிருந்தது. அக்காலத்தில் அறிஞர்களாயும் ஒழுக்கத்திற் சிறந்தவர் களாயுமிருந்த ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர், ஸர். எஸ். சுப்பிர

மணிய ஐயர் முதலியோருடைய தொடர்பு இவருக்குக் கிடைத்தது. இத்தொடர்பே இவருடைய சமய வுணர்ச்சி சமரச நோக்குடையதாக அமைவதற்கும் துணைபுரிவதா யிற்று; அன்றியும் இதுவே, கல்லூரி ஆசிரியர் பதவியி லிருந்து இவரை விலகச் செய்து, நாட்டின் விடுதலைக்கு உழைக்கவேண்டும் என்ற பெரு நோக்கோடு பேச்சிலும் எழுத்திலும் ஈடுபடச் செய்தது.

இளமையிலேயே சுரேந்திரநாத் பானர்ஜியின் பழக்கம் இவருடைய உள்ளத்தில் பெருங் கிளர்ச்சியை எழுப்பிற்று. பானர்ஜியின் பேச்சு, சிங்கத்தின் கர்ஜனை போன்றது; கேட்டோருக்கு மிக்க ஆத்திரத்தை யுண்டுபண்ணும். அவர் சென்னைக்கு வந்தபோது, கூட்டங்களிலே பணி செய் வதற்காகத் திரண்டெழுந்த தொண்டர் (வாலண்டியர்) படையிலே 'மாணவர் சேரக் கூடாது' என்று கல்வி யதிகாரியின் கட்டளை பிறந்தது. கலியாணசுந்தரனார் அப் போது பாடசாலையை விட்டு விலகிய காலம். ஆகவே, எவ் விதத் தொந்தரவும் நேராமல் தொண்டர் படையில் சேர்ந்து கொண்டார். ஆனால், ஒரு நிபந்தனையின்பேரில்: அதாவது, 'பானர்ஜிக்கு அருகிலிருந்து தொண்டுபுரியும் வேலையைத் தமக்கே தரவேண்டும்' என்று கேட்டு, அப்படியே தரவும் பெற்றார். இளைஞரான கலியாணசுந்தரனாருக்கு அப்போது பானர்ஜியைப் பார்ப்பதிலும் அவர் அருகிலிருப்பதிலும் அவர் பேசக் கேட்பதிலும் எவ்வளவோ மகிழ்ச்சி. தனிமை யிலும் பொதுமேடையிலும் பானர்ஜி பேசிய பேச்சுக்கள் இவருடைய மனத்திலே ஓர் எழுச்சியைத் தந்தன. அவருடைய சொற்கள் ஒவ்வொன்றும் அம்புபோன்ற வேகமும் கூர்மையும் பெற்று நெஞ்சில் தைக்கும்: ஒலி பெருக்கிகள் உதிக்காத காலம். கடற்கரையில் உரத்த குரலிலே அவர் பேசிய பேச்சானது, கடல்மடை திறந்த வெள்ளம்போல அலை அலையாகத் திரண்டு வந்து மோதும்; எதிரில் கடற்கரைச் சாலையில் இருக்கும் இராஜதானிக்

கல்லூரிக் கட்டிடத்தில் அவ்வொலியலைகள் வந்து மோதி மீண்டு வந்து எதிரொலி செய்யும். பந்தரிலோ கொட்டகை யிலோ அவர் பேசினால், பேச்சின் வேகம் மேற்கூரையைத் தூக்குவதுபோலிருக்கும்.

இவ்வளவிலும் இளைஞர் கலியாணசுந்தரனார் ஈடுபட்டார். மக்களைத் தட்டி எழுப்ப, பேச்சிலே ஆவேசமும் ஆத்திரமும் வேண்டும் என்பதை யுணர்ந்தார். அவ்வாறே பேசவும் பழகினார். இயல்பாகவே அமைந்த நாவன்மை, நுட்பமான அறிவு, ஆழ்ந்த தமிழ்ப் புலமை, உண்மை யுணர்ச்சி - இவை யாவும் அவருக்குத் துணைபுரிந்தன.

அடிமை நாட்டுக்கு வேண்டுவது விடுதலை. விடுதலைக்கு வேண்டுவது அரசியல் போர். ஆகவே சிந்தனையில் தோய்ந்த இவர் வாழ்க்கை அரசியலில் போகாமல் என்ன செய்யும்?

சைவத்திலும் அப்பர் சுவாமிகளுடைய அருமைத் தேவாரத்திலும் தோய்ந்திருந்த முதலியாருக்கு, தியாக வுணர்ச்சி இயல்பாக அமைந்ததில் வியப்பொன்று மில்லை. அரசியல் முன்னேற்றத்துக்காகச் சேவை வேண்டும், எந்தத் தியாகமும் அதன் பொருட்டுச் செய்தல் தகும் என்ற உணர்ச்சி அவருக்கு ஏற்படக் காரணமாயிருந்தது திலகருடைய பழக்கமாகும்.

திலகர் ஒரு முறை சென்னை வந்திருந்தபோது அவரோடு இவர் நெருங்கிப் பழக நேர்ந்தது. அவர் தமக்கென்று எந்தச் சுகத்தையும் தேடாதவர். மணிக்கணக்காக உணவின்றியும் உழைக்கத் தயங்காதவர். ஒரு சமயம் காலையில் ஐந்து மணிக்கு எழுந்தவர், மாலை மூன்று மணி வரையில் சாப்பிடாமலே பேசவும் நடக்கவும் நேர்ந்ததாம். அன்று அவர் அதிகாலையிலே இரண்டிடங்களில் கூட்டம் நடத்தவேண்டியிருந்தது. குஜராத்தியர் கூட்டமொன்றையும், மராத்தியர் கூட்டமொன்றையும் நடத்தி முடித்துக் கொண்டு, பத்து மணிக்குமேல், காலை யுணவு கொள்ள வந்து உட்கார்ந்தாராம். கைகால் அலம்பிக்கொண்டு வந்த

போது, பூரியும் குழம்பும் தயாராயிருந்தன. ஒரு பூரியை எடுத்து ஒடித்துக் குழம்பில் தோய்க்கப் போனார். அப்போது, இருநூறு மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமையாசிரியருமாக ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து அவரைப் பார்க்க வந்து விட்டார்கள். அப்படியே பூரியையும் குழம்பையும் உதறிவிட்டு எழுந்து வெளியே வந்துவிட்டார் திலகர். ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் ஒரு மணி நேரம் பேசி முடித்தவுடனே, வேறு பலர் பார்க்க வந்தார்கள், வேறு பல அலுவல்கள் காத்துக்கொண்டிருந்தன. அப்படியே புறப்பட்டுவிட்டார். திரும்பி வந்தபோது மணி மூன்று. அதன் பிறகுதான் அவருக்கு அன்று முதல் வேளை உணவு!

இப்படிப்பட்ட தன்னை மறந்த சேவை முதலியாரின் உள்ளத்தில் நன்றாய்ப் பதிந்தது.

பிற்காலத்தில் இவர் அன்னி பெசன்ட் அம்மையாரோடு நெருங்கிப் பழக நேர்ந்தது. வெள்ளைக்காரப் பெண்மணியொருவர் இந் நாட்டிலே வந்திருந்துகொண்டு, நம் சமய நுட்பங்களைக் கற்று நமது நாகரிகத்தின் சிறப்பைப் போற்றியதையும், இந் நாட்டு முன்னேற்றத்துக்காகவும் விடுதலைக்காகவும் உண்மையாக உழைத்ததையும் காண அவருடைய உள்ளம் நெகிழ்ந்துருகிற்று. அம்மையாருடைய ஒப்பற்ற பேச்சுத் திறமையிலும் ஈடுபட்டு, அவரைப்போலவே உருக்கத்துடனும் ஆவேசத்துடனும் தாமும் பேச வேண்டுமென்று ஆசை கொண்டார்.

அக்கால அரசியல் உலகத்தில் வழங்கிய மொழி ஆங்கில மொழி. தமிழில் பேசுவது அநாகரிகம், பேசவும் முடியாது என்று கருதிய காலம். அந்தக் காலத்திலே அரசியல் உலகில் புகுந்து, தமிழ் நாடெங்கும், நகரங்களிலும் கிராமங்களிலும், பிரசங்க மேடைகள்தோறும் நின்றார் கலியாணசுந்தரனார். அதுவரையில், யாருக்குமே விளங்காத மொழியில் நடந்த அரசியல் பிரசங்கங்களைக் கேட்டுக்

கொண்டு உட்கார்ந்திருப்பதே மரியாதை, இதுவே தேசத் தொண்டு என்று கருதி வந்த பாமரத் தமிழ் மக்கள், முதலியாருடைய தமிழ்ப் பேச்சைக் கேட்டபோது, சொல்லமுடியாத ஆச்சரியமும், என்றுமில்லாத உள்ளக் கிளர்ச்சியும் பெற்றார்கள். தமிழிலும் பேசமுடியும், கொச்சைப் பேச்சாக இல்லாமல் அழகிய நடையிலே, யாவரையும் எழுப்பக் கூடிய முறையிலே பேசமுடியும் என்பதைக் கண்டார்கள். இதயத்திலே போய்ப் பாய்ந்து அங்கு ஓர் ஆத்திரத்தையும் வேகத்தையும் ஊட்டவல்லது தமிழ்ப் பேச்சு என்பதைத் தமிழர் முதன் முதல் உணரத் தலைப்பட்டார்கள்.

கல்லூரிப் பதவியை நீத்து வெளிவந்தவுடன் இவரை முதன் முதலாக அழைத்துப் பொது அரசியல் மேடையில் பேசக் கேட்டுக்கொண்டவர் ராஜாஜி; பேச்சு நிகழ்ந்தது சேலத்தில். இவர் தமிழிலே பேசினமையால், விளங்கும் என்ற தைரியத்தோடு, ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வந்து ஊர்தோறும் திரளலானார்கள். அக்காலத்திலே ஒலி பெருக்கிகள் கிடையா. ஒரே நாளில் மூன்று நான்கு இடங்களில் பேசவேண்டியிருக்கும். ஒவ்வொருபேச்சும் ஒரு மணி, இரண்டு மணிநேரம்; ஒவ்வோர் இடத்திலும் நாலாயிரம், ஆறுயிரம் என்று மக்கள் கூடியிருப்பார்கள். காந்தியடிகளைத் தரிசிக்க நம்மக்கள் எப்படிப் பல மைல்தூரம் நடந்து வந்து கடைவீதியிலும், ரயிலடியிலும் மணிக்கணக்காக வெயிலிலும், மழையிலும் காத்திருப்பார்களோ, அப்படியே அந்தக் காலத்தில் கலியாணசுந்தர முதலியார் பேச்சைக் கேட்க மக்கள் வந்து கூடுவார்கள்.

பெருங் கூட்டத்தினிடையிலே ஓர் ஓரத்திலமைந்த மேடையில் இவர் வந்து நிற்பார். சாதாரணமாகத் தமிழ் நாட்டில் மாலை ஐந்து மணிக்குப் பிரசங்கம் என்று சொன்னால், ஆறரை மணிக்காவது கூட்டம் தொடங்கும் என்ற நிச்சயத்தோடு நாம் போவோம். தொடங்க ஏழு மணியானாலும் நமக்கு ஏமாற்றம் ஏற்படாது. இன்று

வரையிலும் நாம், குறித்த காலப்படி ஒரு காரியத்தைச் செய்கிற முறை இது. ஆனால் இதை முதலியாரிடம் என்றுமே எதிர்பார்க்க முடியாது. ஐந்து மணி யென்றால், ஐந்து மணிக்கே அவர் பேசுகின்ற கூட்டங்கள் தொடங்கி விடும். உள்ளத்திலே உறுதியும் உண்மையொளியும் நிறைந்து, ஆண்டவன் அருளிய குரல் வலிமையும் பெற்றிருந்தமையால், அவருடைய பேச்சு எவ்வளவு தொலைவி லிருந்தோர்க்கும் மிக நன்றாய்க் கேட்டது. கேட்டோர் தங்கள் இதயத்தோடு அவர் இதயம் பேசியதாக உணர்ந்தார்கள். ஆகவே, கேட்டோர் இதயத்திலே தேசபக்தி, சுதந்திரதாகம் என்ற வித்துக்கள் ஊன்றப்பட்டன என்பதில் ஐயமுண்டா ?

இவர் எங்கு எதைப் பற்றிப் பேசினாலும், முடிவில் தாம் பேசிய பொருள் அனைத்தும் தொகுத்துக் கூறும் திறனை நேரில் கேட்டோரே உணர முடியும். இவர் அரை மணி நேரம் பேசியிருக்கலாம். பேசிய விஷயங்கள் இன்னின்னவை என்று முறையாக, பேசிய வரிசை பிறழாமல், ஒன்றுவிடாமல், தொகுத்துச் சொல்லுகின்ற ஆற்றல் இன்றுவரை வேறெவருக்கும் கைவராத ஓர் அற்புதம்.

பேச்சு முழுவதையும் நேர்முகமாக உள்ளம் ஊன்றிக் கேட்டு முடிவாய்க் கூறும் தொகுப்புரையையும் கேட்கிற தமிழன், 'இன்று இன்ன பொருளைப் பற்றிப் பேசினார். இன்ன விஷயங்களைச் சொன்னார்' என்ற திட்டமான நினைவோடு கூட்டத்திலிருந்து திரும்பிச் செல்வான்.

தொடக்கத்திலே கலியாணசுந்தரனார் ஆத்திரமும் வேகமும் கொண்டு பேசி, கேட்போருக்கு ஆத்திரத்தையும் வெறியையும் ஊட்டுவதையே முக்கியமாகக் கொண்டிருந்தார். பிற்காலத்தில் அவருக்கு இந்த நோக்கம் மாறிவிட்டது. திலகர் காலத்துக்குப்பின் இந்திய அரசியலிலே, காந்தியடிகளே ஒப்பற்ற தலைவராக விளங்கலானார். அவருடைய நெறியோ சாத்துவிக நெறி, அஹிம்ஸை நெறி. 'ஹிம்சை

என்பது செயலில் மட்டுமன்று, சொல்லிலுமுண்டு. பிறருக்கு வெறியூட்டி, ஹிம்சைகொண்ட செயல்களைப் புரியுமாறு தூண்டுகிற பேச்சும் ஹிம்சையே யாகும்' என்று அவர் ஒருமுறை பேசினார். இதைக் கேட்டார் முதலியார். இவருடைய உள்ளம் காந்தியத்தில் ஆழமாகத் தோய்ந்திருந்தது. அன்றுமுதல், முன்போல ஆத்திர மூட்டும் முறையில் பேசுவதில் பயனில்லை, அது தவறு என்று கண்டு அதை விட்டுவிட்டார்.

தமிழ் நாட்டு அரசியலிலே இன்றும் முன்னணியில் நிற்பவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். தமிழ்ப் பேச்சிலும் வாதத்திலும் பொருத்தமான அழகிய உவமை களைக் கையாளுவதிலும் ஒப்பற்ற திறமை பெற்றவர். ஆயினும், இவருக்குத் தூய தமிழ்ப்பேச்சுப் பழக்கமில்லாத காலமொன்று இருந்தது. அன்று அரசியல் வானில் பெருஞ்சுடராக விளங்கியவர் கலியாணசுந்தரனார். அப் போது சென்னைக் காங்கிரஸின் நிர்வாகம் ராஜாஜி தலைமை யிலேயே நடந்து வந்தது; ஆனால் நடவடிக்கைகள் யாவும் ஆங்கில மொழியில்தான் நடந்தன.

நடவடிக்கைகளைத் தமிழிலே நடத்தலாம் என்று நடத்திக் காட்டியவர் கலியாணசுந்தரனார். கூட்டங்களிலே அரசியற் கருத்துக்களை எடுத்து விளக்கிச் சொல்லத் தமிழிலே சொற்கள் இல்லை என்பதே அக்காலத்தில் பல ருடைய கருத்து. இவர் நிர்வாகக் கூட்டங்களிலே இருந்து கொண்டு, ஒவ்வொருவரையும் ஆங்கிலத்திலே சொல்லச் செய்து, தாம் அதை எளிய தமிழிலே எல்லோருக்கும் விளங்கும்படி தெளிவாகச் சொல்லிக்காட்டினார்; தமிழின் மூலமாகவே, வேகத்தையும் ஆத்திரத்தையும் ஊட்டலாம் என்பதையும் காட்டினார். இதன் மூலம் ராஜாஜிக்குத் தமிழை அறிமுகம் செய்துவைத்தார்; தமிழருக்கும் ராஜாஜியைப் புதிதாக அறிமுகம் செய்து வைத்தார்.

அரசியலிலே இவர் ஈடுபட்டு இருந்த காரணமாக, கிலைத்த பயன் ஒன்று உண்டாயிற்று. அதுவே, தமிழ் நாட்டு அரசியல் வாழ்க்கையிலிருந்து ஆங்கிலம் மறைக் தோடியதாகும். இவருடைய தமிழ்ப் பேச்சொன்றுதான், பேச்சுக்கே ஆங்கிலம் கூடாது என்று சொல்லுகின்ற முறையிலே, ஆங்கிலத்தைப் பிரசங்க மேடையிலிருந்து பின்னர் வெருட்டிவிட்டது.

கலியாணசுந்தரனுர் பேசிய தமிழானது செம்மையான வடிவம் பெற்ற திருத்தமான தமிழ் நடை ; சொல்லமைப்பு, பொருளமைதி, வினைமுடிபு, கருத்தின் தொடர்ச்சி முதலியன யாவும் அழகுற அமையப் பெற்ற நடை. இவருடைய எழுத்திலும் இதே நடையைக் கையாண்டார். இவருடைய பேச்சும் எழுத்தும் ஒன்றே. சொற்பொருளின் நுட்பத்தை உய்த்துணர்ந்து இவர் சொற்களை ஆண்டார்.

பிற்காலத்திலே பலர் இவருடைய நடையைப் பின் பற்ற முயன்றனர். ஆனல், அந்நடை இன்றும் மற்ருெருவரால் பின்பற்ற இயலாத நிலையில்தானிருக்கிறது. அந்த நடையினுள், அவருடைய உள்ளப் பண்பும் உணர்ச்சியும் தோய்ந்திருக்கின்றன. இவற்றைப் பெற்ருல்தானே அந்த நடை கைவரும் ?

இந்தியாவிலே முதன் முதல் தோன்றிய தொழிலாளர் சங்கமாகிய சென்னைத் தொழிலாளர் சங்கம் தோன்றிய காலம்தொட்டு இன்றுவரை அதில் இவர் தொடர்புடையவரா யிருந்துவருகிருர். நெடுங்காலம் தலைவராயுமிருந்தார். இவர் உள்ளத்திலே தொழிலாளரைக் குறித்த எண்ணம் எழுவதற்குக் காரணமாயிருந்தவர், இங்கிலாந்தின் பார்லிமெண்ட் தொழிற்கட்சித் தலைவரான கீர் ஹார்டி என்பவர். அவர் ஒருமுறை சென்னைக்கு வந்து சென்ருர். அப்போது கலியாணசுந்தரனுர் அவரைப் பார்க்கவும் அவர் வாழ்க்கையை ஆராயவும் நேர்ந்தது. அவர் இந்தியாவை நீங்கித்

தம் தாய்நாடு மீண்டவுடனே, ‘ இந்தியா ’ என்ற ஒரு நூல் எழுதினார். “அடக்குமுறையினாலே......பிரிட்டிஷ் அரசின் மகுடத்தில் ஒளிமிக்க மணியாக விளங்கும் இந்திய நாட்டை நாம் முடிவில் இழந்துவிடவும் நேரும் ” என்று அப்புத்தகத்தின் கடைசி வாக்கியத்தில் தம் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தினார். அவர் அக்காலத்தில் முதலி யாரின் உள்ளத்தில் தொழிலாளர் இயக்கத்தின் வித்தை ஊன்றினார் என்பதில் வியப்பில்லை.

தமிழ் நாட்டிலே இன்றைய பெண்ணுலகின் முன் னேற்றத்துக்குக் காரணமாயிருந்தவர்களுள் கலியாண சுந்தரனார் மிகவும் முக்கியமானவர். பெண்களுக்கு வாழ்க்கையிலே சிறந்த நிலையை அளிக்கவேண்டும் என்று ஆடவருக்கு உணர்த்தவே, ‘ பெண்ணின் பெருமை ’ என்றொரு நூல் எழுதினார் : பெண்மை - தாய்மை - இறைமை என்ற மூன்று சொற்கள் இன்று தமிழ் நாட்டில் புதிய பொருளும் வேகமும் பெற்று உலாவு கின்றன. பெண்மையே தாய்மை, தாய்மையே இறைமை என்று பெண்ணியல்பை இறைவனிடத்திலே கொண்டு போய் இவர் முடிப்பதுண்டு. எல்லோரிடத்திலும் ஆண்மை யும் பெண்மையும் கலந்து பொருந்தியுள்ளன ; ஆடவ னிடத்திலே பெண்மை அருகி, ஆண்மை யொன்றே பெருகியமையால் உலகிலே இன்று போரும் பூசலும் மலிந் தன; கருணைக்கு அடையாளமான பெண்மை ஆடவனிடம் சிறிது ஓங்கி நிற்குமானால், உலகெங்கும் அன்பும் அருளும் நிலவும் ; பூசலுக்கு இடமிராது என்பது இவர் கருத்து.

அரசியற் பேச்சுக்களைப் போலவே இவருடைய இலக் கியப் பேச்சுக்களும் கவர்ச்சியுடையனவாயும் புதிய புதிய உண்மைகளை யுணர்த்துவனவாயும் இருக்கும். தொல்காப் பியம் போன்ற நூல்களுக்கு இவர் கூறும் விரிவுரை நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

என்ற சூத்திரத்துக்கு விரிவுரை கூறி, இக்காலத்துப் பேசப் பெறும் சமதர்மமே அகத்திணையின் முடிவாகத் தொல்காப் பியர் கொண்டுள்ளார் என்று இவர் ஒரு நாள் சிந்தாதிரிப் பேட்டையில் உரைத்ததைக் கேட்டோர் மறக்கவியலாது ; காதலன் காதலி என்ற இருவருக்குள் மட்டும் அமைந் திருந்த அன்பானது விரிந்து, முதலிலே அவர்தம் மக்களை யுள்ளடக்கி வளர்கிறது ; இறுதியிலே, சுற்றத்தையும் உலகத்தையுமே தழுவி, சமதர்ம நோக்காகப் பரிணமிக் கிறது என்பதே இவர் விரிவுரையின் பொருள்.

இவ்விதமாக, இவருடைய பேச்சின் திறத்தையும் எழுத்தின் ஆற்றலையும் எவ்வளவோ விரிவாகச் சொல்ல லாம். ஆனால், இவை யாவும் இவருடைய உள்ளத்தைச் சொன்னவையாகா. இவருடைய உள்ளம் எளிய பற்றற்ற தூய உள்ளம். தோற்றமும் எளிய தோற்றம். நகர வாழ்வையும் நாகரிகத்தின் ஆடம்பரத்தையும் அவருடைய மனம் வெறுக்கிறது ; இயற்கையையும் அதன் அழகையும் அதில் குடிகொண்டுள்ள இறைவன் திருவுருவத்தையும் எந்நேரமும் நாடுகிறது. ஆனால் நாட்டுக்கும், மக்களுக்கும் இயன்ற தொண்டு செய்யவேண்டுமென்ற எண்ணத்தால் இவர் வாழ்க்கையைத் துறந்துவிடவில்லை. உள்ளம் மட்டும் துறவியின் உள்ளந்தான்.

இவர் வீரரல்லர், கோழை என்றும் சிலர் சொல்லு கிறார்கள். ஏன் ? இவர் அரசியலில் இன்று முன்னணியில் நிற்கவில்லையாம். அதனால். உண்மைதான். இவர் முன் னணியில் நில்லாது அஞ்சி ஓடுகிறார். அரசியல் வாழ்வு பொய்யும் ஏமாற்றும் நிறைந்தது. இதைவிட்டு இவர் விலகி ஓடுவது உண்மை. இவர் கோழைதான். யார் கோழை

யல்லர்? காந்தியடிகள் கோழையல்லரா? பொய்ம்மையையும் மனமாசையும் கண்டு அவர் பதைத்து நடுங்கவில்லையா? புத்தர்பிரான் துன்பத்தையும் மூப்பையும் பிணியையும் கண்டு அஞ்சவில்லையா? அவற்றைவிட்டு ஓடவில்லையா? அவரும் கோழைதானே? இவர்கள் கோழைகளானல் கலியாணசுந்தரனாரும் கோழைதான். அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் அல்லவா?

அன்பே உலகை வாழ்விப்பது, நிலைநிறுத்தவல்லது, என்ற உண்மையை இவர் உணர்ந்தவர். அவ்வுணர்ச்சி காரணமாகவே இவர் காந்தியத்தில் பற்றுக்கொண்டார். அதை விளக்குவதே "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற புத்தகம். இவருக்கு அஹிம்சையிலே அசைக்கமுடியாத பற்றுதல். அஹிம்சா வீரமே வீரமென்பது இவர் கருத்து. இவருடைய சொற்களைக் கூறிமுடிக்கிறேன்.

"அஹிம்சா தர்மம் பல பொருளில் வழங்கப்படுவது; அஹிம்சையைக் கோழையின்பாற்படுத்திப் பேசுவோரும் உளர். அவர் அஹிம்சையின் தத்துவத்தை உணராதவர். அஹிம்சா தர்மத்தில் விளைவதே வீரம் என்பது. அஹிம்சா வீரமே வீரம்; மற்றையது வீரமாகாது."

ஆரம் கண்டிகை,
    ஆடையும் கந்தையே,
பாரம் ஈசன்
    பணிஅலது ஒன்றிலார்;
ஈர அன்பினர்,
    யாதும் குறைவிலார்;
வீரம் என்னல்
    விளம்பும் தகையதோ?

—சேக்கிழார்

உ

குழந்தை யுள்ளம்

ஞானிகளும் கலைஞர்களும் குழந்தை யுள்ளத்திலே பெரிதும் ஈடுபடுகிறார்கள். மக்கள் வாழ்விலே ஓரளவாவது கடவுள் தன்மை பெரலியும் பருவம் இருக்குமானால், அது குழந்தைப் பருவம்தான் என்கிறார்கள். பழந்தமிழ்ப் புலவரான தொடுத்தலை விழுத்தண்டினார் முதல் இக்காலத்துப் பெருங் கவிஞரான ரவீந்திரநாத தாகூர் வரையில், குழந்தை நிலையைப் போற்றாதார் யாரும் இலர்.

இறைவனுடைய அம்சம் சிறிதளவு தன்னிடம் விளங்கப்பெற்ற ஆன்மா, இந்த உலகிலே தன் வாழ்வைத் தொடங்கும்போது, அவ்வாழ்விலே முதற் பருவமாயுள்ளது குழந்தைப் பருவம். உயிரானது மனிதன் படைத்ததன்று, கடவுள் தந்தது ; எனவே அதனிடம் கடவுள் அம்சம் சிறிதேனும் பொருந்தியிருக்கிறது. உடலெடுக்குமுன் அது கடவுளோடு தொடர்பு பூண்டிருக்கிறது. மனிதன் தந்த உடலைப்பெற்ற உடனே, அவ்வுயிருக்கு மனித இயல்புகள் பொருந்தத் தொடங்கிவிடுகின்றன ; கடவுள் தொடர்பு அறுந்துவிடுகிறது. வாழ்க்கையில் நேரும் இன்ப துன்பங்களில் ஈடுபட்ட மனிதனுக்கு, இயற்கையாயமைந்த தெய்வ ஒளி குன்றுகிறது. இன்பம் அனுபவித்து மகிழ்பவன், துன்பம் கண்டு துயருறுகிறான். இது, அவனுள்ளத்திலே தீக்குணங்களை யெல்லாம் தோற்றுவிக்கிறது. அச்சம், கோபம், பொறாமை போன்றன அவனோடு எந்நேரம் உறவு பூண்டு வளர்கின்றன. அவன் பெற்று வளர்த்துப் பயிற்றுகின்ற குழந்தைக்கும் இவ்வியல்புகள் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பொருந்தத் தொடங்குகின்றன. அக்குழந்தையின் உயிரானது உடலெடுக்குமுன் கடவுளோடு பூண்டிருந்த தொடர்பின் பயனாக, அதன் உள்ளத்தில் நிலவியிருந்த சாந்

தம், அழகு, ஆனந்தம் இவை யாவும், குழந்தை வளர வளர, மறைகின்றன.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தே என்பது பழமொழி. தூய எளிய உள்ளம் குழந்தையினிடத்திலே அமைந்திருப்பதை இது நன்றாக உணர்த்துகிறது. 'பால் வடிகின்ற முகம்' என்று களங்கமற்ற குழந்தையின் முகத்தை வருணிக்கிறோம். பொருளென்ன ? குழந்தையின் இதயத்திலே களங்கமேதும் இல்லை ; ஆலகாலவிடம் அங்கு இல்லை. பாற்கடலில் திரண்டெழும் அமுதத்தை யொத்ததோர் எல்லையற்ற இன்பமே அங்கு நிறைந்திருக்கிறது. அவ்வமுதம் அதன் முகத்திலும் தேங்கிக் குழைகிறது. காண்போர் உள்ளத்திலும் அவ்வமுதம் ஊறி எழச் செய்கிறது ; காணும் நேரமட்டிலாவது அவரிதயத்துள்ள ஆலகாலத்தை வலியற்றதாக்கி, அமுதத்தை யூட்டி, தெய்வ நலங் காட்டுகிறது.

குழந்தையிடத்துத் தெய்வ நலத்தைப் பார்ப்பது இங்ஙனமிருக்க, நாம் தெய்வத்தையே குழந்தையாகப் பார்க்க ஆசைகொள்ளுகிறோம். விரிந்த உலகங்கள் யாவும் தன்னுள் அடக்கிக் காக்கும் பெரிய மாயவனாகிய திருமாலைப் பச்சிளங் குழந்தையாகக் கொண்டாடுவதில் தான் நமக்கு இன்பம். நாடெங்கும், நம் மக்கள் ஆண் பெண் இருபாலார்க்கும், குழந்தைக் கண்ணனைக் கொண்டாடுவதிலும் அவனுக்கு விழா வெடுப்பதிலும் உள்ள ஈடுபாடு இவ்வளவென்று சொல்லிமுடியாது. குழந்தை முருகனை நாம் கொண்டாடும் முறையும் இப்படியே. மனவுலகத்திலே இத் தெய்வக் குழவிகளை இடுப்பிலும் தோளிலும் தலையிலும் தூக்கிவைத்துக்கொண்டு கொஞ்சாதார் இலர்.

இக் குழந்தை நிலையையே ஞானிகள் நாடுகிறார்கள். கிறிஸ்துநாதரின் உபதேசம் முழுதும் இதுவேதான். மக்கள் மனம் மாறவேண்டும் என்பது அவர் கூறும் அறிவுரை. வளர்ச்சி காரணமாக, குழந்தைப் பருவம் கடந்து, காளைப்

பருவம் பெற்று அதுவும் கடந்து, முதுமையடைவது மக்க ளியற்கை என்று நாம் கருதுகிறும். ஆனல், கிறிஸ்து நாதர், மனிதன் மனந்திரும்பிக் குழந்தைபோலாக வேண் டும், குழந்தை நிலையை யடைந்தால்தான் வானுலகு அவ னுக்கு வழி திறக்கும் என்று அறிவுறுத்துகிருர். நம் நாட்டு அடியார்களும் இதையே சொல்கிருர்கள். உலக அறிவை யெல்லாம் கடந்து, உண்மையறிவாகிய இறையறிவு தன் னகத்தே விளங்கப் பெற்றவன் குழந்தைபோலிருக்கிருன் என்கிருர்கள். குழந்தைக்குப் பற்றில்லே; விருப்பு வெறுப்பு இருந்தாலல்லவோ பற்றுதல் பிறக்கும்? இவையற்ற நிலையிலே, ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்கவே நோக்கு கின்றது குழந்தை:

சேய்போல் இருப்பர்கண் டீர்மெய்ம்மை
ஞானந் தெளிந்தவரே

என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு.

இத்தகைய அழகும் சிறப்பும் கொண்ட குழந்தை நிலையிலே தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் கலியாண சுந்தரனர். மக்கள் இதயத்திலே இந்த நிலே நின்று நிலவ வேண்டும் என்பது அவருடைய பேரவா. உலகத்திலே நாக ரிகம் முத்திறப்பட்டது. முதுமை நாகரிகம், காளை நாகரிகம், குழந்தை நாகரிகம் என. முதுமை நாகரிகம், அறியாமையை அடிப்படையாகக் கொண்டது; இது பண்டை நாளிலே மறைந்தொழிந்தது. அடுத்ததான காளை நாகரிகம் கொடு மையில் விளைந்தது; இதுவே இன்று உலகெங்கும் பரவி நிற்பது. இதுவும் அறவே ஒழிந்து, குழந்தை நாகரிகம் மக்களிடையே வழங்கவேண்டும் என்று அவர் சொல்கிருர். மக்களுடைய பருவம், குழந்தை காளை முதுமை என்ற முறையிலே விரிந்தபோதிலும், அவர்தம் உள்ளப் பண்பு, முதுமை காளை எனச் சுருங்கி, கிறிஸ்துநாதர் போற்றிய குழந்தை நிலையிலே வந்து அமைதல் வேண்டும். குழந்தை

நாகரிகம், "இயற்கை வாழ்க்கையுடையது; அமைதி நாட்ட முடையது; கலையை வளர்ப்பது; எல்லோரும் ஓருயிர் என்னும் உண்மையை ஓம்புவது; எங்கணும் அழகுக் காட்சியை வழங்குவது" என்கிறார்.

ஆம்; கலையை வளர்ப்பது இக் குழந்தை யுள்ளந்தான். குழந்தையுள்ளமில்லாது, சீற்றமும் அழுக்காறும் துயரும் அச்சமும் குடிகொண்ட நெஞ்சிலே என்ன எண்ணங்கள் தோன்றும்? இது எந்தக் கலையை வளர்க்கும்? கலையை அழிக்க இந்நெஞ்சு முன்நிற்குமேயன்றி, ஆக்குவதற்கு இது முன்வராது, இதனிடம் ஆற்றலும் இராது.

சீரிய உள்ளப் பண்பும் உண்மையும் இருக்குமானல், ஒவ்வொருவனும் தான் எதை விரும்புகிருனே அதுவாகவே ஆகிருன். கலியாண சுந்தரனர் குழந்தை யுள்ளத்தை இப்படியெல்லாம் போற்றியதனலே, அவ்வுள்ளம் அவரிடம் நன்கு அமைந்துவிட்டது. குழந்தை யுள்ளத்திலே அரிய கலைஞனுக்கு வாய்க்காததொரு மனேதர்மம் அமைந்து கிடக்கிறது. இதன் துணைகொண்டு, அவ்வுள்ளம், தான் விரும்பிய எந்தப் பொருளையும் மனவுலகத்திலே படைத்துக் கொள்கிறது. ஒரு சிறு குச்சியைக் குழந்தையென்று கொண்டு அதைத் தாலாட்டிச் சீராட்டி மகிழ்கிறது. குச்சியொன்று தான் குச்சி; மற்றத் தாலாட்டும் சீராட்டும், இவற்ருல் அக் குழந்தையின் உள்ளத்தில் ஏற்படும் இன்பமும், உண்மை யானவை. ஆனல் பொதுவாக, மக்கள் குச்சியைக் குச்சி யாகத்தான் காண்பார்கள். அதிலே குழந்தையைக் காணவோ, கண்டு இன்புறவோ, அவர்கள் உள்ளம் இடம் கொடுக்காது. இயற்கையிலே காண்பவை யாவும் இறைவன் வடிவம் என்று மக்கள் கற்றும் கேட்டும் அறிவார்கள். ஆனல், அப்படி இருக்கக் காணவல்ல கண்ணும் உள்ளமும் அவர்களுக்கு அமையவில்லை. அப்படிக் காணும் காட்சி அவர்களுக்கு வாய்க்குமானல், அவர்களே உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைப் பருகிய

செல்வர்; அவர்கள் உள்ளமே கலையுள்ளம், குழந்தை யுள்ளம்.

* * * *

முதுமைப் பருவம் அடைந்த அப்பர் சுவாமிகள் தமது உள்ளத்திலேயே எந்நேரமும் இறைவனைக் கண்டு கண்டு இன்புறும் பெருநிலை பெற்றவர். இறைவனுடைய அருளை இவ்வாறு பூரணமாகப் பெற்றிருந்தமையினாலே, முதுமைப் பருவத்திலும் அவர்தம் கனிந்த உள்ளம் இளங் குழந்தை யின் உள்ளமாக அமைந்துவிட்டது. குழந்தை உள்ளத்திலே நிறைந்து நிலவுகின்ற அன்புகொண்டு அவர் பிரபஞ்சமனைத் தையும் பார்க்கிறார். உலகிலுள்ள ஆண் பெண் யாவற்றை யும் பார்க்கும்போது, அவை இறைவனுடைய பேராற்றலை யும் பெருங் கருணையையும் நினைவூட்டும் சிவன்-சக்தி என்ற வடிவமாகவே அவருக்குக் காட்சி யளிக்கின்றன:

ஏடுமதிக்கண்ணி யானை
  ஏந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடும் மலையும்
  கைதொழு தாடா வருவேன்,
ஆடல் அமர்ந்துறைகின்ற
  ஐயா றடைகின்ற போது—
பேடை மயிலொடுங் கூடிப்
  பிணைந்து வருவன கண்டேன்;
கண்டேன் அவர்திருப் பாதம்
  கண்டறி யாதன கண்டேன்.

உண்மையான அன்பு நிறைந்த உள்ளம், கலையுணர்ச்சி ததும்பி நிற்கும் உள்ளம்-இதுவே குழந்தை யுள்ளம்; இவ் வுள்ளத்திலே, பிரபஞ்ச முழுதுமே, கண்டறியாததோர் இன்பக் காட்சியாகத் தோற்றுகிறது.

* * * *

ஓர் இளம் பெண், கண்ணனைக் கண்டாள். அன்பு இதயத்திலே ஊற்றெடுத்துப் பெருகிவிட்டது. காதல் கொண்டாள். வெளியிலே எங்கு எதைக் கண்டாலும்

அவனாகவே காண்கிறாள். இதை அவளுடைய தாயின் கூற்றாக நம்மாழ்வார் கூறுகிறார்.

"கடலைக் கண்டால், கை கூப்பி, 'என் கண்ணன் துயிலும் கடல்' என்கிறாள். சூரியனுடைய சிவந்த ஒளியைக் கண்டவுடனே, 'கண்ணனுடைய திருவுருவத்தின் பொலிவு' என்கிறாள். இப்படி நைந்து கண்ணீர் பெருக்கும் என் மகள் செயல் எனக்கு வியப்பைத் தருகிறது :"

பெய்வளைக் கைகளைக் கூப்பிப்
பிரான்கிடக் கும்கடல் என்னும் ;
செய்யதோர் ஞாயிற்றைக் காட்டிச்
சிதரன் மூர்த்திஈ தென்னும் ;
நையும் கண்ணீர் மல்க நின்று
நாரணன் என்னும் ; அன்னே ! என்
தெய்வ உருவிற் சிறுமான்
செய்கின்ற தொன்றறி யேனே.

இத்தகைய கலைப் பித்தமும் குழந்தையுள்ளமும் இவரிடம் பொருந்தியிருக்கின்றன. கோயிலைப் பார்க்கிறார், அங்கெழுந்தருளியுள்ள இறைவன் திருமேனியை வழிபடுகிறார். ஆனால், இவ்வழிபாடுமட்டும் அவருடைய குழந்தையுள்ளத்துக்குப் போதவில்லை. இறைவன் கோயில்கள் வேறு உள்ளனவற்றை நாடுகிறார். அக்கோயில்கள் யாவை ?

ஆற்றிலே குளிர்ந்த நீர் ஓடிக் கரும்புக்குப் பாய்ந்து நாட்டை வளப்படுத்தும் காட்சி புலனாகிறது. கடற்கரையிலே மெல்லிய பூங்காற்று வீசுகிறது; வெண்ணீறு போன்றதொரு வெள்ளிய தோற்றத்தோடு நெடுந்தூரம் மணல் பரந்து கிடக்கிறது. ஆற்றங்கரைச் சோலைகளிலே மயில் ஆடுகிறது, குயில் கூவுகிறது. தேனுண்ட வண்டு பாடுகிறது. மானும் பசுவும் உல்லாசமாக மேய்கின்றன. ஆடவர் முகத்திலே வீரமும், பெண்டிர் முகத்திலே கருணையும், குழந்தைகள் முகத்திலே எல்லையில்லதோர் இன்ப அன்பும் பொலிகின்றன.

அருவியையும் மணலையும் பூங்காற்றையும், அரும்பு மலர் காய்கனியையும், மயில் குயில் சுரும்பையும், கலைமானை யும் ஆவையும், முகத்தையும் விழியையும் மனத்தையுமே அவர் பார்க்கிறார். பார்த்து அவற்றில் ஈடுபட்டு, அவற்றிலே இறைவனுடைய அருளொளியின் பொலிவைக் காண்கிறார். யாவும் இறைவன் கோயிலாகவே அவருக்குக் காட்சி தருகின்றன.

கரும்பனுகப் புனல் கொழிக்குங்
காலருவி கோயில்
கரை மணலும் கலங்காத
பூங்காற்றுங் கோயில்
அரும்பு மலர் காய்கனிகள்
அளி இனிமை கோயில்
ஆடுமயில் கூவு குயில்
அறை சுரும்பு கோயில்
விரும்பு நடை கலைமானும்
மெல்லானுங் கோயில்
வீரமுகம் காதல் விழி
ஈரமனங் கோயில்
அரும்பிறவிப் பயன டைந்த
அருட் குரவன் கோயில்
அகில மெலாம் நின் கோயில்,
அருட் சோதி அரசே!

இவ்வாறு உலகனைத்தையும் காண்கின்றதோர் குழந்தை யுள்ளமும் கலைப்பித்தும் கொண்டவர் கலியாணசுந்தரனார். தாம் பெற்ற பித்தம், உலகமும், சிறப்பாக நமது தமிழுலக மும், பெறுவதாக என்பது அவருடைய வேண்டுகோள். அவ்வேண்டுகோள் நிறைவேறுவதாக.

நிறைவேறுகிற வரையில் அவரும் இருந்து அப்பித் தத்தை மக்களுக்கு இடைவிடாது ஊட்டுவதற்குத் தமிழ்த் தெய்வம் தண்ணருள் சுரக்குமாக.

தேசிகவிநாயகம் பிள்ளை

க

நாஞ்சில் நாட்டுக் கவிஞர்

நாஞ்சில் நாட்டுக் கவியென்றும், 'தேவி' யென்றும் இப்போது பிரசித்தி பெற்றவர்கள் தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள். நாஞ்சில் நாட்டில் பிறந்தமையால் அவர்கள் நாஞ்சில் நாட்டுக் கவியே யொழிய, மற்றப்படி, தமிழ் நாடு முழுவதுக்குமுரிய கவிஞரே யாவார்கள். தமிழ் வழங்கும் நாடெங்கும் - இலங்கை, பர்மா, மலாயா முதலிய இடங்களிலெல்லாம் - அவர்களுடைய பெயரும் இன்று வழங்குகிறது.

நாஞ்சில் நாடு தமிழ்நாட்டின் பகுதியென்பது இன்றும் பலருக்குத் தெரியாது. காரணம், இந் நாடு சென்னை மாகாணத்திலிராமல், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தென் கோடியில் ஒரு தனிப் பகுதியாயிருப்பதாகும். நாஞ்சில் மலையுடைமையாலே, நாடு நாஞ்சில் நாடாயிற்று. கன்னியாகுமரி, சுசீந்திரம், நாகர்கோயில் முதலிய இடங்கள் இந் நாட்டில் உள்ளன. இங்குள்ள மக்கள் அனைவரும் தமிழர். மலையாள மன்னருக்கு உட்பட்டிருப்பதனாலே இவர்களுக்குத் தங்கள் தாய்மொழியினிடத்துத் தனியான ஓர் ஆர்வம் உண்டு.

தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் இருப்பது புத்தேரி என்னும் கிராமம்; நாகர்கோயிலுக்கு அருகிலுள்ளது. பஸ்ஸில் ஏறிச் சென்றால், நாகர்கோயிலிலிருந்து பத்து நிமிஷத்தில் புத்தேரி அடையலாம். பஸ்ஸை விட்டிறங்கி, ஒரு சந்து வழியாகச் சென்று, அவர்கள் வீட்டை யடைகிறோம். திண்ணையையும் நடையையும் கடந்து உள்ளே

சென்று, அகன்ற முற்றத்திலே, ஓர் 'ஈஸி சேரில்' அமர்ந்திருக்கும் முதியவரைக் காண்கிறோம். அவரைச் சுற்றிலும், ஏடுகளும், பழம்பத்திரிகைகளும், சாசனக் குறிப்புக்கள் வரைந்த காகிதங்களும் குவிந்து கிடக்கின்றன.

பிள்ளையவர்களோடு உடனிருக்கும் நண்பர், "பார்க்க அன்பர் யாரோ வருகிறார்கள்" என்று தெரிவிக்கு முன்னமே பிள்ளையவர்கள் திரும்பி, நாம் வருவதைப் பார்த்துவிட்டு, விரைந்தெழுந்து வந்து, "வாருங்கள், வாருங்கள்" என்று நம்மைக் கட்டித் தழுவிக் கொள்ளுகிறார்கள். அனேகமாய், நாம் அவர்களுக்கு முன்பின் பழக்கமில்லாதவர்களாக இருப்போம். ஆயினும், தமிழன் என்ற உணர்ச்சியும், அது காரணமாய் ஏற்பட்ட அபிமானமுமே, பிள்ளையவர்களை அவ்வாறு செய்யத் தூண்டுகின்றன.

அவர்களுடைய பிடிக்குள் அகப்பட்டபோது, நமக்கு மூச்சுத் திணறுகிறது. "உண்மையிலேயே தேசிகவிநாயகம் பிள்ளை முதியவரா அல்லது இளைஞரா ?" என்ற சந்தேகம் எழுகின்றது. ஒரு வகையாக அவர்கள் பிடியினின்றும் நழுவி, ஒரு நாற்காலியில் அமர்ந்து சாவகாசமாக அவர்களை உற்று நோக்குகிறோம்.

பிள்ளையவர்களுக்கு இப்போது *வயது அறுபத்தாறு பூர்த்தியாகிறது. நடுத்தரமான உயரம், நல்ல கட்டமைந்த சரீரம் ; ஆனால் முதுமை காரணமாகவும், உடல்நல மின்மை காரணமாகவும், இப்போது தளர்ந்து மிக மெலிந்திருக்கிறது. அகன்ற விசாலமான நெற்றி, கூர்மையான கண்கள் ; நம் இதயத்துக்குள்ளேயே சென்று நம்மை ஊடுருவிப் பார்ப்பவை போலிருக்கும். சற்று அகலமான உச்சிக்குடுமி ; சில சமயம் இதை நாஞ்சில் நாட்டார் வழக்கப்படி முன்பக்கமாக முடிந்து போட்டிருப்பார்கள்.

*இது எழுதிய காலம் 1942.

இப்படி யெல்லாம் அவர்களை நாம் கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கும்போதே, கூடத்தில் இலை போட்டுப் பலகாரங்கள் பரிமாறியாகும். பலகாரம் காப்பி சாப்பிட வேண்டியதுதான். புறப்பட்டபோதுதான் நாம் சாப்பிட்டு வந்திருக்கலாம்; இருந்தாலும், அவர்களுடைய அன்பு கலந்த உபசாரத்தை நாம் சிறிதும் மீறிவா முடியாது.

பிள்ளையவர்களோடு நாம் பழகும் சொற்ப நேரத்துக்குள், அவர்கள் காட்டும் அன்பையும் உற்சாகத்தையும் பார்த்து, நமக்கே வெட்கம் உண்டாகிறது. இந்த முதுமையிலே இவர்களுக்கிருக்கும் மனவுற்சாகம் இளைஞராகிய நமக்கில்லையே என்று யாரும் எண்ணுதல் இயல்பு. வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரவர்களுக்கு எண்பதாண்டானபோது, அவர்களைப் பிள்ளையவர்கள் "எண்பதாண்டான இளைஞனே" என்று வாழ்த்தினார்கள். இவர்கள் சொன்ன வார்த்தைகள் இவர்கள் விஷயத்திலேயே முற்றிலும் உண்மையாயிருப்பதை உணர்கிறோம். நக்கீரர் சொன்ன மாதிரி, 'என்றும் இளையாய்' என்று பிள்ளையவர்களை மனதார வாழ்த்தி விடை பெறுகிறோம். பிரிவதிலே நமக்கு எவ்வளவு மனக்கஷ்டமோ அதைவிட அவர்களுக்குப் பலமடங்கு கஷ்டம்.

* * *

இவர்கள் சுசீந்திரத்தை யடுத்த தேரூர் என்னுமூரில் 1876ஆம் ஆண்டில் பிறந்தார்கள். தாய் வழியில் இவர்கள் புலவர் பரம்பரையில் தோன்றியவர்கள் என்று சொல்லலாம். தாய்வழிப் பாட்டனார் நல்ல கவிஞர்; பிரபந்தங்கள் இயற்றி யிருக்கிறார். அம்மானொருவர் சிறந்த பௌராணிகர்; கம்பராமாயணப் பிரசங்கத்திலே வல்லவர். ஆகவே, இந்தப் பரம்பரையில் வந்த பிள்ளையவர்கள் இளமையிலேயே தமிழ்ப் புலமை வாய்ந்திருந்ததில் வியப்பொன்று

மில்லை. "குலவித்தை கல்லாமற் பாகம் படும்" என்பது பழமொழி யல்லவா?

பழைய சம்பிரதாயப்படி, இவர்கள் இளமையில் ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்கத் தம்பிரான் என்ற துறவியை யடுத்துத் தமிழிலக்கண இலக்கியம் பயின்றார்கள். தம்பிரான் விருப்பத்திற்கிணங்க அந்த இளவயதிலேயே, அதாவது இருபது வயதுக்குள்ளாகவே, தேரூர் அழகம்மை என்ற தெய்வத்தின்மீது ஆசிரிய விருத்தத்தாலான பதிகமொன்றும், சுசீந்திரத்தில் கோயில் கொண்டுள்ள தாணுமாலயர்மீது ஒரு மாலையும் பாடினார்கள். நால்வர் அருட்பாசுரங்களிலும், தாயுமானவர் பாடல் போன்ற தோத்திரப் பாடல்களிலும் இவர்களுடைய உள்ளம் எவ்வளவு தோய்ந்து கிடந்தது என்பதை இச் சிறு நூல்களில் காணலாம். இளமைக்குரிய மிடுக்கும் அழகிய சொல்லடுக்கும் சந்தப்பொலிவும் கற்பனைத் திறனும் இவற்றிலே காணப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ்ச் சொற்களையும் சிறந்த பழங் கருத்துக்களையும் அநாயாசமாக எடுத்தமைக்கும் பேராற்றல் அவ்வளவு இளவயதிலேயே இவர்களுக்குக் கைவந்திருந்ததை இப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

மற்றொரு செய்தியையும் இங்கே குறிப்பிடலாம். தமிழிலக்கிய சரிதத்தை ஆராய்ந்தவர்கள், எத்தனையோ பழைய நூல்கள் கிடைக்கவில்லை, அல்லது நூல்களின் ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை, அல்லது ஆசிரியர் காலம் இன்னதென்று விளங்கவில்லை என்ற பேச்சே அதிகமாக இருப்பதை அறிவார்கள். எங்கும், 'கிடைக்கவில்லை', 'தெரியவில்லை' என்ற பேச்சுத்தான். நம்மிடையே வாழ்கிற பிள்ளையவர்களும் இந்தப் பழைய வார்த்தைகளுக்கு இலக்கியமாகிவிட்டார்கள்! இவர்கள் பாடிய மேற் கூறிய சுசீந்தை மாலையில் ஒரே ஒரு செய்யுள்தான் கிடைத்திருக்கிறது. மற்றவை யாவும் கையெழுத்துப் பிரதியாயிருந்தபோதே ஆசிரியரிடமிருந்து கெட்டுப்போய் விட்டனவாம்!

தமிழின் தலையெழுத்தே இதுதான் போலும்! கிடைத்த ஒரு செய்யுளும் மிக்க அழகிய செய்யுள். இதைப் படிக்கும் போது, எஞ்சியவற்றையும் காணவேண்டுமென்ற ஆசை இயல்பாக யாருக்கும் உண்டாகும்.

பிள்ளையவர்கள் ஆங்கிலத்திலும் நல்ல பயிற்சி யுடையவர்கள். இவர்களுடைய தந்தையார், நாஞ்சில் நாட்டிலே முதன் முதலாக ஆங்கிலங் கற்ற சிலருள் ஒருவர்; உப்பள விசாரணை யதிகாரியாக உத்தியோகம் பார்த்தவர். ஆகவே, அவர் தமது புதல்வரை உரிய பருவத்திலே ஆங்கிலம் படிக்க வைத்தார். பிள்ளையவர்களும், மெட்றிகுலேஷன் படித்துத் தேறி, பின் எப். ஏ. படித்து வருகையில், படிப்பை விட்டு விட்டார்கள். அதன் பிறகு, போதனாமுறையிலும் பயிற்சி பெற்றுத் தேறி, திருவிதாங்கூர் சமஸ்தானக் கல்லூரி யொன்றில் ஆசிரியராக அமர்ந்தார்கள். கோட்டாறு, நாகர்கோவில், திருவனந்தபுரம் முதலிய இடங்களிலுள்ள கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியராக இருந்து, 1931ஆம் ஆண்டில் ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்கள்.

பிள்ளையவர்களுடைய சிறு பாடல்களிற் பல, கும்மி கோலாட்டங்களுக் கேற்ற சந்தத்திலும், பெண்களை முன்னிலைப்படுத்தியும் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். அப்பாடல்கள் இவர்கள் பெண்கள் கலாசாலையிலும் கல்லூரியிலும் ஆசிரியராயிருந்த காலங்களில், பெண்கள் பாடுவதற்கும் ஆடுவதற்கும் என்றே எழுதப்பட்டவை. இக்காரணத்தாலேயே அவை மேற்சொன்ன அமைப்பைப் பெற்றன.

தம்முடைய நண்பர்களுக்காகவும், பெண்களுக்காகவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இவர்கள் பல பாடல்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அவை அவ்வக் காலத்தில் அந்த நண்பர்கள் பெயரிலேயே வெளியாகி யிருக்கின்றன.

பிற்காலத்தில், அவற்றைத் தம் பாடல்களோடு மீண்டும் சேர்த்துக்கொள்ள இவர்கள் விரும்பவில்லை.

தாகுர் எழுதிய நூல்களில் இவர்களுக்கு எப்போதும் மிக்க ஈடுபாடு உண்டு. ஓய்வு நேரங்களிலே, தாகுர் கவிதையைப் படித்தும், பிறருக்குப் படித்துக் காட்டியும், மொழி பெயர்த்தும், இன்புறுவார்கள். 'கீதாஞ்சலி'யிலிருந்து சில பாடல்களையும் 'சரதோற்சவம்' என்ற பாடலையும் இவர்கள் மொழி பெயர்த்திருக்கிறார்கள். இம் மொழி பெயர்ப்பு சம்பந்தமாக ருசிகரமான வரலாறொன்று உண்டு. ஒரு சமயம் - சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னிருக்கலாம் - இவர்களும் வேறு சில நண்பர்களுமாகக் கூடி, தாகுர் எழுதிய கீதாஞ்சலியிலிருந்து சில பாடல்களை வாசித்து அவற்றின் பொருளைப் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். சில பாடல்களை மொழி பெயர்க்க வேண்டுமென்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டாயிற்று. உடன் இருந்தவர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் பெரிய பட்டங்கள் பெற்றவர்கள்; தமிழையும் நன்றாக அனுபவித்துப் படித்து, சிறந்த புலமையும், நுண்மையான ஆராய்ச்சித் திறனும் வாய்க்கப்பெற்றவர்கள்; பாடல் இயற்றும் பழக்கமும் உடையவர்கள். மேற்சொன்ன சமயம், மாலையிலே எல்லோரும் சற்று நேரம் வெளியே உலவப் போவதென்றும், திரும்பி வந்தவுடன் கீதாஞ்சலியிலே குறித்த ஒரு பாட்டை ஒவ்வொருவரும் மொழிபெயர்ப்பதென்றும், அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டார்கள். அதன்படி, உலவி விட்டுத் திரும்பியதும், எல்லோரும் ஒவ்வொரு பாடல் எழுதி முடித்தார்கள். அவரவர் பாடலை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்ட வேண்டிய நேரம் வந்தது. ஆண்டில் மூத்தவரான பிள்ளையவர்கள் முதலில் வாசிக்க வேண்டுமென்று எல்லோரும் கூறவே, இவர்கள் தமது பாடலை வாசித்துக் காட்டினார்கள். அவ்வளவுதான்; பாடல் எழுதியிருந்த மற்றவர்கள் தங்கள் பாடலை வெளியே காட்டாமல்

கிழித்தெறிந்து விட்டார்கள்.* தேசிகவிநாயகம் பிள்ளையும் எல்லோரையும் போலப் பாட்டெழுதக்கூடியவர் என்று தான் அவர்கள் அதுவரையில் எண்ணி இருந்தார்கள். இந்தப் போட்டியின் பயனாக, பிள்ளையவர்கள் ஒருவருக்குத் தான் பாட்டெழுதவரும் என்று அவர்களுக்குத் தெளிவாக விளங்கிற்று.

* * *

ஆரம்பத்திலே இவர்களைப் பார்த்தபோது, சாசன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததைக் கண்டோம். கவி புனைவதைவிட இவர்களுக்கு அதிக உவப்பான வேலை, கல்வெட்டுகளைத் தேடி ஆராய்வதாகும். இதில் இவர்களுக்குப் பைத்தியம் என்று சொன்னால் கூடக் குற்றமில்லை. எண்ணற்ற சிலாசாசனங்களையும் செப்புப் பட்டயங்களையும் ஓலைப் பிரமாணங்களையும் ஆராய்ந்து, ஆராய்ச்சியாளருக்குச் சிக்கலாயிருந்த பல விஷயங்களைத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். ஓர் உதாரணம் இங்கே கூறலாம். முதலாம் இராசராச சோழனுடைய சாசனங்களில் " காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி" என்ற தொடர் வருகிறது. ஆராய்ச்சியில் பெரும் புகழ்பெற்ற பேராசிரியர் பலர் இதற்குப் பொருள் காண்பதில் சங்கடப்பட்டார்கள். காந்தளூரில் சோழன் அழகிய மணி போன்ற அரண்மனை கட்டினான்; (மரக்) கலத்தை அங்கே அறுத்தான்; அந்தச் சாலையிலே (பாட்டையிலே) மரக்கலங்களை அழித்தான்!—என்றெல்லாம் பொருத்தமில்லாமல் சொல்லி வந்தார்கள். பிள்ளையவர்கள் இதை ஆராய்ந்து, தக்க ஆதாரங்களுடன் தமது முடிவை 1929ஆம் ஆண்டில் வெளியிட்டார்கள். "காந்தளூர் என்ற இடத்திலுள்ள (அன்ன) சாலையிலே இத்தனை பிராம்

*இவ்வரலாற்றை காலஞ்சென்ற திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறினார்கள். இப்பாடல் போட்டியில் கலந்தவர்களுள் அவர்களும் ஒருவர்.

மணர்களுக்குத்தான் அன்னமளிப்பது என்பதை வரையறுத்தான்'' என்பதே இவர்கள் கொண்ட கருத்து. ஆராய்ச்சியாளர் அனைவரும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதனால், இவர்களுடைய நுட்பமான ஆராய்ச்சித் திறன் விளங்கும்.

* * *

பிள்ளையவர்களுக்குத் தமது நாஞ்சில் நாட்டிடத்துப் பற்றுதல் அதிகம். இயல்பாகவே அந் நாடு நீர்வளம் நிறைந்தது. மலைகளால் சுற்றிலும் அரண்செய்யப்பெற்றது.

பண்ணை பெருத்த பழநாடு—சுற்றிப்
பார்த்திடக் கண்கள் குளிரும் நாடு
மண்ணையும் பொன்னாக மாற்றும் நாடு—கவி
வாணர் புகழும் தமிழ்நாடு

என்று இவர்கள் தமது நாட்டை உளங்குளிர்ந்து போற்றுவதைக் காண்கிறோம். "கவிவாணர் புகழும் தமிழ்நாடு" என்பதிலே இவர்களுடைய தாய்மொழிப் பற்றையும் பார்க்கிறோம். கடைசியாக,

என்றும் தழைத்தறம் ஏறும் நாடு—வையத்(து)
ஏதும் இணையிலா நாஞ்சில் நாடே!

என்று ஓர் எக்களிப்போடு தமது நாஞ்சில் நாட்டுப் பாட்டை முடிக்கிறார்கள்.

பிள்ளையவர்களுடைய தேசபக்தி, நாஞ்சில் நாடு என்ற குறுகிய அளவோடு நின்றுவிடவில்லை. நாடு முழுவதும் ஒற்றுமை வேண்டும், வேற்றுமைகள் ஒழிய வேண்டும், சுதந்திரம் வேண்டும், அஹிம்சா தருமம் ஓங்கவேண்டும் என்ற கருத்தை யமைத்துப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்கள். காந்தியத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர்கள். இந் நாட்டின் வறுமைப் பிணியை ஒழிக்க வல்லது ராட்டினமொன்றே; "ராட்டினமல்லாது வேறு

படை இந்த நாட்டினுக்கில்லை" என்ற தீவிரமான உறுதியுடையவர்கள். தானே நூல் நூற்றுக் கதர் நெய்து கொண்டுவந்து தெருத் தெருவாக விற்கும் ஓர் ஏழைப் பெண்ணின் பரிதாபகரமான வரலாற்றை யமைத்து இவர்கள் பாடியிருக்கும் "கதர் விற்பனை" என்ற பாடல் படிப்போருள்ளத்தை உருக்கவும் கொதிக்கச் செய்யவும் வல்லது. இதை உணர்ச்சியோடு அனுபவித்துப் படித்தவர், பின் கதர் பக்தராய் மாருமலிருந்தால், ஆச்சரியந்தான்.

அஹிம்சா தருமத்திலே ஊறிய இவர்களின் மனமானது, அற்ப ஜீவ ஹிம்சையையும் பொறுக்காது.

சிட்டுக் குருவிக் கேனும்—ஒருசிறு
    தீங்கினைச் செய்தவரை
நட்டநல் நண்பராக—உலகமும்
    நம்பிக்கை கொள்வதுண்டோ ?

என்று கேட்கிருர்கள். ஆகாய விமானமே அஹிம்சா நெறியை எண்ணிக் கதறுகிறது.

நன்மை செய்ய வந்தேன்—அதனை
    நன்குண ராமல்
வன்மைப் போரிலெனை—இழுத்து
    மாட்டி விட்டாரை யோ !

*   *   *

அன்பைக் கொன்று விட்டார்—மனிதர்
    அரக்க ராகி விட்டார்.

*   *

சாந்த மூர்த்தியின்—அஹிம்சா
    தருமம் மேற் கொண்டு
மாந்தர் இவ்வுலகில்—நன்ருய்
    வாழ்வ தெந்த நாளோ ?

அஹிம்சையிலே இவர்களது மனம் இவ்வளவு ஆழ்ந்து

பற்றுடையதா யிருந்தமையாலே, புத்தருடைய சரித்திரத்தில் மிக்க ஈடுபாடுண்டாயிற்று. அச்சரித்திரத்தில் இவர்கள் பாடியிருக்கும் நான்கு பகுதிகளும் உயர்ந்த இலக்கியமாகும். இவர்களின் பாடல்களிலேயே மிகச் சிறந்த பாகமும் இதுவே.

இவ்வாறாகப் பிள்ளையவர்களை அஹிம்சா வாதியாகவும், சாந்தமூர்த்தியாகவும் பல பாடல்களில் நாம் கண்டபோதிலும், சமூக ஊழல்களைச் சுட்டிக் கேலிச் செய்வதைப் பார்த்தால், இவர்கள் ஒரு புரட்சிக்காரர் என்றும் சொல்லத் தோன்றுகிறது. தீண்டாதவரை ஆலயத்திலே பிரவேசிக்க விடாமல் தடுத்து வைத்திருக்கும் அநீதியைக் குறித்து இவர்கள் பாடியுள்ள பாடல்கள் மிக்க உருக்கமானவை. பிம்பிசார மன்னனுடைய யாகத்தில் பலியிடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட ஆடுகளுக்காக, புத்தர் பரிந்து பேசிக் கொலையை நிறுத்தினார். அவர் பரிந்து பேசியதை, "வாய் பேசா உயிரெல்லாம் வாய் பெற்று அங்கு வாதாடி வழக்கிட்டவாறு ஈது என்ன" என்று பிள்ளையவர்கள் பாடுகிறார்கள். தீண்டாதாருக்காக இவர்கள் பரிந்து பேசுவது விஷயத்தில், இவ்வார்த்தைகள் முற்றிலும் பொருந்தும்.

மற்றொரு சம்பவத்தின் மூலமாக, இவர்கள் ஒரு புரட்சிக்காரர் என்பதை இன்னும் நன்றாக அறியலாம். நாஞ்சில் நாடு மலையாள மன்னரின்கீழ் இருந்தமையால், மலையாளத்தாருக்குரிய மரு - மக்கள் தாயமுறை என்ற ஒரு விசித்திரமான வழக்கம் நாஞ்சில் நாட்டுத் தமிழரிடையே வேரூன்றிவிட்டது. இதன்படி, ஒரு வேளாளருடைய சொத்து அவருடைய பிள்ளைகளுக்குப் போகாது; அவருடைய சகோதரி பிள்ளைகளுக்கே போகும். இந்த விபரீதமான முறையைப் போக்க, அறிவாளிகளான பலர் முயன்றுவந்தார்கள். புதுச்சட்டம் இயற்றவேண்டும், மரு-மக்கள் தாயமுறையைப் போக்கி மக்கள் - தாயமுறையை வழக்கத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்ற கிளர்ச்சியி

னிடையே, திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த "தமிழன்" என்ற பத்திரிகையில் "நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்" என்ற சிறு நூலொன்று 1917ஆம் ஆண்டில் தொடர்ச்சியாகப் பிரசுரமாயிற்று. நூலில் தேசிகவிநாயகம் பிள்ளையின் பெயர் இல்லை. மருமக்கள் தாய முறையால் விளைந்த கேட்டையெல்லாம் ஒரு பெண் சொல்லி முறையிடுவதாக அந்நூல் அமைந்திருந்தது. அப்பெண்ணின் பரிதாபகரமான வரலாறும், நூலில் தொனித்த நுட்பமான கேலியும் படித்தோர் அனைவருடைய மனத்திலும் சென்று தைத்தன. நூல் பாட்டாயிருந்த போதிலும், எல்லோருக்கும் விளங்கிற்று. படித்த மருமக்கள் தாய முறைக்காரர் எல்லோருக்கும் அவமானமும், அந்த முறையை ஒழிக்கவேண்டும் என்ற ஆத்திரமும் ஏற்பட்டன. கிளர்ச்சி முற்றி, நாஞ்சில் நாட்டு வேளாளர் மக்கள்-தாய முறையைக் கைக்கொள்ளலாம் என்ற புதுச் சட்டம் உண்டாயிற்று. நூல் புராதன நூல், நூலின் ஆசிரியர் யாரோ பெயர் தெரியாத பழங்காலப் புலவர் என்றுதான் எல்லோரும் எண்ணியிருந்தார்கள். ஆசிரியர் தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் என்று பின்னால் தெரிய வந்தபோது, நாஞ்சில் நாட்டாரிடையே இவர்களுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டது.

நாஞ்சில் நாடு அக்காலத்திலேயே இவர்களுடைய பெருமையை உணர்ந்திருந்தபோதிலும், பொதுவாகத் தமிழ் நாடும் தமிழ் வழங்கும் மற்ற நாடுகளும் இவர்களை அறிய ஆரம்பித்தது, இவர்களுடைய கவிதைத் தொகுதி வெளி வந்த காலமாகிய 1938ஆம் ஆண்டின் இறுதியில். அது முதல் இதுவரை, தமிழ்மக்களுக்கு இவர்களுடைய கவிதையிலுள்ள ஈடுபாடு பெருகிக்கொண்டே வருகிறது.

இவர்களுடைய சமயப்பற்றைக் குறித்து ஒரு வார்த்தை சொல்லலாம். இளமையிலேயே சைவ தீட்சை பெற்றுக் கொண்டார்கள். இதனாலும், தம்பிரான் சுவாமி

களிடம் கல்வி பயின்றமையாலும், இவர்களுக்குச் சைவப் பற்று மிகுதி. ஆயினும், பொதுவான நமது புராதன சமயப் பண்பாட்டிலேதான் இவர்களுடைய மனம் தோய்ந்து நிற்கிறது.

ஆட்டுக்குட்டியைத் தோளிலேந்தி வரும் புத்தர் "மானேந்தும் ஈசன் உளம் நாண, ஆட்டின்—மறியேந்து பெருங்கருணைப் புனித வள்ளலாகக்" காட்சி யளிக்கிறார். தாலாட்டுகிற குழந்தையோ, திருமாலாகவும் வள்ளி மணவாளனாகவும் நடராசனாகவும் கண்ணனாகவும் சம்பந்த மூர்த்தியாகவும் தோற்றுகிறது. பிறைச் சந்திரனும், சூரியோதயமும், பொய்கையில் அலர்ந்த தாமரையும், மலைச் சாரலும் கதிர் முற்றி விளைந்த புலமும்போன்ற இயற்கைக் காட்சிகள், இவர்களுக்குத் திருமாலையும் விநாயகனையும் முருகனையும் நினைவூட்டுகின்றன.

தமிழ்ப் புலவர்களின் மரபானது பண்டைக்காலந் தொட்டு இடையறாது தொடர்பாக வந்திருக்கிறது. அகத்தியர், தொல்காப்பியர் முதலிய ஆசிரியர் குழாத்தில் இம் மரபு தொடங்கிற்று எனக் கருதலாம். இது வளர்ந்து வந்த காலத்திலே, வெவ்வேறு மொழிகளின் தொடர்பும் சமயங்களின் தொடர்பும் ஏற்பட்டன. ஆதியிலே வட மொழித் தொடர்பு; பின் சைன பௌத்த சமயங்களின் தொடர்பு; பிறகு அரசியல் மாறுபாடுகள் காரணமாக, தெலுங்கர், மராட்டியர், முகம்மதியர், ஆங்கிலேயர் முதலான பிற சமுதாயத் தொடர்புகள் ஏற்பட்டன. இவற்றாலெல்லாம் தமிழ்மொழி முன்னேற்றமடைந்து வந்திருக்கிறது; அப்படியே தமிழ்ப் புலவர் பரம்பரையும் சென்ற நூற்றாண்டு வரையில் விரிவடைந்து உரம் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. சென்ற நூற்றாண்டிலே கால் நூற்றாண்டும் இந்த நூற்றாண்டிலே ஏறக்குறைய அரை நூற்றாண்டும் வாழ்ந்திருக்கும் தேசிகவிநாயகம் பிள்ளை யவர்கள், இவ்வாறு வளர்ந்த புலவர் பரம்பரையின்

அந்தத்தில் அமைந்த ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கிறார்கள்.

பழம் புலவர் மரபு என்று கூறுவதில் சில சிறப்பியல்புகள் அடங்கி இருக்கின்றன. ஒன்று, மரபு வழுவாத புலமை நெறி; மற்றொன்று ஒப்பற்ற ரசிகத்தன்மை; கவிதையை அனுபவிப்பதே பெரிய ஆனந்தம் என்றெண்ணி அமைகிற இயல்பு. பழமை என்றே சொன்னபோதிலும், இப்பழம் புலவர்கள் புதுமையைக் கண்டு அஞ்சி ஓடுபவர்களல்லர்; தங்கள் மரபுக்கு ஏற்ற வகையில், தமிழ்ப் பண்புக்கு முரண்படாத நெறியில், புதியதைத் தழுவிக் கொள்பவர்கள்.

இந்தப் புலவர் பரம்பரையில் கடைசியாகத் தோன்றியவர்கள் நம் பிள்ளையவர்கள். பழமையின் பூரணச் சிறப்பையும் அருமையையும் இவர்களிடத்தே காணலாம். இந்தப் பழமை இருபதாம் நூற்றாண்டின் புதுமையோடு அழகாகக் கலந்து ஒன்றுபட்டு நிற்பதை இவர்கள் வாழ்க்கையிலும் கவிதையிலும் காணலாம். இவர்கள் வாழ்க்கையில் நாம் தொடர்பு கொண்டிருக்கும் போதும், இவர்கள் கவிதையைச் சுவைத்து அனுபவிக்கும்போதும், தனித்த ஓர் ஆனந்தத்தை யடைகிறோம்.

இக்காலத்திலே, தமிழில் புதிய இலக்கிய நெறி தோன்றி வருகிறது. இதிலே பழமையின் சிறப்பைக் காண்பது மிக்க அரிதாயிருக்கிறது. இதை ஊன்றி உணர உணர, பழம் புலவர் மரபிலே தோன்றிய கடைசிப் புலவர், ரசிகர்—உண்மையான கவிஞர்—தேசிகவிநாயகம் பிள்ளையவர்களே என்பது நமக்கு விளங்குகிறது. இதனோடு கூட, அந்தப் பழந் தமிழ்ப் புலவர் மரபின் தொடர்ச்சி இவர்களோடு நின்றுவிடுமோ என்ற அச்சமும் நம் மனத்திலே எழுகிறது.

இவற்றை யெல்லாம் மறந்துவிட்டு, பிள்ளையவர்களுடைய கவிதையையும் வாழ்க்கையையும் பார்த்தால்,

என்ன காண்கிறோம்? எவ்வகையான கொதிப்போ, கொந்தளிப்போ, அங்கு இல்லை. யாரிடத்தும், எதனிடத்தும், கோபமில்லை, விரோதமில்லை; எவ்விஷயம் பற்றியும் வெறியில்லை; ஆத்திரமில்லை. வெறியும் ஆத்திரமும் ஒரு காலத்தில் வேண்டியிருக்கலாம்; ஆனால் அவை எக்காலத்திலுமே வேண்டியவை யல்ல. பிள்ளையவர்களிடத்திலே, அவர்களுடைய கவிதையிலே, நிரந்தரமான சாந்தம், அமைதி, ஆனந்தம் இவைகளே நிறைந்திருக்கின்றன. இவைகளே என்றும் நிலைநிற்க வல்லன. எல்லையற்ற பரம் பொருளின் நிலையும் இந்த நிலைதானே?

உ

கவிஞருடன் ஒரு நாள்

1938ஆம் வருஷம் தமிழ் இலக்கிய சரித்திரத்திலே ஒரு முக்கியமான வருஷம். அவ்வருஷத்திலேதான் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் கவிதைத் தொகுதி முதன் முதல் புத்தக வடிவில் வெளியாயிற்று.

சில நண்பர்களும் நானும் பிள்ளையவர்களுடைய கவிதைகளான 'கருணைக்கடல்', 'மகனிழந்த தாய்' முதலான பாடல்களைப் படித்துப் படித்து இன்புற்றதுண்டு. இப் பாடல்கள் சில பத்திரிகைகளில் வெளிவந்திருந்தனவே யன்றிப் புத்தகமாக வெளியானதில்லை. (புத்தக வெளியீட்டின் வீக்கம் இன்றுள்ளதில் வீசம் பங்குகூட அன்றில்லை.) ஒருவருமே தேசிகவிநாயகம் பிள்ளையவர்களுடைய பாடல்களை அதுகாறும் வெளியிட முயற்சி யெடுக்கவில்லை என்பதறிந்து, இவ்வளவு நல்ல பாடல்களை நாமே தொகுத்து நமக்குப் பயன்படுமாறு வெளியிட்டுக் கொண்டாலென்ன என்ற எண்ணம் எங்களுக்கு உண்டாயிற்று. பிறகு மிகவும் முயன்று பாடல்களையெல்லாம் தொகுத்து, அச்சிட்டு, நூலுக்கு 'மலரும் மாலையும்' என்று பெயர் கொடுத்தோம்.

வெளியிடுவதில் முனைந்து நின்றவர்களில் ஒருவருக்காவது தேசிக விநாயகம் பிள்ளையவர்களை நேரில் பழக்கமில்லை. ஆயினும் அவர்கள் கவிதையில் இருந்த சுவையே அதை வெளியிடும்படி தூண்டிற்று. புத்தகம் வெளிவந்தது 1938 இறுதியில். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான்—1940 டிசம்பரில் — அவர்களைப் பார்க்கும்பொருட்டு புத்தேரிக்கு யாத்திரை செய்தேன்.

இரண்டாம் முறை அவர்களை நான் பார்க்கப்போனது 1943 ஜூன் மாதம். இரவு 10 மணிக்கு நாகர்கோயிலுக்கு பஸ்ஸில் போய்ச் சேர்ந்து, அதிக நேரம் திண்டாடியபின், ஒரு சத்தவண்டி வைத்துக்கொண்டு இரவு ஒரு மணிக்குப் புத்தேரிக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே, இருட்டில் அந்த நடுநிசியில், எப்படியோ அவர்கள் எழுந்து வந்து வரவேற்று, படுக்கை முதலியன தந்து உபசரித்தார்கள். இரண்டு நாள் அவர்களோடு தங்கியிருந்துவிட்டுப் பிறகு திரும்பினேன். இந்த இரண்டு நாளும் அவர்களுடன் பேசாத விஷயமில்லை. உண்ட நேரமும், உறங்கிய நேரமும் போக, மற்றெல்லா நேரமும் பேச்சுத்தான்.

போன இரவு படுத்துறங்கிவிட்டு, மறுநாள் காலையில் இருவருமாக உலவப் போனும். தெருவைக் கடந்து அப்பால் வந்தவுடனேயே, ஒரு பெரிய கற்சாலை; இது நாகர்கோயிலிலிருந்து அழகியபாண்டியபுரம் போகிறது. இக்தச் சாலையில் நின்று பார்த்தால், சுற்றிலும் காண்கிற காட்சி மிக்க அழகுடையதாயும் மனத்துக்கு இன்பமளிப்பதாயும் இருக்கிறது. மூன்று புறம் உயர்ந்த மலைகளால் அந்த நாடு சூழப்பட்டிருக்கிறது. இதைக் காட்டிப் பிள்ளை அவர்கள் சொன்னார்கள் :

“ இந்த மலைதான் நாஞ்சில்மலை என்று சொல்லுவது. கலப்பைபோல் வளைந்து சூழ்ந்திருப்பதனுல் இதை நாஞ்சில் என்று சொல்லுகிறோம்; இதனுலேயே இந் நாடும் நாஞ்சில் நாடு என்று பெயர் பெற்றது. (நாஞ்சில் - கலப்பை.) கடற்

கும. 7

கரையை ஒட்டி இருப்பதனாலும், ஓங்கி வளர்ந்த மலை சூழ்ந்திருப்பதனாலும், இந்நாடு எல்லா வளமும் நிறைந்திருக்கிறது. நீர்வளம் மிகுதி. விளைவு மிகுதி" என்றார்கள்.

காலை நேரமானதால், சுகமாக மெல்லிய காற்று வீசிக்கொண்டிருந்தது. உதயசூரியனை மலைகள் மறைத்துவிட்டபடியால், உதயமாகிச் சிறிது நேரம் ஆகியிருந்த போதிலும், அந்நேரம் மிக்க குளிர்ச்சியாயிருந்தது. சாலையோடு சிறிது நேரம் சென்றோம். தூரத்தில் பார்த்தால் கரிய மலைகள்; ஆங்காங்கே அவற்றில் வெண்மேகங்களும், கருமேகங்களும் வந்து இளைப்பாறியிருந்தன. அவற்றையடுத்துச் சற்றுக் கீழே பார்த்தால், கருநிறமுடைய அடர்த்தியான பெருங் காடுகள். கருமையும் நீலமும் கலந்த நிறத்தோடு காட்சியளித்த பெரு மரங்களின் தோற்றத்தில் மனத்தைப் பறிகொடுத்துவிடலாம். இவற்றையும் விட்டு, இன்னும் சற்றுச் சமீபத்தில் பார்த்தால், பசுமையான நெல் வயல்கள்; அந்தப் பசுமையில்தான் எத்தனை விதம்! அதன் அழகுக்கு எல்லையே காணமுடியாது போலிருந்தது.

எங்குப் பார்த்தாலும் ஒரே நீர்த்தேக்கம். வாய்க்கால்கள், பெரிய கால்வாய்கள், சிறு கண்ணிகள், மடைகள், மடைகள் வழியாகச் சலசலவென்றும் களகளவென்றும் தண்ணீர் பாயும் ஓசை—இந்த இயற்கையழகிலே நான் பெரிதும் ஈடுபட்டேன்.

" உங்கள் நாட்டைப் பார்த்தால், எனக்கு எங்கள் சோழ நாடுதான் நினைவு வருகிறது. இந்த மலைகளை மட்டும் மறந்துவிட்டால், இங்குள்ள சோலைவளமும், பயிர்வளமும், நீர்வளமும் அப்படியே சோழநாடு போலத்தான் தோற்றுகின்றன" என்று சொன்னேன்.

" இந்த நாடு மட்டுமா சோழ நாடு என்கிறீர்கள்? நானுமே சோழ நாட்டான்தானே?" என்றார்கள் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்.

எனக்கு விளங்கவில்லை. "அதெப்படி?" என்று கேட்டேன்.

"என் தாய் பிறந்த ஊர் நாகைப்பட்டினம். என் தாய் வழி முன்னோர் அங்கே கப்பல் வைத்து வியாபாரம் செய்தவர்கள்; சவுக்காரம் செய்யும் பெரிய தொழிற்சாலைகள் இரண்டு வைத்திருந்தார்கள். ஆகவே என்னையும் உங்கள் ஊர்க்காரனாகக் கொள்வதற்கு இடமிருக்கிறது" என்று சொல்லிச் சிரித்தார்கள்.

இப்படிப் பேசிக்கொண்டே கொஞ்சம் போய்த் திரும்பினோம். திரும்புமிடத்தில் முட்செடி ஒன்றிருந்தது. அதில் வெண்மையான பூக்கள் இருந்தன. சுற்றிலும் பார்த்தால் இவ்வகையான செடிகளும் வெண்பூக்களும் ஏராளமாய் இருந்தன. இவற்றைப் பார்த்துக்கொண்டே நின்றேன்.

"என்ன பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

"இந்தப் பூக்கள் எனக்குப் புதியனவாயிருக்கின்றன. இவற்றைப் பார்த்தேன்" என்று சொல்லிவிட்டு, "இவற்றுக்குப் பெயர் ஏதேனும் உண்டா?" என்று கேட்டேன்.

தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் அதன் பெயரையும் சொன்னார்கள். (பேய்முள்ளி என்று எனக்கு ஞாபகம். நம் பக்கத்தில் இதில் மஞ்சள் வகைதான் உண்டு. வெள்ளை வகையை நான் பார்த்ததில்லை.) "உங்களுக்குச் செடி கொடிகளில் பைத்தியமுண்டோ? தாவர நூல் பாடமாகப் படித்தீர்களோ?" என்று கேட்டார்கள்.

"பைத்தியமுண்டு. ஆனால் தாவர நூல் பாடம் படிக்கவில்லை" என்று சொல்லிவிட்டு, "இந்தச் செடியின் பெயரையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே, நீங்கள் தாவரநூல் பாடம் படித்தீர்களோ?" என்று நான் திருப்பிக் கேட்டேன்.

"பள்ளிக்கூடத்தில் நான் படிக்கவில்லை. ஆனால் பின்னால் படித்துக்கொள்ளும்படி நேர்ந்தது."

"எப்படி நேர்ந்தது?"

"நான் படித்த காலத்தில், வகுப்பில் தாவர நூல் முதலான இயற்கைப்பொருட் பாடமே கிடையாது. பிறகு நான் ஆசிரியனாக வந்தபோதுதான் புதிதாக இப்பாடத்தைச் சேர்த்தார்கள். பாடத்திட்டத்தில் சேர்த்தாகிவிட்டது. ஆனால் இயற்கைப் பொருட்பாடம் தெரிந்த ஆசிரியரே பள்ளிக்கூடத்தில் இல்லை."

"பின் எப்படித்தான் சொல்லிக்கொடுக்க முடிந்தது?"

"எங்கள் பள்ளிக்கூட அதிகாரிகள், நீ சொல்லிக் கொடு, நீ சொல்லிக்கொடு என்று ஒவ்வோர் ஆசிரியராகக் கேட்டார்கள். ஒருவரேனும் இசையவில்லை. நாமே சொல்லிக் கொடுத்தால் என்ன என்று எண்ணி, நான் ஒப்புக்கொண்டேன். புத்தகத்தைப் படித்து வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ளலாம் என்ற துணிச்சல் எனக்கு."

"பிறகு சொல்லிக் கொடுத்தீர்களோ?"

"ஆம். இயற்கையை, முக்கியமாகச் செடி கொடிகளைப் பற்றித் தெரிந்துகொள்ளுவதில் கஷ்டமொன்றுமில்லை; தவிர எனக்கு எப்படியோ இயல்பாகவே இவ்விஷயத்தில் ஓர் ஊக்கமும் இருந்தது. எனவே, பள்ளிக்கூடத்துப் புத்தகசாலையில் தாவர நூல் சம்பந்தமாக இருந்த அத்தனைப் புத்தகங்களையும் எடுத்துவந்து படித்தேன். மற்றவர்களெல்லோரும் ஏற்காத ஒரு பாடத்தை நாம் ஏற்றோம் என்ற காரணத்தால், எனக்கு இப்பாடத்தில் உற்சாகம் மிகுதி. ஆகவே, நானாகக் கொஞ்சம் கொஞ்சமாய் விஷயங்களையெல்லாம் தெரிந்துகொண்டு, தெளிவாய்க் கற்பித்து வந்தேன்."

"நீங்கள் படித்த ஆங்கிலப் புத்தகங்களிலே ஆங்கில நாட்டுச் செடி கொடிகளைத் தானே சொல்லியிருக்கும்? இவற்றைக்கொண்டு நீங்கள் கற்பிக்க முடியுமா?"

"முடியாதுதான். அவற்றைக்கொண்டு நான் கற்பிக்கவில்லை. நம் நாட்டுச் செடி கொடிகளாகிய ஊமத்தை, பூவரசு, இவற்றின் இலை, பூ முதலியவற்றை வைத்துத்தான் கற்பித்தேன். கற்பிக்க எனக்கு வழியே எதுவும் இல்லாமையால், புதிய புதிய வழிகளைக் காண்பதில் எனக்கு அளவில்லாத ஆர்வம் ஏற்பட்டது. ஓர் உதாரணத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று கூறிவிட்டு, உற்சாகமாக மேலும் பேசலானார்கள்.

நான் போய்ப் பார்த்த அந்தச்சமயம் தேசிகவிநாயகம் பிள்ளையவர்களுக்கு உடம்பு சுகமில்லை. இருமல் தொந்தரவு அதிகமாயிருந்தது. இதற்காக அவர்கள் பேச்சைக் குறைக்கவில்லை. "சிரமப்பட வேண்டாம். பேசினால் இருமல் அதிகமாகிறது. கொஞ்சம் களைப்பாறுங்கள். பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று சொன்னேன்.

"பிறகு பார்ப்பதென்ன? நீங்கள் தினமுமா வருகிறீர்கள்? கொஞ்ச நேரம் நீங்கள் வந்திருக்கும்போது பேசினால், நீங்கள் போனபிறகு வேண்டிய ஓய்வு கிடைக்கிறது" என்று சொல்லிவிட்டு, பழைய பேச்சைத் தொடர்ந்து பேசலானார்கள்.

"இலைகள் மூச்சுவிடுகின்றன என்பதைச் சோதனை மூலமாய்ப் பிள்ளைகளுக்குக் காட்டவேண்டி வந்தது. எங்கள் பள்ளிக்கூடத்தில் இதற்கான கருவி ஒன்றும் இல்லை; காற்றை இழுக்கும் பம்பு கிடையாது. இதன்பொருட்டு நானே ஒரு கருவி செய்யவேண்டியதாயிற்று. ஒரு கண்ணாடிப் புட்டியை எடுத்து அதன் கழுத்துவரை தண்ணீர் விட்டு, அதன்மேல் தண்டோடு கூடிய ஒரு தாமரை இலையையும் போட்டு, வாய் வழியாகத் தண்டும் ஒரு சிறு கண்ணாடிக் குழாயும் வெளியே நீண்டிருக்கும்படி வைத்து, வாயை மெழுகால் காற்றுப் புகாமல் மூடினேன். பின்னர் கண்ணாடிக் குழாய் வழியாக நீரை வெளியே இழுக்கவும், வெளிப்பட்ட நீரின் இடத்தை அடைக்க, தாமரைத் தண்

டின் வழியே காற்று உட்சென்று, இலையின்மேல் சிறு குமிழிகளாக வெளிப்பட்டது. இலை மூச்சு விடமுடியும் என்பதை இதன் மூலமாகக் காட்டினேன் " என்றார்கள்.

இவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் வீடு வந்து சேர்ந்தோம். காலை பலகாரம் காப்பி சாப்பாடும் ஆயிற்று. பிறகு மாடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

" பாட்டுப் பாடுவதில் ஊக்கம் உங்களுக்கு எவ்வாறு பிறந்தது ?" என்று கேட்டேன்.

அவர்கள் சொன்னார்கள் : " சிறு பிராயத்திலிருந்தே பாட்டுப் பாடுபவர்களைக் கண்டால், எனக்குப் பயம். புலவர்கள் அறம் பாடுவார்கள் என்று கேள்விப்பட்டிருந்தேன் ; (அறம் பாடுவார் என்றால் ஒருவர் வாழவும் அழியவும் பாடவல்லவர் என்பது பொருள்.) இதனால்தான் பயம். உதாரணமாக, என் தகப்பனார் மீது சொக்கம்பட்டிப் புலவர் என்னும் ' கவிராயர் ' ஒருவர் அடிக்கடி பாட்டுப் பாடிக்கொண்டுவந்து பரிசு பெற்றுப் போவார். அவர் வரும்போதெல்லாம் நான் பயந்து ஓடி ஒளிந்துகொள்வேன்."

" பாட்டு ஏதேனும் ஞாபகமிருக்கிறதா ?"

" பாட்டாவது ஒன்றாவது ? புலவர் பாடியது பாட்டேயல்ல. இருந்தாலும், புலவர் அறம் பாடி விட்டால் ஆபத்து வந்துவிடுமே என்றெண்ணி இங்குள்ளோர் ஏதாவது இரண்டு சக்கரம், நாலு சக்கரம் கொடுத்தனுப்புவார்கள். (சக்கரம் என்பது திருவாங்கூர் செப்புக்காசு: ஏழு தம்பிடி மதிப்புள்ளது.) என் தகப்பனார் பெயர் சிவதாணுப் பிள்ளை; அவருக்குச் சர்க்கார் உப்புப் பண்டகசாலையில் உத்தியோகம். அவர்மீது புலவர் பாடிய ' பாடல் ' இதுதான், கேளுங்கள் :

" உவரேறி விளங்கும் உப்புப் பண்டகசாலைக்
கிறைமேல் உயர் உத்தியோகம்
சிவதாணுப் பிள்ளைக் கனுகூலம்
வீரபர நங்கை தானே.

இந்தப் பாட்டில் எதுகைமோனையோ சீர்தளை தொடையோ கருத்தோ நயமோ நீங்கள் தேடக்கூடாது. புலவருக்குத் தெரிந்தது இவ்வளவுதான். சனியன் ஒழியட்டும் என்றெண்ணியே ஏதாவது இரண்டு காசு கொடுப்பது வழக்கம்" என்றார்கள்.

பிறகு சொன்னார்கள்: "இந்த மாதிரிப் பயத்திலிருந்துதான், பாட்டைக்கண்டு பயப்படுவானேன், நாமே பாடினால் என்ன என்ற எண்ணமும் பாடும் ஆசையும் எனக்கு உண்டாயின. கொஞ்சம் கொஞ்சமாய்ப் பாட்டுப் பாடக் கற்றுக்கொண்டேன்."

"அக்காலத்தில் உங்களுக்கு நல்ல தமிழ்ப் படிப்பு உண்டோ?" என்று கேட்டேன்.

"படிப்பாவது ஒன்றாவது? எனக்கு அப்போது வயது குறைவு. தமிழ்ப் படிப்பு விசேஷமாக இல்லை. பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது பாரம் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சாந்தலிங்கத் தம்பிரான் சுவாமிகள் என்பவர் இங்கே வந்து தங்கியிருந்தார். அவரோடு எனக்குப் பழக்கமேற்பட்டது. அவர்தான் எனக்குத் தமிழ் கற்பித்தார்" என்று சொன்னார்கள். சுவாமிகளைப் பற்றிச் சொல்லும்போது அவர்களுக்கு மிக்க உற்சாகம் பிறந்தது.

"சுவாமிகளிடத்திலேதான் நான் முறையாகக் கொஞ்சம் தமிழ் படித்தேன். தமிழில் எனக்கிருந்த ஆர்வத்தைக் கண்டு எனக்குச் சொல்லிக்கொடுக்க அவர்களும் இசைந்தார்கள். சாதாரணமாக, உபாத்தியாயர்தான் மாணவனுக்கு இப்படி இப்படிப் படிக்கவேண்டும் என்று நிபந்

தனை விதிப்பார். ஆனால் நான் படிக்கத் தொடங்குமுன், ஆசிரியருக்கு நிபந்தனை விதித்தேன்" என்றார்கள்.

"என்ன நிபந்தனை?"

"முதலாவதாக, பாட்டை நெட்டுருப் பண்ணச் சொல்லக்கூடாது. எப்படியோ, எனக்குக் கண்மூடித்தனமாக மனப்பாடம் செய்யும் பழக்கம் வந்ததேயில்லை. இரண்டாவது, கவிதை படிக்கும்போது, பதவுரை, பொழிப்புரை, இலக்கணம் ஒன்றும் எனக்குச் சொல்லித்தர வேண்டாம். என்னைக் கேட்கவும் வேண்டாம். நான் படித்துக் கொண்டே போவேன்; கேட்ட சந்தேகத்தை மட்டும் தீர்த்து வைத்தால் போதுமானது. இந்த நிபந்தனைகளை சுவாமிகள் ஒப்புக்கொண்டார்கள். அதன்மேல் நான் படிக்க ஆரம்பித்தேன்."

"சுவாமிகளுக்குப் படிப்பு அதிகமோ?" என்று கேட்டேன்.

"நன்றாய்ப் படித்தவர்தான். அவரை, ஏராளமாய்த் தண்ணீர் தேங்கியுள்ள ஒரு பெரிய நீர்நிலைக்கு ஒப்பிடலாம். எல்லா விஷயங்களும் அவருக்குத் தெரியும். எந்தச் சந்தேகத்தையும் அவர் தீர்த்து வைப்பார். ஆனால், அவரை ஓர் இனிய ஊற்றென்று சொல்லமுடியாது. தம்முடைய அனுபவத்திலிருந்து, உணர்ச்சி வசப்பட்டு அவர் சொல்வதில்லை."

சுவாமிகளின் விருப்பத்துக்கிணங்க, பிள்ளையவர்கள் அந்த இளம் பருவத்தில் பாடிய நூல், **அழகம்மை ஆசிரிய விருத்தம்** என்பது; இது அவர்கள் தாயின் ஊராகிய தேரூரிலுள்ள தெய்வத்தின் மீது பாடப்பட்டதாகும். இது, பண்டைய புலவர்களும் பக்தர்களும் யாக்கையைப் பழித்தும் உலகைப் பழித்தும் பாடிவந்த போக்கையே தழுவிப் பாடப்பட்ட நூல். பத்துப் பாடல்கள் கொண்ட சிறு பதிகம். இதனுள்,

ஆற்றுப் பெருக்கையொத்(து) அழிகின்ற செல்வத்தை
அடைவதில் விருப்பு மில்லேன்
ஆண்டியாய் வேண்டிப் பசித்துண்டு நாள்தோறும்
அலைவதில் வெறுப்பு மில்லேன்

என்று இவர்கள் பாடியிருப்பதில், தம்பிரானுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. சம்பிரதாயமான பழைய பாணி. அழகான சொற்றொடர் அல்லவா ?

ஆனால் பிள்ளையவர்கள், இது தேகாப்பியாசம் போல ஒரு வகையான நா அப்பியாசம் என்று கருதினார்களே யன்றி, உண்மையான மனமகிழ்ச்சியை இது அவர்களுக்கு உதிப்பிக்கவில்லை.

" நான் இதில் சொந்தக் கருத்து அல்லது பொருள் எதையும் கூறவில்லை. பிறர் கருத்தைத் தானே எடுத்துப் பொதிந்து வைத்தேன் ? அதை அருமை என்று எண்ண என் உள்ளம் மறுத்து விட்டது. திருவிதாங்கூர் அரசாங்க ஊழியனாயிருந்துகொண்டு, 'செல்வத்தை அடைவதில் விருப்பும் இல்லேன் ; அலைவதில் வெறுப்பும் இல்லேன்' என்று சொல்வது போலிதானே ? இதனாலேயே இவ்வகையான பாடல்களை யார் மெச்சினாலும் எனக்கு மனநிறைவு ஏற்பட்டதில்லை " என்றார்கள்.

இப்பதிகம் பாடி வெளியிட்ட சமயம் இவர்கள் ஐந்தாம் பாரம் படித்துக்கொண்டிருந்தார்கள். உறவினரான சங்கரநாராயண பிள்ளை பெயரால் ஒரு முகவுரையும், நண்பரான சிதம்பரக்கூத்தையன் பெயரால் ஒரு சிறப்புப் பாயிரமும் எழுதிச் சேர்த்திருந்தார்கள். நண்பர் வேடிக்கையாகச் சொன்னார் : 'சிறப்புப் பாயிரம் நான் எழுதியது என்று போட்டிருக்கிறாயே ! அது என்னுடையதுதான் என்பதை நான் அறிந்துகொண்டு, பிறர் கேட்டால் பதில் கூறும்பொருட்டு, அச்சானதும் முதல் பிரதியை எனக்கு அனுப்பு' என்றாராம் !

இவர்கள் இந்நூலை இவ்வளவு வேடிக்கையாகக் கருதியும், அங்குப் பிரமுகராயிருந்த வலிய மேலெழுத்துச் சிவராமலிங்கம் பிள்ளை என்பவர் வேறு விதமாய் நினைத்தார்; " அப்பா, தேசிகவிநாயகம்! உனக்குத் தேவி சித்தி இருக்கிறது. அதனால்தான் இவ்வளவு அருமையாகப் பாட முடிந்தது " என்பது அவருடைய புகழ்ச்சி மொழிகள்.

'சிவராமலிங்கம்' என்ற பெயரைப் பற்றிச் சுவையுள்ள ஒரு குறிப்புக் கூறினார்கள். சிவராமலிங்கம் பிள்ளையை ஓர் உறவினர் பார்த்து விசாரித்தார். அவரோ தீவிர சைவர். திருமால் பெயரைக் கேட்டாலே காதை மூடிக் கொள்வாராம். 'சிவராமலிங்கம்' என்ற பெயரைக் கேட்டவுடனே சந்தோஷப்பட்டு, " அப்பா, நல்ல பெயர். அந்த ராமனைச் சிவனுக்கும் லிங்கத்துக்கும் இடையில் போட்டு நசுக்கு. மிக்க சந்தோஷம் " என்றாராம்.

* * *

" ஒற்றுமையின் உயர்நிலை " முதலான சிறு பாடல்கள் அனேகம் எழுதிய பிறகு தான் பாரதி நூல்கள் எனக்கு அறிமுகமாயின. அவற்றின் எளிமையும் உணர்ச்சி வேகமும் என் இதயத்தைக் கவர்ந்தன. அவற்றைப் பயின்ற பிறகு தான் இத்தகைய சுவைமிகுந்த பாடல்களை நாமும் எழுதவேண்டும் என ஊக்கம் உண்டாயிற்று. கண்ணம்மா பாட்டுக்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை. அவற்றின் கவிதையும் பாவமும் எப்போதும் நான் சுவைத்து இன்புறுவதுண்டு. இதன் பயனாய் விளைந்ததே புத்தபகவான் வாழ்க்கை பற்றிய பாடல்கள்.

" கவிதை யின்பத்துக்காகவே நான் கவிதை படித்தேன். ஆங்கிலக் கவிதையும் படித்தேன். எனக்கிருந்த மற்றொரு பொழுதுபோக்கு, சாசன ஆராய்ச்சி. பொழுது போக்குக்காகவும் எனக்குக் கிடைத்த இன்பத்துக்காகவுமே நான் தமிழ்க் கவிதைகள் பாடினேன். இவ்வாறு

விளைந்த கவிதைகளே மேற்சொன்ன புத்தர் பற்றிய கவிதைகள். எட்வின் ஆர்நால்டு எழுதிய ஆங்கிலம் படித்த போது, அதையொட்டித் தமிழில் ஆசிய ஜோதிப் பகுதிகளைப் பாடினேன்" என்றார்கள்.

ஆசிய ஜோதியில் அப்போது நினைவிலிருந்து சில வரிகளை நான் சொன்னேன். பெருங்கருணைப் புனித வள்ளல், அருளுருவாம் ஐயன், அருள்மாரி பொழியும் ஐயன், கருணை வள்ளல், தாய் போலும் தயவுடைய தரும மூர்த்தி—என்றெல்லாம் அவர்கள் புத்தரை அடைமொழி களால் தம் பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறார்களேயன்றி, புத்தரைப் பெயரால் குறிப்பிட்டது மிகவும் அருமை. அச் சமயம் நான் அவர்களுடைய பாடல் தொகுதியை அச்சிட் டிருந்தேனாதலால், இந்த நயத்தை ஞாபகத்திலிருந்தே எடுத்துக் கூறி, "இவ்வாறு பாடும் பக்குவம் உங்களுக்கு எப்படி அமைந்தது ? எப்படி அப்பியாசம் செய்தீர்கள் ?" என்று விளையாட்டாய்க் கேட்டேன்.

ஆழ்ந்த யோசனையோடு அவர்கள் சொன்னார்கள் : "இரவில் நான் உறங்கப் புகும்போது புதிதாய்ப் பாட வேண்டிய பகுதியைப் பாடிப் பழக்கம் செய்துகொண்டே படுப்பேன். விடியற்காலையில் எழுந்தவுடன் அப்பகுதி யைப் பாடி முடித்துவிடுவேன். பாட்டுக்கள் அனாயாச மாக வரும். புத்தர் சரிதப் பகுதியில் பாடிய பாடல்கள் யாவும், இயல்பாக அதிக முயற்சி இல்லாமலே இவ்விதம் பாடியவை" என்றார்கள்.

நாங்கள் பேசிய நேரம் முழுமையும் கவிதையைப் பற்றித் தான். கவிதை ஒழிந்த இலக்கியம் பேச்சில் குறை வாகவே இடம் பெற்றது. "கவிதை என்பது படைப்பு ; அழகையும் அனுபவத்தையும் சொல்லால் புதிதாக ஆக்கு தல். ஒரு பூவை எடுத்தால் இதழ் வேறு, புறவிதழ் வேறு, பிற பகுதிகள் வேறு எனப் பிரித்துப் பார்க்கமுடியுமா ? அப்படியே தான் கவிதையும். செடியைப் பார்த்தால்

அப்படியே கும்பிட்டு வணங்கத் தோன்றுகிறது. அதன் தத்துவங்களை எண்ணி எண்ணி எல்லையில்லாத இன்பம் உதிக்கிறது. இறைவனையே அதனிடம் காணமுடிகிறது. செடியில் இலை வேறு பூ வேறு என்று பிரிப்பதில் சுவையில்லை. கவிதையும் அதுபோலவே தான். தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க மனமில்லை. முழுமையும் தொகுத்தே நான் சுவைத்து இன்புறுகிறேன். இங்கு இலக்கணத்துக்கு இடமில்லை '' என்றார்கள் ஒரு சமயம்.

''கவிதை பாடுபவனுள்ளத்தில் முன்னமே என்னதான் கொந்தளிப்பு இருந்தாலும், அந்த நேரம் சாந்தி குடிகொண்டிருக்க வேண்டும். நம் பண்பாட்டில் சாந்தமே சிறப்பு. அதிலிருந்து ஆனந்தம் பிறக்கிறது. ஆனந்தத்திலிருந்து கவிதை எழவேண்டும். எந்த உணர்ச்சியாலும் அமைதியிழந்தவன், நிலையில் நீங்கிய மனிதனே; அவன் திருத்தமானவன் அல்லன், பூரணமானவனும் அல்லன். ஆகவே அவனிடம் உதிப்பது கவிதையாயிராது'' என்று தொடர்ந்து கூறினார்கள்.

பிள்ளையவர்களுடைய பாடல்களிற் சில ஆங்கிலத்தைத் தழுவியவை. குருட்டுப் பையன், முதல் துயரம் முதலியன உதாரணங்கள். நான் அவர்களைக் கேட்காமலேயே அவர்கள் எழுதிய **ஆறு** என்று பாடல் 'குட்ரிச்' என்ற ஆங்கிலப் புலவர் எழுதிய பாடலைத் தழுவியது என்று கவிதைத் தொகுதி இரண்டாம் பதிப்பில் குறிப்பிட்டிருந்தேன். அவர்களுக்கு எழுதி இவ்விவரங்களைத் தெரிந்துகொள்ள வழியேயில்லை. ஏனெனில், எழுதிய பாடல் அவர்களுக்கு ஞாபகமும் இராது, பிரதி எதுவும் கைவசமும் இராது. ஆகவே ஒரு பாடலுக்கு வேற்றுமொழியில் மூலம் உண்டா இல்லையா என்பது எப்படி ஞாபகம் இருக்கும்?

இந்த நிலையில் ஆறு என்ற பாடல் சம்பந்தமாய் நான் எழுதிய அடிக்குறிப்பைப் பார்த்தார்கள். ''நீங்கள் இவ்விதம் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் இக்குறிப்பைப் படிக்கிற

வரையில் இப்படியொரு ஆங்கிலப்பாடல் உண்டென்பது எனக்குத் தெரியாது. அதை நான் இன்னும் பார்த்ததில்லை. எனினும், என்னைப் போலவே மற்ருெரு கவிஞனும் எண்ணியிருக்கிருன் என்பதறிந்து இப்போது நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்ருர்கள். "நீ இப்படித் தவருக எழுதிவிட்டாயே! இது என்னுடைய பெருமைக்குக் குறைவல்லவா?" என்பது போன்ற எண்ணத்தின் சாயை கூட அவர்களிடம் அப்போது காணப்படவில்லை.

தொடர்ந்து சொன்ஞர்கள்: "ஹுட் என்ற ஆங்கிலக் கவிஞர் எழுதிய **சட்டையின் கீதம்** என்ற ஆங்கிலப் பாடலைப் படித்தபோது மனம் மிகவும் உருகிவிட்டது. நெடுநாள் அதை மறக்கவே முடியவில்லை. மேலும் அந்த நிலையில் ஒரு பிச்சைக்காரியைப் பார்த்து மிக்க வேதனை யடைந்திருந்தேன். அது காந்தியடிகள் ராட்டைப் பிரசாரம் செய்து வந்த சந்தர்ப்பம். கதர் முரட்டுத் துணி என்று அனேகர் பழித்த சொல்லும் என காதில் விழுந்திருந்தது. இவை அனைத்தின் அடிப்படையிலும் எழுந்ததே – **கதர் விற்பனை** என்ற பாட்டும், அதிலுள்ள

அஞ்சு வயதுமகள் கோலமிட்டால்—அதை
அழகில்லை என்றழிக்கும் தாயரும் உண்டோ?

என்ற வரிகளும்" என்ருர்கள்.

"மொழிபெயர்க்க உமார் கய்யாம் பாடலை எப்படித் தேர்ந்து கொண்டீர்கள்? என்று கேட்டேன்.

"சிறப்பான காரணம் ஒன்றுமில்லை. எத்தனை நாளைக்குத்தான் ஆங்கிலப் புலவர்களையும் வடமொழிப் புலவர்களையும் மொழி பெயர்ப்பது? கருத்துப் புதுமைக்காக இப் பாரசீகப் புலவர் இருக்கட்டும் என்று எண்ணித்தான் இவர் பாடல்களைப் படித்தேன். நயமாயிருந்தது கண்டு பின் சிலவற்றை மொழிபெயர்த்தேன்" என்ருர்கள்.

* * *

இடையில் "எனக்கு நீங்கள் ஓர் உபகாரம் செய்ய முடியுமா ?" என்று கேட்டார்கள்.

என்னவென்று விளங்காமல், "என்ன காரியத்தைச் சொல்கிறீர்கள் ?" என்று கேட்டோம்.

"இன்று உலகமெங்கும் ஒரே ஆரவாரம், எல்லாம் ஆடம்பரமயம். கோதுமை அல்வாவைக் கோதுமை அல்வா என்றால் பலருக்குத் திருப்தி உண்டாவதில்லை. காசி அல்வா என்று அதையே சொல்லிக்கொள்வதில் ஒரு தனியான ஆசை. இந்த ஆசை உண்மையிலேயே ஆரவாரமோகத்தால் எழுந்தது. அதுபோல் சில நாட்களுக்குமுன் சிலர் கூடி எனக்குக் கவிமணி என்ற ஒரு பட்டம் வழங்கியிருக்கிறார்கள்."

"ஆம் ; பத்திரிகைகளில் பார்த்தோம். அனேக மணி களில் நீங்களும் ஒரு மணி ; ரசிகமணி, கவிமணி, சிவக் கவிமணி...என்று பல மணிகள்" என்று நான் கிண்டலாகச் சொன்னேன்.

"ஆம். அதையே தான் நான் குறிப்பிடுகிறேன். எனக்கு இந்த ஆரவாரமோகம் இல்லை. இது உண்மையில் எனக்குப் பிடிக்கவில்லை. என் பாட்டைக் கண்ணினால் பார்த்திராதவர்கள் கூட, நீங்கள் ஒரு புத்தகம் போட்ட வுடன் 'அடாடா, கவிமணியா' என்கிறார்கள். எனக்கு இது சற்றும் பிடிக்கவில்லை. நீங்கள் செய்யும்படி நான் கேட்கும் உபகாரம், பேச்சிலோ எழுத்திலோ, கவிமணி என்ற தொடரை உபயோகிக்காமலிருப்பதுதான்" என்று சொன்னார்கள்.

வசனகவிதை என்று இக்காலத்தில் ஆங்கிலப் போக் கைத் தழுவி எழுதி வரும் எழுத்துக்களை இவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. "கவிதை என்பது உருவம் உடையது. கருத்தை எடுத்து உணர்த்துவதுமட்டும் அதன் நோக்க மாகாது. உணர்த்தும் முறையும் பாவமும் உருவமும் முதன்மை வாய்ந்தவை. ஆனால் இவர்கள், 'நாங்கள்

உணர்ச்சி வசப்பட்டுக் கருத்துக்களைக் கொட்டி யிருக்கிறோம். சொல்லைத்தேடி, சீர்களைத்தேடிக் கவிதை அமைக்க அவகாசமில்லை. ஆதலால் வசனகவிதை செய்தோம்' என்கிறார்கள். இது பொருத்தமில்லை என்றே எனக்குப் படுகிறது. உருவம் அமைக்க முடியாதபோது வசனமே போதுமானது. வசனத்தில் கருத்தில்லையா? அழகிராதா? கவிதை என்ற சொல்லை உபயோகித்து அதற்கு உருவமில்லாமற் செய்வது எனக்கு முறை என்று தோன்றவில்லை. இது, வசனத்தை எழுதிவிட்டு, அச்சுக் கோக்கும் கம்பாஸிட்டரை அழைத்து 'தம்பி, உன் சௌகரியம்போல் வரிகளை நீட்டியும் மடக்கியும் போட்டுக் கொண்டுவா, அதற்குக் கவிதை என்று நாங்கள் பெயரிட்டு விடுகிறோம்' என்று கூறுவதுபோலாகும்" என்று சொல்லி முடித்தார்கள்.

"கவிதையைக் கவிஞன் எழுதி வெளியிட்டுவிட்டால் எல்லோருக்கும் அது பொதுச் சொத்தாகிறது. தோட்டி முதல் தொண்டைமான் வரையில் படிக்கிறார்கள். அல்லது படிக்கலாம். பிச்சைக்காரனும் படிக்கலாம். அவனும் அதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லலாம். விமரிசனம் செய்யலாம். வரையறை இருக்க முடியாது. கவிதை ஒரு விருந்து மாதிரி. விருந்தைப் பணக்காரருக்கும் படைக்கிறார்கள், பிச்சை கேட்பவருக்கும் படைக்கிறார்கள். செல்வமுயுள்ளவன் பலவகை விருந்துகளைப் பார்த்திருக்கிறான், அனுபவித்திருக்கிறான். எது எப்படி என்று ஆராய்ந்து விமரிசனம் சொல்கிறான். பிச்சைக்காரர் பலருக்கு விருந்தின் பண்ட வகைகள் பழக்கமில்லாதன, புதியன. அவன் தெரிந்து தான் சொல்ல வேண்டுமென்பதில்லை. தனக்கு பழக்கமில்லாத காரணத்தாலேயே இது இப்படி என்று ஒவ்வொன்றைப் பற்றியும் விமரிசனம் செய்கிறான். உப்பில்லை என்கிறான். காரமில்லை என்கிறான். அவனைக் குறை சொல்ல முடியுமா? கவிதையும்

அதைப் போலவே. கவிதையே அறியாதவர்கள், இலக்கியங்களையே அறியாதவர்கள் கூட, அதுபற்றிக் குண தோஷம் கூறும் உரிமை படைத்திருக்கிறார்கள். யாரும் மறுப்பதற்கில்லை. ஆகையால் கவிஞனுடைய வேலை எச்சரிக்கைக்குரியது. ஆராய்ச்சியானது, இப்படியென்று திட்டவட்டமாய்க் காரண காரியங்களைத் தொடர்பு படுத்திக் கூறுவதால், பிறர் சொல்லுக்கு அஞ்ச வேண்டிய தில்லை" என்று விளையாட்டாகக் கூறினார்கள்.

இதைப் பற்றி ஒரு வேடிக்கைப் பாட்டும் சொன்னார்கள். கல்லாதோர் ஆராய்ந்துதான் எதையும் சொல்ல வேண்டும் என்பதில்லை. ஆராயாமல் சொன்னதற்காக அவர்களை யாரும் பழி கூறப்போவதும் இல்லை.

கற்றோர்க்குத் தாழ்கையிலை
கல்லாதோர்க் கோர்கையிலை
உற்றபசி கொண்டோர்க்கும்
ஓர்கையிலை—வெற்றி தரும்
சம்புவுக்கும் ஓர்கையிலை
தானுண்டு தாரணியில்
நம்புவோம் இத்தனையும் நாம்!

இதைத் தொடர்ந்து இன்று வெளிவரும் புத்தகங்களைப் பற்றிப் பேச்சுவந்தது. "ஆசிரியர்கள் இன்று புத்தகம் எழுதுகிறார்கள் என்று கருதமுடியாது. பாடப் புத்தகக் கமிட்டிகளும் சர்வகலாசாலை போர்டுகளும் உள்ளன. வெளியீட்டாளர் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதிகள், கமிட்டி, போர்டு என்று போய்ச் சதா குளவி கொட்டுவது போல் கொட்டிவருகிறார்கள். அவர்கள் முயற்சியால் புத்தகங்கள் விருத்தியாகின்றன. எழுத்துக்கோ சிந்தனைக்கோ அங்கு இடமில்லை. எல்லாம் வெளியீட்டாளரின் பிழைப்

தாழ்கை - தாழ்வு. ஓர்கை - ஆராய்வு. ஓர் கை இலை; ஒரு கையில் உண்பதற்கான இலை. ஓர் கயிலை - கயிலாயம்.

புக்கான வேலை யொன்றுதான் மிச்சம். பாட புத்தகங்களை நிர்ணயம் செய்வதும் வெளியிட்டாளர்களே. என் புத்தகம் இரண்டு, உன் புத்தகம் இரண்டு என்று பிள்ளைகள் தலையில் புத்தகம் சுமத்தும் வேலையைத் தங்களுக்குள்ளாகவே பங்கு போட்டுக் கொள்ளுகிறார்கள். இதுபற்றி டி. கே. சி. யவர்கள் பாட்டு எழுதியது. எவ்வளவோ பொருத்தந்தான்" என்று கூறினார்கள்.*

*　　　　*　　　　*

கவிதை பாடுவதைவிட இவர்கள் மனம் அதிகமாகத் தமிழ் ஆராய்ச்சியையும் இலக்கிய ஆராய்ச்சியையுமே நாடியிருக்கிறது. இவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல. பேச்சில் எந்நேரமும் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் வந்துகொண்டேயிருக்கும். இவர்களுடைய ஊர் புத்தேரி. "ஆராய்ச்சிக்காரர்கள் இது புத்தர் சேரியாயிருந்து புத்தேரியாயிற்று என்கிறார்கள். இது அறியாமையிலிருந்து விளைந்த ஆராய்ச்சிக் கூற்று. இவ்வூர் புற்று உடைமையால் புற்றேரி. புற்றேரியே புத்தேரி" என்று சொல்லிச் சிரித்தார்கள்.

சிறைமடம் என்ற ஊரைக் குறிப்பிட நேர்ந்தது. அவ்வூர்ப் பெயரின் பொருள் அனேகருக்கு விளங்கியதில்லை. "இவ்வூரில் சுப்பிரமணிய சுவாமி ஆலயம் உண்டு. தேவர்களைச் சிறை மீட்டவன் முருகப் பெருமான். ஓலைப் பிரமாணங்களில் இவ்வூரின் பெயர் சிறைமீட்டம் என்றே காணப்படுகிறது. 'விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்' என்பதல்லவா

---

*"எழுதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருக்கின்றார் மாணவர்கள் எண்ணில் பல்லோர்
எடுத்தெடுத்து விலைகொடுக்கப் பெற்றோர் தாமும்
இருக்கின்றார், இருக்கின்றார், இருக்கின் றாரே"

என்பது அப்பாட்டு.

திருமுருகாற்றுப்படைத் தனிப்பாடல்?" என்று இவர்கள் கூறினார்கள்.

தங்கள் நாட்டிலும் ஊரிலும் இவர்களுக்கு நிரம்பப் பற்று உண்டு. "சொல்லுக்குத் தேரூர், சுசிக்குச் சுசிந்தை, இருக்கப் பறக்கை, யாபிக்கக் கோட்டாறு" என்ற வழக்கு மொழியை எடுத்துக் காட்டுவார்கள்.

ஆராய்ச்சியில் மனம் அதிகமாய் ஈடுபடுவதாக அவர்களே விளக்கியும் சொன்னார்கள். ஆராய்ச்சியில் ஸ்தூலமாகப் பொருள்களை நிரூபிக்க முடிகிறது. திட்டமான சில தகவல்களைப் பார்த்துத் திட்டமான முடிவுக்கு வரமுடிகிறது. கவிதை அப்படியன்று. "கவிதையைக் கண்டேனென்று சொல்லுவது கடவுளைக் கண்டேனென்பது போல. அதுபோலத்தான், பட்சியைக் கண்டேன், மிருகத்தைக் கண்டேன் என்பதில்லை. ஒவ்வொன்றிலும் எத்தனையோ பாகுபாடு, எத்தனையோ இனம். இன்ன பிராணி என்று குறித்துத்தான் பேசுவோமே யொழிய, பொதுவாய்ப் பேசுவதில்லை. கவிதையிலும் அவ்விதமே. இன்ன கருத்து, இன்ன பாவம், இன்ன உருவம் என்று பேசலாமே யன்றி, பொதுவாய்க் கவிதை என்று பேசினால் ஒருவர் கூற்றை மற்றவர் உணர்வதோ ஒப்புக்கொள்வதோ கடினம்" என்றார்கள்.

அடுத்து டி. கே. சி யவர்களுடைய ராமாயணத்தைப் பற்றிய பேச்சு வந்தது. பதிப்பையும் அவர்களுடைய கவிதைப் பண்பையும் வெகுவாகப் போற்றியபின், கூறலானார்கள். "ஒத்த உணர்ச்சியுடைய இதயந்தான் கவிதையை உணரமுடியும். ஒரே சுருதியுடைய கருவிதான் நாதத்தை ஏற்றுத் தானும் மீண்டு ஒலிக்கவல்லது. நீங்கள் பௌதிக நூல் பயின்றிருந்தால் ஒலி என்ற பாடப்பகுதியில் இதன் உண்மையை உணர்ந்திருப்பீர்கள். கவிதையுணர்ச்சியும் அதை யொத்ததே. உணர முடியாவிட்டால் எங்கோ கோளாறு என்று நாம் கருதலாம். பழிப்போரிடம் ஒத்த

சுருதியில்லை என்பது தெளிவு. வேறு விதமாய் இதையே கூறுவதானால், நம்முடைய அளவுகோல் ஒன்றாயிருக்க வேண்டும். டி. கே. சி. யவர்களுடைய அளவுகோலை அனேகர் பார்த்ததில்லை. இலக்கணம், சம்பிரதாயம், யாப்பு போன்ற சாமானிய வெளி விவகார அளவுகோல்களை எடுத்துப் பிறர் அளக்கிறார்கள். அழகுணர்ச்சி, கவிதா பாவம் என்ற இதயத்தை யொட்டிய அளவுகோலை எடுத்து டி. கே. சி. அளக்கிறார்கள். இந்த அளவுகோலைப் புரிந்து கொள்ளமுடியாதவர்கள் அவர்களைக் குறைகூறுகிறார்கள். குறை அவர்கள்மேலில்லை " என்கிறார்கள்.

இதைப்பற்றிப் பேசியபோது மேலும் கூறினார்கள் ; "நம் காலத்தில், வேண்டாததை அகற்ற ஒரு சங்கம் அமைத்தால் நல்லதெனத் தோற்றுகிறது. ஆனால் ஒருவேளை, காலம், தானே இந்த வேலையைச் செய்து கொண்டாலும் கொள்ளலாம். பொற்றாமரை வாவியில் மிதந்த சங்கப் பலகையை மீண்டும் நமக்குத் தரவேண்டுமென்று சொக்கலிங்கமூர்த்தியைப் பிரார்த்தியுங்கள் ; நானும் பிரார்த்திக்கிறேன். தேவையற்ற, ஆழமில்லாத, கருத்துக்குறைபாடான, பிழையான விமரிசனங்கள், ஆராய்ச்சிகள், இன்று பெருகிவிட்டன. இவற்றைப் பலகையிலிட்டால் தக்கவை மிஞ்சும், தகாதவை தாமே அழிந்துபடும். டி. கே. சி. யவர்கள் பதிப்புப் போன்றவை மட்டுமே அன்று மிஞ்சும்" என்றார்கள்.

ராமாயண இடைச் செருகல்களையும், டி. கே. சி. இடைச் செருகல் என்று எண்ணற்ற பாடல்களை நீக்கியிருப்பதையும் பற்றிப் பேச்சு வந்தது. தயக்கமின்றி அவர்கள் சொன்னார்கள் ; " என்னைப் பொறுத்தவரையில், டி. கே. சி. கருத்து எனக்கு உடன்பாடு தான். அர்த்தமில்லாமல், கவிதை யுணர்ச்சிக்குப் புறம்பான இடைச் செருகல்கள் பல்லாயிரம் கம்பராமாயணத்தில் வந்து புகுந்துவிட்டன. என்காலத்திலேயே இதற்குச் சான்று

கள் நான் காட்டமுடியும். " சுசீந்திரேசம் பிள்ளை என்ற அன்பர் ஒருவர் இருந்தார். பண்டிதர். நாங்கள் எல்லோரும் அண்ணச்சி என்று பிரியமாக அவரை அழைப்பது வழக்கம். மாரீச மானைத் தொடர்ந்த ராமன், பின்சென்று அம்பு எய்ய, அடிபட்ட மாய மான் 'ஹே சீதா, ஹே லக்ஷ்மணா' என்று ராமனுடைய குரலில் கத்திக் கீழே விழுந்த கட்டத்தில் இரண்டு பாடல்கள் அதிகம் எழுதி யிருந்தால் நல்லது. இப்போதுள்ள ராமாயணத்தில் பாடல்கள் இல்லை. புத்தகங்கள் இப்போது அச்சாகி விட்டன. அச்சாகாமல் ஏடாக இருந்தால் நான் எழுதிச் சேர்த்து விடுவேன் " என்று இவர் அடிக்கடி சொல்வது வழக்கம். அச்சு வந்த பிறகு ஓரளவு கம்பர் பிழைத்தார். அதற்கு முன், எதுவும் கம்பர் பாட்டாகிவிட முடியும் என்ற நிலைமை தான் " என்று கூறினார்கள்.

* * *

கவிஞருடன் ஒருநாள் என்று தலைப்புக் கொடுத்தேன். ஒரு நாள் அல்ல; ஒருவிநாடி நேரம் போல் தோற்றியது. ஆனால், ஒருயுகப் படிப்பின் அனுபவம் வந்துவிட்டது. ஒரு நாள் இருந்தே நான் திரும்பிவந்துவிட்டேன் என்றாலும், ஆயுள் முழுமைக்கும் வேண்டிய தூண்டுதலும், சிந்தனைக் குக் கருத்தும் இன்பமும் பெற்றேன் என்றால் மிகை யாகாது.

வினோபா பாவே

க

வினோபாவும் தமிழும்

சேவாகிராமத்துக்கு அருகிலுள்ள பவுனார் என்ற சிற்றூரில் ஒரு தனி வீட்டில் வினோபா வாழ்ந்து வருகிறார். இந்திய நாட்டின் பாஷைகள் பலவற்றைக் கற்பதும், தம்முடன் வசிக்கும் ஊழியர் சிலருக்குச் சம்ஸ்கிருத மொழி கற்பிப்பதும், நூல் நூற்பது பற்றித் தக்ளியிலும், ராட்டையிலும் பலவகை ஆராய்ச்சிகள் நடத்துவதுமே அவருக்கு இப்பொழுது பொழுதுபோக்கு.

வினோபா பாவேயின் பெயர், 1940 ஆம் வருஷம் காந்தியடிகள் சர்க்காரின் யுத்தக் கொள்கையை எதிர்க்குமுகத்தால் தொடங்கிய தனிப்பட்டோர் சத்தியாக்கிரக இயக்கத்தால்தான் இந்நாட்டுக்கே முதன் முதலில் தெரிய வந்தது. முதல் சத்தியாக்கிரகியாக, காந்தியடிகள் இவரையே அனுப்பினார். நெடுங்காலம் காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்திலும், சேவாகிராம ஆசிரமத்திலும் வாழ்ந்து, சத்தியம் அஹிம்சை என்ற தத்துவங்களில் பூரணமாய் இவர் தோய்ந்திருந்தார்.

பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த மகாராஷ்டிரப் பிராமணரான வினோபா, தம் தாய்மொழியான மராத்தி மொழியில் புலமை மிக்க பண்டிதர். தாம் எழுதிய நூல்கள் யாவும் மராத்தியில்தான் எழுதினார். காசி சென்று சம்ஸ்கிருதம் பயின்றார். அவருடைய கல்வியின் ஆழத்தையும், வாழ்க்கையின் எளிமையையும், உள்ளத்தின் சீலத்தையும் நன்கு உணர்ந்தவர்கள், அவரை மகரிஷி என்றே சொல்வார்கள்.

விநோபா தமிழ்மொழியை நன்கு பயின்று வருகிறார் என்று, நான் சேவா கிராமம் வருமுன், சென்னையிலேயே கேள்வியுற்றிருந்தேன். இங்கு வந்தபின், ஒரு ஞாயிற்றுக் கிழமை ஓய்வு கிடைத்தபோது, சில நண்பர்களோடு, அவரைப் பார்க்கப் பவுனார் சென்றேன். என்னை அவருக்கு அறிமுகப்படுத்திவைத்த நண்பர், காசி ஹிந்து விசுவ வித்தியாலயத்தில் நான் 'புரொபஸர்' ஆக இருந்தவன் என்று கூறினார்.

"ஓ, பேராசிரியர்?" என்று சிரித்துக்கொண்டே கூறி, விநோபா என்னை வரவேற்றார். பிறகு என்னுடைய தமிழ்ப் படிப்பையும், நூல்களையும், செய்துவரும் வேலையையும் விசாரித்தார். நான் சொல்லி வந்தேன்.

அவர் கேட்ட கேள்விகள் யாவும் ஹிந்திமொழியில்; நான் பதில் சொல்லியது ஆங்கிலத்தில்; ஹிந்தி பேசத் தெரியாமையால் இந்த நிலைமை எனக்குச் சங்கடமாயிருந்தது. இதை அவரே உணர்ந்து, "நீங்கள் தமிழிலேயே பேசுங்கள்; பேசுவது எனக்கு நன்றாய்ப் புரியும். காதில் கொஞ்சம் தமிழ் சப்தமாவது விழட்டும்; எனக்கு மிக்க உற்சாகமாயிருக்கும். அன்றியும், எனக்குள்ள சொற்பத் தமிழறிவும் மறந்துபோகாமல் காத்து வளர்த்துக்கொள்ள இது உதவியாயிருக்கும்" என்று கூறினார்.

தமிழில் பேசுவது, இதைவிட எனக்கு அதிக உற்சாகம் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. தமிழில் சொல்லியது ஒவ்வொன்றையும் மிகவும் நுட்பமாய்த் தெரிந்துகொண்டு பேசினார். பேசிக்கொண்டிருக்கையிலேயே, எழுந்து ஓர் அலமாரியைத் திறந்து, தாம் வைத்திருந்த பாரதியார் பாடற் புத்தகத்தை எடுத்துக் கையில் கொடுத்தார். புத்தகத்தைப் பிரித்தால், அவர் படித்துக் குறிப்பெழுதிய இடங்களும், அடையாளமிட்ட இடங்களும் பல காணப்பட்டன. குறிப்புக்கள் அவர் தாய்மொழியான மராத்திமொழியில் இருந்தன.

புத்தகத்தைக் கையில் வைத்துப் புரட்டிக்கொண்டிருந்தபோது "படியுங்கள்" என்று சொன்னார். "எதைப் படிப்பது?" என்று கேட்டேன். புத்தகத்தைக் கையில் வாங்கி, 'பகைவனுக் கருள் வாய்' என்ற பாடலை எடுத்துக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அவருக்குப் பாட்டில் விருப்பமதிகம். நான் பாடவேண்டுமென்று அவர் எண்ணினார். எனக்குப் பாடத் தெரியாமையால், வசனம்போல் வாசிக்கத்தான் முடிந்தது. இதையும் அவர் விருப்பத்தோடு கேட்டு வந்தார். 'சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடும் செய்தியறியாயோ?' என்ற வரி வந்தபோது, சிப்பி என்பது என்னவென்று உடனிருந்தவர்களிடம் ஆங்கிலத்திலும், மராத்தியிலும் விளக்கம் சொன்னார். பிறகு "முத்து என்பது சம்ஸ்கிருதத்தில் முக்தம் என்று வழங்குகிறது. வடநாட்டில் முத்துக் குளிக்கும் தொழில் இல்லை. இது தென்னாட்டில் கீழ்க் கடற்கரையில்தான் உண்டு. இத் தொழில் தமிழ்மக்களுக்குத்தான் உரியதாயிருந்தது. ஆதலால் சொல்லும் அவர்களுடையதாகத்தான் இருக்க வேண்டும்" என்று தாமாகக் கூறினார்.

இதன்பின் பல பாடல்கள் படித்தோம். முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கவை, 'தீராத விளையாட்டுப் பிள்ளை' 'விடுதலை' என்பன. பிந்திய பாட்டில் அவர் மிகவும் ஈடுபட்டார். ஒருமுறை படித்துக் காட்டியபோது; அவரும் பாடி வந்தார். அதன்பின் இரண்டாம் முறையாக "நான் படிக்கிறேன் கேளுங்கள்" என்று சொல்லிப் படிக்க ஆரம்பித்தார்.

'படிக்க' என்று நான் சொல்வது பிழை; உண்மையில் பாடத்தான் பாடினார். 'பறையருக்கும் தீயருக்கும் புலையருக்கும் விடுதலை' என்ற இந்தப் பாட்டு, கம்பீரமாய்த் தாளத்தோடு பாடக்கூடியது. காங்கிரஸ் தொண்டர்படைகள் காலையில் அணிவகுத்துச் செல்லும்போது, இப்பாடலைத் தாளத்துக்கிசையப் பாடி அடிவைத்துச் செல்வார்கள்.

என்னுடன் வந்திருந்த நண்பர்களில் ஒருவர் இதில் பழகியவர். இந்த முறையில் நண்பர் ஒரு தடவை படித்ததை விநோபா மிக்க கவனமாய் ஊன்றிக் கேட்டுக்கொண்டிருந்தார்; கேட்டது மட்டுமன்று, உடன் தாளமும் போட்டு வந்தார். ஆகவே, மறுமுறை தாமாகப் படிப்பதாய்ச் சொன்னபோது, இத்தாளத்தைத் தொடர்ந்து போட்டுக் கொண்டு பாடலானார்.

அவருக்கு வயதோ ஐம்பதுக்கு மேலாயிற்று. காலமோ கடுங் குளிர்காலம். தமிழ்மொழியோ, முற்றிலும் அன்னியமொழி. எனினும் அவர் பாடியபோது, ஒவ்வொரு சொல்லும் சீரும், ஆணியறைந்தாற் போலக் கணீரென்று ஒலித்தன. முதிர்ந்த பிராயத்தில் யாருக்கும் குரல் கொஞ்சம் கனத்திருக்கும்; ஆனால், இயல்பாகவே, அவர் குரல் அந்த வயதிலும் மிக்க கம்பீரமாய்க் கணீரென்று ஒலித்தது. அந்தக் குரலில் அவர் இந்தப் பாட்டைப் பாடியபோது, அவருடைய அளவில்லாத உற்சாகமும் கலந்து, கேட்டோருக்கு மிக்க மனவெழுச்சி தருவதாயிருந்தது. 'ஜாதியில் – இழிவுகொண்ட மனிதரென்பதிந்தியாவில் இல்லையே' என்று புத்தகத்தில் அச்சிட்டிருந்தது. இதை அப்படியே ஒரு முறை பாடிவிட்டு, "'மனிதர் என்பது – இந்தியாவில்' என்று தானே சந்தி பிரிக்கவேண்டும்?" என்று கேட்டு விட்டுப் பின்னும் படித்தார்.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்ற வரியைப் படித்தபின், கொளுத்துவோம் என்ற சொல்லின் பொருளைத் தெளிவாக்கிக்கொண்டார்; பின் அதே வரியைப் பலமுறை படித்தார். படிக்குந்தோறும் தாளம் நிற்கவில்லை. கூட இருந்த மராத்தியர்கள் எல்லோரும், பாட்டுத் தெரியா விட்டாலும் பொருள் தெரியாவிட்டாலும் கூட, தாளம் போட்டுக் கொண்டேதான் இருந்தனர்.

இப்பாட்டு முடிந்தபின், சுதந்திரப் பள்ளு என்ற பாடல் படித்தோம். அதன் தலைப்பில் போட்டுள்ள 'பள்ளர் களியாட்டம்' என்ற குறிப்பின் பொருளைக் கேட்டார். அதை நன்ருய் விளக்கியபின், பாடல் முழுமையும் படித்தோம். அதில் பல இடங்களில் அவர் மனம் ஈடுபட்டது. சிறப்பாக, 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற கருத்தை அவர் மிகவும் பாராட்டினர். அன்றும், மறுநாளும் அடிக்கடி அவ்வரியையே சொல்லிக் கொண்டிருந்ததுண்டு. பாட்டின் கடைசியில் அமைந்த வரி, அன்று நாங்கள் படித்த பகுதிகளுக்கெல்லாம் முடிவுரையாக அமைந்தது.

முதலில் அவர் எங்களைப் படிக்கும்படி சொன்ன பாடல், 'பகைவனுக்கருள்வாய்' என்ற பல்லவியோடு தொடங்குகிறது. உத்தம சத்தியாக்கிரகியான விநோபாவின் மனம் இந்தப் பாடலில் ஈடுபட்டதில் வியப்பில்லை. பகைவனிடத்தில் கோபம் கொள்வதோ, அவனுக்கு ஹிம்சை செய்வதோ நினைப்பதோ, உண்மையான அஹிம்சையாகாது. உத்தம அஹிம்சாவாதியான கிறிஸ்து நாதர், "பகைவன் உன்னை ஒரு கன்னத்தில் அடித்தால், மற்ருெரு கன்னத்தையும் அவனிடம் காட்டு" என்று கூறினர்; இது தனக்கு உண்மையிலேயே கோபம் பிறவாதிருக்கும் பொருட்டுச் செய்த உபதேசமாகும். இதேபோல, பாரதியாரும், 'தின்னவரும் புலி தன்னையும் அன்பொடு சிந்தையில் போற்றிடுவாய்' என்று தம் நெஞ்சுக்குக் கூறி, பகைவனுக்கு அருளும்படி, அதாவது அன்பு காட்டும்படி, சொல்லிய உபதேசம் விநோபாவின் உள்ளத்தையே திறந்து காட்டியது போலிருந்தது.

இந்தப் பாடலோடு தொடங்கிய அன்றைய பேச்சு, 'பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்' என்ற வரியோடு முடிந்தது, எல்லா விதத்திலும் பொருத்தமாயிருந்தது.

இவ்வரியையே பல முறை அவர் திருப்பித் திருப்பிப் பாடி இதிலேயே திளைக்கலானார்.

* * * *

இவ்விதக் கருத்தொற்றுமைகளால் விநோபாவுக்கு, பாரதி பாடல்களில் விருப்பமதிகம். இவ்விருப்பத்துக்கு வேறொரு காரணமும் உண்டு. அதையும், மறுநாள் சந்தர்ப்பம் வந்தபோது விளக்கமாய்க் கூறினார்.

காலையில் நடந்து போய்க்கொண்டிருந்தபோது, திடீரென அவர் சொல்லலானார்; "நான் படித்த ஒரு சுலோகத்தின் கருத்து ஞாபகம் வருகிறது. தோண்டத் தோண்ட மணலில் நீர் சுரக்கிறது. அது போல, குருவினிடம் மாணாக்கன் கற்கக் கற்கப் புது விஷயங்களை அறிகிறான் என்பது அக் கருத்து. இதேபோல் நீங்கள் தமிழில் ஒரு பாடல் சொல்ல முடியுமா?" என்று கேட்டார். 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு' என்ற திருக்குறளை எடுத்துக் காட்டினேன். கேட்டு அவர் மிகவும் நன்றாயிருக்கிறது என்று அனுபவித்தார்.

பிறகு தமிழ் நூல்கள் சம்பந்தமாகப் பேச்சுத் தொடங்கிற்று. தமிழிலேயே ஒப்பற்ற தனிப்பெருமையுடைய நூல் திருக்குறள் என்றும், எந்த மொழிக்கும் இந்நூல் பெருமை தருமென்றும் விவரித்துக் கூறினேன். பின்னர், பக்தித் தேன் நிறைந்து ததும்புகின்ற அருட்பாசுரங்களான தேவார திருவாசகங்கள் குறிப்பிடத்தக்கவை என்றும், இத்தகைய விரிவான பக்தி இலக்கியம் வேறெந்த மொழியிலுமே காண்பதற்கில்லை யென்றும் கூறினேன். அடுத்தபடி, காவியம் என்ற முறையில் கம்ப ராமாயணத்தின் தனிச் சிறப்பையும், அதன் கவிதைச் சுவையையும் சிறிது எடுத்துக் காட்டினேன். கேட்டு வந்த விநோபா பேசலானார்.

"நீங்கள் கூறிய இலக்கியங்கள் யாவும் எவ்வளவோ பழமையானவை. இவ்வளவு விரிவான இலக்கியம் பல

நூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருப்பது, தமிழுக்கே பெருமை. ஆனால் நான் இவற்றைப் படித்து அனுபவிப்பதில் சில தடைகளும், கஷ்டங்களும் உள்ளன. திருக்குறள் உயர்ந்த நீதி நூல்தான்; வடமொழி படித்த எனக்கு அக்கருத்துக்கள் பழக்கமா யிருக்கின்றன. திருவாசகம் முதலான அருட்பாசுரங்களை இசையோடு பாடவேண்டும். ஆகவே இசைவல்லாரே எனக்கு அவற்றைக் கற்பிக்கத் தக்கார். இனி, திருக்குறள், கம்பராமாயணம் என்பவற்றின் முழுப்பொலிவையும் அவற்றின் கவிதைச் சுவையில் காணலாமென்றால், அது ஓரளவு தமிழனாய்ப் பிறந்திருந்தால் முடியுமே யன்றி, வேற்றுமொழிக்குரியவனான என்னால் அவ்வளவையும் அனுபவிக்கமுடியாது. கவிதைச் சுவை அந்தந்தப் பாஷையோடு ஒட்டியது. தவிர, இந்த நூல்கள் யாவும், பழைய நூல்கள். சொற்கள், இலக்கணம், முதலியன பழமையாயிருத்தல்பற்றி, முழுமையும் என்னால் உணரமுடிவதில்லை. ஆதலால், இவற்றையெல்லாம் விட, பாரதியார் பாடலில்தான் எனக்கு மனம் அதிகமாய்ச் செல்லுகிறது. பெரும்பாலும் அவருடைய பாடல்கள் இன்றைய பேச்சு நடையில் உள்ளன. சொற்களில் கஷ்டம் குறைவு. தவிர, பாட்டிலமைந்த கருத்துக்களும் இன்று நம் வாழ்க்கையோடு தொடர்புடையவை. ஆதலால் நானாகப் படிப்பதென்றால், பாரதியார் பாடல் படிக்கத்தான் மனம் செல்கிறது. நான் தமிழ் படித்ததெல்லாம் வேலூர் சிறையில் கொஞ்சகாலம் இருந்தபோது, மற்றப்படி, பண்டை இலக்கியங்களை யாரேனும் எடுத்துச்சொல்லி எனக்குக் கற்பித்தால், நான் கற்கத் தயாராயிருக்கிறேன்" என்று சொன்னார்.

வால்மீகி, கம்பர் பற்றிய பேச்சு அடுத்து இயல்பாக எழுந்தது. ராமாயணத்தைப் பாடிய வால்மீகி, பகவானுடைய சரித்திரமாகவே தம் நூலைப் பாடினார். அது ஒரு பக்தி காவியம். பாத்திரங்களின் குணவிசேஷங்களைச்

சித்தரித்துக் காட்டுவது அவர் நோக்கமன்று. ஆனால், கம்பருடைய காவியமும் இதிகாசமாயிருந்தபோதிலும், அவருடைய சாதனை வேறு. தெரிந்த ராமகதையில் வரும் ஒவ்வொரு பாத்திரத்தையும் தனி மனித உருவமும் குண விசேஷங்களும் உடையதாக அவர் சித்தரித்தார். குண விசேஷம் என்றால், குறைவும் உண்டு நிறைவும் உண்டு. ராமன் பகவான் எனினும் கூட, கம்பர் அவனை மனிதனாகவே காட்டுகிறார். அவனுடைய குணநலங்கள் எப்போதும் தனித் தன்மையுடையனவாகவே இருக்கின்றன. இக்கருத்துக்களை விநோபா ஒப்புக்கொண்டார்.

* * * *

இந்தியராய்ப் பிறந்தோர் யாவரும் இந்தி மொழியை எழுதப் பேச அறிந்திருக்கவேண்டும், இம்மொழியொன்று தான் இந்தியப் பொதுமொழியாயிருக்கத்தக்கது என்பது காந்தியடிகளின் கருத்து. இந்தியாவில் அறிவாளிகள் அனைவரும் இக்கருத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வட இந்தியருக்கு இந்திமொழி கற்றல் மிகவும் எளிது ; தங்கள் தங்கள் பேச்சோடு அது ஒட்டியிருத்தலால், எல்லோரும் எளிதில் இந்தி பேச முடியும். தென்னிந்தியர், சிறப்பாகத் தமிழர், இந்தி கற்பது அவ்வளவு எளிதன்று; சற்றே கஷ்டந் தான்.

கஷ்டப்பட்டேனும் தென்னிந்தியர் இந்தி கற்பது போல, வட இந்தியருள் அரசியலில் பங்குகொள்பவர் அனைவரும் தென்னிந்திய மொழி ஒன்றேனும் நன்றாய்க் கற்கவேண்டும் என்பது காந்தியடிகள் அபிப்பிராயம். அவர் தமிழ்மொழியைக் கற்க முயன்றார் என்பதும், திருக்குறளை மூலத்திலேயே படிக்க ஆசைகொண்டார் என்பதும் நாம் அறிவோம். தென்னிந்திய மொழிகளை வடஇந்தியர் பயிலவேண்டும் என்ற கருத்தை ராஜேந்திரப் பிரசாத் மிகவும் வற்புறுத்தி எழுதியிருக்கிறார்.

ஆனால் இதைச் செயலில் தீவிரமாய்க் கடைப்பிடித்தார், வினோபா. தாய்மொழியாகிய மராத்தியிலும், சம்ஸ்கிருதத்திலும் அவர் மிகச் சிறந்த பண்டிதர்; மேலும், குஜராத்தி, வங்காளி ஆகிய மொழிகளிலும் நல்ல புலமையுடையவர். அப்படியே அவர் தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கையும் நன்றாய்ப் பயின்றிருக்கிறார். அந்தந்த மொழியிலும், மொழி நுட்பங்களைத் துருவி ஆராயும் அளவுக்கு அவருடைய பயிற்சி சென்றிருக்கிறது. இந்தியர் ஒவ்வொருவரும் பல மொழிகளை அறிந்திருந்தால்தான், மனவொற்றுமை வளர இடமுண்டு என்பது அவர் கருத்து. தமிழ் படித்தவர்களையோ தமிழரையோ அவர் கண்டுவிட்டால் அவரிடம் இந்த வயதில் ஏற்படும் உற்சாகமும், அமைந்திருக்கிற தமிழ்ப் புலமையும் பார்ப்போருக்கு மிக்க ஆச்சரியத்தைத் தரும். நம் நாட்டின் ஒற்றுமைக்கு விரிந்த மொழியறிவு எவ்வளவு துணைசெய்யும் என்பதை அவருடைய பேச்சால் நன்கு உணர முடியும்.

உ

வினோபாவும் துப்புரவும்

1946 ஆம் ஆண்டில் பவுனாரில் ஜம்னுலால் பஜாஜின் இடமாகிய 'பரந்தாம்' என்ற மாளிகையில் வினோபா தங்கியிருந்தார். அக்காலத்தில் அவர் ஈடுபட்டிருந்த முக்கிய வேலைகள் மூன்று: முதலாவது, மாணுக்கருக்கு வடமொழி கற்பித்தல், தாம் பிறமொழிகள் கற்றல், ஆராய்தல்; இரண்டாவது, கிராமங்களில் வாழ்ந்த ஏழை மக்களிடையே துப்புரவு சுகாதாரத்துக்கான பழக்க வழக்கங்களை உண்டாக்குதல்; மூன்ருவது நூற்றல் தொழிலில் பள்ளிக்கூடப்

பிள்ளைகளுக்குப் பயன்படக் கூடிய ஆராய்ச்சி செய்தல். அவ்வாண்டு சேவாகிராமத்திலிருந்து நான் பவுனார் சென்று அவரைப் பார்த்த போது, பிந்திய இரண்டு அம்சங்களையும் நன்கு எடுத்துக் காட்டவல்ல சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

1946ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் தேதி இரண்டு நண்பர்களுடன் பவுனார் சென்றேன். ஐந்து மைல் தூரம். வயல், வரப்பு, முட்புதர், சப்பாத்திக்கள்ளி காரை இண்டஞ் செடி—இந்தப் பாதைதான். எவ்விதச் சாலையும் இல்லை. ஆனல் வழிநெடுகிலும் கொய்யாத் தோட்டங்களில் பெரிய பழங்கள் பழுத்து உதிர்ந்திருந்தன. வேலியடைப்பு பெரும் பாலும் காணப்படவில்லை. தோட்டத்தினுள் நுழைந்தால், தோட்டக்காரனே வந்து, நமக்குத் தின்பதற்கு பழங்கள் கொடுக்கிறன். தின்னும் பழத்துக்கு அவன் காசு வாங்குவ தில்லை. கையில் எடுத்துக்கொண்டு போனல்தான் காசு தர வேண்டும். மிக மிக வறுமை நிறைந்த மக்கள். அவர் களிடை இத்தகைய தரும சிந்தை – உபகார உணர்ச்சி – காணப்பட்டது மிக்க ஆச்சரியமாயிருந்தது.

இரவு ஏழுமணிக்குப் பவுனர் அடைந்தோம். விேைபா தங்கிய மாளிகை, பவுனர் என்ற பெயருடைய சிற்றுற்றின் கரையில் அமைந்திருந்தது. வெளியே போயிருந்த விேைபா சற்று நேரத்துக்கெல்லாம் வந்தார். விேைபாவின் சீட ரான சத்தியன் என்பவர் என்னுடன் வந்திருந்து என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். கொஞ்சநேரம் பேசியிருந்துவிட்டு, பின் விேைபா பிரார்த்தனை நடத்தினர். அவர் பேசுவது மெதுவாக இருந்தாலும், பிரார்த்தனை நடத்துவது மிகவும் கம்பீரமாக இருக்கும். மராத்தி பஜனைப் பாடல்கள் அதிகம் பாடினர். இன்றுள்ள பஜனை முறையே மராத்தியில்தான் பிறந்ததென்பது உண்மை. அவர் அன்று பாடியவற்றுள்,

விட்டல டால விட்டல டண்டி
விட்டல தோண்டி விட்டால

என்பது இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. முடிந்தபின் போய்ப் படுத்துக்கொண்டோம். கடுங்குளிர் : நான் போர்த்துக் கொண்டு போயிருந்த மெல்லிய கம்பளிப் போர்வை குளிரிலிருந்து என்னைக் காப்பாற்றவில்லை. மிகவும் கஷ்டப்பட்டேன் என்பது உண்மை.

அவருடைய மாணாக்கரில் ஒருவர் என் அருகே படுத்திருந்தார். மறுநாளைய வேலைத்திட்டம்பற்றிப் பேசினார். "நாளை வெள்ளிக்கிழமை காலையில் துப்புரவு வேலைக்குப் போய் விடுவார். வேலை, இங்கிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள சூர்காம் என்ற ஊரில் நடக்கிறது. யாரையும் எதிர்பார்க்காமல் அவர் காலை நான்கு மணிக்கு எழுந்து பிரார்த்தனை நடத்திவிட்டு மண்வெட்டியைத் தோளில் சாத்தியபடி போய்விடுவார்" என்று அவர் சொன்னார். கேட்டுக்கொண்டே உறங்கிவிட்டேன்.

காலை நான்கு மணி அடித்தது. எழுந்தோம். அவசரமாய்க் கடன்களை முடித்து வந்து பிரார்த்தனையில் கலந்து கொண்டோம். முடிந்ததும் வெளி வந்து சுமார் ஐந்து நிமிஷம் பேசிக்கொண்டு நின்றிருப்போம். திடீரென்று நினைத்துக்கொண்டு, நாமும் சூர்காம் செல்வோம் என்று முடிவு செய்து வினோபாவைப் பார்த்தால், காணவில்லை. சூர்காம் நோக்கிச் சென்றிருப்பார் என்று அந்த மாணாக்கர் சொன்னார். சொல்லிவிட்டு, "அவரைத் தேடி நீங்கள் சென்றால் திரும்பிவர மணி 12 ஆகும். ஆதலால் ஏதேனும் உணவருந்திச் செல்லுங்கள்" என்று உபசரித்து உணவு கொடுத்தார். என்ன உணவு தெரியுமா ? தயிரும் வெல்லமும் ; அவ்வளவே.

விரைந்து இந்த விசித்திர உணவை அருந்திவிட்டு, சூர்காம் நோக்கிச் சென்றோம். மிக்க வேகமாக நடந்து

பாதித் தூரத்துக்கு மேல் வந்தபின் அவரைப் பிடித்தோம். அவரோ, தோளில் மண்வெட்டியைச் சாத்தியபடி நிதான மாக நடந்துகொண்டிருந்தார்.

வழி நெடுகிலும் மிக்க சுவையுடைய பேச்சு. முக்கிய மாக வசன நடை பற்றி. வசன நடை பேச்சை யொட்டித் தான் இருக்கவேண்டும். நேர் முகமாய்ப் பொருளை எடுத்துக் கூறி, கேட்போர் கருத்து முழுமையும் உணர்ந்து கொள்ளுமாறு அமையவேண்டும். "ஆனால் பேச்சில் ஒலி இருக்கிறது. ஒலியின் ஏற்றத் தாழ்வு இதனால் வரும் பாவம்—இவை பேச்சில் உள்ளன. எழுத்தில் இவை அமையமாட்டா. ஆகவே வசன நடை பூரணப் பயன் பெறவேண்டுமானால், அதில் அழகு அமையவேண்டும். பேசுகிறபடியே மட்டும் எழுதினால் போதாது" என்றார் வினோபா.

இடையில் தமிழ் இலக்கணம் பற்றிய பேச்சு வந்தது. "வினைச் சொல்லில் இரண்டு வகை; ஒன்று, செயப்படு பொருள் உடையது; மற்றது இல்லாதது. ஆனால் தமிழ் இலக்கணத்தில் இவ்விரண்டுக்கும் முறையே செயப்படு பொருள் குன்றா வினை, செய்யப்படு பொருள் குன்றிய வினை என்று பெயர் சொல்லுகிறோம். செயப்படு பொருள் உடைய வினைக்கு ஏன் செயப்படு பொருள் குன்றா வினை. என்று எதிர் மறையாகப் பெயர் சொல்லுகிறீர்கள்? இது சற்றே விநோதமாக இல்லையா?" என்று கேட்டார். உண்மைதானே? இதற்கு விடையென்ன?

* * * *

நடந்துகொண்டே யிருந்தோம். பவுனாரிலிருந்து ஒரு சிறு மண் சாலை வழியாகச் சுமார் நான்கு மைல் ஆகிவிட்டது. சாலை வழியே சென்று கொண்டிருந்த வினோபா, திடீரென்று ஓரமாகப் போய்த் தம் கையிலிருந்த மண்வெட்டியால் தரையைச் சுரண்ட ஆரம்பித்தார்.

பேச்சின் சுவையில் ஈடுபட்டே வந்து கொண்டிருந்த நான், முதலில் அவர் செயலைக் கவனிக்கவில்லை. கவனித்த பிறகு தான் அவர் செயல் விளங்கிற்று. சாலையோரமாக மக்கள் மலங் கழித்திருந்தார்கள். அவர் மண்ணைச் சுரண்டி அதன் மேல் போட்டு மூடிக்கொண்டே வந்தார்.

செய்த செயலில் அவர் காட்டின தீவிரமும் ஒருமித்த உணர்வும், " சற்று நிறுத்துங்கள், இவ்வேலையைச் செய்கிறோம் " என்று முன்னுக்கு வந்து சொல்லும் தைரியம் எங்களுக்கு இல்லாதபடி செய்துவிட்டன.

விநோபா இவ்வேலை தொடங்கியதும், ஊர் நெருங்கி விட்டது, இவ்வூரே சூர்காம் என்ற கிராமம் என்று அறிந்தோம். மேலும் அரை மைல் தூரம் சென்றோம். ஒரு தொண்டர் வந்தார். அவர் கையில் சாம்பல் நிறைந்த வாளியொன்று, ஒரு மண்வெட்டி ; அவர் விநோபாவின் சீடரென்றும், அவ்வூரில் வாழ்பவர், கிராமத் துப்புரவுத் தொண்டில் விநோபாவுக்கு அங்கு உதவுபவர் என்றும் அறிந்தோம்.

சென்ற ஆறு மாத காலமாக விநோபா சூர்காம் கிராமத்தில் துப்புரவுப் பணி செய்து வருகிறார். வாரமொரு முறை அதிகாலையில் மண்வெட்டி சகிதமாக வந்து சேர்வார். ஊர் எல்லையில் இந்தத் தொண்டர் அவரை எதிர் கொண்டு வேலையில் உதவுவார்.

சூர்காம் தமிழ் நாட்டுக் கிராமங்களைப் போன்ற ஒரு சீர்கேடான பட்டிக்காடு. சூர் - காம் என்பது சூரன் கிராமம். ஒருகால், தமிழருடைய முருகப்பெருமான் அழித்த சூரன் (சூரபதுமன்) இவ்வூரில் தங்கியிருந்து அது காரணத்தால் ஊர் இப்பெயர் பெற்றதோ என்னவோ !

சூரபதுமன் என்னத்தக்க ஆபாசங்களை ஒழிக்கவே விநோபா அங்கு உழைத்து வந்தார். பொதுவாக நம் நாட்டில் எங்கும் சாலையோரம், ஆற்றங்கரையோரம் போன்ற இடங்களில் காலையில் மக்கள் சாதாரணமாக

மலஜலங் கழிக்கிறார்கள். இதைவிட ஒரு நாட்டு மக்களுக்கு இழிவான செயல், நாகரிகம் என்ற அம்சத்தைப் பொறுத்த வரையில், வேறு இருக்கமுடியாது. " இந்த ஊரில் இந்த நிலைமை இன்னும் கேவலமாக இருந்தது. ஊரிலிருந்து வெளியே வரும் இந்தச் சாலையில் காலை ஏழரை மணி வரையில் சுமார் முந்நூறு பேருக்குக் குறையாமல் வெளிக்குப் போய்க்கொண்டிருப்பார்கள். ஆண்களும் அப்படி, பெண்களும் அப்படி. சாலையில் போவோரைக் கண்டால் பெண்கள் கூட எழுந்திருக்கமாட்டார்கள். இவர்களுக்காக இங்கு மலக்குழிகள் பல வெட்டிக் கொடுத்தும் பயன் ஏற்படவில்லை. பிறகு நான் வேறு ஒரு முறையை அனுசரித்தேன். ஒருவர் வெளிக்குப் போகிறார் என்றால், காலையில் எதிர்ப்புறத்தில் நான் தோளில் மண்வெட்டியைப் பிடித்தபடியே நின்றிருப்பேன். அவர் எழுந்தவுடன் சென்று, மண்வெட்டிப் போட்டு மலத்தை மூடுவேன். எல்லோருக்கும் இது பெரிய தொந்தரவாயிருந்தது. எதடா, இவனொரு பிராம்மணன், இப்படிக் கூடவே வந்து நிற்கிறானே என்ற சங்கட உணர்ச்சியால், காலையில் இங்கு வந்து மலஜலம் கழிப்போர் தொகை குறைந்துவிட்டது. நீங்களே பார்க்கிறீர்கள், முந்நூறு பேர் வந்த இடத்தில், இப்பொழுது சுமார் பத்துப் பேர்தான் வருகிறார்கள். சுமார் இரண்டு மணிநேரம் குனிந்த தலை நிமிராமல் வேலை செய்து வந்த நான், இப்பொழுது கொஞ்ச நேரம் நிமிர்ந்த படியே வேலை செய்து முடித்துப் போய்விடமுடிகிறது. இந்த அளவுக்கு இது இச்சிற்றூரில் பெருத்த வெற்றி என நான் கருதுகிறேன் " என்றார்.

இதற்குள் ஊர் வந்துவிட்டது. வினோபாவும் அவர் சீடருமாக, சாலை முழுமையும் மலத்தை எடுத்துச் சாம்பல் தெளித்துக் கொண்டே வந்துவிட்டார்கள். ஊரினுள் நேரே சாலை வழியே அவர் போகவில்லை. இடப்புறமாகத் திரும்பி, ஊரிலுள்ள வீட்டுத் தோட்டங்களின் பின்புறமாக

வினோபா சென்றார். "ஏன் தெரு வழியே செல்லவில்லை ?" என்று கேட்டேன்.

"நாம் இப்போது கிராமப் பிரதட்சிணம் செய்யப் போகிறோம். முன்னெல்லாம் இறைவன் தங்குகிற ஆலயப் பிரதட்சிணம் செய்வார்கள். இப்பொழுது நாம் மக்கள் தங்கி வாழ்கிற கிராமப் பிரதட்சிணம் செய்கிறோம். தெருவி லுள்ள அசுத்தம் கொஞ்சம் குறைவாயிருக்கும். இங்கு தோட்டத்தின் பின்புறம் ஒரு சிற்றாறு ஓடுகிறது. ஆற்றங் கரை ஒதுப்புறமாயிருக்கிறபடியால் இங்கு அசுத்தம் அதிகம். கிராமப் பிரதட்சிணம் என்று சொல்லும்போது, இந்த அசுத்தத்தைத் நீக்கித் துப்புரவு செய்வதை மனத்தில் வைத்தே சொல்லுகிறேன்" என்று வினோபா பதில் கூறினார்.

அசுத்தம் செய்கிற மக்களுக்குத் துப்புரவு உணர்ச்சி உண்டாக்க வேண்டி, அவர்கள் வாழும் இடத்துக்கு அருகிலேயே, ஆற்றங்கரையின் பக்கமாக, அவர்கள் ஒதுங்கும் இடத்தை ஒட்டி, அவர் ஒரு பெரிய மலக் குழி அமைக்கச் செய்திருந்தார். இது நீண்ட குழி. இருபது அடி நீளம் ஆறடி ஆழம். அகலம் மூன்றடி. இதை நாற்புறமும் பனை ஓலையால் அடைத்து நெடுகிலும் குறுக்கே ஆறங்குல இடை வெளி விட்டுச் சட்டங்கள் போட்டிருந்தார். மலஜலம் கழிப்பவர் இரண்டு சட்டங் களில் வந்து உட்கார வேண்டியது; மலஜலம் கழித்தவுடன் மண்போட்டு மூடவேண்டும். சிலர் மண்போட்டு மூடாத குறையைத் தொண்டர் தீர்த்து வந்தார். தினம் மூன்று முறை அவர் பிரதட்சிணம் செய்யும்போது, குழியில் மண் போட்டு மூடி, ஈ, கொசுகு மொய்க்காதபடி காப்பாற்றி வந்தார். ஓரளவுக்கு இந்த முறை வெற்றி தந்ததை நாங்கள் கண்டோம். கொஞ்சம் கொஞ்சமாக ஊரார் இவற்றை உபயோகித்து வந்தனர். முன்னே பார்த்தபடி சாலையில் மனித அசுத்தம் குறைந்தது. ஒரு கிராமத்தைத் துப்புரவு

ஆக்க அவர் ஆறு மாதத்துக்கு மேலாகச் செய்த முயற்சி சிறிதளவு வெற்றி தந்தது உண்மை.

வலமாகச் சென்ற நாங்கள் அவரைத் தொடர்ந்து அவர் வேலையிலும் பங்கு கொண்டு, சுமார் முக்கால் மணி நேரம் ஆகி, தொடங்கின இடத்துக்கே வந்து சேர்ந்தோம். இடையில் அவர் தம் மண்வெட்டியை எங்களிடம் தரவில்லை. தொண்டர் கொண்டு வந்திருந்த கருவியை நாங்கள் அவ்வப்போது சற்று நேரம் இரவல் வாங்கிக் கொண்டோம்.

பிரதட்சிணம் முடிந்த இடத்தருகே ஒரு கோயில். அங்கு ஒரு கொடி வணக்கம் நடந்துகொண்டிருந்தது. நடத்தியவர் விநோபாவின் சீடரும், நூற்பில் வல்லவரு மான வல்லப பாய் என்பவர் பள்ளிக்கூடம் இல்லாத அவ் வூர்ப் பிள்ளைகளைக் கூட்டி அவர் அவர்களுக்குக் கல்வியும், நூற்பும், துப்புரவும் பழக்கிக்கொண்டிருந்தார். விநோபா வின் விருப்பப்படி அவர் சூர்காமிலேயே அப்போது தங்கி வேலை செய்து வந்தார். நாங்கள் அவ்விடம் வந்த சமயம் பிள்ளைகள் கொடி வணக்கப் பாடல் பாடினார்கள். பாடல், "ஜண்டா ஊஞ்சா ரஹே ஹமாரா" என்பது. நாங்கள் அவர்களை அணுகின சமயம் அவர்கள் பாடின வரிகள் தற்செயலாக "ப்யாரே வீரோ ஆவோ" என்பன. (இதன் பொருள், 'நம் வீரர்களே, வாருங்கள்.')

ஆடம்பரமில்லாத, ஊக்கம் அளிக்காத, சோர்வே தருவதாகிய, சமூகசேவை செய்வது யாருக்கும் எளிதன்று. உண்மையில் இன்று நம் சமூகத்தில் இத்தகைய சேவைக்கு மிகுந்த மனவுறுதியும் ஆண்மையும் தேவை என்பதில் ஐயமில்லை. எனவே இத்தகைய ஆண்மை நிறைந்த சேவை செய்த விநோபாவை 'வீரரே வாருங்கள்' என்று அழைப்பதுபோல் அந்நேரப் பாடல் அமைந்திருந்தது முற்றிலும் பொருத்தமே யாகும்.

பிள்ளைகளுக்குச் சில வார்த்தைகள் பேசிவிட்டு, பின் வல்லப பாயிடம் பேச வேண்டியவற்றைப் பேசிவிட்டு, வினோபா பவுனார் நோக்கித் திரும்பினார். நாங்களும் திரும்பினோம். அந்தக் கிராமப் பிரதட்சணம் எங்களுக்கு மிகவும் பயனுள்ள தாயிருந்தது.

திரும்பி வரும் பாதையில் ஒரு சிறு நீர்க்கால் சாலையின் குறுக்கே ஓடிற்று. வினோபா தம் தோளில் சாத்திய மண் வெட்டியைக் கீழிறக்கி நீரில் அலம்பினார். உடன் வந்த நண்பர்களுள் ஒருவரான ருத்ரப்ப சுவாமி தாம் அந்த மண் வெட்டியை வாங்கிக் கொள்ளப் போனார். சிரித்தபடியே வினோபா சொன்னார்: "மண்வெட்டி என்னுடைய ஆயுதம். ஆயுதத்தைப் பிறர் சுமக்க யாராவது கொடுப்ப துண்டா? பரசுராமனுடைய பரசை மற்றவர் யாரேனும் சுமப்பதுண்டா? பரசு உடையவர் பரசுராமன். அவர்போல நான் மண்வெட்டி ராமன்" என்றார். சொல்லியதெல்லாம் ஹிந்தி மொழியில். மண்வெட்டி ராமன் என்பது மட்டும் தமிழில் சொன்னார். இந்த வாதத்துக்குப் பதில் சொல்ல முடியுமா?

கேட்ட நாங்கள் சிரித்த போதிலும், கருத்தின் ஆழத்தை உணர்ந்து வியந்தபடியே மிச்சமுள்ள தூரமும் நடந்து பவுனார் வந்தடைந்தோம்.

பிற்பகல் நடந்த மற்றொரு சம்பவம் குறிப்பிடத் தக்கது. சுமார் நான்கு மணி இருக்கும். மாணக்கர் சிலருக்கு அவர் வடமொழி கற்பித்துக்கொண்டிருந்தார். அச்சமயம், சுற்றுப் புறத்திலுள்ள ஒரு கிராமத்திலிருந்து சில ஆசிரியர்களும், சுமார் ஐம்பது பிள்ளைகளுமாக வந்திருந்தார்கள். வினோபாவைத் தரிசித்து அவரிடம் சில வார்த்தைகள் கேட்டுப் போகவேண்டும் என்பது அவர்கள் நோக்கம். முன்னதாக அவர்கள் வர அனுமதி பெற்றுக் கொள்ளாதபடியால், வினோபா தம் வேலையை நிறுத்தி விட்டு அவர்களை வந்து பார்க்க இணங்கவில்லை. எனினும்,

பள்ளிக்கூடப் பிள்ளைகள் திரளாக வந்திருந்தார்கள் என்ற காரணத்தைக் காட்டி, அவருடைய மாணுக்கர் அவரை இணங்கும்படி செய்தார்கள்.

கட்டிடத்தின் பின் புறத்தில் ஒரு தாழ்வாரம், அதில் சில படிகள். படிகளின் கீழே பிள்ளைகள் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். அனைவரும் மராத்திப் பிள்ளைகள். விநோபா வந்தார். வந்தவுடன் ஆசிரியர்களைப் பார்த்து, இப்படி அனுமதி பெருமல் வந்து பிடிவாதம் பிடித்தது தவறு என்றும், அதனல் தம்முடைய வேலைகள் கெடுகின்றன என்றும் அவர் எடுத்துக் காட்டினர். பிள்ளைகளைப் பார்த்தவுடன் அவர் மனம் கொஞ்சம் மாறிற்று. " வெறும் ஏட்டுப் படிப்பு அடிமை நிலையை வளர்ப்பது, அது எங்களுக்கு வேண்டாம் " என்று பொருள்படும் படியாக இரு வரிகளை அமைத்துப் பாடினர் :

பரஸ்வாதீன் ஜினணீ புஸ்தக வித்யா
நைகாமாசி, நைகாமாசி, நைகாமாசி—

என்று அவர் பாட, பிள்ளைகள் அனைவரும் கூடவே பாடினர்கள். தனித்தனி ஒவ்வொரு பிள்ளையையும், பெண்ணையும் பாடச் சொன்னர். ஒவ்வொருவரும் பாடினர். ஒவ்வொரு பிள்ளையின் வாழ்க்கையிலும் அன்றைய சம்பவம் மறக்க முடியாத நிகழ்ச்சியாயிற்று.

விநோபா பாடினர் என்று சொல்வது போதாது. அவர் எதைச் சொன்னலும் பேசினலும், பாட்டுடன் ஆட்டமும் கலந்தே யிருக்கும். அன்று அவர் ஆட, ஆசிரியர்களும், பிள்ளைகளும் ஆடினர்கள். பஜனையும் ஆட்டமும் மராத்தியர்களுக்கு இயல்பு. ஆகவே, அன்றைய பாட்டும் ஆட்டமும் எவ்வளவு கோலாகலமாயிருந்தன என்பதை நேரில் கண்டவர்களே உணர முடியும்.

இந்தக் கோலாகலத்தைக் கேட்ட விநோபாவின் மாணுக்கரொருவர் உள்ளிருந்து வெளியே வந்தார். அவர்

கையில் ஒரு கம்பியிருந்தது. அச்சமயம் வினோபாவின் மேற்பார்வையில் அவர் ஓர் ஆராய்ச்சி நடத்திவந்தார். சாதாரணமாக அப்போதெல்லாம் பருத்தியிலிருந்து விதையை நீக்கிப் பஞ்சைப் பிரித்தெடுக்கவேண்டி, '.கைமணை' என்ற ஒரு கருவியில் பருத்தியை அரைப்பது வழக்கம். இது 6-7 வயதுடைய குழந்தைகள் செய்ய முடியாத கடினவேலை. இச்சிறு பிள்ளைகள் இவ்வேலை செய்வதற்கு வழி என்ன என்ற ஆராய்ச்சி அப்பொழுது நடந்துவந்தது. கீழே ஒரு பலகையை வைத்து அதில் பருத்தியை வைத்து ஓர் இருப்புக் கம்பியால் அழுத்தி உருட்டினல் பஞ்சு நிற்கும், விதை நீங்கும். இது பலகை மணையும் கம்பியும் என்ற குழந்தைகள் முறை; இப்போது பாடசாலைகள் நன்கு அறிந்த முறை. ஆனல் வினோபா 1946இல் இதற்கான சோதனை நடத்திக் கொண்டிருந்தார்.

உள்ளிருந்த மாணுக்கர் சோதனையிலிருந்தபடியே கையில் பிடித்த கம்பியுடன் வெளியே வேடிக்கை பார்க்க வந்ததைக் கண்ட வினோபா, இச் சோதனையைப் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் செய்து காட்டலாம் என்று எண்ணினர். தாழ்வாரத்தில் ஒரு பலகை போடச் செய்து, அதில் அம்மாணுக்கரை வந்திருந்து தாம் பஞ்சு பிரிக்கும் முறையையும் பட்டை போடும் முறையையும் செய்துகாட்டச் செய்தார்.

ஒரு பருத்திச் சுளையை எடுத்தார். அது வேலிப்பருத்தி. எட்டுக்கொட்டை. ஐந்து வயதுப் பிள்ளைகளும் இருந்தபடியால், கொட்டைகளை ஒன்று, இரண்டு என்று எட்டு வரையில் எண்ணிக் காட்டினர். ஒன்றில் அபூர்வமாய்ப் பத்துமிருந்தது. ஒரு பையனை எண்ணச் சொன்னர். "எல்லோருக்கும் எண்ணத் தெரியுமா?" என்று கேட்டுவிட்டுப் பட்டையை எடுக்கச் செய்தார். இதற்குள் முதல்பட்டை தயாராயிற்று. அதைக் கையில் எடுத்தார். பட்டை

ஏழங்குல நீளமிருந்தது. "இது என்ன ?" என்று பிள்ளைகளைக் கேட்டார்.

"இது பஞ்சுப் பட்டை" என்ற பதில் வந்தது.

"பட்டையல்ல. இது ராமன். இப்பட்டை எவ்வளவு விறைப்பாய், நேராய் வளையாமல் நிற்கிறது பாருங்கள். நீங்களும் ராமன் போல் நிமிர்ந்து நிற்கவும், உட்காரவும் வேண்டும்" என்றார். வளைந்த முதுகுகளெல்லாம் நிமிர்ந்தன.

அடுத்த பட்டை தயாராகி விட்டது. அது ஆறங்குலமிருந்தது. "இது லக்ஷ்மணன்" என்றார். இரண்டையும் இரண்டு கையில் பிடித்துக்கொண்டு "இந்தமாதிரி நீங்கள் எப்போதும் நிமிர்ந்திருக்கவேண்டும்" என்று காட்டினார்.

மூன்றாவது பட்டை தயாராயிற்று. ஐந்து அங்குலம். அதையும் எடுத்து முதல் கையில் பிடித்தார். "இதைப் பாருங்கள். இது ஜானகி. இப்பொழுது மூன்று பட்டைகள். மூன்றும் ராம, லக்ஷ்மண, ஜானகி. நான் பாடுகிறேன். நீங்களும் பாடுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பாடலானார்.

ராம லக்ஷ்மண ஜானகீ
ராம லக்ஷ்மண ஜானகீ.

பட்டைகளைக் கையில் பிடித்தபடியே பிள்ளைகள் மத்தியில் சென்று சுழன்று சுழன்று பாடி ஆடலானார். உட்கார்ந்தவர்கள் அனைவரும் ஆடினார்கள். என்னுடன் வந்திருந்த ஈங்கூர் முத்துசாமியும் கும்மாளம் போட்டுக்கொண்டு தம்மையறியாமல் ஆடிக்கொண்டிருந்தார்.

இவ்விதமாக, அன்று பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் ஒரு சிறந்த அனுபவம் ஏற்பட்டது. பட்டைபோடும் பயிற்சி மட்டுமல்ல. அதிலிருந்து உடற்பயிற்சியில் கவனம், கணிதம், பாட்டு, ஆட்டம் ஆகிய எல்லாம் பிறந்தன.

மற்றொன்று : பட்டையைப் பார்த்த உடனே அது தெய்வபக்தி நிரம்பிய விநோபாவின் உள்ளத்தில் ராமனைக

வும், லக்ஷ்மணனாகவும், சீதையாகவும் காட்சி கொடுத்ததை யும் கண்டோம்.

பின்னர் நேரமாகவே, எல்லோரிடமும் விடைபெற் றுக்கொண்டு திரும்ப சேவாகிராமம் வந்து சேர்ந்தோம்.

௯.

பூதானமும் ஆதாரக் கல்வியும்

1957 இல் விநோபா அவர்கள் தஞ்சைக்குப் பூதான யாத்திரையாக வந்தபோது, ஒருநாள் காலையில் சென்று பார்த்தேன். (பார்த்த நாள் 23-1-57.) கூட்டம் அதிகமாக இருந்தபடியால் சற்றுத் தூரத்திலேயே இருந்தேன்.

சர்வோதயம் ராமசாமி அவர்கள் " அருணாசலம் வந் திருக்கிறார் " என்று அறிவித்தார். விநோபா அருகில் வரும் படி சொல்லவே சென்றேன். காது அவருக்குக் கொஞ் சம் கேட்கவில்லை. " எந்த அருணாசலம்? மூனாவா ?" என்று கேட்டார். " ஆம் " என்று சொன்னேன்.

அதற்கு முன் அவரோடு அதிகம் நெருங்கிப் பேசிப் பழகியிருந்தும், பத்து ஆண்டுகளுக்கு அதிகமாய்க் கடந்து விட்டன. இருந்துங்கூட, அவர் என்னை ஞாபகம் வைத் திருந்து "மூனா" என்று அடையாளம் குறிப்பிட்டது மாத் திரமல்லாமல், 1945–46 ஆண்டுகளில் நான் பவுனார் சென்று அவருக்குக் கம்பராமாயணப் பகுதிகளைப் படித்துக் காட்டி யதை நினைவுபடுத்திக் கொண்டு " நன்றாக ஞாபகமிருக் கிறது " என்றார்.

அடுத்து, இயல்பாக டி. கே. சி. அவர்களைப் பற்றிப் பேச்சு வந்தது. சென்னையில் ஒரு சமயம் டி. கே. சி. அவர்களைத் தாம் சந்தித்துப் பேசியதைப் பற்றி அப்போது குறிப்பிட்டார். குறிப்பிட்ட சம்பவம் மிகவும் சுவை யுடையது.

அப்போது சில நண்பர்கள் டி. கே. சி. அவர்களை அழைத்துக்கொண்டு விநோபாவிடம் ஹிந்திப் பிரசார சபையில் பார்க்கச் சென்றிருந்தார்கள். டி. கே. சி. விநோபாவுக்குத் தமிழ்மொழியின் கவிதைச் சுவையைத் தனிப் பாடல்கள் மூலமாகவும் கம்பராமாயணம் மூலமாகவும் எடுத்து உணர்த்திக்கொண்டிருந்தார். அவர்களுடைய உணர்ச்சிப் பெருக்கில் விநோபா மூழ்கித் திளைத்தார்.

அந்தக் காலத்தில் அவர் திருக்குறளை ஆர்வத்தோடு படித்துவந்தார். டி. கே. சி. யை நோக்கிக் கேட்டார்: "திருக்குறளை மூல பாஷையில் நான் படித்துப் பூர்ணமாய்ச் சுவைப்பதற்கு வழியென்ன?"

பளிச்சென்று டி. கே. சி. பதில் சொன்னார்: "அடுத்த பிறப்பில் தமிழனாய்ப் பிறப்பதொன்றுதான்."

கேட்டவர்கள் திகைத்துவிட்டார்கள். 'விநோபா எவ்வளவு பெரியவர், சுலபமான புத்தகம் ஒன்றைச் சிபாரிசு செய்யாதபடி, டி. கே. சி. இப்படி எடுத்தெறிந்து பேசிவிட்டாரே!' என்று அவர்களுக்கெல்லாம் கொஞ்சம் வருத்தமும்கூட.

ஆனால் விநோபாவோ, டி. கே. சி. யின் கருத்தை மனமார ஒப்புக்கொண்டார். "திருக்குறளில் டி. கே. சி. க்கு எவ்வளவு ஈடுபாடு என்பதையும், அது எவ்வளவு பெருமையுடையது என்பதையுமே அவர் சொற்கள் காட்டின" என்று விநோபா அப்பொழுது சொன்னார்.

பிறகு அவர் என்னைக் கேட்டார்: "டி. கே. சி. கம்பராமாயணத்தைஅனேகர் சரியல்ல என்கிறார்களே? செருகு பாடல் என்று நூற்றுக்கணக்கான பாடல்களைத் தள்ளிவிட்டுச் சில பாடல்களை எடுத்து இவை மாத்திரம் கம்பனுடைய பாடல் என்று சொல்லுகிறாரே? இது பற்றி உங்களுடைய கருத்தென்ன?" என்று கேட்டார்.

அதற்கு நான் சொன்னேன்: "கம்பருடைய பாடலில் நூற்றுக் கணக்கான செருகு பாடல்கள் உள்ளன

என்பது உண்மை. கம்பர் காலத்திலேயே கம்ப ராமாயணத்தில் இடைச் செருகல்கள் ஏற்பட்டுவிட்டன. அதற்கு அவர் சரித்திரத்திலேயே ஒரு கதையும் சொல்லுவதுண்டு.''

கம்பராமாயண காலட்சேபம் ஒன்று நடப்பதைக் கேள்வியுற்று கம்பர் அங்கே போனாராம். காலட்சேபம் முடிந்தபின் பாகவதர், 'கம்பராமாயணம் எப்படியிருக்கிறது' என்று இவரைக் கேட்டாராம். அதற்குக் கம்பர் 'இந்தப் பிரசங்கத்தில் கம்பனுடைய சில பாடல்களும் காணப்படுகின்றன' என்று விடை கூறினாராம்.

இந்தக் கதையை நான் சொல்லி, "இந்த ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. கம்பனுடைய பாடல்கள் என்று டி. கே. சி. எடுத்துக் காட்டும் பாடல்களை நன்றாகச் சுவைக்கத் தெரிந்துகொண்டால் போதுமானது' என்றேன்.

"உண்மைதான்" என்று அவர் ஒப்புக்கொண்டதோடு, "நீங்கள் குறிப்பிட்ட கதையைத் தம் கம்பராமாயணப் பதிப்பின் முகவுரையில் டி. கே. சி. எழுதியிருக்கிறார்" என்றும் எடுத்துக் காட்டினார்.

அடுத்தபடியாக டி. கே. சி. அடிக்கடி கூறும் கருத்தொன்றை எடுத்துச் சொல்லும் சந்தர்ப்பம் வந்தது. கடவுள் 'அடியார்க்கு எளியன்' என்ற திருநாமத்தைத் தாங்கியவன். தாகூர் கடவுளைப் பற்றிக் குறிப்பிடும்போது ஓரிடத்தில் "கடவுளே, நீ நல்ல கவிதையைப் போல மிகவும் எளியனாயிருக்கிறாய்" என்று குறிப்பிட்டார். இதை டி. கே. சி. அடிக்கடி சொல்லுவது வழக்கம். இதை அப்போது வினோபாவிடம் சொன்னேன். உடனே அவர் இந்தக் கருத்து ரிக் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லி, தம் அருகில் இருந்த ரிக் வேத புத்தக மொன்றை எடுத்து அதில் சம்பந்தப்பட்ட பகுதியைப் படித்துப் பொருள் விளக்கினார். 'உதயம் கவிதையைப் போல அவ்

வளவு அழகுடையதாகவும் இன்பந் தருவதாகவு மிருக் கிறது ' என்பது அங்கு காணப்பட்ட கருத்து.

அப்போது அங்கு நிரம்பத் தமிழ் கற்றுத் தமிழாராய்ச்சி யில் ஈடுபட்டிருந்த ஓர் அன்பர் வந்தார். ராமாயணத்தைப் பற்றிப் பேசியபொழுது, அவர் சிந்தாமணியின் சிறப்பைச் சொல்லி, ' ராமாயணத்தைவிடச் சிறப்பானது சிந்தாமணி. சிந்தாமணியிலிருந்து கம்பன் கடன் வாங்கியிருக்கிறான் ' என்றெல்லாம் சொல்லத் தொடங்கினார். அதை கேட்டு இடைமறித்து நான் " அப்படியல்ல, சிந்தாமணியில் ஏதோ ஒன்றிரண்டு வரிகள் நன்றாக இருக்கக்கூடும். கம்பராமா யணமோ வரிகள் மாத்திரமல்ல பாடல்கள், கட்டங்கள், படலங்கள், பாத்திரங்கள் யாவுமே மிகவும் சுவையும், உணர்ச்சியும் எளிமையும் தனி உருவமும் பொருந்தியன. இந்த அம்சமே கம்பனுக்குள்ள தனிச் சிறப்பு " என்று விளக்க ஆரம்பித்தேன்.

ஆனால் அதற்கிடையில் வினோபா குறுக்கிட்டு, " நீங் கள் இருவருமே பண்டிதர்கள். அந்தப் பெயருக்குப் பொருத்தமாகவே சண்டையில் இறங்கிவிட்டீர்கள்" என்று வேடிக்கையாகச் சொன்னார். நான் விடாமல் ' கம்ப ருடைய சிறப்பு எல்லாம் எளிமை என்பதுதான். கம்ப னுடைய பாடல்கள் எளிமை என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்தவை ' என்று குறிப்பிட்டேன்.

* * *

வினோபா நம் பண்டைக்காலப் பெரியோர்கள் அல்லது ரிஷிகளுக்கு உதாரணமாய்ச் சொல்லத் தக்கவர். அடக்க மும், பணிவும் உருவெடுத்தவர். இவற்றோடு, புதிதாக எதை யும் சந்தர்ப்பம் நேரும் போது அறிந்துகொள்ளும் ஆர்வம் உள்ளவர். இதைக் காட்டுகிற சந்தர்ப்பமொன்று அடுத்து நிகழ்ந்தது.

" 'கல்விச் சிந்தனைகள்' பார்த்தீர்களா? எப்படியிருக்கிறது? அபிப்பிராயம் சொல்லுங்கள்" என்று கேட்டார்.
" புத்தகம் நன்றாயிருக்கிறது. சர்வோதயத்தார் சிரத்தையோடு செய்திருக்கிறார்கள். விஷயப் பெருமையைப் போற்றும் தகுதி எனக்கு இல்லை. ஆனால் உபயோகித்திருக்கும் அச்சைப்பற்றி எனக்கு ஒரு குறை" என்றேன்.

" என்ன குறை?"

" இந்த எழுத்து, செங்குத்தாய் நேரே நிற்கிற எழுத்து. தமிழின் இயல்பு, எழுத்துக்கள் நேரே நிற்பதன்று, சாய்வாய் நிற்பதாகும். எப்போதும் நாம் இடமிருந்து வலம் நோக்கிப் படிக்கிறோம். தமிழ் எழுத்தில் உள்ள சாய்வு நம் கண்ணுக்கு உதவியாக இருக்கிறது. எப்படியோ ஆதிகாலத்தில் தமிழில் அச்செழுத்து வார்த்தவர்கள் எழுத்தைக் கொஞ்சம் வலம் சாயும்படி வார்த்திருக்கிறார்கள். சாதாரணமான படிக்கிற எழுத்தாகிய 'பைகா' எழுத்து இப்படி அமைந்திருக்கிறது. இது நமக்குக் கிடைத்த ஒரு பெரிய அனுகூலம். படிக்கிற பகுதியின் இடையில் அபூர்வமாக நேர் எழுத்து வந்தால் குற்றமில்லை. ஆனால் எழுத்துக்கள் யாவும் நேரே நிற்பது இதுவரையும் நமக்கு ஏற்பட்டுள்ள தமிழ் எழுத்துணர்ச்சிக்குக் கேடாக உள்ளது. நாளுக்கு நாள் வளர்ச்சி வேண்டும், முன்னேற்றம் வேண்டும். எழுத்துச் செய்பவர்கள் படைப்பது எல்லாம் முன்னேற்றமாகாது. சில சமயம் எழுத்துணர்ச்சிக்கு முரணாகவும் அவர்கள் எழுத்துச் செய்துவிடுகிறார்கள். இந்தப் புது எழுத்துக்கள் அப்படிப் பட்டவை. புதிதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் செய்கிறார்கள். செய்தது விற்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் அச்சுக்கூடத்தினரிடம் இந்த எழுத்தே மேல் என்று சொல்லிவிற்கிறார்கள். புத்தகம் வெளியிடுபவர்கள் அச்சைப் பற்றி அதிகம் சுய அபிப்பிராயம் வைத்திராமையால், புதியதே நல்லது என்றெண்ணிப் புது எழுத்து உபயோகிக்கிறார்கள்.

நாலுபேர் உபயோகித்தபின் இந்த எழுத்து நல்ல எழுத்து என்று பெயர் வாங்கிவிடுகிறது. பிறகு அச்சுப் போடுவோர் ஆட்சேபிக்க முடிவதில்லை. முடிந்தால் ஆட்சேபிக்கிறவர் பைத்தியக்காரர். தவிர, அச்சுக்கூடத்தில் நல்லது என்று நாம் இதுவரை கருதி வந்த பழைய அச்சுக்களைக் கழித்துவிடுகிறபடியால், அதுவும் மாதிரிக்குக்கூட இல்லாமற் போகிறது. கேடான புதியது தான் மிச்சம். நண்பர் ராமசாமி இந்தத் தர்ம சங்கடத்தில் அகப்பட்டுத்தான் இப்படிப்பட்ட எழுத்தில் அச்சுப் போட்டிருக்கிறார்" என்று விரிவாக விளக்கி முடித்தேன்.

நான் பேசியதெல்லாம் தமிழில், விநோபா பேசுவதெல்லாம் இந்தி. நாங்கள் இருவரும் ஆங்கிலம் பேசுவதில்லை என்று முன்னொரு சமயம் ஏற்பாடு செய்துகொண்டிருந்தோம். என் தமிழைப் புரிந்துகொண்டு அவர் ஹிந்தியில் பேசுவார். அவர் பேசிய ஹிந்தியைப் புரிந்துகொண்டு நான் தமிழில் பேசவேண்டியவன். எனக்குப் புரியக்கூடிய விதமாக, முயன்று அவர் சுலபமான இந்தியில் சிறு வாக்கியங்களாகப் பேசுவார். நானும் கவனமெடுத்து, பேச்சு நடையில் கடின சொற்கள் இல்லாமல் கொச்சைப் பிரயோகமும் இல்லாமல், எளிதான தமிழில் பேசுவேன். ஆதலால் எங்கள் சம்பாஷணை பார்ப்போருக்கு ஒரு விசித்திரம் என்று தோற்றினாலும் எங்களுக்கு எளிதாகவே இருந்தது.

என்னுடைய கருத்தைக் கேட்டபின் அவர் பழைய 'பைகா' எழுத்தைக் காட்டும்படி சொன்னார். என் கையில் தற்செயலாக அப்போது அப்படிப்பட்ட எழுத்தில் அச்சிட்ட எனது தமிழ்ப் புத்தகமாகிய 'தோட்டவேலை ஆசிரியர்' என்பது இருந்தது. எடுத்துப் பிரித்துக் காட்டினேன்: அவர் இதையும் புது எழுத்தில் அச்சிட்டுள்ள தமிழ்ப் புத்தகத்தையும் வைத்து ஒப்பிட்டுப் பார்த்தார்.

பார்த்த பின் "நீங்கள் சொல்லுவது சரி" என்று ஒப்புக் கொண்டார்.

* * *

சாதாரணமாக அப்போது அவர் செய்து வந்த பூதான யாத்திரையில் வேலை யதிகம். ஓய்வு குறைவு. ஆதலால் யாரிடமும் அவர் தனிப்படப் பேசியது குறைவு. ஆயினும் இச் சந்தர்ப்பத்தில் நான் எடுத்துக் காட்டியது ஆராய்ச்சிக் குரிய விஷயமாதலால் நெடுநேரம் இந்த ஆராய்ச்சியில் செலவிட்டார். உடன் இருந்தோர் பலருக்கு - அவர் கோஷ்டியினருக்கும், நம்மவர்க்குங்கூட - இது வியப் பாகவே யிருந்தது.

பிறகு என்னைப் பார்த்துக் கேட்டார்: "இப்போது என்ன வேலை நடந்து வருகிறது?"

நான் திருச்சிற்றம்பலத்தில் காந்தி வித்தியாலயத்தில் நடந்து வரும் வேலைகள், ஆதாரக் கல்வித் துறையில் நான் வெளியிட்டுள்ள புத்தகங்கள், இவை பற்றிக் கூறினேன். அப்போதுதான் நான் வெளியிட்டிருந்த 'தோட்ட வேலை ஆசிரியர்' என்ற புத்தகம் ஒன்றையும் அவரிடம் கொடுத் தேன்.

புத்தகத்தைக் கையில் வாங்கிப் புரட்டிப் பார்த்துவிட்டு, அவர் சொன்னார்: "நீங்கள் பூதானத் துறையில் புத்தகம் எழுத வேண்டும். ஆதாரக் கல்வித் துறையில் ஈடுபட்டுள் ளோர் அனைவருக்கும் பயன்படும்படியாக, பூதானத்தையும் ஆதாரக் கல்வியையும் ஒற்றுமைப்படுத்திப் புதுப் புத்த கங்கள் எழுதுங்கள்" என்றார்

எனக்குத் திகைப்பாயிருந்தது. "எப்படி?" என்று கேட்டேன்.

"காலம் மாறி வருகிறது. 'ஆதாரத் தொழில்-நூற்றல்' என்று நான் புத்தகம் எழுதினேன் அல்லவா? அது நெடு நாளைக்கு முன், ஆதாரக் கல்வியே தெரியாத காலத்தில்;

இப்போது ‘ஆதாரத் தொழில்-பூதானம்’ என்று நீங்கள் புத்தகம் எழுதுங்கள்" என்றார்.

"அதெப்படி முடியும்? நூற்றல் கையால் செய்கிற ஒரு தொழில். அத்தொழிலை இயைபு படுத்தி ஒரு புத்தகம் எழுதினீர்கள். ஆனால் பூதானம் ஒரு தொழில் அல்லவே! அது ஒரு தத்துவம் அல்லது வேதாந்தம் அல்லவா? அதைப் பற்றிப் பிரசாரம் செய்யலாம். ஆனால் தொழிலாக வைத்து ஆதாரக் கல்வி போதிப்ப தெப்படி? முடியாதே" என்றேன்.

"ஏன் அப்படி நினைக்கிறீர்கள்? நன்றாக முடியும். பூதானம் என்பது வெறும் தொழில்தானா? எவ்வளவோ மேல் படியிலுள்ளது. பூதானம்—அதனால்வரும் நிலம், நிலம் அளத்தல், தீர்வை முறைகள், சாகுபடி முறைகள், சமநிலை உணவுக்கான திட்டம், அதற்கான பலவகைப்பட்ட பயிர்த் தொழில், இவற்றுக்கான திட்டம், கூட்டுறவு முறைகள், இது பற்றிய சமூக வேலைகள், நன்செய், புன்செய், தோட்டக்கால், விறகு, பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள், பழம், காய்கறி, ஆடு மாடுகள் வளர்ப்பு, கருவிகள் செய்தல், உரம் தயாரித்தல், இவற்றிலிருந்து பிறக்கும் தொழில்களான தோல் பதனிடுதல், எண்ணெயாட்டுதல் போன்றன—இவற்றில் எல்லாப் பாடங்களையும் கற்பதற்கு எவ்வளவு சந்தர்ப்பங்கள் உள்ளன என்று பாருங்கள். பூதானம் என்பது மக்களைப் பொறுத்த விஷயம். புதிய சமுதாய சிருஷ்டி என்று சொன்னால் குற்றமில்லை. சமூக நூல் அரசியல் போன்ற எல்லா வாழ்க்கை விவகாரங்களையும் உயர்ந்த வகுப்புக்கள் முடியக் கற்பிப்பதற்குப் பூதானத்திலும் சிறந்த அடிப்படை இருக்கமுடியாது. இது பற்றி எழுத எனக்கு மிக்க ஆசை. ஆனால் நேரமில்லை. நீங்கள் அவசியம் இது செய்யவேண்டும்" என்று வற்புறுத்திச் சொன்னார்.

பின்னர் இதை யொட்டிக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, விடை பெற்று வெளிவந்தேன். விநோபாவோடு தஞ்சை ஜில்லாவில் பூதான யாத்திரை செய்து வந்த நண்பர் அனேகர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். நான் அவருடன் பேசிவந்த பேச்சை நிரம்பப் பாராட்டினார்கள். எனக்குக் காரணம் ஒன்றும் விளங்கவில்லை. அதன் மேல் அவர்கள் சொல்லலானார்கள் : "ஐயா, தஞ்சையில் பூதான யாத்திரை செய்ததில் பூஜ்ய விநோபாவுக்கு மனச் சோர்வு அதிகம். திட்டமிட்டபடி வேலைகள் நடைபெறவில்லை. உத்தேசித்த நன்கொடைகள் கிடைக்கவில்லை. அதனால் மனவருத்தம். பல நாட்களாக அவர் ஊக்கமாய்ப் பேசியே நாங்கள் பார்க்கவில்லை. இன்று தான் இரண்டு மணி நேரம் உங்களோடு பேசிய காலம் ஊக்கமாயிருந்தார். தமிழ், இலக்கியம், கல்வி, ஆதாரக் கல்வி என்று பேசித் தம்மை மறந்திருந்தார். உங்களைக் கண்டவுடனே அவருக்குத் தம்மை மறக்கும்படியான உணர்ச்சி ஏற்பட்டது. இது மிகவும் வியக்கத்தக்கது. இதன் பொருட்டு உங்களுக்கு நாங்கள் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்கள்" என்று கூறினார்கள்.

மஹரிஷி அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள்

தைத்திரீய உபநிஷத் கூறுகிறது: "ஸ்வாத்யாய ப்ரவசனுப்யாம் ந ப்ரமதிதவ்யம்"—"நீ கற்பதிலும் கற்றதைப் பிறருக்குப் போதிப்பதிலும் அசட்டையாயிராதே." வேத ஞானத்தைக் குறித்தே சிறப்பாக இந்த உபநிஷத் வாக்கியம் எழுந்தபோதிலும், பொதுவாக ஸ்வாத்தியாயமும் பிரவசனமுந்தான் பிராம்மணனுக்கு இலக்கணம் என்று கற்றறிந்தோர் சொல்வார்கள். இந்த இலக்கணம் அமையப்பெற்ற பெரியோர் சிலர் இக்காலத்திலும் இருக்கிறார்கள். முக்கியமாக, காசியில் இருக்கிறார்கள், வருகிறார்கள், போகிறார்கள். அவர்களுள் ஒரு மகானுடன் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்த மகான் **அரியநாயகிபுரம் அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள்.**

காசி ஹிந்து சர்வ கலாசாலையில் நான் ஆசிரியனாக இருந்த காலம். 1945ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு நாள் காலையில், சுமார் எட்டு மணிக்கு நான் இருந்த இடத்துக்கு ஓர் ஆள் வந்தார். "குமாரசாமி மடத்தில் சாஸ்திரிகள் ஒருவர் வந்திருக்கிறார். தாங்கள் காசி சர்வகலாசாலையில் நியமனமாயிருப்பது கேட்டு மிகுந்த சந்தோஷம் என்று சொல்லச் சொன்னார். தாம் கிரம்ப சம்ஸ்கிருத சாஸ்திரங்கள் படித்தவரென்றும், தினமும் முறையாகத் தம்மிடம் வந்து சைவசாஸ்திரங்களைப் பயிலலாம் என்றும், தாம் சிரமமில்லாமல் பாடம் சொல்லக்கூடுமென்றும் தங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்" என்று அந்த ஆள் கூறினர்.

தேடாமற் கிடைத்த செல்வம் என்று இந்தச் சந்தர்ப்பத்தை எண்ணி உடனே விரைந்து மடத்துக்குச் சென்றேன். "வாருங்கள்" என்று சொல்லி அவர் என்னை

வரவேற்முர். ஆனல் நான் எண்ணியிருந்த தோற்றம் வேறு, கண்ட கோலம் வேறு. சாஸ்திரிகளைப்பற்றி அப்போது எனக்குத் தெரியாது. 'படி' என்று தாமாகச் சொல்பவர், நடுத்தர வயதினராயிருப்பார்; தொலைதூரத்தில் உள்ள இத்தமிழர் மேலைநாட்டுப் பாணியில் உடையணிந்திருப்பார் என்று நான் எண்ணியிருந்தேன். ஆனல் அவரோ பழுத்த வைதிகம். மிகவும் தளர்ந்த வயது, எண்பதுக்குமேல் இருக்கும். தோலெல்லாம் சுருக்கம் விழுந்திருந்தது. நடுத்தர உயரம். கழுத்தில் பொத்தான் போட்ட கறுப்புக் கம்பளிக் கோட்டு அணிந்திருந்தார். தலையில் பெரிய வெள்ளைத் தலைப்பாகை. உடல் தளர்ந்திருந்ததே யொழிய, குரல் கணீரென்ற ஒலியோடு மிகவும் கம்பீரமாயிருந்தது.

நான் போய் ஒரு பலகையில் உட்கார்ந்தேன். குமாரசாமி மடத்தின் மேற்பார்வையாளராக நாகரத்தினம் பிள்ளை என்ற ஓய்வு பெற்ற மாஜிஸ்டிரேட் ஒருவர் இருந்தார். அவரும் என்னுடன்கூட வந்து அமர்ந்தார். இருவரும் அமர்ந்தவுடனே 'மஹாதேவா' என்ற ஒலியோடு, சாஸ்திரிகள் பாடம் ஆரம்பித்தார். முதலில் அவர் எடுத்துக்கொண்டது தைத்திரீய உபநிஷத். மாணுக்கர் ஒரு சர்வகலாசாலையில் பாடம் படித்து உபதேசம்பெற்று, குருவின் முடிவான ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு, வெளியே செல்லும் முறையில் இந்த உபநிஷத் அமைந்திருந்தது. உபநிஷத் சம்பந்தப்பட்ட வரையில், சாஸ்திரிகள் ஒருவரே சர்வ கலாசாலை முழுமையுமாக இருந்தார் என்று சொன்னல் உண்மை, மிகையன்று.

பாடம் ஆரம்பித்தது. பாரதவர்ஷம்; இங்குள்ள மக்கள் அனைவரும் ஆரியரே; வேதம் எவ்வாறு தோன்றியது; மகரிஷிகளின் அருள் வாக்கு; வேதங்களின் பாகங்கள்; உபநிஷதங்களின் வரலாறு—ஆகிய பீடிகையோடு அவர் பேசினர். பேச்சு முழுமையும் ஆங்கிலத்தில். பேச்சின் வேகத்தையும் இடையருது வரும் தொடர்பையும் குறிக்க

நாம் 'கடல்மடை திறந்த வெள்ளம்' என்று சொல்வதுண்டு. ஆனால் இதையும் கடந்திருந்தது அவருடைய பேச்சு. அறியாதவர்கள், இவர் பேசவில்லை, முன்னமே மனப்பாடம் பண்ணியதையே ஒப்புவித்தார் என்று சொல்லிவிடத்தோன்றும். ஆனால் உண்மையிலேயே, சாஸ்திரங்களிலும் வேதங்களிலும் அவர் அவ்வளவு தூரம் தோய்ந்து இரண்டறக் கலந்திருந்தமையால், நினைத்த மாத்திரத்தில் கருத்துக்கள் பிரவாகமாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

திட்டமாகத் தினமும் ஒரு மணி நேரம் பாடம் என்று ஏற்பாடு. அப்படியே எட்டு மணிக்குத் தொடங்கினால் சரியாக ஒன்பது மணிக்கு நிறுத்திவிடுவார். கடிகாரம் வேண்டியதில்லை. இந்த ஒரு மணி நேரத்திலும் ஒரு விநாடியின் சொற்ப பாகம்கூட அவர் பேச்சை நிறுத்தியதில்லை; இடையிலே வேறு பேச்சோ, தலையீடோ சிறிதும் இருந்ததில்லை. இப்படியாக மூன்று மாதம் பாடம் நடந்தது. எட்டடிக்க ஐந்து நிமிஷத்துக்கு முன்னமேயே அவர் வந்து இருக்கையில் அமர்ந்துவிடுவார். அவர் இருக்கிற நிலையைப் பார்த்தபின், ஒரு நாள்கூட, ஒரு விநாடி நேரம்கூடத் தாமதமாக வரும் துணிவு எங்களுக்கு ஏற்பட்டதில்லை.

ஒரு நாள் பாடம் நடந்துகொண்டிருந்தபோது சாஸ்திரிகளுக்குத் தெரிந்தவர் ஒருவர் வந்து, இடையில் ஒரு வார்த்தை பேசத் தொடங்கினர். வந்துவிட்டது சாஸ்திரிகளுக்குக் கோபம்: "மிக்க முயற்சியோடு, மனத்தை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து, சாஸ்திரத்தில் நிறுத்தி, விஷயத்தை மற்றவர்கள் உணரும் முறையில் எடுத்துக் கூறிவருகிறேன். நீர் வந்து பேசுவதனால் என் கருத்தும் எண்ணத் தொடர்பும் சிந்தனையும் இடையில் துண்டிக்கப் படுகின்றன. பின் இவற்றை ஒன்று சேர்க்க எவ்வளவு கஷ்டப்படுகிறேன் தெரியுமா? இப்போது நான் என்ன பேசுகிறேன், எந்த நிலையில் இருக்கிறேன் என்றுகூடக் கவனிக்கத் தெரியவில்லையே? இப்படித் தடைசெய்வது

மிகவும் பிழை'' என்று உரத்த குரலில் வந்தவரை அதட்டினார். அதட்டியது ஆங்கிலத்தில்; வந்தவர் நடு நடுங்கித் தம் கடையைக் கட்டிக்கொண்டு ஓடிவிட்டார்.

ஆகவே, இடையீடு சம்பந்தமாக எங்கள் அச்சம் எவ்வளவு இருந்தது என்று யூகித்துக்கொள்ளலாம்.

பிருகதாரண்யம், சாந்தோக்யம் தவிர, ஏனைய ஒன்பது உபநிஷத்துக்களையும் நான் பாடங் கேட்டேன். ஒன்று குறிப்பிட வேண்டும். இவற்றைக் காசி சர்வகலாசாலையில் சமயக் கல்லூரியில் ஆசிரியராயிருந்த சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் நான் முன்னமே பாடங் கேட்டிருந்தேன். அக்காரணத்தால் இவரிடம் பாடம் சுலபமாய்ப் புரிந்துகொள்ள முடிந்தது. இல்லாவிட்டால் புரிவது சற்றுக் கடினமாயிருந்திருக்கும்.

சாஸ்திரிகள், அடையாறு, பரோடா சமஸ்தானம் முதலான இடங்களில் இருந்துகொண்டு நாடு முழுமையும் சாஸ்திர ஏடுகள் தேடித் தொகுத்தவர். பலமுறை இந்தியா வெங்கும் சுற்றியவர். யாத்திரை செல்லாமல் இருப்பதில்லை, ஏடு தேடாமல் யாத்திரை செல்வதில்லை என்று விரதம் பூண்டவர். தொகுத்த ஏடுகளை ஆராய்ந்து பல நூல்களும் பதிப்புக்களும் வெளியிட்டிருக்கிறார்; பெரும்பான்மை ஆங்கில மொழி பெயர்ப்புக்களோடு; தமிழில் வெளியிட்டது அபூர்வம்.

சாஸ்திரக் கருத்துக்களில் இவருக்கு ஈடுபாடு அதிகம். வடதுருவமே ஆரியர்களின் தாயகம் என்பது திலகருடைய கருத்து. சாஸ்திரிகளின் கருத்தும் அதுவே. இந்தத் தாயகத்தைப் போய்த் தரிசிக்க வேண்டும் என்பது இவருடைய பேரவா! அதன் பொருட்டு அப்படியே யாத்திரை செய்து 1936இல் இந்த யாத்திரையைக் குறித்து, "மகாமேரு யாத்திரை'' என்ற பெயரில் ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகங்கள் எழுதி வெளியிட்டார். அது, பிரயாண நூல் எதுவுமே தமிழில் வெளிவந்திராத காலம்.

சாஸ்திரிகள் எழுதிய இந்தப் புத்தகம் அவருடைய வாழ்க்கையையும் லக்ஷ்யத்தையும் எடுத்துக் காட்டும் ஒரு கருத்துக் கருவூலம் என்று கூறலாம். சாஸ்திரிகள் கல்வி போதனையே தம் வாழ்க்கையின் பெருநோக்கமாய்க் கொண்டவர்; கல்வி போதித்து அதற்காகப் பணம் பெறுதல் பாவம் என்ற கருத்துடையவர். பாரிஸ் நகரத்தின் சர்வகலாசாலைகளில் இவர் பேசியதைக் கேட்ட ஸில்வன் லெவி என்ற பேராசிரியர் இவருடைய வேத கானத்தைக் கிராமபோன் தட்டில் ஏற்றி வைத்துக்கொள்ள ஆசைப்பட்டார். இவரும் இசையவே, இவருடைய வேத பாராயணம் தட்டில் எடுக்கப்பட்டது. மேலைநாட்டுத் தொழில் முறைப்படி அதற்குரிய 'ராயல்டி' தொகையை இவருக்குக் கொடுக்கக் கம்பெனியார் முன் வந்தபோது, கல்வியை விற்பதில்லை என்ற விரதமுடைய இவர், அத்தொகையை அக்கலாசாலையிலேயே ஏழை மாணவருக்கு உபயோகித்துக் கொள்ளச் சொல்லிவிட்டார்.

மற்றொரு சம்பவமும் இவர் வாழ்க்கையின் வைராக்கியத்தை விளக்க வல்லது. எந்தக் குளிரிலும் காலை நான்கு மணிக்கு எழுந்து, குளிர்ந்த நீரில் குளித்து ஜபம் பூஜை முதலியன முடித்துப் பின்னர்தான் வெளிவருவார். ரயில், கப்பல் முதலியவைகளில் பிரயாணம் செய்த காலத்திலும் இந்த நியமத்தில் இவர் தவறியதில்லை. ஆர்க்டிக் பிரதேசத்தினுள் சென்று தங்கியிருந்தபோதும், இப்படியே செய்தார். தங்கிய இடம் டிரோமஸ்ரியம்; எங்கும் உறைபனி. குளிர் பனி, பூஜ்ய டிகிரிக்குக் கீழே பல அம்சங்கள் போய் விட்டது. நீரைத் தொட்டாலே உறைந்துவிடுகிறது. குளிர்ந்த நீரில் குளிக்கப் போனார். குளித்தே அறியாத மக்கள் வாழ்ந்த அந்தப் பிரதேசத்தில், கப்பல் காப்டன் இவரிடம் ஸ்நான அறைச் சாவியைக் கொடுக்க மறுத்து விட்டான். "இவர் ஒரு பைத்தியம். வலிய சாவைத் தேடுவதற்கு நான் உடந்தையாயிருக்க வேண்டாம்" என்று

எண்ணினன் போலும். ஆனல் சாஸ்திரிகளோ, விடா முயற்சியுடன், காப்டன் மனைவியிடம் நயமாகப் பேசிச் சாவியை வாங்கிக்கொண்டுபோய்க் குளித்துவிட்டு வந்தார். குளிர் நீரில் குளித்தும் உறைந்துபோகாமல் உயிரோடிருந்த இந்தச் சித்தரை, அறையை விட்டு வெளி வந்தவுடன் அனேகர் கூடித் தரிசித்தார்களாம்.

இவருடைய இந்த வைராக்கியத்தை நானும் நேரில் கண்டிருக்கிறேன். காசியில் டிசம்பர் - ஜனவரியில் கடுங் குளிர். கங்கை நீரைத் தொட்டாலே விரல் உறைந்துபோய் விடும். ஆனல் சாஸ்திரிகள் காலை நான்குமணிக்கு எழுவார். அவர் எழுந்தார் என்பதற்கு அடையாளம், அவர் பாடுகிற வேத மந்திரங்களும், உபநிஷத மந்திரங்களும், பிற வட மொழித் தோத்திரங்களும், கேதார கட்டம் முழுவதும் ஒலிக்கும். குறுகலான சந்துகள்; உயர்ந்த மாடிகள்; கருங்கல் கட்டிடங்கள் — ஆகவே உரத்து அவர் பாடிக் கொண்டே யிருப்பது ஓயாமல் கம்பீரமாக எதிரொலித்துக் கொண்டிருக்கும். பாடிக்கொண்டே அவர் சென்று கங்கையில் இறங்கி முழுகுவார். முழுகித் திருநீறணிந்து ஜபம் முடித்து இருக்கை நோக்கித் திரும்புவார். கங்கையில் இறங்கிக் கரையேறுவதென்பது எளிதல்ல. சுமார் முப்பது படிகள் இறங்கி ஏறியாக வேண்டும். அவருடைய பிராயமோ எண்பதுக்கு மேல். கடுங்குளிர்; ஆனல் சிறிதும் ஆயாசமின்றி அவர் தினமும் போய் முழுகி வருவார். என் வீட்டின் ஜன்னல் வழியே பார்த்தால் இருட்டில் அவர் போவதும் வருவதும் நன்கு தெரியும். நானும் காலையில் நான்கு மணிக்கு எழுந்து படிப்பு-எழுத்து வேலைகள் செய்தபோதிலும், சாஸ்திரிகள் நீராடிக் கரையேறி வரு வதைக் கண்டபோதிலும், நான் போய் அந்தக் குளிரில் நீரில் இறங்கிக் குளிக்கத் துணிவு பிறந்ததில்லை.

இது பற்றி ஒரு சமயம் சாஸ்திரிகளே சொன்னர்: ''இப்பொழுது எனக்குத் தள்ளாமை. குளிர் தாங்கமுடியா

மையால் குளித்து ஜபங்களை முடித்துக்கொண்டு பின் இருக்கை யடைந்து உலர்ந்த வஸ்திரம் தரித்துக்கொண்டு, பிறகு அங்குள்ள குழாயடியில் துணி துவைக்கிறேன். முன்னெல்லாம் கங்கையிலேயே துவைத்துக்கொண்டு வருவேன். இப்பொழுது முடியவில்லை " என்றார்!

உபநிஷத பாடம் முடிந்தபின்னர் நாள் கொஞ்சம்தான் இருந்தது. அவர் காசியை விட்டு நீங்கும் சமயம் நெருங்கி விட்டது. சூத சம்ஹிதை பாடம் சொல்ல வேண்டுமென்று அவருக்கு விருப்பம். அது சிறந்த சைவ சாஸ்திரம் என்பது அவர் கருத்து. " ஆதி சங்கரர் பிரம்ம சூத்திர பாஷ்யம் எழுதுமுன், சூத சம்ஹிதையைப் பதினெட்டுமுறை படித்து விட்டுப் பின்னரே பாஷ்யம் எழுதினார் என்பது பாரம்பரை வசனம். அதிலிருந்து இதன் பெருமையை உணரலாம் " என்று அவர் கூறினார்.

இதன் பொருட்டு வடமொழி நூலொன்றைத் தருவித்தார். 1918இல் தாமே இதை மொழி பெயர்த்து அச்சிட்டிருந்தார். அரிதின் முயன்று இதன் பிரதி யொன்றையும் சம்பாதித்துத் தந்தார். இரண்டையும் வைத்துக்கொண்டு மூலத்தை நான் படிக்க, அவர் நெடுகிலும் தேவையான இடங்களில் மட்டும் விளக்கம் சொல்லிக்கொண்டு போவார். சூத சம்ஹிதை சுமார் ஐயாயிரம் சுலோகம் கொண்டது. தினந்தோறும் இருநூறு பாடலுக்கு மேல் நடக்கும். எனக்கு சம்ஸ்க்ருதம் அதிகப் பழக்கமில்லை. கற்கவேண்டும் என்ற ஆசையால் நான் அவரிடம் படித்தேன். படிக்கும்போது தடங்கல் ஏற்பட்டால் பொறுக்கமாட்டார், கோபிப்பார். ஆகவே அவரிடம் சூதசம்ஹிதை பாடம் கேட்கும்போது, எனக்குப் பயம் என்றால் உண்மை. சர்வகலாசாலையில் பாடங் கற்பிக்க நான் முன்னதாகத் தயாரித்துக்கொண்டு போகாவிட்டாலும், சாஸ்திரிகளிடம் பாடம் கற்க நான் போன காலம் முழுமையும், வீட்டில் முன்னதாக ஒரு முறை படித்துக்கொண்டு போவது

வழக்கம். அவருக்கோ, எல்லா உபநிஷத்துக்களும், சூத சம்ஹிதை ஐயாயிரம் பாடல்களுமே, மனப்பாடம்.

சாஸ்திரிகள் காசியில் தங்குகிற மூன்று மாத காலமும் முடிந்து, அவர் காசியை விட்டுப் போகிற காலம் நெருங்கி வந்தது. புறப்படுகிற தினத்துக்கு முதல் நாள். அன்று கலாசாலை விடுமுறை. ஆகவே நான் வீட்டில் இருந்தேன். இருந்த இடம் ஒரு மாடிக் கட்டிடம். கேதார கட்டத்தில் கங்கைக் கரையோரம். காலை சுமார் பத்து மணி இருக்கும். மாடிப்படியில் யாரோ ஏறிவரும் சத்தம் கேட்டது. படி, கருங்கல் படியானதால் சத்தம் அதிகமாய்க் கேட்கும். வழக்கமாய் வருகிற காலடி யோசையாயில்லை. புதியதாய் இருந்தது. 'சரி, யாரோ வருகிறார்கள். வரட்டும், பார்ப்போம்' என்று எண்ணி நான் படித்துக்கொண்டிருந்தேன். கருங்கல் தரையில் கம்பு ஊன்றின சப்தமும் கேட்டது. திரும்பிப் பார்த்தேன், சாஸ்திரிகள் கடைசிப் படி தாண்டி வந்து கொண்டிருந்தார்.

சாஸ்திரிகள் என்றால் எப்பொழுதும் அச்சந்தான். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தேன். எழுந்து, "வர வேண்டும்" என்று வரவேற்று ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு உட்காரச் சொன்னேன். அறைக்குள் நுழைந்தார். பின்னாலே பார்த்தால் அவருடைய தர்மபத்தினி! இருவரையும் சேர்த்து வரவேற்கும் பாக்கியம் கிடைத்தது பற்றி மிக்க மகிழ்ச்சியானாலும், மனைவியோடு அவர் வந்த காரணம் விளங்காமல் திகைப்பு.

எனினும் சமாளித்துக்கொண்டு, சொற்களால் என்னுடைய மகிழ்ச்சியை வெளியிட்டேன். அப்போது சாஸ்திரிகள் சொன்னார்; "நாளை நான் ஊருக்குச் செல்லப் போகிறேன். மாணாக்கனுடைய குடும்ப வாழ்க்கையைக் குருவானவர் அறிந்திருக்க வேண்டும் என்பது சாஸ்திரம். பத்தினியோடுகூட குரு அந்த வாழ்க்கையில் பங்குகொள்ள வேண்டும். இது வரையில் உங்கள் கிருகத்துக்கு நான்

வந்ததில்லை. முன்னமேயே வந்திருக்கவேண்டும். ஒரு நாள் மாணுக்காராயினும் பல வருஷம் படித்தாலும், குரு சிஷ்ய பாவம் சாஸ்திரோக்தமாய் இருக்கவேண்டும். ஆகவே, இங்கு ஒரு நாளேனும் வந்து பார்க்கவேண்டும் என்றுதான் நான் பத்தினியோடு கூட வந்தேன். குரு வேறு, குரு பத்தினி வேறு அல்ல. உங்கள் குடும்பத்தையும் இப்பொழுது பார்க்கவேண்டும்" என்று கேட்டார்கள்.

இதற்குள் என் மனைவியும் குழந்தைகளும் அங்கு வந்தார்கள். அவர்கள் பொதுவாக சாஸ்திரிகளையோ அவர் மனைவியையோ நெருங்கிப் பார்த்ததில்லை. இருவரும் அங்கு வந்திருந்த காரணத்தைச் சொல்லி வணங்கி அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படி சொன்னேன். அவர்களும் அப்படியே செய்ய, சாஸ்திரிகள் "பரமேசுவரன் உங்கள் அனைவருக்கும் சகல பாக்கியங்களையும் அருள்வாராக, வித்தை உங்களிடத்தில் மேலும் மேலும் ஓங்குமாக" என்று சொல்லி ஆசிர்வதித்தார். குழந்தைகள் பெயரென்ன, என்ன படிக்கிறார்கள் என்றெல்லாம் லௌகிகமாய்ச் சிறிதுநேரம் விசாரித்துக் கொண்டிருந்து, பின் தம் இல்லம் சென்றார்.

மறுநாள் காலை அவர் ஊருக்குப் புறப்படும் சமயம். மடத்தின் வாயிலில் டோங்கா வந்து நின்றது. அவருடைய சாமான்களையெல்லாம் கொண்டுவந்து வண்டியில் ஏற்றியாகிவிட்டது. சாஸ்திரிகள் வழக்கமாக எங்களுக்குப் பாடம் சொல்லும் இடத்தில் இருந்தார். நானும் நாகரத்தினம் பிள்ளையும், ஒரு பெரிய தட்டில் கொஞ்சம் பழங்களும், பூவும் வாங்கி வைத்துக் கையில் எடுத்துக்கொண்டு அங்குச் சென்றோம். உள்ளூர எங்களுக்குப் பயம் என்று சொன்னால் உண்மை. பழத்தை எங்களுடைய கையுறையாக ஏற்பாரோ என்ற பயம். அவர் வேறு திசை பார்த்துக்கொண்டிருக்கிற சமயம், அவர் எதிரில் இருந்த ஒரு பலகையில் பழத்தட்டை வைத்து விட்டு, நாங்கள் இருவரும்

எட்டுறுப்பும் நிலம் தோயும்படி, சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தோம்.

சாஸ்திரிகள் திரும்பிப் பார்த்தார். "அடடா, என்ன அபசாரம்! எனக்கா இந்த நமஸ்காரம்! மஹாதேவா மஹாதேவா! பரமேசுவரப் பிரீதி" என்று சொல்லிய வண்ணம் அப்படியே மண்ணில்வீழ்ந்து வணங்கி எழுந்தார்.

இன்றைக்குப் பார்க்கிறோம். ஒரு மாணுக்கன் வந்து வணக்கம் செலுத்தினுல், "நமக்கு அவன் வணக்கம் செய்யக் கடமைப்பட்டவன்" என்று எண்ணிப் பெரும்பாலும் சும்மா இருக்கிறோமே யன்றிப் பதிலுக்கு வணங்குவது நம்மிடையே மிகவும் குறைவு. இந்த நிலையிலே சாஸ்திரிகளுடைய செயலை எண்ணிப் பார்க்கும்பொழுது, அவர், சாஸ்திரங்களும் உபநிஷதமும் கூறும் வாழ்க்கையே வாழ்ந்தார் என்பது கண்கூடாய்த் தெரிகிறது. 'ஈசாவாஸ்யம் இதம் சர்வம்' என்பது உபசாரம் அன்று; அவர் சொல்லில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும், மனத்தாலும்கூட அறிந்து கடைப்பிடித்த உண்மை. பிறருடைய வணக்கத்தை ஏற்கத் தமக்குத் தகுதியில்லை என்று, அதையும் மனப்பூர்வமாகப் பரமேசுவரனுக்கு அர்ப்பணம் செய்த அப்பெரியாருடைய உள்ளப் பண்பாட்டை எண்ணுந்தோறும் மனம் பூரிப்படைகிறது. திரிகரண சுத்தி என்பது வெறும் சொல்லிலன்று; அவர் வாழ்க்கையில் நாள்தோறும், நிமிஷந்தோறும், அப்பியாசத்தில் வந்த ஒரு சாதனை.

சாஸ்திரிகளுடைய குணநிசயங்களை இவ்வளவு நாள் கழித்து இன்று எண்ணிப் பார்க்கும்போதும், மஹரிஷிகள் இன்றும் நம்மிடையே வாழ்கிறார்கள், அவர்கள் இப்படி இருப்பார்கள், இப்படி நடப்பார்கள், இப்படிப் பேசுவார்கள் என்று உணர்ந்து மனத்தில் மகிழ்ச்சியும் வியப்பும் உதிக்கின்றன.

அகராதி அளித்த அறிஞர்

1933-34 ஆம் வருஷமாக இருக்கலாம். சென்னையில் எழுமூரில் ஞானியார் சுவாமிகள் வந்து தங்கி, சைவ சமய சாத்திர ஞானமும் பக்தியும் தமிழார்வமும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடச் செய்துகொண்டிருந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்துக்கு மிகவும் பொருத்தமாக, சைவ சித்தாந் தச் சமாஜக் காரியதரிசியாயிருந்த திரு. ம. பாலசுப்பிர மணிய முதலியார், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதி னைகையும் பழைய உரைகளுடன் அழகாக அச்சுப் போட்டு மலிவான விலையில் கொடுத்துவந்தார். நானும் ஒரு புத்தகம் வாங்கியிருந்தேன்.

அப்போது எழுமூரில் சில சைவ அன்பர்கள் எனக்குப் பழக்கமாகி யிருந்தார்கள். அவர்கள் சைவப்பித்தம் கொண் டவர்கள். அவர்களில் இருவரை ஒருநாள் மயிலாப்பூரில் சந்தித்தேன். "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டேன்.

" சிவப்பிரகாசப் பாடம் கேட்கப் போகிறோம்."

" எங்கு நடக்கிறது ?"

" இங்குதான், மயிலாப்பூர் சித்திரகுளம் கீழ்கரை யில்."

" யார் சொல்லுகிறார்கள் ?"

" வையாபுரிப் பிள்ளை."

" அவர் யார் ?"

" நல்ல பண்புள்ளவர். தமிழ் லெக்ஸிகன் ஆசிரியராகச் சென்னை சர்வகலாசாலையில் வேலை செய்பவர். ஞானியார் போலச் சொல்லாவிட்டாலும், நமக்கெல்லாம் பயன்படும் படி சொல்லுகிறார்."

அவர் யார் என்று கேட்டதிலிருந்தே, எனக்கு அக் காலத்தில் தமிழ் அறிஞர் உலகத்தில் இருந்த அறிமுகம் எவ்வளவு என்று நிதானிக்க முடியும்.

"நானும் வரலாமோ?"

"பேஷாக வரலாம். யாரும் வரலாம். நாங்கள் கொஞ்சம் பேர்தான் பயில்கிறோம். நீங்களும் வந்தால் நிரம்பப் பயனுண்டு."

சரி என்று அன்றைக்கே அவர்களுடன் கூடச் சென்றேன். ஒரு வீட்டு மாடியில் சுமார் எழெட்டுப் பேர் ஒரு சமுக்காளம் விரித்து அதில் உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் சென்றவுடன் சிவப்பிரகாசப் பாடம் ஆரம்பமாயிற்று. அப்போதுதான் வையாபுரிப் பிள்ளையவர்களை முதன் முதலாகப் பெயர் தெரிந்துகொண்டேன்.

அதற்குமுன், அப்புஸ்வாமி ஐயரவர்கள் வீட்டில் டி. கே. சி. அவர்களின் கம்பராமாயணப் பேச்சு நிகழ்ந்த போது பலமுறை அவரை நான் பார்த்திருக்கிறேன். ஆனாலும் கவர்ச்சிகரமான தோற்றமோ பேச்சோ இல்லாமல், அவர் மிகவும் ஒதுங்கிய சுபாவமுடையவராயிருந்ததால், பெயர் அறிந்து வைத்துக்கொள்ளும் எண்ணம் எனக்கு அதுவரையில் உண்டானதில்லை.

அன்று ஒரு மணி நேரம் சிவப்பிரகாசப் பாடம் நடந்தது. முடிவில் அவர் புதிதாக வந்திருந்தவனான என்னை விசாரித்துத் தெரிந்துகொண்டார். இவ்வாறு தொடங்கியது எங்கள் தொடர்பு.

அச்சமயம் அவர்கள் **புறத்திரட்டு** என்ற தொகை நூல் ஆராய்ச்சி தொடங்கியிருந்தார். நானாக வலிந்து அவருக்கு உதவுவதாகச் சொல்லித் தினமும் காலையில் மூன்று மணி நேரம், ஏறக்குறைய இரண்டு வருஷகாலம், அவருடன் இந்த ஆராய்ச்சியில் கலந்துகொண்டிருந்தேன். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்து பல ஏடுகளை அவர்கள் தருவித்து வைத்திருந்தார்கள். இவை ஒவ்வொன்றையும் எழுத்தெழுத்தாகப் படித்து, காண்கிற பாடபேதங்கள் அனைத்தையும் குறித்துவைத்து, பின் சரியான பாடம் எது என்று, நூல்கள் உரைகள் முதலியவற்றின் துணைகொண்டு

நிச்சயித்து அப்பாடத்தை அச்சிடுவதே அப்போது நடந்த வேலை.

புறத்திரட்டு என்பது சுமார் ஐந்நூறு வருஷங்களுக்குமுன் ஏற்பட்டுள்ள ஒரு பாடல் திரட்டு. அறம், பொருள், இன்பம் என்று பகுக்கப்பெற்றுள்ளது. ஆயிரத்துக்கு மேற்பட்ட பாக்களுடையது. இறந்துபோன அனேக நூல்களின் பாடல்களை அதனுள் காணலாம். உதாரணமாக, **குண்டலகேசி**, **வளையாபதி**, **முத்தொள்ளாயிரம்** போன்ற நூல்களில் இன்று தெரிய வந்திருக்கும் பாடல்கள் யாவும் புறத்திரட்டிலிருந்து தெரியவந்தனவே.

ஏட்டிலிருந்து எழுத்து விடாமல் பாடல்களைப் படிப்பது என் வேலை. ஏட்டுப் பழக்க முடையோருக்கு இது எவ்வளவு கடினம் என்பது தெரியும். எனது தமிழ்ப் புலமைக்கான பயிற்சி இதன் மூலமே தொடங்கிற்று. தினமும் இருபது முப்பது பாடல்களுக்குமேல் படிக்க முடியாது. பல ஏடுகளையும் ஒன்றன்பின் ஒன்ருகப் படிக்கவேண்டும். எழுத்துக்களிலுள்ள எல்லாப் பேதங்களையும் குறிக்கவேண்டும். குறித்தபின் சரியான பாடம் எது என்பதை, சொல்லமைதி, பொருட்போக்கு, முடிந்தால் பிற இடங்களில் வரும் ஆட்சி, பழைய பதிப்புக்கள், உரை என்பவற்றின் உதவியால் நிச்சயிக்க வேண்டும். இதுவே தினமும் நடந்த வேலை. பிள்ளையவர்கள் அந்த நாளில் தமிழ்நாட்டில் புலமையில் தமக்கு இணை இல்லாதவர். எனினும், அவர் ஒரு பாட்டையேனும் இப்படி இருக்க வேண்டும் என்று திருத்தியவர் அல்லர். இப்படித் தான் ஏட்டில் இருக்கிறது, இதுவே திருத்தமான பாடம் என்று தம் மனச்சாட்சிக்கு விரோத மில்லாமல் தைரியமாய் எடுத்துக் காட்டி அச்சிட்டு வந்தார்.

ஊன்றி ஆராய்பவர்களுக்கு, புறத்திரட்டுப் பதிப்பு, புலமைக்கு ஓர் உரைகல்லென்று தோற்றவல்லது. அச்சிடாத, கிடைக்கப் பெருத, நூல்கள் பலவற்றின் பாடல்கள்

அதனுள் காணப் பெறுவதோடன்றி, அச்சிட்ட பல நூல்களின் பிழைபட்ட பாடல்கள் அதனுள் மிகவும் திருத்தம் பெற்றிருக்கவும் காணலாம். சிறப்பாகக் கூறத் தக்கவை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்; ஏலாதி, சிறுபஞ்சமூலம், நான்மணிக்கடிகை, திரிகடுகம் போன்ற வற்றின் பாடல்கள் அனேகம் இந்தத் திரட்டில்தான் முதன் முதலாகத் திருத்தமான பாடத்தோடு காணப்படுகின்றன. பல ஏடுகளை ஒப்பு நோக்குவதாலும், பாடங்களைச் சிந்தித்து, மங்கியும் சிதைந்தும் போன ஏட்டு வடிவங்களை மீண்டும் மீண்டும் படிப்பதாலும், திருத்தமான பாடம் கிடைத் தாலன்றிப் பிள்ளையவர்கள் பாடங்களை அச்சுக்கு உத்தரவு கொடுக்கமாட்டார். அச்சகத்தாருக்கு இதனால் மிக்க இடர்ப் பாடுண்டு. காலி புரூப், பக்கப் புரூப், பாரம் புரூப் ஆகிய எல்லா நிலைகளிலும் புரூபைத் திருத்திக்கொண்டேயிருப் பார். காரணம், எதுதான் உண்மையான, திருத்தமான, பாடம் என்று ஆதாரபூர்வமாய்க் காணவேண்டும் என்ற ஆசை.

திருத்தமான பாடங் கண்டால் கண்ணிலான் காணப்பெற்றான் என்றாற்போல, மிக்க மகிழ்ச்சியடைவது அவர் இயல்பு. ஓர் உதாரணம் இங்கே கூறமுடியும். அவர்கள் **சங்க இலக்கியம்** பதிப்பித்த காலம். நான் புறநானூற்று ஏடுகள் ஒப்பு நோக்கி வந்தேன். ஒரு பாடலின் மூலம், "நிற்பாடிய வயங்கு செந்நா, பிறரிசை நுவலாமை" என்று ஐயரவர்கள் பதிப்பில் அச்சுப் போட்டுள்ளது. நான் பரிசோதித்த ஏட்டில்

> "நிற்பாடிய வலங்கு செந்நா
> பிற் பிறரிசை நுவலாமை"

என்று காணப்பட்டது. ஐயரவர்கள் அச்சிட்ட பழைய புறநானூற்று உரையில், "நின்னைப்பாடிய **அசைகின்ற** சிவந்த நாவானது, பின்னைப் பிறருடைய புகழைச் சென்று

பாடாத வண்ணம்" என்று காணப்பட்டது. "வயங்கு செந்நா" என்பதன் பொருள் "பிரகாசிக்கிற சிவந்த நா" என்பதாகும். உரையில் காணப்படுவது "அசைகின்ற சிவந்த நா." எனவே அச்சு மூலத்துக்கும் உரைக்கும் இங்கு முரண். "வலங்கு செந்நா" என்றிருந்தது சந்தி நீக்கி, "அலங்கு செந் நா" என்று பார்த்தால் "அசைகின்ற சிவந்த நா" என்று பொருள்படும். எனவே இதுவே சரியான பாடம்.

மேலும், புறநானூற்றின் பண்டை உரையாசிரியர் மிகச் சிறந்த உரையாசிரியருள் ஒருவர். மூலத்தைத் தழுவியே ஒரு சொல் விடாமல் பொருள் கூறுவார். "பின்னைப் பிறருடைய புகழைச் சென்றுபாடாதவண்ணம்" என்ற தொடருக்கு, "பிற்பிறர் இசை நுவலாமை" என்ற பாடம் பொருத்தமாயிருக்கலாம். "பின்னை" என்ற உரைக்கு மூலமாக, "பிற்"(பின்) என்ற சொல் பாட்டில் இருத்தற்குரியது. ஏட்டில் காணும் போது, இது புள்ளியில்லாமல் "பிற பிறரிசை" என்றே யிருக்கும். ஆகவே பிற பிற என்று வருவது, கைத்தவறுதலால், பிற என்ற இரு எழுத்துக்களும் இருமுறை எழுதப் பெற்றுள்ளன என்று கருதி அச்சு மூலத்தில் விடப்பட்டிருக்கலாம்.

அன்றியும், "திற்பாடிய" என்ற எதுகைக்கு, "பிறரிசை" என்பதைவிட, "பிற்பிறரிசை என்பதே பொருத்தமான எதுகை உடையதாய் இருப்பதோடு, ஓசை நயமும் பொருந்தியிருக்கிறது.

இவற்றை நான் பிள்ளையவர்களிடம் குறிப்பிட்ட போது, மிக்க மகிழ்ச்சியடைந்து இந்தப் பாடத்தை மிகவும் பிரமாதப்படுத்திவிட்டார்கள். அவர்களுடைய சிறந்த இயல்பு பிறரை ஊக்குவிப்பது. திருத்தமான பாடம் கண்ட புகழ் பிறருக்கு வருவதில், தாமே புகழைப் பெற்றது போன்ற மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாயிற்று. பொறாமை என்பது சிறிதும் தலைகாட்டாத உள்ளம் அவருடையது.

உண்மையிலேயே, இலக்கியம் தந்த இன்பத்தை வேறு பயன் கருதாமல் அனுபவிக்கும் பக்குவம் அவருக்கு இருந்தமையால், வையகம் பெற்ற இன்பமும் புகழும் தாம் பெற்றதாக அவர் கருதிவிட்டார்.

'உனையல்லால் ஒரு தெய்வம் உள்கேன்' என்று அவர் உண்மையாகவே தமிழ்த் தெய்வத்தை வணங்கி வந்தவர். நான் அவருடன் தமிழாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சமயம், ஒரு நாள் அவர் என் வீட்டுக்கு வந்தார். தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அவருக்கு உபசாரம் சொல்லி இருக்கச் செய்த பின், "எனக்கு இரண்டே பைத்தியம்; ஒன்று தமிழிலக்கியம், மற்றொன்று செடி கொடிகள்" என்றேன். கேட்டு அவர் சொன்னார்: "ஒருவருக்கு ஒரு பைத்தியம் ஏற்பட்டிருந்தாலே போதுமானது. இரண்டு இருந்தால் தாங்காது. தமிழ் இலக்கியம் என்ற ஒரு எஜமானிக்கே சேவை செய்ய என்னால் முடியவில்லை" என்றார்.

சொந்த விருப்பு வெறுப்புக்களைத் துறந்து உண்மையைக் காணவேண்டுமென்ற ஒரே ஆசையோடு எதையும் ஆராயும் அருங்குணம் அவரிடம் அமைந்திருந்தது. இதற்குப் பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். தொல்காப்பியரைக் குறித்து அவர் ஆரம்பகாலத்தில் எழுதிய கட்டுரை இக்கூற்றை மெய்ப்பிக்கவல்லது. தொல்காப்பியர் சைனர் என்பது இவர் கருத்து. கழுத்தில் உருத்திராக்கம் போட்டு நெற்றியில் திருநீறு இட்டுப் புலவர் யாவரையும் சைவர் என்று கூறி வந்த இன்றைய ஆராய்ச்சி யுலகத்தில், இவர் கூற்றுக்கு மறுப்புக்கள் எழுந்தமை இயல்பே. ஆயினும், சம்பிரதாயத்துக்காக வேண்டி எதையும் ஒப்புக் கொள்ளாமல், தாமாக ஆராய்ந்து தனித்து முடிவு காணும் மனப்பக்குவமும் துணிவும் அவரிடம் அமைந்திருந்தன.

ஐம்பெருங்காப்பியங்கள் பற்றி அவருடைய ஆராய்ச்சி முடிவுகளும் இத்தகையனவே. மணிமேகலை கதையை,

(மணிமேகலை துறவு என்ற காப்பியத்தை) "அடிகள் கேட்கக் கூலவாணிகன் சாத்தன் செய்தனன்" என்று அக்காப்பியத்துள்ளேயே சொல்லப்பெற்றுள்ளது. ஆனால் பிள்ளையவர்கள் இக்கூற்றை மறுத்தார்கள். மணிமேகலை சிலப்பதிகாரத்தின் சமகாலநூல் அன்று; சிலநூற்றாண்டுகள் பிற்பட்டது; சமகாலம் என்று நிறுவுமாறு சிலப்பதிகாரத்துள் சேர்க்கப்பெற்றுள்ள வரலாறுகள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்பது அவருடைய கருத்து. இதை அவர்கள் சர்வகலாசாலைப் பேச்சுக்களில் விளக்கிக் கூறினார்கள்.

சங்க இலக்கியம் இன்று எல்லோர் கையிலும் அமர்ந்து பண்டிதர் எல்லோர் நாவிலும் பயின்று வருவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. சங்க இலக்கியமாகிய **பத்துப் பாட்டு** முழுமையும், **எட்டுத் தொகையினுள்** ஐந்தையும், அழகாக ஆராய்ச்சி யுரைகளோடு நமக்கு வழங்கிய வள்ளல் டாக்டர் சாமிநாதையரவர்கள். ஆனால் எட்டுத் தொகை பத்துப்பாட்டு என்றே வழங்கிவந்த அந்த வழக்காற்றை மாற்றி, **சங்க இலக்கியம்** என்று அவற்றுக்குப் புதுப் பெயரிட்டு, இப் பெயரையே பெருவழக்காக்கிய புலவர் ஒருவர் உண்டென்றால், அவரே வையாபுரிப் பிள்ளை.

'சங்க இலக்கியம் யாது ?' என்று ஒரு வரையறை ஏற்படாத காலம் அது. தமிழ்கூறு நல்லுலகம் எங்கும், அன்று பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள்—எல்லாம் சங்க இலக்கியம் என்று கூறுவதே வழக்கு. இதைப் புதிதாகத் தெளிவுபடுத்தி, '**சங்க இலக்கியம்** என்றால் இவை எல்லாம் அல்ல; பத்துப் பாட்டும் எட்டுத்தொகையுமே, கடைச் சங்கம் என்று சொல்லுகிற சங்ககாலத்தில்தோன்றிய சங்கஇலக்கியங்கள்; பதினெண்கீழ்க்கணக்கு பிற்பட்டது; இது சங்க இலக்கியம் அன்று. ஐம்பெருங் காப்பியங்கள் காலத்தால் இன்னும் பிற்பட்டவை' என்று துணிந்து அவர் சொன்னார். சங்க

இலக்கியம் என்று கூறுவதன் பொருளே அது முதல்தான் திட்டமாக இன்னதென்று ஏற்பட்டது. அவருடைய கருத்து இன்று எங்கும் பரவியிருக்கிறது.

இதற்குத் துணையாக அவர் பதிப்பித்த 'சங்க இலக்கியம்' என்ற பெருநூல் இருக்கிறது. 1560 பக்கங்கள் உடைய அந்தப் புத்தகம் சமாஜப் பதிப்பாக வெளிவந்தது. முதல் முதலாக அவர், சங்கப் புலவர்கள் யார் என்று பெயர் குறிப்பிட்டு, 'சங்கப் புலவர் பெயர் அகராதி' என்ற பெயர்ப் பட்டியல் தொகுத்தார். அதன்பின் அவரவர் பாடிய பாடல்கள் அனைத்தையும் பத்துப்பாட்டு, எட்டுத் தொகையிலிருந்து திரட்டித் தொகுத்து அச்சிட்டார். இது மிகவும் புரட்சிகரமான ஒரு முயற்சி. இந்நூல் வெளிவந்த பின்னரே சங்கப்புலவர் பற்றிய ஆராய்ச்சி பலதுறையிலும் உருக்கொண்டது. சங்கநூல் என்றால் திசை தெரியாத இருள் அடர்ந்த ஒரு காடு என்ற எண்ணம் மறைந்து, அது வும் நம்மைப் போன்ற இன்ப துன்பம் நிறைந்த மக்கள் உலகு என்ற உணர்வு, அதன் பின்னரே பரவத் தொடங் கிற்று.

ஆடம்பரமே மலிந்த இந்த உலகத்தில் தம் பெயரைக் கூடத் தெரிவித்துக்கொள்ள விரும்பாத அவருடைய சேவை யைத் தமிழ் உலகம் உணர்ந்து கொள்ளுதல் அருமை. சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் வெளியிட்ட சீவக சிந்தாமணி மூலப்பதிப்பை இதற்கு உதாரணமாய்க் கொள்ளலாம். மலிவுப்பதிப்பு என்ற பெயரால் தமிழாராய்ச்சியும் அறி வுமே மிகவும் மலிந்து போய்விட்ட காலம் இது. ஆனால் 1942இல் சமாஜத்தார் ஒன்றே முக்கால் ரூபா என்ற விலை யில் சீவகசிந்தாமணியை 588 பக்கத்தில் காலிகோ பைண்டு செய்து மிகவும் நேர்த்தியாய் அச்சிட்டுக் கொடுத்தார்கள். பிள்ளையவர்கள் அப்போது இரவு பகல் இடைவிடாமல் அனேக ஓலை ஏடுகளை வைத்து இந்நூலைப் பரிசோதனை செய்தார்கள். இப்பரிசோதனை முழுமையும் நான் உடன்

இருந்து வேலை செய்தது எனது பாக்கியம். ஆதலால் இவ் வேலை எவ்வளவுக்கு அருமையானது என்பதை நான் அறிந்து கூறமுடியும். இவ்வளவு சிறந்த மூலப்பதிப்பு தமிழில் வெளிவரச் சில நூற்றாண்டுகளாவது செல்லும்.

சீவக சிந்தாமணி விருத்தச் செய்யுட்கள், திருத்தம் பெரிதும் பெறாத விருத்தப் பாக்கள். அதுகாறும் புலவர் பெருமக்கள் அச்செய்யுட்களைச் சீர் பிரிக்க முயன்றதில்லை. ஐயரவர்கள் அதுவரை வெளியிட்ட பதிப்புக்கள் அனைத் திலும் பாடல்கள் சீர்பிரிக்கப் பெறவில்லை. ஓசை என்ற ஒரே துணைகொண்டு முதன் முதலாகச் சிந்தாமணிப் பாடலைப் பிள்ளையவர்களே சீர் பிரித்து அச்சிட்டார்கள். இன்றைக்கு ஒருவேளை அது எளிதாகத் தோற்றலாம். ஆனால் அன்றைக்கு இதற்கு ஏற்பட்ட கஷ்டத்தை உடனிருந்த நான் ஒருவனே உணர்வேன்.

நூலில் வையாபுரிப் பிள்ளையவர்கள் பெயர் காணப் படாது. இதற்குப் பிள்ளையவர்களுடைய ஆராய்ச்சி எவ்வளவு அதிகமாய்ப் பயன்பட்டது என்பதை அறிந் தவர், அப்போது சமாஜக் காரியதரிசியாயிருந்த காலம் சென்ற திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஒருவர்தான்.

அப்போது ஐயரவர்கள் சிந்தாமணிப் பதிப்பு (நச்சி னார்க்கினியருரையுடன்) ஒன்றே தமிழில் உள்ளது. அதன் விலை ரூபா பத்து. மலிவான விலையில் (ரூ. ஒன்றேமுக்கால்) வேறு பதிப்பு வெளியிட்டால், ஐயரவர்கள் ஒருவேளை உள்ளம் வருந்துவார்களோ என்று அவர்களிடமிருந்த மரியாதையினால்தான் வையாபுரிப் பிள்ளையவர்கள் இப் பதிப்பில் தம் பெயரை அச்சிட அனுமதிக்கவில்லை.

பிள்ளையவர்களிடமிருந்த ஒரு சிறந்த இயல்பு தம் முடைய சிறந்த தமிழ்ப் புலமையை யாருக்கும் எந்த நிலை யிலும் உதவுதல். தமிழ் கற்றவர் யாரும், எந்த நிலையினரும், எக்கோரமும் அவரிடம் சென்று தம் ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாம்; தாம் முயன்று வரும் துறையில் புதிய

புதியகருத்துக்களையும் செய்திகளையும் அவரிடமிருந்து எவரும் கற்றுக் கொள்ளலாம். அத்தகையதோர் இலக்கிய இலக்கணக் களஞ்சியமாக அவர் இருந்தார். ஆராய்ச்சியாளர் பலர் அவரிடம் அனேக பயன் அடைந்தமை எல்லோரும் இன்று ஒப்புக்கொள்வது. நான் முக்கூடற்பள்ளு அச்சிட்ட காலத்தில் எனக்கு ஏடு தேடிக்கொடுத்தும், பாடல்கள் செப்பனிட்டுக் கொடுத்தும், எண்ணற்ற வகையில் உதவி புரிந்தார்.

அவர் உதவி புரிந்தமை தமிழின்பாலுள்ள அன்பினாலேதான்; யார் எந்தத் தமிழ்ப் பணி செய்தாலும், அந்த அளவில் அது மேம்படவேண்டும் என்ற ஆசையினாலே தான். தம் ஆராய்ச்சிப் பெருமை தமக்கே சேரவேண்டும், தம் பெயர் எங்கும் பரவவேண்டும் என்ற ஆசை அவரிடம் இருந்ததில்லை.

ஊக்கம் நிறைந்த இளைஞர்களாக நாங்கள் சிலர் ஒன்று கூடி, தேசிகவிநாயகம் பிள்ளை யவர்களின் பாடல்களைத் தொகுத்து வெளியிட முயன்றபோது, எங்களுக்கு எல்லா வகையிலும் ஆதரவு தந்தவர் வையாபுரிப் பிள்ளை யவர்கள் ஒருவரே. தாம் சேகரித்து வைத்திருந்த பாடல்களைத் தந்தார்கள், வேறு பாடல்களைத் தேடிக் கொடுத்தார்கள், பிள்ளையவர்களுக்கு எழுதிப் பல பாடல்களை வரவழைத்துத் தந்தார்கள், அவர்களுடைய சரித்திரக் குறிப்புக்களைத் தொகுத்துக் கொடுத்தார்கள். இவர்களைத் தவிர வேறு யாரும் தமிழ் நாட்டில் அன்று இந்த வெளியீட்டுக்கு எங்களுக்கு ஊக்கம் அளிக்கவில்லை. இவர்கள் உதவி செய்யாவிட்டால் அன்று மட்டும் அல்ல, பின்னும் பல வருஷங்கள் தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிதைகள் நூலாக வெளிவந்திரா.

கப்பலோட்டிய தமிழன் என்று வ. உ. சிதம்பரம் பிள்ளையை இன்று புகழ்கிருர்கள். ஆனல் தொல்காப்பிய இளம்பூரணர் உரை முழுமையும் இன்றுவரை வெளியிட்

டுள்ளவர் அவர் ஒருவரே என்பதை யாரும் உணரமாட்டார்கள். அரசியலில் ஈடுபட்டு அவர் துன்புற்றிருந்த நாட்களில் வெளியான பகுதிகள் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரத்தில் அகத்திணை புறத்திணையியல்கள் - இவை மட்டுமே. பொருளதிகாரத்தில் பின்னுள்ள ஏழு இயல்களையும் சிறையிலிருந்து வெளிவந்தபின் அவர் அச்சிட்டார். ஆனால், உடலும் மனமும் மிகவும் தளர்ந்துபோன நிலையில் அவர் அப்போது இருந்தபடியால், இவ்வேலையைத் தாமே கவனிக்க முடியவில்லை. வேலை முழுமையும் செய்தவர், வையாபுரிப் பிள்ளை.

1933–35ஆம் ஆண்டுகள் என்று ஞாபகம். பிள்ளையவர்களின் மயிலாப்பூர் சித்திரகுளத் தெருவிலுள்ள வீட்டில் சிதம்பரனாரை இருமுறை சந்திக்கும் பேறும் எனக்குக் கிடைத்திருந்தது. இளம்பூரணம் சில பகுதிகள் நான் புரூப் பார்த்ததும் உண்டு. இளம்பூரணம் கடைசிப் பகுதி முழுமையும் திருத்தமாக வெளிவர உழைத்தவர் வையாபுரிப் பிள்ளை என்பது யாருக்கும் தெரியாது.

சமீபகாலம் முழுமையும் பட்டமளிக்கிற காலம். புலவர்களும் மற்றவர்களும் ஆங்காங்கே கூடி, தங்களுக்கு வேண்டியவர்களுக்கும், பிரமுகர்களுக்கும், யாரைப் புகழ்ந்தால் தங்களுக்குப் பெருமை என்று எண்ணுகிறார்களோ அவர்களுக்கும், பொன்னாடை போர்த்தி, மணி என்றும், பெரும் புலவர் என்றும் பட்டங்கள் வழங்குகிறார்கள். பிள்ளையவர்களுக்கு யாரும் பட்டம் தரவில்லை. காரணம், அவருடைய ஆழமான விரிவான பாண்டித்தியத்தை நுனிப்புல் மேய்கிற பண்டித உலகம் விரும்பவில்லை. அரசாங்கத்தார் மட்டும் லெக்ஸிகன் வெளியீட்டுக்காக அவர் செய்த சேவையைப் பாராட்டி, “ ராவ் சாகெப் ” (!) என்ற பட்டம் அளித்தார்கள்.

பிள்ளையவர்கள் தோற்றப் பொலிவு இல்லாதவர். மிகவும் குட்டையான உருவம். பேச்சும் எழுத்தும்

கவர்ச்சிக் குறைவானவை. ஆயினும், " உருவு கண்டு எள்ளாமை வேண்டும், உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து " என்று திருக்குறள் வகுத்த இலக்கணத்துக்கு அவர் இலக்கியமாக இருந்ததை நான் பலமுறை கண்டிருக்கிறேன்.

சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நடந்த சம்பவமொன்று எனக்கு இப்போது நினைவு வருகிறது. மூன்று நாள் தமிழ் இலக்கிய விழா நடந்தது. ஒருநாள் **தொல்காப்பிய** விழா ; வையாபுரிப் பிள்ளையவர்கள் தலைமை ; பேச்சு வன்மை நிரம்பப்பெற்ற பேராசிரியர் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். பொருளதிகாரத்தைப் பற்றி அவர் பேசியபோது முக்கியமாக இரண்டு கருத்துக்களைக் குறிப்பிட்டார். ஒன்று : தொல்காப்பியச் சூத்திரமொன்றை நச்சினர்க்கினியர் இரண்டாகப் பிரித்துத் தனித் தனியாகப் பொருள் பண்ணியிருக்கிறார் ; அது மிகவும் பிழைபட்ட உரை ; ஆனால் தாம் ஒரே சூத்திரமாக வைத்து அழகாகப் பொருள் பண்ணி யிருக்கிறார் ; இப்பொருள் யாருமே சொன்னதில்லை. இரண்டு, குறிப்பிட்ட ஒரு சூத்திரத்தைப் பொருள் பண்ணும்போது, நச்சினர்க்கினியர் சொற்களை மிகவும் பிழைபட மாற்றி, வலிந்து தம் கருத்துக்கு ஏற்றவாறு பொருள் பண்ணியிருக்கிறார் ; இது தவறு ; நேர் முகமாகவே எளிதாக நல்ல பொருள் பிறக்கிறது.

இவற்றைக் கூறிய பேராசிரியர், "நான் கூறியவற்றை அப்படியே நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம், உங்கள் அறிவைக்கொண்டு நீங்களே ஆராய்ந்து சொந்த முடிவுக்கு வாருங்கள் " என்று அடக்கமாக முடித்தார். ஆனால் அன்று அவர் பேசிய அக் கூட்டத்தில் அவருடைய பேச்சு வன்மை காரணமாக அவர் கூறியதே வேதவாக்கு என்ற நிலைமை இருந்தது. சுய புத்தியை உபயோகிக்கவோ, புத்தகத்தை எடுத்து ஆராயவோ யாருக்கும் எண்ணமில்லை. நச்சினர்க்கினியர் உண்மையாகவே அப்போது அங்கு

வந்திருப்பாரானல், கூடியிருந்த கூட்டத்தார், மார்க் ஆண்டனி பேச்சைக் கேட்ட ரோமாபுரி மக்கள் புருடஸ் என்ற வீரனைக் கிழித்தெறிந்த மாதிரி, கிழித்துப் போட்டிருப்பார்கள். மற்றவர்களைச் சொல்ல வேண்டாம்: என்னுடைய மனநிலையும் அப்படித்தான் இருந்தது.

ஆனால் தலைமை வகித்தவர் என்ன சொல்ல முடியும்? அமைதியாக எழுந்தார். "அன்பர்களே, பேராசிரியர் பேசியதைக் கேட்டீர்கள். அவருடைய வேண்டுகோளையே நானும் திருப்பிச் சொல்கிறேன். அவர் கூறியதை அப்படியே நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல், சொந்தமாய்ச் சிந்தித்து ஒரு முடிவு காணுங்கள்" என்று மட்டும் சொல்லி அமர்ந்து விட்டார். எனக்கு மிகுந்த ஏமாற்றம். "அடாடா, பேராசிரியர் எவ்வளவு பிரமாதமாய்ப் பேசினர்! பாராட்டி ஒரு வார்த்தைகூடத் தலைவர் சொல்லவில்லையே!" என்று.

இப்படிச் சிந்தித்துக்கொண்டே மறுநாள் காலையில் வழக்கம்போல் பிள்ளையவர்கள் இல்லத்துக்குப் புறத்திட்டு ஆராய்ச்சிக்காகச் சென்றிருந்தேன். வேலை தொடங்கிற்று. ஆனல் எனக்கு, முன்தின இரவுப் பிரசங்க நினைவு மறக்க முடியவில்லை. "நேற்று இரவு பேராசிரியர் எவ்வளவு அருமையாகப் பேசினர்! என்ன பேச்சு, என்ன வன்மை! பாராட்டி நீங்கள் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே?" என்று கேட்டேன்.

"என் சொல்லவில்லை? அவர் சொன்னதையே நானும் சொன்னேனே? அவர் முடிவில் என்ன சொன்னர், நினைவிருக்கிறதா?"

"இருக்கிறது. என் கருத்துக்களை நீங்கள் ஆராய்ந்து முடிவு கண்டால் போதும் என்ருர்."

"அதையே தான் நானும் சொன்னேன். இவ்வளவு ஆர்வம் உடைய நீங்கள் ஆராய்ந்து பார்த்தீர்களா? வீட்டுக்குச் சென்று தொல்காப்பியப் புத்தகத்தை எடுத்து நச்சினர்க்கினியர் என்ன சொல்லுகிருர், பேச்சாளர்

சொன்னது பொருத்தமா, பொருத்தமில்லையா என்று ஒப்பு நோக்கிப் பார்த்தீர்களா?"

எனக்கு வெட்கமாயிருந்தது. "பார்க்கவில்லை" என்று சொன்னேன்.

உடனே தொல்காப்பிய உரையை எடுத்துக் கையில் தந்தார். பிரித்தேன். குறிப்பிட்ட இடம் பார்த்தேன். பேராசிரியர் சொன்னபடி நச்சினார்க்கினியர் சூத்திரத்தை இரண்டாகப் பிரித்துப் பொருள் கண்டிருந்தார். அடுத்துப் பிள்ளையவர்கள், தொல்காப்பியம் இளம்பூரணர் உரையை எடுத்து என் கையில் கொடுத்தார். குறித்த இடத்தை எடுத்துப் பார்த்தேன். அங்கு, இளம்பூரணர் ஒரே சூத்திரமாக வைத்து, நேர்முகமாய் இயல்பான பொருள் கூறியிருந்ததைக் கண்டேன். பேச்சாளர் கூறியது இதே பொருள்தான்.

"இளம்பூரணர் கூற்றையா இந்தப் பேராசிரியர் தம்முடைய சொந்த ஆராய்ச்சியிற் கண்ட உண்மை என்று அவ்வளவு நேரம் பிரமாதமாக எடுத்துப் பேசினர்?" என்று கேட்டேன்."

"ஆம். அதுமட்டுமல்ல, அடுத்து அவர் கூறிய கருத்தைப் பாருங்கள்" என்று பிள்ளையவர்கள் கூறினார்கள்.

பார்த்தால், நச்சினார்க்கினியர் எந்தப் பிழை செய்தார் என்று பேச்சாளர் கூறினரோ அந்தப் பிழையை அந்த இடத்தில் நச்சினார்க்கினியர் செய்யவில்லை. வழக்கமாய் நிரம்பச் சிதைவு செய்கிற நச்சினார்க்கினியர், அந்த இடத்தில் இயல்பாகப் பொருள் பண்ணி யிருந்தார். இதைப் பார்த்த எனக்குப் பெருந் திகைப்பாயிருந்தது. "ஏன் இந்தப் பேச்சாளர் நச்சினார்க்கினியரை இப்படிப் போட்டு வதைத்தார்? இவ்வளவும் தெரிந்திருந்தும் நீங்கள் ஏன் கேட்டுக்கொண்டு சும்மா இருந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"'வீரத்தில் சிறப்பான பகுதி புத்திசாலித்தனம்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நேற்றைய கூட்டத்தில் கேட்டோர் இருந்த மன நிலையைச் செவ்வையாக உணர்ந்த நான் எதையும் மறுத்துக் கூறவில்லை. பேச்சாளர் பேச்சைக் கேட்ட நீங்களே பேச்சின் ஆற்றலில் ஈடுபட்டு, மெய்ம்மறந்து போனீர்கள்; வீட்டில் போய், அவர் கூறியது சரிதானா என்று ஆராய்ந்து பார்க்கும் எண்ணம் உங்களுக்கு உதிக்கவில்லை; என்னையே வந்து, நீங்கள் ஏன் பாராட்டிப் பேசவில்லை என்று குறையும் கூறத் தொடங்கிவிட்டீர்கள். அப்படியிருக்க, மற்றவர்கள் எந்த நிலையில் இருந்திருப்பார்கள் என்று யோசித்துப் பாருங்கள். உண்மையை எடுத்து அங்குக் கூறினால், பேராசிரியர் கூற்று பொய் என்றுதானே ஏற்படும்? இப்படிக் கூறி அங்கிருந்து நான் உயிரோடு பிழைத்து வெளிவந்திருக்க முடியுமா?" என்று கேட்டார்.

நான் என்ன பதில் சொல்வது?

பிள்ளையவர்களுடைய ஒதுங்கிப் போகும் சுபாவத்தை விளக்க வல்ல மற்றொரு நிகழ்ச்சி எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. புறத்திரட்டு ஆராய்ச்சி நடந்து வந்த காலம். அவர் வீட்டு மாடியிலிருந்தபோது, ஒருநாள் காலை, அரசாங்கக் கல்லூரி யொன்றில் தமிழாசிரியராக யிருந்த பண்டிதரொருவர் வந்தார். முன்னமே பழக்கமில்லாதவர். தாம் இன்னாரென்று அறிமுகம் செய்து கொண்டார். தாம் ஒரு நாடக நூல் எழுதியிருப்பதாயும், சென்னை சர்வகலாசாலை பாடநிர்ணய போர்டுக்கு அதை இண்டர்மீடியட் வகுப்புக்குப் பாடமாக வைக்கும்படி சிபாரிசு செய்து அதை அனுப்பியிருப்பதாயும் சொல்லி அதைப் பாடமாக நிர்ணயித்து விடும்படி கேட்டுக் கொண்டார். "பார்த்துத் தக்கது செய்ய முயல்கிறேன்" என்று இவர் பதில் சொன்னார்.

அப்போது அந்த போர்டில் தலைவர் வேறொருவர், பிள்ளையவர்கள் அங்கத்தினர். அவ்வளவுதான். தகுதியின்மை கருதி சபைக் கூட்டத்தில் அந்நாடக நூல் விலக்கப்பட்டுப் போயிற்று. கூட்டம் முடிந்த இரண்டு நாட்களில் ஆசிரியரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. கடிதத்தை இவர் பிரித்தபோது நான் உடனிருந்தேன். இன்ன மாதிரி என்று நாவினால் உச்சரிக்கத் தகாதவாறு அவ்வாசிரியர், தம் புத்தகத்தைப் பாடமாக நிர்ணயிக்காததற்கு இவரை வைது எழுதியிருந்தார். நானும் அதைப் படித்தேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி. எனக்கும் வயது குறைவு. இரத்தம் கொதித்தது என்று சொல்வார்களே, அந்த மாதிரி இருந்தது எனக்கு. பிள்ளையவர்கள் சிரித்துக் கொண்டே கடிதத்தைக் கிழித்தார்கள். எனக்குக் கோபம். கடிதத்தைப் பிடுங்கினேன். " இது சர்வகலாசாலை சபையொன்றின் அங்கத்தினர் என்ற முறையில் உங்களுக்கு எழுதிய கடிதம், தனிப்பட்ட முறையில் வந்த சொந்தக் கடிதமன்று. கல்விலாகாவுக்காவது, சர்வகலாசாலைக்காவது அனுப்பி மேல் நடவடிக்கை எடுக்கலாம். மான நஷ்டவழக்குத் தொடுக்கக் கூட இடமிருக்கிறதே. சும்மா விடுவது தவறு, கோழைத்தனமாகும் " என்று ஆத்திரமாய்ச் சொன்னேன். பிள்ளையவர்கள் சாந்தமாய்ப் பதில் சொன்னார்கள். " சமீபத்தில் தானே நாலடியார் பதுமனார் உரையை ஒப்புநோக்கி முடித்தோம் ?

> கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
> பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை

என்ற பாடல் உங்களுக்கு மறந்துபோய் விட்டதா ? இந்த அற்பத்தனமான காரியத்தை இன்றோடு மறந்து விடுவதே

முறை" என்று சொல்லிக் கடிதத்தைக் கிழித்துக் குப்பையில் எறிந்துவிட்டார்.

நான் இதற்குமேல் என்ன செய்வது!

தமிழிலே பழந்தமிழ் நூற் பதிப்பு என்ற துறையில் இமாலயம் போல் காட்சியளிப்பவர், டாக்டர் சாமிநாதையரவர்கள். விரிவினாலும் முயற்சியினாலும், ஆழமான ஆராய்ச்சி, முன்னுரை, குறிப்புரை, அகராதித் தொகுப்புக்கள் ஆகியவற்றாலும் அவர்கள் தமக்கு இணையில்லாமல் விளங்கியவர்கள். தம்முடைய விருப்பு வெறுப்புக்கள் இன்றி, நூலின் உண்மையான பாடம் காண வேண்டும் என்ற ஒரே நோக்குடன் பாடுபட்ட பெரியார் அவர்கள். அவர்கள் பரம்பரையில் அவர்கள் காலத்திலேயே இருந்து அதே பணியை அதே உண்மை நோக்கத்துடன் கொஞ்ச காலமேனும் செய்த பெரியார், வையாபுரிப்பிள்ளையவர்கள். ஏடுகளின் ஆராய்ச்சியில் இவர்களுக்குப் பிறகு, இந்தப் புலமை மிக்க பரம்பரை, தொடர்பு அற்று நின்று விட்டது என்று திட்டமாய்ச் சொல்ல முடியும்.

பிள்ளையவர்களுடைய மிகவும் சிறந்த தமிழ்த் தொண்டு தமிழ் லெக்ஸிகன் (பேரகராதி) பதிப்பு. இந்த அகராதிக்கான முயற்சி அரசாங்கத்தின் ஆதரவில் நெடுங்காலத்துக்கு முன்னேயே தொடங்கிற்று. அப்போது வெள்ளைக்காரர் ஒருவர் பதிப்புக் குழுவின் தலைவராயிருந்தார். பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கழிந்துகூட, குறிப்பிடத்தக்க வேலை நடைபெறவில்லை. ஆனால் பிள்ளையவர்கள் இவ் வேலையை மேற் கொண்ட பிறகு தான் சிறப்பான முறையில் வேலை வெகு விரைவாக நடந்து 1936இல் நிறைவேறிற்று. ஏழு பகுதிகளாக இப்பதிப்பு வெளியாகியிருக்கிறது. ஆங்கில மொழிபெயர்ப்பு முதலியன இருத்தல் பற்றி இதை அனேகர் குறை கூறுகிறார்கள். இதற்குப் பிள்ளை யவர்கள் காரணம் அல்லர் என்பது அனேகருக்குத் தெரியாது. வெள்ளைக்காரர் தலைவராயிருந்தமையால்

ஆங்கிலம் புகுந்து கொண்டது. ஒரு பகுதி நடந்தேறிய பின் ஆங்கிலத்தை விலக்கிவிடும் அதிகாரம் பிள்ளையவர்களுக்கு இல்லை.

ஆனால் நடந்திருக்கும் சாதனை தமிழ் மக்கள் யாரும் பெருமை கொள்ளத் தக்க சாதனை. பலமுறை இவ்வகராதியை உபயோகித்துப் பழகியவர்களுக்கே இதன் அருமை விளங்கும். அதுவரை வந்துள்ள அகராதிகள் அனைத்தின் சிறப்பையும் பெற்று, குறைகளை நீக்கி, பலவகையான புதிய அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு, பெறுதற்கரிய ஓர் அறிவுக் களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது. சிறந்த பண்டிதர்கள் அனேகர் இதில் உழைத்தார்கள் என்பது உண்மை. அனைவர் புலமையையும் ஒருமுகப்படுத்தி, எடுத்த காரியத்தைத் தமிழுக்கு ஆக்கமும் பெருமையும் நிலைத்த பயனும் அமையுமாறு நிறைவேற்றிய ஒரு புலவர் வையாபுரிப் பிள்ளை. பூசல் மலிந்த இன்றைய நிலையில் அவர் சேவையை அளந்து போற்றுதல் இயலாதது. குறைந்த அளவு ஒரு நூற்றாண்டாவது சென்ற பின்னரே இதன் அருமையையும் பிள்ளையவர்கள் புலமையின் திறத்தையும் தொண்டின் பெருமையையும் தமிழ் அறிஞர் உலகம் உணர்தல் கூடும்.

ஞானியார் சுவாமிகள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நாட்டின் நடுவில் வாழ்ந்து, தமிழ் மக்களின் வாழ்க்கையை மிக நீண்ட காலம் எல்லா வகையாலும் உருவாக்கியவர் என்றால், கற்றறிந்தவர்களுக்கு ஞானியார் சுவாமிகளின் கண்டிகை யணிந்த திருவுருவமும் சீல வாழ்க்கையும் குளிர்ந்த பார்வையும் மனத்தில் எழும். சுவாமிகள் திருக்கோவலூராதீனம் என்ற சிறந்த ஞான பரம்பரையிலே தலைமை ஏற்றவர். சிவ வேடப் பொலிவு நிரம்பப் பெற்றவர். முதுமையினால் திருமேனி தன்னில் அசைவு உடையவர். சைவத் திருமுறைகளை ஓதி ஓதி உருகும் நெஞ்சினர். பக்திப் பெருக்குடையவர். தமிழ் இலக்கிய இலக்கணக் கடலை நிலைகண்டுணர்ந்தவர். தம் சமயப் பிரசாரத்துக்கு ஏற்ற வகையில் வடமொழி யறிவும் நிரம்பியவர். விவகாரத்திற்கான ஆங்கில அறிவு படைத்தவர்.

அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் நாட்டில் சைவ மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் சென்று, ஆடம்பரம் எதுவும் அறியாதவராய், தம் சொந்தத் தகுதியொன்றையே துணையாகக்கொண்டு, சுவாமிகள் மக்களை நல்வழிப் படுத்தி வந்தார். சைவம் என்ற உணர்ச்சி இல்லாத மக்கள், சற்றே ஆங்கிலம் படித்து உத்தியோகத்தில் அமர்ந்தவர்கள், நாஸ்திக வாதமே நாவின் நுனியில் பயில்பவர்கள்—திருநீறு என்றால் சாம்பல் பூசுவது ; உருத்திராக்கம் என்றால் கொட்டை கட்டுவது - இப்படிப்பட்ட பேச்சுக்கள் மலிந்த உலகம். பலவகையான அரசியல் - சமூகப் பூசல்களும் கலந்து, வாழ்க்கையைக் குழப்பி, எவ்வகையான உறுதியும் பண்பாடும் முன்னேற்றமும், ஆழமும் அகற்சியும் நுட்பமும் உட்புக முடியாதவாறு செய்திருந்த காலம். அத்தகைய சூழ்நிலையில் சுவாமிகள் எல்லோருக்கும் ஒரு சமய தீபமாக

விளங்கியதோடன்றி, பல்லாயிரக் கணக்கான மக்களின் இதயத்தில் சமய தீபத்தை ஏற்றியும் வைத்தார்கள். இது வேறு ஒருவரும் இத்துணைப் பேரளவில் செய்ததில்லை. சுவாமிகள் சொல்லாலும் பார்வையாலும், பழக்கத்தாலும், உபதேசத்தாலும் இன்று தமிழ் நாட்டில் படித்த குடும்பங்கள் நிரீசுவர வாதத்தைவிட்டு, புதிதாகச் சைவ சமயத்தைக் கண்டு, திருமுறை பயின்று, திருநீறிட்டு, ஆலய வழிபாடு முறையாகப் பொருளுணர்ந்து செய்து வருபவை எத்தனையாயிரம் என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

ஆனால் சுவாமிகளின் பேச்சிலும் செயலிலும் பிற மதத்தைப் பழித்தல் என்பது காண முடியாது. சமயம் நேர்ந்தபோது, ஆண்டவன் ஒருவனே என்று கூறிப் பிறமத அடிப்படைத் தத்துவங்களையும் அவர் பயன்படுத்துவதுண்டு.

தமிழ் இலக்கியத்திலும் அவ்விதமே,நுனிப்புல் மேய்ந்து வந்த பண்டிதர்களிடையே இப்பெரியார் தம் சமயப் பேச்சுக்கள், உபதேசங்கள், இடையே கூறிய இலக்கிய நயங்கள் இலக்கண நுட்பங்கள் ஆகியவற்றின் மூலம் உண்மையிலேயே பண்டிதராயினரும், புலமைக்கான உண்மைப் பாதையிலே செல்லத் தொடங்கினரும் எண்ணற்றவர். பாடம் படித்தோரைச் சொல்ல வேண்டுவதில்லை.

சுவாமிகளின் வடமொழிப் புலமையை அவர் பேச்சைக் கேட்டோர் நன்கு உணர முடியும். தம் கருத்துக்கு அடிப்படையான வடமொழி வாக்கியங்களை அவர் எளிதாக எடுத்துக் கூறுவார். கூறும்போது, ஒவ்வொரு சொல்லையும் தனியே பிரித்துப் பொருள் கூறி, இலக்கணம் கூறி, பகுதி விகுதி போன்ற பாகுபாடுகளும் செய்துகாட்டி, தம் கருத்துக்கு அவ் வடமொழி வாக்கியங்கள் எவ்வாறு துணை வருகின்றன என்பதை விளக்கும்போது, அவருடைய படிப்பின் ஆழம் புலப்படும்.

சுவாமிகளின் பிரசங்கங்கள் மூன்று மணிக்கு மேலாகத்தான் எப்போதும் நடக்கும். படித்தவர் படியாதவர், இளைஞர் முதியவர், செல்வர் வறியவர், ஆடவர் பெண்டிர் குழந்தைகள்—அனைவரும் அவ்விடத்தில் இருப்பார்கள். பலதிறப்பட்ட மக்கள் கூடுகிற கூட்டத்தில் சிறிது சத்தம் இருத்தல் தவிர்க்க முடியாதது. தவிர 1934 போன்ற ஆண்டுகளில் சென்னையில் இப்போதுள்ள பஸ் வசதிகள் இல்லை. ஆகவே நெடுந்தொலைவிலிருந்தும் அவர்கள் பேச்சைக் கேட்கப் பல்லாயிர மக்கள் குழுமி யிருப்பார்கள். இடையில் வீடு நோக்கித் திரும்பச் சித்தப்படுவோரும் இருப்பார்கள். இப்படியாகக் கூட்டத்தில் சத்தம் எழும்போது, "நமப் பார்வதி பதயே" என்று அவர்கள் ஒரு முழக்கம் செய்த மாத்திரத்தில், கடல் அலைபோல "அரஹர மஹாதேவா" என்ற எதிர் முழக்கம் எழும். சந்தடி பூரணமாய் ஓய்ந்து மீண்டும் அமைதியாகப் பேச்சு தொடர்ந்து நடைபெறும்.

அன்பர்களின் விருப்பத்துக் கேற்றவாறு அவர்கள் பிரசங்கங்கள் அமைவது குறிப்பிடத் தக்கது. மாம்பலத்தில் பெரியார் இருவர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் புதிய வீடு கட்டிக் குடி போனார்கள். புது வீட்டில் சுவாமிகள் திருக்கல்யாண காலட்சேபங்கள் நடத்தினால் குடும்பத்துக்கு மங்களமுண்டாகும் என்பது அவர்கள் கருத்தாயிருக்கலாம். இச்சந்தர்ப்பங்களில் சுவாமிகள் செய்த பிரசங்கங்கள் காமாட்சி கல்யாணம், மீனாட்சி கல்யாணம், பார்வதி கல்யாணம், வள்ளி திருக்கல்யாணம் என்பன.

சுவாமிகள் வீர சைவ சமயத்தின் ஆசாரியர். ஆனால் பிற சமயங்களையும் போற்றிப் பேசுவதே அவர் சுபாவம். அவர் பிரசங்கம் முழுமையும், சைவ சித்தாந்தப் பிரசங்கமாயிருக்குமே யன்றி, தனியான வீரசைவம் அதில் தொனிக்காது. அப்படியே வைஷ்ணவர்கள் விருப்பத்திற் கிணங்கி, சீதா கல்யாணம், ஆண்டாள் போன்ற பிரசங்கங்கள் அவர்

செய்ததுண்டு. ஒவ்வொன்றும் வைஷ்ணவ சமய மரபு வழுவாமல் பேசியது, கேட்பவர்கள் பெரிதும் அதிசயிக்கத் தக்கதாகவே யிருக்கும்.

சுவாமிகள் நடத்திய சமயப் பாட வகுப்புக்கள் சிறப்பானவை. அவர்கள் எழூரில் தங்கி யிருந்தபொழுது, என்னோடொத்த சில நண்பர்களும் நானும் சேர்ந்து, சித்தாந்த சாத்திர பாடம் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். "சைவசித்தாந்த சமயக் கருத்து உணர்வதற்கு அடிப்படையான கருவி நூல்கள் சில. சிவஞான போதம், சித்தியார், சிவப்பிரகாசம் பயில்வதற்கு முன் பல அடிப்படைக் கருத்துக்கள் உங்களுக்குப் பழக்கமாயிருக்க வேண்டும். முப்பத்தாறு தத்துவங்கள் நன்ருய் விளங்க வேண்டும். இவற்றைக் கூறும் ஒரு நூல் **உண்மை விளக்கம்** என்ற சாத்திரம். இதை நீங்கள் பயில்வது அவசியம்" என்று சொல்லி, ஒரு நல்ல நாளில் அதைத் தொடங்கினர்கள். தினம் இரண்டு அல்லது மூன்று வெண்பா வீதம் சுமார் பதினைந்து நாள் இந்நூல் பாடம் நடந்திருக்கலாம். காலையில் 7-30 முதல் 9-30 வரை பாடம் நடக்கும். இருந்த மாணுக்கர் சுமார் 20 பேர். எல்லோரும் சென்னையில் அலுவல் பார்த்தவர்கள். பாடங் கேட்டவர்களுக்கு, அச்சிறு நூற் பயிற்சியானது விரிந்து, சித்தாந்த சாத்திரப் பயிற்சிக்கு ஒரு முன்னுரையாக அமைந்திருந்தது. சைவ சித்தாந்த ரீதியாக தத்துவங்கள் பற்றிய திட்டமான அறிவு எங்களுக்கு ஏற்பட்டது மாத்திரமல்லாமல், சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் அனைத்தையும் மேற்போக்காக ஓரளவு உணரும் அறிவும் அப்போது ஏற்பட்டது. கேட்ட நாங்கள் வாழ்க்கையில் பிறகு அச்சமய தத்துவங்களை என்றுமே மறக்க வியலாது. பண்டைக்காலத்தில் எழுந்த புலமை மிக்க உரையாசிரியர்களின் இலக்கண இலக்கிய உரைகளையும், சூத்திர பாஷ்யங்களையும் பார்த்திருக்கிறேம். அவை அனைத்தின் தொகுப்பாகவும் இருக்

தது சுவாமிகள் பாடம் என்று கூறுவது மிகையன்று. பேராசிரியர் கூறும் உரை நுட்பங்களும், சிவஞானசுவாமிகள் போன்ருர் கூறும் சமய நுட்பங்களும், சிரமமில்லாமல் எளிதில் எங்களுக்குச் சொந்தமாயின.

சுவாமிகள் அடிக்கடி சொல்லுகின்ற ஒரு பாடல், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் பாடிய சந்நிதி முறைப் பாடல்களில் ஒன்று :

ஏது பிழை செய்தாலும்
ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத
தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த்
தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு.

மாம்பலம் தெய்வசிகாமணி முதலியாரவர்கள் வீட்டில் ஒரு சமயத்தில் பிரசங்கத்தில் இப்பாட்டைச் சொன்ஞர்கள். சொல்லி அப்படியே சில நிமிஷநேரம் கண்ணீர் உகுத்த படியே இருந்துவிட்டார்கள். பிறகு தான் சுய நினைவு வந்து, "நம: பார்வதி பதயே" என்ற முழக்கத்தோடு மீண்டும் பேச்சைத் தொடங்கிஞர்கள்.

மற்ஞெரு பாடலும் இங்கேகுறிப்பிடத்தக்கது. பாடலை உச்சரிக்கின்ற முறையிஞலே, இதுவே கேள்வியாகவும் இதுவே விடையாகவும் அமைந்துள்ளது.

இல்லறத்தான் அல்லேன்
இயற்கைத் துறவி அல்லேன்
நல்லறத்துள் நின்றிலேன்
நாயினேன் - சொல்லறத்துள்
ஒன்றேனும் இல்லேன்
உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன்.

இந்தச் சிதம்பர சுவாமிகள் பாடலை அடிக்கடி தோத்திரப் பாடலாகவே பாடுவார்கள். "உயர்ந்த திருப்போரூரா, என்றே நான் ஈடேறுவேன்?" என்று கூறும்போது, தொனியால் "திருப்போரூர் முருகப் பெருமானே! என்றைக்குத் தான் நான் கடைத்தேறப் போகிறேன்?" என்று இரங்குவதாகிய கேள்வி பிறக்கும். ஆனால் அதே பாட்டை அவர்கள் இரண்டாம் முறை, "உயர்ந்த திருப்போரூரா என்றே நான் ஈடேறுவேன்" என்று பாடும்போது "திருப்போரூரா என்று சொல்லிக்கொண்டே நான் கடைத்தேறிவிடுவேன்" என்ற பொருள் பிறக்கும்.

சுவாமிகள் பிரசங்கங்கள் நீண்டநேரம் நடக்குமென்று குறிப்பிட்டேன். கேட்டோரில் பலர் சென்னை போன்ற நகரங்களில் வேலைகளில் ஈடுபட்டிருந்து சற்று நேரங் கழித்து வருதல்கூடும். வருவோர் அனைவரையும் சுவாமிகள் நேர்முகமாய் அறிந்திருப்பார்கள். ஆதலால், வருவோர் யாராயிருப்பினும், தாம் சுவாமிகளைப் பார்த்து வணக்கம் செலுத்தினாலொழிய, அவருக்குப் பிரசங்க நேரத்தில் மனம் நிம்மதி பெறாது. பிரசங்கம் நடந்துகொண்டே யிருக்கும். சுவாமிகள் வாயிலிருந்து வரும் சொற்பிரவாகம் யாருக்காகவும் தடைப்படாது. ஆனால் வந்து வணங்குபவரை வரவேற்பதில் குறை வொன்று மிராது. ஒருவருக்குப் புன்னகை, ஒருவருக்குத் தலையசைவு, ஒருவருக்குத் திருநீறு, ஒருவருக்குக் கண்ணினாலேயே வரவேற்பு—இவ்விதம், யாரும் எந்தக் குறையும் இன்றித் திருப்தியாகத் தம்மையும் ஞானியார் சுவாமிகள் பார்த்து வரவேற்றார் என்றே மகிழ்வார்கள்.

சுவாமிகள் இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்துங்கூட, எப்போதும் எங்கு செல்வதாயினும், பல்லக்கில் தான் செல்வார்கள். சென்னைக்கு வருவதும், போவதும், சென்னையில் பல இடங்களுக்குப் போவதும் எல்லாம் பல்லக்கில்தான்.

எழுமூரில் ஒரு சமயம் அவர்கள் தங்கியிருந்தபொழுது, மாம்பலத்தில் அவர்களுக்குச் சிறப்பாக ஓர் ஊர்வலம் செய்வித்தோம். அனேக தெருக்களில் அவர்களைப் பல்லக்கில் ஊர்வலமாக அழைத்துச் சென்று, அவர்களுடைய அன்பர்கள் உள்ள இடங்களில் அவர்களுக்கு வணக்கமும் வழிபாடும் செய்வித்துப் பின் அவர்கள் இருக்கையில் சேர்ப்பித்தோம். அவ்வாறு செல்லும்போது மாம்பலத்தில் சாம்பசிவம் தெருவில் உள்ள எனது இருக்கைக்கும் ஊர்வலம் வந்தது. அங்கு நிறுத்தி அவர்களுக்கு வீட்டிலுள்ளோர் அனைவரும் நமஸ்காரம் செய்து விபூதி பெற்றுக்கொண்டோம். அப்போது எனது குழந்தை மணிமேகலை, தூரத்தில் நின்றது ஓடிவந்தது. குழந்தைக்கு ஊர்வலம் வேடிக்கையான ஒரு காட்சியேயன்றி, ஊர்வலத்திற்குத் தலைவரான சுவாமிகளை வணங்கவேண்டுமென்ற எண்ணம் உதிப்பது இயல்பல்ல. ஆதலால் குழந்தை பார்த்துக்கொண்டே ஒரு வாயில் தூண்மீது சாய்ந்து கொண்டு நின்றது. பல்லக்கு நகர்ந்தது. சுவாமிகளைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே நின்ற குழந்தையைச் சுவாமிகள் பார்த்தார்கள். பல்லக்கை நிறுத்தச் சொல்லிக் குழந்தையை அழைத்துத் திருநீறு கொடுத்தார்கள். ஒரு வயதுக் குழந்தை—பல்லக்கு சரியாக எட்டக்கூட இல்லை. அவர்கள் குனிந்து குழந்தையின் நெற்றியில் திருநீறிட்ட தோற்றம் இன்னும் என் கண் முன்னே நிற்கின்றது.

குழந்தைக்கும் சமயப் பிரசங்கத்துக்கும் வெகுதூரம். ஆயினும் ஒரு சம்பவம் நான் மறக்க முடியாதது. 1936ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சுவாமிகள் மாம்பலத்தில் வைத்தியராமன் தெருவில் நீண்டகாலம் தங்கியிருந்தார்கள். தினமும் இரவில் 7 மணி தொடங்கி 10 மணி வரை சமயப் பிரசங்கங்கள் நடைபெறும். தவறாது என் மனைவியும் நானும் சென்று கேட்டு வருவதுண்டு. என் மகளும் உடன் வருவது வழக்கம். அப்பொழுது ஒன்றரை வயதுக் குழந்தை.

சுவாமிகள் தாமிருந்த வீட்டின் தெருத் தாழ்வாரத்திலிருந்து கொண்டு பேசுவார்கள். நீளமான தாழ்வாரம், மூன்று நீண்ட படிகள். கீழே பந்தல் போட்டு சமுக்காளம் விரித் திருக்கும். கேட்போர் அதில் இருந்து கேட்பார்கள். குழந்தையோ என்னோடு உடன் வந்து பத்து நிமிஷம் பக் கத்திலிருக்கும். பிறகு எழுந்து சுவாமிகள் இருக்குமிடம் சென்று அவர்கள் பக்கத்தில் ஒரு முழத் தூரம் தள்ளி உட் காரும். முதல் நாள் உட்கார்ந்தபொழுது கூட்டத்தில் இருந்த ஓர் அன்பர் குழந்தையை அப்பால் போகும்படி சொன்னார். "இருக்கட்டும்" என்று சுவாமிகள் சொல்லி விட்டார்கள். அது முதல் தினமும் குழந்தை தவறாமல் அங்கு போய் உட்கார்ந்து கொள்ளும். படியில் காலைத் தொங்கவிட்டுக் கொண்டு அவர்களைப் பார்த்தபடியே மூன்று மணி நேரமும் இருக்கும். அவர்கள் தோற்றப் பொலிவில் ஈடுபட்டதோ, பேச்சின் ஒலியில் ஈடுபட்டதோ, பாட்டின் இசையில் ஈடுபட்டதோ—யாரும் சொல்ல விய லாது. பச்சைக் குழந்தை மூன்று மணி நேரம் தூங்கி விழாமல், தொந்தரவு செய்யாமல் அப்படியே இருந்தது, நினைத்துப் பார்த்தால் இன்னும் எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. கூட்டம் முடிந்து எல்லாரும் திருநீறு பெறும் போது தானும் வாங்கிக்கொண்டு என்னுடன் வந்து சேர்ந்து கொள்ளும்.

சுவாமிகளுடைய தோற்றமும், பேச்சும் அளித்த கவர்ச்சியே இக்குழந்தையின் நடத்தைக்குக் காரணம்.

ஞானியார் சுவாமிகள் திருக்கோவலூராதீனத்தின் பட்டமேற்று ஐம்பது ஆண்டுகள் 1939இல் நிறைந்தன. அப்பொழுது தமிழ் நாடு முழுமையுமே அறிந்து கலந்து இன்புறும்படியான முறையில் அந்நிறைவு விழா நடை பெற்றது. ஞானியார் சுவாமிகளுக்கு அன்புபூணாத தமிழ்ப் பண்டிதர், புலவர், அரசியல்வாதி, பிரமுகர்—யாரும் தமிழ் நாட்டில் அன்று இல்லை. அவரினும் வயதில் முதிர்ந்தோர்

பலர் இருந்தார்கள். பதவியில் பெரியோர் இருந்தார்கள். ஆனால் அவர்களுள் யாரையும் அந்த விழாவில் தலைமை தாங்க அவர்கள் அழைக்கச் சொல்லவில்லை. பண்டிதர்களோடு நெடுங்காலம் பழகிப்பழகி அவர்கள் சரக்கெல்லாம் வெறும் ஆடம்பரம், ஆழமில்லாதது என்று அவர் அறிந்திருந்தார். தம்முடைய துறவு, ஆதீனத் தலைமை காரணமாக யாரையும் குறை கூறும் பழக்கத்தை அவர் வைத்துக்கொண்டதில்லை. எனினும், தம்முடைய விழாவுக்குப் போலிகளை அழைக்க அவர் விரும்பவில்லை. டி. கே. சி. அவர்கள் பேச்சை அவர் இரண்டொரு முறை, காரைக்காலம்மையார் பாடலைப்பற்றிப் பேசியபோது கேட்டிருந்து, அப்பேச்சின் ஆழத்திலும், உணர்ச்சியிலும், உண்மையிலும் மனம் ஒன்றியிருந்தார். எனவே, இந்த நிறைவு விழாவுக்கு அவரையே தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ளச் செய்தார். அனேகருக்கு அக்காலத்தில் இது மிக்க வியப்பளித்தது. பெரும் புலவர்கள், ஞானியாருக்கு வேண்டியவர்கள் என்று நினைத்தவர்கள் இருக்க, அவர்களை யெல்லாம் விட்டுவிட்டு, பண்டிதரல்லர் என்று பண்டிதர்களால் ஒதுக்கப்பட்டவரை அவர் அழைக்கச்செய்தது, அவர்கள் கருத்தின்படி தவறு தானே ? இச் செயல் அடிப்படையில் ஞானியார் சுவாமிகளின் உள்ளம் எப்படி உண்மையை நாடிற்று என்பதையே காட்டிற்று. அக்காலத்தில் டி. கே. சி. யவர்கள் எந்தப் பதவியிலும் இருக்கவில்லை யென்பதை நினைவுகூரவேண்டும்.

ஞானியார் சுவாமிகள் சமயப் பிரசங்கத்தில் ஒரு புதிய பாணி அல்லது பத்ததியைத் தோற்றுவித்தார்கள். தொடங்கும்போது விநாயகர் வணக்கம், முருகன் வணக்கம், குரு வணக்கம், தமது மடத்தின் முதல்வர் வணக்கம் என இவற்றோடு பேச்சுத் தொடங்கும்.

'விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்' என்ற பதினொராந் திருமுறைச் செய்யுள், 'தந்தைதாய் ஆவானும்' என்ற குருவணக்கச் செய்யுள் போன்ற அனேகம்

பாடல்கள் இவ்வாறு தமிழ்ச் சைவ நன் மக்களிடையே பிர சாரத்துக்கு வந்தன. இவ்விதமே பிரசங்கமுடிவில் 'உருவாய் அருவாய்' என்ற கந்தரனுபூதிச் செய்யுளையும், 'ஆறிரு தடந்தோள் வாழ்க' என்ற முருகப் பெருமான் வாழ்த்துச் செய்யுளையும், அவர்கள் இறுதியில் கூறி முடிக்கும்போது கேட்டார் மனத்தில் இவை மிக்க சாந்தி அளிப்பனவா யிருக்கும். சுதந்திர இந்திய நாட்டில் கூட்ட முடிவில் நாட்டு வாழ்த்துப் பாடுவது இப்போது ஏற்பட்டுள்ள புதிய சம்பிரதாயம். ஆனால் சுவாமிகள் தம் கூட்ட முடிவில் இவ் விதம் சாந்தி தரவல்ல முருகன் வாழ்த்துப் பாடி முடிப்பது மிக்க தீர்க்கதிருஷ்டியைக் காட்டுகிறது.

அன்றியும், கூட்டத்தினரை விளிக்க அவர் உப யோகித்த சொல் "மெய்யன்பர்களே" என்பது. இன்று கூட்டங்களில் இச்சொல் காதில் விழும்போது, அவர்களு டன் பழகிய அனைவருக்கும் ஒரு கணம் சுவாமிகள் நினைவு உள்ளத்தில் தோன்றி மறையாமல் இராது.

மற்றொன்று. பேச்சிலே அவர்கள் முடிவான ஒரு கருத்தை நோக்கிப் பல துணைச் செய்திகளைச் செலுத்தும் போது, ஒவ்வொன்றையும் முற்றுப்பெறாத சிறுசிறு தொடர்களாகச் சொல்லி, இறுதியில் கருத்தைக் கொண்டு முடிப்பார்கள். அவ்வாறு அவர்கள் தொடர்களை நிறுத்தி நிறுத்திச் சொல்லும் முறை தனியான ஓர் அழகுடையதா யிருக்கும். அதுவே ஒரு கலை. நேரில் கேட்டவர்களுடைய உள்ளத்தை அது ஈர்க்க வல்லதாயிருக்கும். இன்று மேடை யில் பேசும் பண்டிதர்கள் அனைவருமே அந்தப் பாணியைக் கடைப்பிடிக்கிறார்கள்.

இங்ஙனமாக, தமிழ்ப்பேச்சு, சமயப் பேச்சுகளில் அவர்கள் ஒரு புதிய பாணியைத் தோற்றுவித்தார்கள் என்பது பலரும் உணர்கின்ற உண்மை. அவர்களுடைய பாணியையே பின்பற்றி இன்றைய பேச்சாளர் அனைவரும் பேச்சில் வல்லவராகி யிருக்கிறார்கள்.

சுவாமிகளின் ஐம்பதாண்டு ஆட்சி விழாவை முன் குறிப்பிட்டேன். அவ்விழாவில் பங்கு கொண்டவர்கள், அவர்களுடைய விருந்தோம்பும் பண்பை அனுபவித்திருப் பார்கள். படித்தோர், படிப்பில்லாதோர், அந்தஸ்துடைய வர், இல்லாதவர் எனப் பலரும் அடங்கிய பெருங்கூட்டம். அக்கூட்டத்தில் எல்லாப் பந்திகளுக்குமிடையிலே அவர்கள் போய்ச் சாப்பாட்டில் ஒவ்வொரு சிறு அம்சத்தையும் விசாரித்தது, விருந்தோம்புவோர் காட்ட வேண்டிய பரிவுக்கு இலக்கணமாய் அமைந்திருந்தது.

இங்ஙனமாக, தமிழ் நாட்டின் சரித்திரத்தையும் தமிழ் மக்களுடைய முன்னேற்ற இயக்கங்களின் சரித்திரத்தையும் ஆராய்ந்தோமானால், எல்லாத் துறைகளிலும் ஞானியார் சுவாமிகளின் வாழ்க்கை ஊடுருவி நின்றமை தெரியவரும். எந்த நிலையிலும் அவர்கள் அரசியல் – சமூக இயல்களில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் அவர்களுடைய பேச்சா லும், வாழ்க்கையாலும், மக்கள் சமயப்பற்றும் தமிழ்ப் பற்றும் கொண்டார்கள்; மறைமுகமாக இது நாட்டுப் பற்றுக்கு வித்தாயிருந்தது என்பது மிகையன்று. தமிழ் இலக்கண அறிவு, இலக்கிய உணர்ச்சி, தமிழ்ப் பண்பாடு வளர்ந்தன. கோயில்களில் மக்கள் நடமாட்டம் அதிக மாயிற்று. இறைவன் திருநாம முழக்கம் எங்கும் எதி ரொலித்தது. சிவ சின்னங்கள் பகிரங்கமாய் கண்ணில் புலப்பட்டன. தெய்வப் பெயர் சொல்லுவது படித்தோ ருக்கு இழிவு என்றிருந்த நிலைமாறி, படித்தோரிடம் தெய்வ பக்தியும், சமய உணர்ச்சியும், சாத்திர அறிவும் துலக்கம் பெறத் தொடங்கின.

இந்த இருபதாம் நூற்றாண்டில் முதல் நாற்பது ஆண்டு களில் ஏற்பட்ட இந்தச் சமய உணர்ச்சியும் எழுச்சியும் இன்னும் ஒரு நூற்றாண்டு காலமேனும் நம்மிடையே உயிர் கொண்டிருந்து நம்மை முன்னேக்கிச் செலுத்தும் என்பது உறுதி.

ஆதாரக் கல்விக்கான புத்தகங்கள்

	ரூ.	அ.
வாழ்க்கைக்கான கல்வி—ஆர்ம்ஸ்ட்ராங் ...	0	7
இன்றைய பேச்சு : ஆதாரக் கல்வி —ஆசாரிய கிருபலானி ...	2	0
அழிவற்றவாழ்வு—குமரப்பா ...	2	8
பிரார்த்தனைப் பாடல்கள் ...	1	4
ஆதாரக் கல்விக்குச் சோதனை ...	0	10
உணவுப் பஞ்சம் ...	1	8

பாடசாலைக்கேற்ற வாசக புத்தகங்கள்

தம்பி, உனது பல் ...	0	6
தம்பி, உனது தோல் ...	0	5
கலை ...	0	4
ஈ ...	0	5
வயல்கரை ...	0	6
என்ன உண்பது ? ...	0	6

ஆசிரியர் துணைப் புத்தகங்கள்

முதல் வகுப்பு ஆசிரியர் ...(அச்சில்)		
பாடசாலை நோய்கள் ...	1	8
தோட்ட வேலை ஆசிரியர் ...	2	0
ஆதாரக் கல்வி என்றால் என்ன?—(3ம் பதிப்பு) ...	1	8

தோட்ட வேலை

பழத் தோட்டம் ...	10	0
காய்கறித் தோட்டம்—(மலிவுப் பதிப்பு) ...	1	4
வாழைத் தோட்டம் ...	1	12
சீமைத் தக்காளி பயிரிடுதல் ...(அச்சில்)		

கட்டுரை நூல்கள்

புத்தகமும் வித்தகமும் ...	1	0
தாலாட்டு இலக்கியம் ...	1	0
நான் கண்ட வினோபா ...	0	6

காந்தி வித்தியாலயம்

திருச்சிற்றம்பலம் – குத்தாலம் ரயில்.